உ

ஐந்து மடங்கள்

தமிழகத்தில் விஸ்வகுல மடங்களின் ஆதி ஆய்வு நூல்

ஓசூர் மா.பழனிச்சாமி. அருள்நிதி

நூல்குறிப்பு

நூலின் பெயர்	:	ஐந்துமடங்கள் (தமிழகத்தில் விஸ்வகுல மடங்களின் ஆதி ஆய்வு நூல்)
ஆசிரியர்	:	ஓசூர் மா.பழனிச்சாமி. அருள்நிதி
நூல்வகை	:	சமூகவியல்
முதற்பதிப்பு	:	ஜூலை 2018
நூல்வடிவம்	:	180 மி.மி. / 115 மி.மி.
எழுத்து	:	13.5
மொத்த பக்கங்கள்	:	304
அச்சுத்தாள்	:	70 ஜிஎஸ்எம்
பிரதிகள்	:	1000 – ஓராயிரம்
கணினிஅச்சு	:	இரா.மாதவன் (9786411730), சென்னை–15.
அச்சாக்கம்	:	மணி ஆஃப்செட், சென்னை–600 077
வெளியீடு	:	மா.பழனிச்சாமி 56/12, 2வது மெயின், 6வது குறுக்கு, விகாஷ் நகர், ஓசூர் – 635 110.
விலை	:	விற்பனைக்கு இல்லை. நன்கொடை அனைத்தும் விஸ்வ பிரும்ம ஸாகித்ய பிரச்சார ஸபா 19/12 ஸ்டேட்பாங்க் காலனி, கீதாபுரம் ஸ்ரீரங்கம் – திருச்சி – 620 006 என்ற வேதபாடசாலை மாணவர் நிதிக்காக கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். **VISHWA BRUMMA SAHITHYA PRACHARA SABHA** **CANARA BANK. SRIRANGAM IFSC CNRB0002640** **SB A/c - 2640101017194.**
வினியோகம்	:	கீழ்க்கண்ட ஆன்மீக அன்பர்கள் ஒரு தொண்டாகச் செய்வார்கள்: பிரம்மஸ்ரீ 1. வை.சுப்ரமணியன் ஆச்சாரி, பெங்களூரு 9480611093 2. எம்.நாராயணன் ஸ்ரீரங்கம் 9486708726 3. சுப.சரவணன் அறந்தாங்கி 9788832355 4. எஸ்.நடேசன் வந்தவாசி 9865523642 5. கே.ஆனந்தன் திண்டுக்கல் – 9942529333
காப்புரிமை	:	இல்லை.
அட்டைப்பட வடிவமைப்பு	:	லோகேஷ் கிரியேஷன்ஸ், ஓசூர்.


ஓம் விராட் விஸ்வபிரம்மனே நம:



ஸ்ரீ அய்யனார்



ஸ்ரீ கொல்லூரு மூக்காம்பிகை அம்பாள்

கடவுள் வாழ்த்து

ஐந்து கரத்தனை யானைமுகத்தனை
இந்திரன் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

.....❁.....

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.


.....❁.....

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் ஜோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

.....❁.....

நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலோன்
தன்கடன் னடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே.

.....❁.....


விஸ்வகுல மடங்கள்
ANDHRA PRADESH
KARNATAKA
INDIA
TAMIL NADU
KERALA
BENGALURU
KRISHNAGIRI
VELLORE
TIRUVALLUR
CHENNAI
KANCHIPURAM
TIRUVANNAMALAI
DHARMAPURI
VILUPPURAM
PUDUCHERRY
SALEM
CUDDALORE
NILGIRIS
NAMAKKAL
PERAMBALUR
ERODE
COIMBATORE
KARUR
TIRUCHCHIRAPPALLI
THANJAVUR
NAGAPPATTINAM
THIRUVARUR
DINDIGUL
PUDUKKOTTAI
TENI
MADURAI
SIVAGANGA
VIRUDUNAGAR
RAMANATHAPURAM
TIRUNELVELI
TUTICORIN
KANNIYAKUMARI
THIRUVANANTHAPURAM
BAY OF BENGAL
Palk Strait
Palk Bay
Gulf of Mannar
LAKSHADWEEP SEA
தமிழ்நாடு விஸ்வகுல மடங்கள்
LEGEND
State capital
District headquarters
Other town
National Highway number
Golden Quadrilateral
North-South & East-West Corridors
National Highway
Railway
www.ttkmaps.com

பொருளடக்கம்

சிறப்பு அணிந்துரை



பிரம்மஸ்ரீ டாக்டர் G.**ஞானானந்தா** MA. D.Lit.
1122.5th Main. Brigadiar Gokuale road.
BEML 3rd Stage. Rajarajeswari Nagar,
Bengaluru-560098

புதுமைச் சிறப்புமிக்க ஆதி ஆய்வு நூல் - ஓர் அறிமுக அணிந்துரை:

'ஐந்து மடங்கள்' – தமிழகத்தில் விஸ்வகுல மடங்களின் ஆதி ஆய்வு நூல் – எனைக் கவர்ந்த இணையற்ற சமூக ஆய்வு நூலாகும். நேரடிக் களப்பணி வாயிலாகச் சேகரித்த உண்மைத் தகவலின் தொகுப்பு என்பது சிறப்பு. இந்த முதல் முயற்சியில், மடங்களின் குரு பரம்பரை – கால வரிசையிலும் இடம் வாரியாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. சரித்திர வல்லுனர்களும், சமூக ஆர்வலர்களும் ஆராய்ச்சியை மேலும் தொடர்வதற்கு ஏற்ற தூண்டுகோலாகவும், தகவல் தளமாகவும் அமைந்துள்ளது.

குலோத்தாரக தெய்வத்திரு. T.M. தெய்வசிகாமணி ஆச்சாரியும், திரு. K.சுப்ரமணியன் ஆச்சாரியும் வழங்கியுள்ள விஸ்வபிராம்மண வம்சப் பிரகாசிகையில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாட்டு ஐந்து மடங்களை மட்டும் ஆய்வுக்கெடுத்துள்ளார் இந்நூலாசிரியர்.

ஒவ்வொரு மடமும் தனித்தனியே செயல்படுவதைக் குறிப்பிட்டுள்ள ஆசிரியர், சமுதாயத் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு, சிஷ்யர்கள் மேம்பாடு பற்றியும் விளக்கியுள்ளார்.

காசி, அஸ்தினாவதி, ஸ்ரீநகரி, ஹம்பி, ஆனேகுந்தி ஆகிய இடங்களில் ஐந்து குருபீடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன என்று "கார்கேய ஆகமம்" – GARGEYA AGAMAM - கூறுகிறது. காயத்ரி, ஷாச்சி, சஞ்சனா, சாவித்ரி, சரஸ்வதி என்று ஐந்து சக்தி பீடங்கள் நிறுவப்பட்டு சந்நியாசிகளே பீடாதிபதிகளாக அருளாட்சி செய்தார்கள்.

பிற்காலத்தில் மடாதிபதியின் பெயர், மடத்தின் இடம், வழிபடும் சக்தி பீடம் என்ற காரணிகளால் மடங்கள் அடையாளம் – வகைப்படுத்தப்பட்டன. ஒரு குறிப்பிட்ட வரிசைப்பட்டியல் தேவையற்றது, என்ற பரந்த மனப்பான்மையில் ஸ்ரீ மா.பழனிச்சாமி இந்த ஆய்வுத் தொகுப்பை வழங்கியுள்ளார்.

இத்தருணத்தில் காவிரிபட்டினம், கனுபர்தி பஸ்வாச்சார்ய ஸ்வாமிகள், சுக்ஞான பிரபு ஆகியோரைப் பற்றிய சிறு, சிறப்புத் தகவல்களைப் பதிவு செய்து மகிழ்கிறேன்.

அ. காவேரிப்பட்டினம்: தமிழ்நாடு, கிருஷ்ணகிரிக்கருகிலுள்ளது காவேரிபட்டினம். **காயத்ரீ பீடம்** பரம்பரையில் ஸ்ரீமத் வெங்கடாச்சார்ய ஸ்வாமிகள் வாழ்ந்தார்கள். ஸ்வாமிகள் தெலுங்கில் இயற்றிய "ஆந்திராவிஸ்வகர்ம புராணம்" பிரபலமானது. விஜயநகர சமஸ்தானத்தில் வீபூர் ஸ்வாமிகள் என்றழைக்கப்பட்டவர். வீப்பூர், பட்டூரு இரண்டிலும் காயத்ரீ பீடாதிபதிகள் அருளாட்சி செய்தார்கள். கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாட்டில் காயத்ரீ பீடங்கள் செயல்பாட்டை ஆராய வேண்டும்.

ஆ. கனுபத்ரி பஸ்வாச்சார்ய ஸ்வாமிகள் என்பவர் சிதம்பரம் பீடாதிபதி. **சாவித்திரிபீட** பரம்பரை. கி.பி. 1754 ஆண்டில் விஜயராம ராஜாவின் அரண்மனையில், சப்தரிஷி வம்சத்து பிராமணர்களுக்கும் கனு பத்ரி ஸ்வாமிகளுக்குமிடையே வேகோக்த சத்சங் பலப்பரீட்சை நடந்தது. வெற்றி பெற்ற பசவாச்சார்ய ஸ்வாமிகளுக்கு "பேரூரு பிரம்மரதாருதா" என்று கௌரப்பட்டம் அளிக்கப்பட்டு, பெரிய ரத ஊர்வலம் செய்து சிறப்பித்தார்கள். "ரதகாரதிகாவனா விசாரகா" என்னும் இந்நூல் தெலுங்கு, ஆங்கிலம், கன்னடா, மராத்தியில் வெளியிடப்பட்டுள்ளது. வேதத்திற்கு பாஷ்யம் எழுதிய இந்த சிதம்பர பீடாதிபதியின் அருளாட்சி ஆராயப்படுவது நலம்.

இ. **சுக்ஞானப் பிரபுமடம்:** தமிழ்நாடு சூளகிரி மடம் சம்பரசனாபுரத்தில் தோன்றி ஓசூர், பெங்களூர், அரே மாதனஹள்ளி என்று பரந்து விரிந்த இம்மடம் பற்றி ஸ்ரீமா.பழனிச்சாமி, தமிழ்நாடு, கர்நாடகம் இரு பகுதியிலும் பல விரிவான செய்திகளைச் சேகரித்துப் பதிவு செய்துள்ளார்.

கோலார் மாவட்டம் சுகட்டூரில் வாழ்ந்த குறுநில மன்னர் "சுக்ஞானதேவன காவ்யா" எனும் நூலைக் கன்னடாவில் வெளியிட்டுள்ளார். மைசூர் பல்கலைக்கழகமும், "நன்னைய்யா கலா சாரித்ரா" எனும் நூலில் சுக்ஞானப் பிரபுவின் மகிமையை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

மடாதிபதிகளுக்கும், பக்தர்களுக்கும் இந்த ஆதி ஆய்வு நூல் நன்மைதரும். அண்டை மாநிலங்களிலுள்ள இதைப்போன்ற மடங்களைப் பற்றிய ஆராய்ச்சியைத் துவங்க வேண்டும். ஆசிரியர் ஸ்ரீ.மா.பழனிச்சாமியின் தீவிர பக்தி, குல ஆச்சாரம், தொண்டுள்ளம், சமூக அக்கறை அனைத்தும் இந்த ஆதி ஆய்வு நூலில் காணமுடிகிறது. ஆசிரியருக்கு விராட் விஸ்வகர்மா, நோயற்ற வாழ்வு, நீளாயுள், நிறைசெல்வம், மேலும் பல சிறப்புகளை வழங்கி ஆசீர்வதிக்க வேணும் எனப் பிரார்த்திக்கிறேன்.

இந்த ஆதி ஆய்வு நூலைப் பிறருக்கு அறிமுகம் செய்ய எனக்கு வாய்ப்பை நல்கிய ஸ்ரீ.மா.பழனிச்சாமிக்கு நன்றி.

டாக்டர் ஞானானந்தா

(பி.கு. நாலு பக்க ஆங்கில உரையின் சுருக்கமான தமிழாக்கம் இது.)

முன்னுரை

ஐந்து மடங்கள்: தமிழ்நாட்டில் விஸ்வகுல மடங்களின் ஆதி ஆய்வு நூல்:

ஒன்றுமில்லாத ஒரு சூன்யம், வெற்றிடத்திலிருந்து திடீரென்று ஒரு நாள் பிரபஞ்சம் தோன்றியது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் தோன்றி செயல்பட்டன. பூமி என்ற கோளும் இவ்வாறே தோன்றியது. ஒலி, ஒளி, மணம், சுவை, நிறம் அனைத்தும் "அழுத்தம்" என்ற பௌதீகப் பரிமாணத்தின் வித்யாசனத்தினால் ஏற்பட்ட பரிணாம மாறுதலால் பூமி தோன்றியது. உயிரினங்கள் தோன்றின. உயிரினங்கள் வாழ்ந்து மகிழ்ந்து இனப்பெருக்கம் செய்ய எல்லா வசதிகளும் பூமியில் இருந்தன. ஆகவே காலப்போக்கில், ஓர் அறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கு அறிவு, ஐந்து அறிவு என்று தம் சுய உந்தலில் வளர்ச்சியடைந்த பல உயிரினங்கள், வளர்ந்து வாழ்ந்தன. இவ்வுயிரினங்களுக்கு தம் பிறப்பின் மூலத்தை அறிந்து நினைந்து நன்றி கூறும் அறிவுத்திறன் இல்லை. பிரபஞ்சமும், பூமியின் இயற்கை வளமும், சக்தியும் என்றும் நீடுழி நிலைக்க வேண்டுமானால், இந்த நன்றி கூறுதல் என்ற பகுத்து அறியும் – பகுத்தறிவு தேவை என்ற தேடலுக்கு விடையாக ஆறு அறிவுள்ள மனித ஜீவராசியும் பூமியில் தோன்றினர்.

விலங்கின வாசத்திலிருந்து, சற்றே சிந்தித்து வாழ முற்பட்ட மனித இனத்தில், உலகில் முதலில் தோன்றியது இரும்புக் கருவியைப் பயன்படுத்தி பூமியைக் கீறி பயிர் செய்து உண்டு வாழ்வதற்கு வழி செய்த யுக்தி. சூரியன், சந்திரன், மின்னல், ஒலி, ஒளி, மழை, காற்று என்று இயற்கையை நேசித்தும் இயற்கையின் சீற்றத்துக்குப் பயந்தும் வாழ்ந்த ஆதிமனிதன் அப்பயத்தினால், மரியாதையினால், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், நெருப்பு, நீர், பயிர் விளையும் பூமி, சுவாசிக்கும் காற்று என்று இயற்கையைப் போற்றி, நம்பிக்கையின் அடிப்படையில், தலை வணங்கி வழிபட

ஆரம்பித்தான். மனிதனின் புற உறுப்புகளின் சுகம் தேடலுக்கு உருவ வழிபாடு (கட்டிப்பிடித்து உறவாட) என்ற போக்கில் முதலில் தோன்றியது ஒரு உருவம். தம் பிறப்புறுப்புக்கு ஒத்திருக்கவே அதை "லிங்கம்" என்று அடையாளம் செய்தான்.

ஒலி, ஒளியிலிருந்து பேசும் மொழிப் பழக்கம் உருவான நாகரீகம், சந்தித்த சவால், பெருகி வரும் மனித இனப்பெருக்கம் ஆறாவது அறிவையும் வைத்துக்கொண்டு, பெருகி வரும் மனித இனக்கூட்டம், இந்தப் பிரபஞ்சத்தின், இயற்கை சக்தியையும், ஒழுக்கத்தையும் அரவணைத்து, இயல்போடு இசைந்து வாழ்வது அவசியம் என்று ஒரு சில அறிவு ஜீவிகளுக்குத் தோன்றியது. அப்படி ஒரு முறையான வாழ்க்கை வாழ்ந்து மனித இனம் இப்பூமியில் மேன்மையுற, "வாழும் முறை" என்ற ஒழுக்க விதிகளாகப் பிறந்தது தான் வேதம். அதாவது வேதம் என்பது இயற்கையோடு இசைந்து வாழ்ந்து மனிதஇனம் மேன்மையுறும் வாழும் கலைக் குறிப்புகள், வழிகாட்டியே வேதம்.

அக்காலத்திலேயே, தம் சுய ஒழுக்கத்தினால், இயற்கை சக்தியின் முழு ஆதரவு (ஆசீர்வாதம்) என்ற உதவியினால், பிறர் நலனுக்காகத் தம்மை வருத்திக் கொண்டு வாழ்ந்த மூதறிஞர்கள், ஞானிகள், யோகிகள், முனிவர்கள், ரிஷிகள், தவசிகள் என்று பலவாறும் குறிப்பிடப்படுகின்ற பெரியவர்கள் சொல்லிச் சென்ற கருத்துக்களே வேதமாயிற்று. வேதவியாசர், கிருஷ்ணபகவான், அசோகசக்ரவர்த்தி, கௌதமபுத்தர், மனு, சாண்டில்யன், திருவள்ளுவர் என்று பின்னாளில் வேதத்தின் சாரம் எழுத்து வடிவில் இதிகாசம், புராணம், உலக நீதி போதனை என்று உருப்பெற்றன. வேதக் கருத்துக்கள் வாழ்வுக்கு வழிகாட்டும், போதனை என்று வேரூன்றி நிற்கத் துவங்கின.

வேதமும், விஸ்வகர்மாவும்:

பூமியில் முதலில் தோன்றிய மனிதன் கல், இரும்பைப் பயன்படுத்தினான். முதலில் தோன்றிய உருவ வழிபாட்டுச் சின்னம் "**லிங்கம்**" என அழைக்கப்பட்டது. பூமியில் மனிதன் முதலில் தோன்றிய இடம் "லெமோரியா" என்ற பண்டைய குமரிக்கண்டம் என்ற கருத்துக்களை உலகம் முழுவதுமுள்ள எல்லா மத,

இனத்தவரும், அறிவாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பது உண்மை. இந்நிலையில் தான் ரிக்வேதம், யஜீர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் என்ற நான்கு வேதங்களின் சாராம்சம் மையக் கருத்துக்ளை நோக்கும்போது சூனியத்திலிருந்து தோன்றிய அருள்/தெய்வீக சக்தி என்பதை மையப்படுத்தி, அதன் உயர்வை நிலைநாட்டி, எல்லா மனித இனமும் அன்று முதல் இன்று வரையிலும், வேதமும் இப்பூமியும் நிலைக்கும் வரையிலும், உண்மையைப் பறைசாற்றும் விதமாகக் கீழே கண்ட வாசகங்கள் அமைந்துள்ளன என்பதைச் சரியாகப்புரிந்து கொள்வது அவசியமாகிறது. (இதில் மாற்றுச் சிந்தனைக்கு இடமேயில்லை)

"நபூமி நசலம் சைவ, நசித்தஞ்சக் ராண கோசர,
நசப் ரஹ்மாந விஷ்ணு ஸ்ச்ச நசருத்ரஸ் சதார கா:
சர்வ சூன்ய நிராலம்பஸ் வயம்பூ விஸ்வகர்மண:"

(மே–1) மூலஸ்தம்பத்திலுள்ள இந்த சுருதி வாக்கியத்தால், பூமியும், நீரும், நெருப்பும், வாயுவும் பிரகாசமும், ஆகாயமும், நட்சத்திரங்களும், பிரம்மா, விஷ்ணு, ருத்திரனும் இன்னும் பிறவும் என்று ஒன்றுமில்லாத சர்வ சூன்யமாயிருந்த காலத்தில் சுயம்பு விராட் விஸ்வப்பிரம்மாவே ஜோதிஸ்வரூபமாய் இருந்தார். இந்த சொரூபத்திலிருந்து நெருப்பில் சூடு போன்றும், எள்ளில் எண்ணெய் போன்றும் தன்னிடமுள்ள பரை என்னும் சக்தியின் சேர்க்கை விசேஷத்தினால் ஐந்து முகவிஸ்வகர்மாவாகத் தோற்றம் கொண்டார் என்பதே பொருள். அதாவது விஸ்வகர்மா வெனும் (விஸ்வம் உலகம், கர்மா ஆக்கும் தொழில் சக்தி) பரம்பொருளின் பிரபஞ்ச சிருஷ்டியின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. ரிக், வேதம், கிருஷ்ணயஜீர் வேதம், யஜீர்ஸம்ஹிதையிலுள்ள வேத வாக்கியங்களால் இப்பிரபஞ்ச உற்பத்திக்கு மூலகாரணமான கடவுள் இறைவன் ஸ்ரீவிஸ்வகர்மாவாகிய பரப்பிரம்மம் என்றும், அவர் நித்தியர் என்றும் வேதநூல்கள் கூறுகின்றன. (மே1).

விஸ்வகர்மாவின் ஐந்து முகங்களும், பிற்கால ஐந்தொழிலாளர்களும்:

- **சத்யோ ஜாதகம்** எனும் கிழக்கு முகத் தியானத்தால் அறிவுவிளக்கம் மிகுந்த சானகரிஷி தோன்றினார். ரிக் வேதத்தால் துதிக்கப்படுகிறார்.

- **வாமதேவம்** எனும் தெற்கு முக தியானத்தால் சனாதனரிஷி தோன்றினார். யஜீர் வேதத்தால் துதிக்கப்படுகிறார்.
- **அகோரம்** எனும் மேற்கு முகத் தியானத்தால் அஹபுவனஸரிஷி தோன்றினார். சாமவேதத்தால் துதிக்கப்படுகிறார்.
- **தத் புருஷம்** எனும் வடக்கு முகத் தியானத்தால் பிரத்னசரிஷி தோன்றினார். அதர்வண வேதத்தால் துதிக்கப்படுகிறார்.
- **ஈசான** எனும் ஆகாயத்தை நோக்கிய முகத் தியானத்தால் சுபர்னஸரிஷி தோன்றினார். பிரணவ வேதத்தால் துதிக்கப்படுகிறார்.

இவர்கள் முறையே மனு, மய, துவஷ்ட, சிற்பி, விஸ்வக்ஞ விஸ்வகர்மாவாயினர். இவர்கள் தமது அற்புதத் தொழில்களினால் புகழ்பெற்றும், உலகில் எல்லாப் பொருள்களையும் ஜீவ, பாவம் உடையதாக உற்பத்தி செய்து வாழ்ந்தார்கள். அதாவது ஐந்து வகையான கைத்தொழிலையும் கொல்லுவேலை (இரும்பு) மரவேலை (தச்சர்) பாத்திர உலோகவேலை துவஷ்ட, சிற்பவேலை (சில்பி) பொன் வேலை (தட்டார்) என்று மற்றைய ஏனைய உலக மக்களின் வாழ்வாதார அடிப்படை வேலைகளைச் செய்து தெய்வ அருளோடும், கலை நயத்தோடும், மக்கள் வாழும் பொருட்டு கம்மாளர்களாக (கண்ணால் அளப்பவர் கம்மாளர்) படைப்புத் திறனாளிகளாக மாறி பிறர் நன்மைக்காக வாழும் இனமாக மாறினர். பல ஆயிரம் நூறாண்டுகளாக வேதம் ஓதுதல், வேதம் கற்றல், வேதம் சொல்லிக் கொடுத்தல் என்ற வேத பூர்வமான பழக்கத்துடன் தினசரி சந்தியா வந்தனம், அமாவாசை தர்ப்பணம் வருடாந்திர திதி, குடும்பம், உறவினர்கள் வீடுகளில் கல்யாணம், காதுகுத்து, உபநயனம், கோவிலில் பூசை முறை என்ற அனைத்து ஆகம நியமனங்களையும் தெரிந்தும், செய்து கொண்டும் அத்தோடு தத்தமது குலத்தொழில் கைத் தொழிலையும் சேர்த்து பார்த்து வந்தார்கள். கி.பி.1930, 1950/1960 வரையிலும் கூட இப்படி வேத ஒழுக்கமும், கலையும், கைத்தொழிலும், இணைந்த வாழ்வு வாழ்ந்த, விஸ்வகர்மாக்களை இந்தியாவில் காணமுடிந்தது.

மன்னர்கள் காலத்தில் அரசன், ஜமீன்தார், குறுநிலமன்னன் என்பவர்களுக்கு ஆன்மீகக் குருவாக, ஆட்சிமன்றத்தில் ஆலோசகராக ஆதினகர்த்தாவாக, மடாதிபதியாக மதபோதகக் குருவாக வாழ்ந்து காட்டிய விஸ்வகுலப் பெரியவர்கள் அதிக எண்ணிக்கையிலிருந்தனர். முகலாயர், ராஜபுத்திரர், மௌரியர், மராட்டியர், விஜயநகர வம்சத்தினர் கர்நாடக உடையார் பரம்பரை, பல்லவர், சேர, சோழ, பாண்டிய, மார்த்தாண்ட, மருதுபாண்டியர் என்றவர் காலத்தில் விஸ்வ பிராமணர் என்றால் வேதஒழுக்கம் தெரிந்தவர், கலைநயம்மிக்க கம்மாளர், ஊர் தர்மகர்த்தா என்று தான் போற்றப்பட்டனர்.

இந்தியாவை அடிமைப்படுத்தி காலனி ஆதிக்கம் செய்த வெள்ளையர்கள் பிரிட்டிஷார் காலத்து 200–300 ஆண்டு கால ஆட்சி தான், இந்திய விஸ்வபிராமணரது தனிப்பெரும் உயர்வை சிறப்பைச் சீர்குலைய வைத்தது. இந்திய குடியரசு சட்டஅமைப்பு, இயந்திரமயமாக்கம், தொழிற்புரட்சி, தங்கங்கட்டுப்பாட்டுச்சட்டம், ஆங்கிலேயே அரசு கொண்டு வந்த கல்விக்கொள்கை, மன்னர் ஜமீன்தாரர்களின் உதவியும் இல்லாமல் மதச்சார்பற்ற சுதந்திர இந்தியா என்ற சட்டஅமைப்பும் அதன் செயலாக்கமும் விஸ்வகர்மருக்கு விஸ்வபிராமணருக்குப் புரவலர் தாளாளர் இல்லை, சுயமாகவே நிற்க வேண்டும் என்ற கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர். வறட்சி, போட்டி, மொழிவாரி மாநில வரையறை, மாநில அரசாட்சி, அரசியலில் ஜாதி, மத உணர்வுத்துடிப்பு என்ற போராட்டம் – சமூகநீதி என்ற பெயரில் இடஒதுக்கீடு என்று பல இன்னல்கள் அடுக்காக வேகமாகவந்து கலக்கின.

எல்லோருக்கும் உதவி செய்து, கூலிவேலை செய்து, பிறர்கையை எதிர்பார்த்து நிற்கும் நிலை மிக வேகமாக வந்து சேர்ந்த கொடூரம், கிராமம், ஊர் தோறும் சில குடும்பங்களே போதும். எனவே வயிற்றுப்பிழைப்புக்காக நாடு முழுவதும் பிரிந்து சிறு சிறு குடும்பக் கூட்டமாக வாழ வேண்டிய சூழ்நிலையில், **தமது சமூகக்கூட்டம்** என்ற பலத்தை நிரூபிக்கும் வாய்ப்பையும் இழந்து நிற்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

கல்வி அடிப்படையில் ஆட்டம்:

வேத ஆகம சாஸ்திரம் குலக்கல்வி, குருகுலவாசம், திண்ணைப்பள்ளிக்கூடம் தொழில்சார்ந்த பட்டறை, சிற்பச்சாலை,

நாணயச்சாலை, ஆயுதப்பட்டறை அனைத்தும் மறைந்த நிலையில் இந்தியா சுதந்திரம் அடைந்த காலக்கட்டத்தில் 1935 முதல் 1950 வரையில் ஆங்கிலேயரின் கல்விக் கொள்கையில் டிஸ்டிரிக் போர்டு ஸ்கூல் (District Board School) என்ற முறையில் கல்வி போதிக்கப்பட்டது. அச்சமயம் **பள்ளிக்கல்விக்கட்டணம் கட்டாயமாக வசூலிக்கப்பட்டது.** (மே.2)

ஆறாம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை தலா ரூ.2–6–0/ மாதம் தோறும் (ரூ.2ம் 36 பைசாவும்)

ஒன்பதாம் வகுப்பு முதல் 11ம் வகுப்பு வரை தலா ரூ.5–3–0/ மாதம் தோறும் (ரூ.5ம் 18 பைசாவும்)

சிறப்பு / தனிக்கட்டணம் ஜூன் முதல் டிசம்பர் வரை ரூ.15/

தனிக்கட்டணம் ஜனவரி முதல் மே வரை ரூ.10/

இவ்வளவு கட்டணம் மாணவர்களிடம் வசூலித்தாலும் வாத்தியாருக்கு மாதச்சம்பளம் ரூ.60/– மட்டுமே.

மேலே குறிப்பிட்ட கட்டணத்தொகையை ஓராண்டுக்குக் கூட்டினால் வரும் மொத்த ரூபாயில் அக்காலத்தில் மூன்று பவுன் தங்கம் வாங்கிட முடியும்.

கல்வி கற்கத்தடை:

அக்காலத்தில் ஆச்சாரிமார் கூலி ஆறு அணா, பத்து அணா, பன்னிரண்டு அணா, தான் இருந்தது. மிகக் குறைந்த கூலியில் அதுவும் பண்ட மாற்று முறையும் இருந்து வந்த அந்தக்காலத்தில், ரூபாய் நாணயத்தைக் கண்ணில் காண்பதுவே அரிது. கிடைக்கும் கூலியில் பெரிய குடும்பத்தை வயிராறச் சாப்பாடு போட்டு காப்பாற்றுவதே கடினம். பலருக்குப் பல வேளை பலநாள் பட்டினி என்பது நடைமுறைப்பழக்கம். இந்தச் சூழ்நிலையில் இவ்வளவு உயர்ந்த கல்விக்கட்டணம் விதித்தது ஏழை, எளியவர், தாழ்த்தப்பட்டவர் கல்வி பயின்று அரசு உத்தியோகத்துச் செல்வதற்கு பெரிய தடையாக இருந்தது. உயர்கல்வி வரை இலவசக்கல்வி என்ற திட்டம் 1952/57ம் ஆண்டில் அமலுக்கு வந்த பிறகே கம்மாளரில் பலரும் பள்ளிக்குச் செல்ல முடிந்தது. இருப்பினும் 1962–1968ல் தங்கக்கட்டுப்பாடு சட்டமும் வந்து சிரமம் தந்தது.

இந்த இடைக்காலத்தில் பிழைப்புக்கு வழி தேடும், கடும் முயற்சியில் ஆன்மீகம் ஆச்சாரம், அனுஷ்டானம் என்ற கட்டுக்கோப்பை, வேதந்தழுவிய ஆன்மீக வாழ்க்கை முறையை, ஆச்சாரி இனத்தவர் கை நழுவ விட்டனர். **ஆச்சாரம் குறைந்தது. தொழிலில் இருந்து வந்த ஆன்மீக சக்தியும் குறைந்தது. அதன் விளைவே ஆச்சாரிக்கு சமூகத்தில் அங்கீகாரமும் குறைய ஆரம்பித்தது.**

இணைகோடு:

இரயில் தண்டவாளத்தில் இரண்டுபாதை இணைந்தே ஓடும். ஒன்றோடு ஒன்று முட்டாது, சேராது. அதுபோல் இதுவரை மேலே கூறிய வரலாற்று நிகழ்வை ஒரு தண்டவாளக் கம்பியாகவும் இனிமேல் கீழே வரும் தகவல்களை மற்றொரு இணைகோடாகவும் கற்பனை செய்து பார்த்துப் படிப்பது நல்ல பலனைத்தரும். அதாவது அந்நியர் படையெடுப்பு பேரரசு, சிற்றரசு, யுத்தங்கள் முகலாயப் பேரரசு, வெள்ளையர்கள் காலனி ஆதிக்கம் ஆங்கிலேயர் கல்விக் கொள்கைத்திணிப்பு, இயந்திரமயமாதல் என்ற கலை, பண்பாடு கலாச்சாரப் பாதிப்புகளுக்கிடையே (இணைக்கோட்டில் ஒரு கோடு) இந்து மதம், கடவுள் சிந்தனை என்ற ஒரே குறிக்கோளோடு வாழ்ந்து கால்பதித்து புகழ் பரப்பிய ஆண்டாள், ராமானுஜர், வள்ளலார், தியாகராசர், துளசி தாஸர், பக்தராமதாஸ், சாயிபாபா, விட்டல்லா, பாம்பன் ஸ்வாமிகள், விசிறி ஸ்வாமிகள் என்று பல புண்ணியர்கள் நம் நினைவில் நிற்கிறார்கள். வரலாற்றில் படிக்கிறோம். விளம்பரப்படுத்தப்பட்ட இந்த கீர்த்திமான்கள் வாழ்ந்த இதே காலத்தில் (இணைக்கோட்டில் மற்றொரு கோடு) இதே மண்ணில் தான் ஸ்ரீஆதிசிவலிங்கமூர்த்தி, ஸ்ரீவீரவைராக்ய சாமி, ஸ்ரீஅனவரத ஸ்வாமிகள், ஸ்ரீநீலகண்டாச்சாரி, ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகள், ஸ்ரீமுத்துக்குமார ஸ்வாமிகள், குடந்தை ஸ்ரீராசரத்தினம் ஸ்வாமிகள், ஸ்ரீசிவானந்த முனிஸ்வரர் ஸ்வாமிகள் **என்று பல ஆச்சார்ய புருஷர்கள், தவசிலர்கள் வாழ்ந்து காட்டி அற்புதங்கள் பல செய்து இயற்கை எய்தியுள்ளார்கள். ஏனோ இவர்களுக்குரிய சமூக அந்தஸ்து, அங்கீகாரம் சரித்திரத்தில் இடம் என்ற புகழை மறந்துவிட்ட, மறைத்துவிட்ட உண்மையை நினைவுபடுத்தி ஆவணப்படுத்துவதே இம்முயற்சி.**

முத்தமிழ் சக்கரவர்த்தி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அவர்கள் தான் தோன்றிய பஞ்சபிரம்ம விஸ்வகுல பெருமை பற்றி பாடியது.

“தார்பூத்த குமுதப் புயத்தர் முந்நூல்
மார்பர் தனிஅனும விருதுமுடையோர்!
தருமெக்ஞ சீலர் மகுடத் மாந்தை
விஸ்தாரர் முகில் வாகனத்தோர்!
சாஸ்தர வேதாகம சமர்த்தர் காயத்ரி
ஜப சந்நிவந்தன விேனாதர்!
சர்வஜக சிருஷ்டிப் பிரதாபர் பஞ்ச
பிரம்ம சந்ததிகளான மேலோர்!

குமுத மலர்மாலை புனை புயத்தர், முப்புரிநூல் (பூணூல்) அணியும் மார்பர், அனுமவிருது (அனுமக்கொடி) உடையவர், யாகம் செய்யும் சீலர், மணிமகுடத்தியாகர், மாந்தை விஸ்தாரர், முகில்வாகனத்தர், சாஸ்திர வேத ஆகமங்களைக் கற்றுணர்ந்த சமர்த்தர், காயத்திரிஜபம், சந்நியாவந்தனம் செய்யும் வினோதர், சர்வஜகத்தையும், சிருஷ்டி செய்யும் பிரதாபர், பஞ்ச பிரம்ம சந்ததிகளான மேன்மையுடையோர்.


Guru Pooja On : 24.12.2016
At : Thirunelveli Mutt
Sri Math Shivanandha
Muneeshwara Swamigal
Medetation Mandap -
Shivling after abishekam
& Alangaram
This swamy ji was 36th
Matadhipathi

இப்புத்தகம் எழுதப்பட்ட முறை

விஸ்வகர்ம பிராம்மண வம்சப் பிரகாசிகையும், (மே1) விஸ்வகர்ம புராணம் (மே3) பூர்வகாண்டமும் அடிப்படை ஆதாரங்களாயின. திருமூலாரண்யம், காந்தப்பாளையம் திருவண்ணாமலை ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய பீடம் 64வது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முகஞானாச்சார்யா ஸ்வாமிகளுடன் பலமுறை நேர்காணல் சம்பாஷைனையும், அவர்தம் மூத்த புதல்வரும் அன்றைய ஸ்ரீகார்யம் ஸ்ரீசிவராஜ் அவர்களிடம் நேர்காணல் சம்பாஷனைகளின் தொகுப்பும் உண்மையறியும் தேடலுக்குதவின.

பின்னாளில் சமூகப்பெரியோர் பலரிடம் அவரவர் ஊரில் இடத்தில் நேரில் அமர்ந்து கண்ணோக்கிப் பேசி உள்வாங்கிய விஷயங்கள் உரமாகின. மடத்திலும் அதைச் சுற்றிலும் வாழும் வயதானவர்களிடம் நேர்காணலும் அவ்வப்போது நடத்திய சிறு சிறு குழுக்கூட்டங்களும் தகவல்களைத் தந்தன. ஆங்காங்கே நேரில் சென்று சேகரித்த தகவல்கள், எடுத்த புகைப்படங்கள் அதிகம் ஆதாரமாக அமைந்தன. கடலூரைச் சேர்ந்த தெய்வத்திரு. சௌந்தரராஜ ஆச்சாரியார் (மே5) அச்சிட்டு வைத்திருந்த குறிப்புகள், குருபாத சேவகன் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் திரு.கோவிந்தராசன் வெளியிட்ட செய்திக் குறிப்புகளும் உதவின. பல மாதஇதழ் தினசரி, வாரபத்திரிக்கை நூல் நிலையப் புத்தகங்கள், புராதன செய்திகள், அறிக்கைகள் செப்புத்தகடுகளைப் பாதுகாத்து வைத்திருப்பவர்கள் என்று மனமுவந்து என்னிடம் நேரில் பகிர்ந்து கொண்டது மேலும் ஊக்கத்தையும், நம்பிக்கையும் வளர்த்தது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா என்று நேரில் சென்று சேகரித்த தகவல்கள், நேர்காணல்கள் நினைவில் நிற்கின்றன. வியக்க

வைக்கும் ஆணித்தரமான இத்தொகுப்புக்களை ஒரு சேர கண்ணோட்டம் விடுவதில் சரித்திரம், பூகோளம், சமூகவியல், ஆன்மீகம் என்ற அணுகுமுறை உதவியது.

கி.பி. 600ம்மாண்டு முதல் 2018 வரை என்ற இத்தொகுப்பு ஒரு ஆன்மீகக் குருமார்களின் பயணச் சுருக்கம், வரலாற்றுச் சுருக்கம். (மே4) இந்தியர்கள் வரலாற்றுக் குறிப்புகளை முறையாகச் சரியாக எழுதி வைப்பதில்லை. வைக்கவில்லை என்று ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்கள் கூறிவருவது தெரிந்ததே. இந்த விஸ்வகுல மடங்களிலும் இதே நிலைதான். நடந்தது தெரியும். பெயர், ஊர், நாள், தெரியாது என்ற மெத்தனப்போக்கு இன்னும் தொடர்கிறது. வருந்தத்தக்கது. ஆனாலும் மன்னர்கள், ஜமீன்தாரர்கள் காலத்தில் கல்வெட்டு பனைஓலைச் சுவடி காகிதத்தில் எழுதிய கைப்பிரதிகள் பல உள்ளன. அவற்றில் வட்டெழுத்து முறையும் கவிநயமான கவிதைகளும் அதிகம். வசனநடைகுறைவு. தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகள் இந்த ஐந்துமடங்களைச் சுற்றிய பிரதேசங்களில் பழக்கம்.

பொதுவாக மன்னரைப் புகழ்ந்து பாடி பரிசு பெறுவது வீரதீரச் செயல்கள், கடல் வாணிபம், கோவில் குளம் அமைத்தது என்ற குறிப்புகள் உண்டு. இதை ஐரோப்பியர்கள் முறையாகப் படித்துப் பார்க்காமல், **முடியாமல், கேள்வி ஞானத்தால், அவர்கள் புரிந்துகொண்டதை அவர்கள் மொழியில் எழுதி வைத்ததை நம் நாட்டுச் சரித்திரம் என்று கூறி நிலை நாட்டிச் சென்றனர்.** இந்தச்சூழலில் மத குருமார்கள், ஆதீனகர்த்தாக்கள், துறவிகள் எல்லாம் இறைவனைப் புகழ்ந்து பாடிய பக்திப் பாடல்கள் இருந்தன. சித்தர்கள், துறவிகள் தம் தவவலிமையால் செய்து காட்டிய அற்புதங்களை அவர்களே எழுதி வைக்கவில்லை. அவற்றைப் பார்த்தவர்கள் அவர்களை வியந்து மரியாதையாக எழுதிய பாடல்கள் என்றுண்டு. உதாரணமாக ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் மீது பிறர் பாடிய புகழ்ச்சிக் கவிகள் உண்டு. திரு.ராஜமாணிக்கம் ஸ்வாமிகள் எழுதிய கவிகள் பல உண்டு. ஆனால் அன்றாட டைரிக் குறிப்பு, ஆண்டறிக்கை என்று இல்லை. ஓசூரைச் சேர்ந்த ஸ்ரீசுக்ஞானந்த ஸ்வாமிகள் தினசரி டைரிக் குறிப்பு எழுதியுள்ளார்கள். அவை கன்னட மொழியில் வீச்செழுத்திலுள்ளதால் இக்காலக் கன்னட மொழியாளர்களும் திணறுகிறார்கள். ஒரு முன்னூறு ஆண்டுகளுக்கு

முன்னால் கூட எந்த மடாதிபதி என்று பதவி ஏற்றார்? என்று முக்தியடைந்தார்? என்ற சமீபத்திய முக்கிய தகவல்கூட சீனந்தல் மடத்திலோ அவர்கள் வெளியீட்டிலோ இல்லை.

இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு ஐப்பசி விசாகத்திற்கும் நெல்லையில் ஸ்ரீமத் சிவானந்த முனிஸ்வரர் ஸ்வாமிகள் அனுஷ்டானத்தில் சென்னையிலிருந்து **ஒரு பிராமணர் வந்துதான்** குருபூஜை செய்கிறோம். உள்ளூரில் ஒரு சிலர் அவ்வேளையில் அங்கு அவருடன் கூடுகிறார்கள். ஆனால் அந்த ஒத்தை பிராமணன்–சிஷ்யரின் பெயர் விலாசம் அங்கிருப்பவர்களுக்கு இன்னும் தெரியவில்லை. இந்த உதாசீனம் மெத்தனப் போக்கு சரித்திர உண்மைகளைப் பதிவு செய்ய உதவுவதில்லை. தகவல் பரிமாறிக் கொள்ள, பதிவு செய்துகொள்ள, இவ்வளவு வசதிகளுள்ள இந்தக் காலத்திலும் உதாசீனம் மெத்தனப் போக்குக் தொடரும்போது, கல்வியறிவு மிகவும் குறைந்த கி.பி. 500 முதல் கி.பி. 1960 வரையிலும் நடந்த நிகழ்வுகள் சரித்திர உண்மைகளை எல்லாம் நினைவிலுள்ள கர்ணபரம்பரக்கதை, நாட்டுப் புறப்பாடல்கள், சமூகத் தொடுகுறிப் பழக்கவழக்கங்கள் (TOTEM) அற்புதங்கள், சித்துவிளையாட்டுகள், கோவில் திருவிழா, வழிபாடு முறைகள், சமயச்சொற்பொழிவு, நாடகங்கள் என்ற கலவையால் தெரிந்துகொள்ள நேர்கிறது. ஆயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் ஆதீனங்கள், மடாதிபதிகள் மக்களை எதிர்த்தும், மக்கள் மடங்களை எதிர்த்தும் நீதிமன்றங்களுக்குச் சென்றதால் பிரிட்டிஷ் ராஜியத்திலிருந்த Privy Council பிரிவி கௌன்சல் டெல்லி Supreme Court என்ற உச்சநீதிமன்றம் சென்னை (மே6) High Court உயர்நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றம் (District Court) என்று நாடு தழுவிய வழக்காடு மன்றங்களிலுள்ள தாவாகட்டுகளில் (Case bundle) பல உண்மைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த தாவா கட்டுகளிலிருந்தும் பல உண்மைகள் எடுத்தாளப்பட்டுள்ளதால் இப்புத்தகம் மேலும் உறுதியாகிறது. (இது ஒரு சுருக்கமான முதல் வெளியீடு).

தனிமரம்:

இதில் இரத்தத்தை உறைய வைக்கும் ஒரு உண்மை என்னவென்றால் இந்த விஸ்வகுல மடாதிபதிகள் தாம் உண்டு,

தம் குடும்பம் உண்டு, தம் பெருமை, வருமானம் உண்டு என்றே இருந்துவிட்டதால் தனிமரமாகவே வாழ்ந்து வீழ்ந்து போயினர். குறிப்பாக தர்மபுரம் ஆதீனம், மதுரை ஆதீனம், குன்றக்குடிமடம் என்றால் மக்கள் பலருக்கும், அரசுத்துறைக்கும், பிற ஆலயங்களுக்கும் தெரியும். ஆனால் சீனந்தல் மடம், ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீனம், ஆத்தூர், ஓசூர் மடம் என்றால் யாருக்கும் தெரியாது (குறிப்பிட்ட சிலரைத் தவிர).

வருந்தத்தக்க வேடிக்கை:

ஒரு ஆதீனம் இந்து சமய அறநிலையதுறையின் ஆளுகை அதிகாரவரம்புக்குள் வரவேண்டும் **என்று கட்டாயமில்லை** தான். ஆனாலும் இப்படி ஒரு ஆதீனம் இருக்கிறது என்ற தகவலை அவர்களுக்குத் தருவது அவசியமும் நல்லதுமாகும். அவர்களே கண்டுபிடித்துக் கொள்ளட்டும் என்று நினைத்து உதாசீனமாக மெத்தனமாக வாழ்வது விஸ்வகுல மடங்களின் நலனுக்குதவாது. நாங்கள் வாழ்கிறோம். ஆரோக்யமாகச் சுவாசிக்கிறோம் எங்களை நாங்களே பாதுகாத்துக்கொள்ள இயலும். (தேவைப்பட்டால் உங்கள் உதவியை நாடுவோம்) என்றிருப்பது நல்லது.

மடாதிபதிகளின் சொந்தங்கள் என்று ஒவ்வொருவராகத் தேடிக்கண்டுபிடித்து குருபூசைக்கு அழைத்து மரியாதை செய்ததும் ஒரு வகையில் "சரித்திர சமூகவியல் ஆவணப்படுத்தும் செயலே." குருபூசையில் ஒன்றாகச் சேர்ந்த சமயத்தில்தான். இவர்கள் இப்படி இருக்கிறார்கள் என்ற திகிலான உண்மை அவர்களுக்கும் தெரியவந்தது. சரித்திரம் இப்படி இருப்பதால் முடிந்தவரை தகவலின் உண்மைத் தன்மையைச் சரிபார்த்து எழுதி வெளியிட்டுள்ளோம். இதில் முழுமையில்லை என்ற குறை இருக்கலாம். இது சுருக்கமான முதல் அறிமுக வெளியீடுதான். அதை நிறைவு செய்ய இன்னும் தொடர்ந்த தேடுதல் தேவைப்படுகிறது. (இது ஒரு சுருக்கமான முதல் வெளியீடு.) ஆயினும் **தவறான தகவல் தரப்பட்டுள்ளது என்று கூற இடமில்லை.** முதல்தாரம், இரண்டாம்தாரம், தத்து, பங்காளிச்சண்டை என்று ஒருவேளை காழ்புணர்ச்சியில் கிடைத்த தகவல்களையும் நடுநிலையுடன் வெளியிட்டுள்ளோம். இங்கே தகவல் கருத்து சிதைந்திருக்கலாம்.

வேண்டுகோள்:

எமது ஐந்தாண்டு தேடுதலில் எமை நம்பித் தந்த தகவல்கள் அனைத்தும், நாங்கள் நேரடியாகப் படம்பிடித்து சேர்த்த அனைத்தும், விஸ்வகுலத்திற்கும் பின்வரும் சந்ததிக்கும் உதவவேண்டும் என்ற உணர்வுடன் எழுதப்பட்டுள்ள இப்புத்தகத்தில் குறைகள் தவறுகள் இருந்தால் **ஆணித்தரமான அத்தாட்சியுடன் அவரவர் முயன்று அவரவர் செலவில் அச்சிட்டு வெளியிட்டுத் தமது சமூக ஆன்மீக அக்கறையை முத்திரை பதித்துக் கொள்ளலாம்.** அதற்கு முழுச் சுதந்திரம் உண்டு. இப்புத்தகத்தின் கருத்துகளை எடுத்துக் கையாள்வதற்கு காப்புரிமை (Copyright) என்ற **என்ற தடை ஏதுமில்லை** என்றும் பணிவுடன் சமர்ப்பிக்கிறோம். அதாவது முயற்சியில், முனைப்பில் வெளிவந்துள்ளதைக் குறை கூறாமல் குறைகளைச் சரி **செய்துகாட்டும் செயல் திறமைக்கு வரவேற்பும் வணக்கமும் சமர்ப்பிக்கிறோம்.**

அணிந்துரை

ஸ்ரீலஸ்ரீ சிவ ஆத்மானந்த சரஸ்வதி
ஞானானந்த ஆசரமம்
சித்தன்ன கவி, நந்தி–562103
சிக்கபல்லபுரா மாவட்டம்
கர்நாடகா
மின்னஞ்சல் முகவரி:
deepambudhi@gmail.com



ஓம்.

இந்த பரந்து விரிந்து பல கோள்களையும், நட்சத்திரங்களையும் உயிரினங்களையும் படைத்த இறைவனுக்குப் பெயரே விஸ்வகர்மா. அவரைத்தான் பரப்ரம்மம் என்று அழைக்கிறது வேதம். அதனால் அவரை விஸ்வகர்ம பரப்ரம்மம் என்று அழைக்கிறோம். “ஏஷ தேவோ விஸ்வகர்மா மஹாத்மா” என்று உபநிஷத் கூறுகிறது. அதையே ஆதிசங்கரரும் விஸ்வகர்ம என்ற பதத்திற்கு “விஸ்வம் கர்ம க்ரியதே இதி விஸ்வகர்மா” என்று கூறுகிறார். அதாவது யார் இந்த உலகத்தை (பிரபஞ்சத்தை) படைத்தாரோ அவருக்கு விஸ்வகர்மா என்று பெயர். அவர் அறிவு ஸ்வரூபமானவர். அந்த அறிவு ஸ்வரூபமான விஸ்வகர்ம பரப்ரமத்தில் மாயாதி கலப்பு சேர்ந்து விராட் ஸ்வரூபமான பஞ்சமுக விஸ்வகர்மா தோன்றினார். அந்த பஞ்சமுகத்திலிருந்து (மனு, மய, துவஷ்டா, அஹபூஷன, பிரத்னஸ) ஐந்து வேதங்களும், ஐந்து ரிஷிகளும் தோன்றினார்கள் என்று வேதம் கூறுகிறது. அந்த ஐந்து ரிஷிகளும் தத்தமது சிஷ்ய பரம்பரையாக 125 ரிஷிகளும் அதற்கு 125 மடங்களும் இருந்தாக ஸ்மிருதி சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அந்த வகையில் ஆசிரியர் திரு.அருள்நிதி பழனிச்சாமி அவர்கள் பல ஆண்டுகள் சிந்தித்து பல இடங்களுக்கு பயணம் மேற்கொண்டு சீரிய முயற்சியாலும் தெளிந்த மனப்பான்மையாலும்

விஸ்வகர்ம சமூகத்தின்மீது மிகுந்த அக்கறை உணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் இச்சமூக மக்கள் ஆச்சார அனுஷ்டானத்துடன் வாழவும் மிகுந்த சிரத்தையுடன் தம் பங்களிப்பை இச்சமூகத்திற்கு வழங்கியுள்ளார். அதில் தமிழ்நாட்டில் ஐந்து அரும்பெரும் விஸ்வகுல மடங்கள், ஆதீனங்கள் இருந்ததாகவும், அதன் வளர்ச்சி, தளர்ச்சி, வீழ்ச்சி ஆகியவற்றை எடுத்தாண்டிருக்கின்ற விதம் நம்மையும் மெய்சிலிர்க்க வைக்கின்றது. விஸ்வகர்ம மக்களின் கடமை, பங்களிப்பு, எண்ணம் அனைத்தையும் ஒருமித்த கருத்தில் உரத்த சிந்தனையாக வருங்கால சந்ததியினர்க்கு பயன்படும் வகையில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற ஆசிரியர் எண்ணம் மிகவும் வரவேற்கத்தக்கது. இன்னும் இதுபோல ஐந்து மடங்களைப் பற்றி தனித்தனியாகவும், அந்த மடங்களின் பெருமைகளையும், அதில் வாழ்ந்த மகான்களின் மகிமைகளையும் எடுத்துக்கூற ஐந்து புத்தகங்களாக ஆசிரியர் விரைவில் வெளியிடவும், அவர் இந்த 72 வயதில் தள்ளாத நடையுடன் இளைஞரைப்போல் அவர் ஆற்றிய காரியம் நம்மையெல்லாம் பெருமைப்பட வைக்கிறது.

மேலும் இது போன்ற ஆக்கப்பூர்வமான பணிகளில் அன்னாரது பயணம் தொடர எல்லாம்வல்ல விஸ்வகர்ம பரப்ரமம் அவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியத்தையும் வழங்கிட ப்ரார்த்தனை செய்து கொண்டு மேலும் விஸ்வகர்ம சமூகத்திற்கு ஆசிரியரின் பணி சிறக்க ஆசீர்வதிக்கிறோம்.

சிவசங்கல்பமஸ்து

30-6-2018 **ஸ்ரீலஸ்ரீ சிவ ஆத்மானந்த சரஸ்வதி**

பாராட்டுரை



மு-விஸ்வபாரதி
ஸ்ரீ சக்கர பரிபூரண மஹாமேரு
சிவசக்தி அருளாட்சி சித்தர் பீடம்
சூடாமணி, நல்லமனார்கோட்டை அஞ்சல்
கரூர் சாலை, திண்டுக்கல்–624 005.

திருக்கோயில்கள், ஆதீனங்கள், திருமடங்கள் இவைகள் அனைத்தும் பாரதத் திருநாட்டில், பக்தியை வளர்க்கத் தோன்றிய கருவூலங்கள்.

மக்கள் தங்கள் மனச்சுமைகளை, இறக்கி வைக்கவும்; புதியதோர் தெம்பாகப் புத்துணர்ச்சி பெறவும், வருங்காலத்தில் தமது அடுத்த சந்ததியினர்க்கு நல்வழிகாட்டவும், இக்கருவூலங்கள் இன்றியமையாததாகின்றன.

மக்களுக்கு நன்னெறி காட்ட வேண்டுமென்று நாடாண்ட மன்னர்களே திருக்கோயில்களை தோற்றுவித்து வளர்த்து வந்தனர்.

பாரதநாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில், சைவ ஆதீனங்கள், சாக்த, வைணவத் திருமடங்கள், மடாலயங்கள், தோன்றி மக்களுக்குத் தொண்டாற்றிய வரலாறுகள் காணக்கிடைக்கின்றன. என்றாலும், சில சமுதாயத்திற்கு உட்பட்ட ஆதீன மற்றும் மடாலய வரலாறுகள், காலக்கணக்கீடுகளுடன், மக்கள் பார்வைக்குத் தென்படாமலே உள்ளன.

அப்பட்டியலில் தான் விஸ்வகர்ம சமூகத்திற்கான ஆதீன, மடாலய வரலாறுகள் அடங்கியுள்ளன. வரலாறுகள் வெளிவரவில்லை.

சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய விஸ்வகர்ம ஆதீன வரலாறு, எழுதப்பட்டு மக்கள் பார்வைக்கு வராத ஒரு

பெருங்குறை இருந்தது. அக்குறை ஓரளவு தற்போது தீர்ந்துள்ளது. நமது சமுதாயத்தின் திருச்சுடர், கடமை மனம் குன்றாத ஒரு கண்ணியசீலர்.

“ஓசூர் திரு. மா. பழனிச்சாமி” அவர்கள் நமது, திருநெல்வேலி, பரசமயகோளரி ஆதீனம், திருவண்ணாமலை, சீனந்தல்மடங்கள், சிதம்பரம் திருமடம் ஆகியவற்றின் வரலாறுகளைத் தேடிக் கண்டுபிடித்து தொகுத்துத் தந்துள்ளார்கள். ஆதீனங்களில், கால வரிசையாக ஏற்பட்ட நிகழ்வுகள், நிதர்சனமாகப் படம்பிடித்தது போல் விளக்கி எழுதியுள்ளார்.

ஒளிவு மறைவுகள் ஏதும் இல்லை. உண்மைகள், எளிமையான, புரியும்படியாகத் தெளிவான தமிழ்நடையில் எழுதி விளக்கியுள்ளார். அன்று நடந்த சில பல நிகழ்வுகள் படிக்கவும், சிந்திக்கவும் கூச்சமாகக் கூட உள்ளன.

ஆதீன நியதி வரைமுறைக்குட்பட்டு, எல்லைக்குள் எவை நடக்கக்கூடாதோ அவைகளைப்பற்றியும் எழுதியுள்ளார். மக்களை நல்வழிப்படுத்தும் ஆதீனங்கள் தாங்கள் சரியான, நேர்வழியில் நடைபோடவேண்டும் என்ற உண்மையை படிக்கும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பதியும்படியாக எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் விஸ்வகுல ஆதீனங்களின் ஒரு முதல்வரலாற்று நூல். இது ஒரு “உண்மை விளம்பி”.

நூலைப்படித்தால் சமுதாய உணர்வுகள் கொந்தளிக்கும். எங்கெங்கே குறைகள் காணப்படுகிறதோ அவைகளை மாற்ற வேண்டும் என்ற சிந்தனைச் சுடர் கிளம்பும்.

ஓசூர் பழனிச்சாமி அவர்கள்

ஒரு சமுதாயத் தேனீ

உண்மைத் தேனைத் தேடித்திரிபவர்

அவர்களைப் பாராட்ட வேண்டும்.

பாடிப்புகழவும் வேண்டும்

பாராட்டுப்பாமலர்

பாராட்டத்தான் வேண்டும். பழனிச்சாமி
பக்திமணம் குன்றாத பண்புச்சாமி

தேரோட்டி நம் சமூகச் சிறப்பையெல்லாம்
திசைதோறும் பரப்பி வரும் சிறப்புச்சாமி
நீரோட்டம் பார்க்கின்ற வேட்கை கொண்டார்
நீடூழித் தன் சமூகம் வாழ்வதற்கே
ஆராய்ச்சிக் காவியந்தான் பாடுதற்கே
அடியெடுத்துச் சீர் தொடுத்துப் பாட வந்தார்

நமது சமூகம்

"அரியணை அமைத்துத்தந்தார்
ஆலயம் படைத்துத் தந்தார்
குருவென முதலாய் நின்று
கோட்டை கொத்தளங்கள் செய்தார்
கருவறை முதலாய் அந்தக்
கல்லறை போகுமட்டும்
கருவிகள் அனைத்தும் தந்தார்
கடவுளுக் குருவம் தந்தார்"

என்ற நம் முன்னோர் வாக்கை
ஏற்றிடும் ஆதீனங்கள்
குன்றென நிமிர்ந்து நின்று
குறையின்றித் திகழ வேண்டும்
வென்று நாம் வாழ்வதற்கே
விதிகளை வகுக்க வேண்டும்
இன்றதுயில்லை யென்றால்
ஏன்? எதற்கு? ஆதீனங்கள்

என்றவோர் கேள்விதன்னை
இதயத்துள் வைத்துக் கொண்டு
ஒன்றிடும் இடங்கள் எல்லாம்
செய்கின்றார் சமூகத்தொண்டு
நன்று நம் பழனிச்சாமி
நலமுற வாழ்க! வாழ்க!
வென்றிடும் அவரின் கொள்கை
வேள்விக்குத் துணையாய் நிற்போம்

சுயநலமில்லாக் கொள்கை
சுறுசுறுப்பான வாழ்க்கை
பயமெதும் இல்லா நெஞ்சம்
பதட்டமும் சேரும் கொஞ்சம்
நயம் பலவகுக்கும் திட்டம்
நாளெலாம் கொள்கைவட்டம்
இவைகள்தாம் பழனிச்சாமி
என்[ண்]பதால் வாழ்த்துகின்றோம்?

வாழிய அவர்தம் தொண்டு
வாகைப்பூ மாலை கண்டு
வாழிய வரலாற்றோடு
வண்ணங்கள் பலவற்றோடு
வாழியநூறாண்டுகண்டு
வளம்பல கண்டுகொண்டு
வாழிய! வம்சம் போற்ற
வாழி! நீடூழி வாழி!

25-6-2018

அன்புடன்

மு-விஸ்வபாரதி

அணிந்துரை



வை–சுப்ரமணியன் ஆச்சாரி
பிரம்மஸ்ரீ வைத்தியநாத ஆச்சார்யா
பவுண்டேசன்
70, முதல் தெரு, 1 பி குறுக்கு 2வது
முதன்மை, 5வது பிளாக்,
கிருஷ்ணையாலேஅவுட், பனசங்கரி
3வது ஸ்டேஜ்
பெங்களூரு–560085
e-mail: vaithianathacharya@gmail.com

ஓம்.

விஸ்வ பிராமண குல பெரு மக்களுக்கு வணக்கம்.

வாழ்க வளமுடன்.

அன்பர் அருள்நிதி மா.பழனிச்சாமி ஐயா அவர்கள் நான் மறுபதிப்பு செய்து வெளியிட்ட விஸ்வ பிரம புராணம் (2012) நூல் மூலம் அறிமுகமானார். இப்போது ஆண்டுகள் அறே ஆயின. எனினும் அறுபது ஆண்டுகளுக்குமேல் ஆத்மார்த்தமாகப் பழகிய அந்நியோன்யம் உள்ளது. அதற்குக் காரணம் எங்கள் எண்ணமும் செயலும் ஒருங்கிணைந்து பிரதிபலன் பாராது, புகழ்ச்சி வேண்டாத, சமூக மேம்பாட்டின் கண் உள்ளதேயாம்.

குலோத்தாரக பிரம்மஸ்ரீ தி.ம.தெய்வசிகாமணி ஆச்சாரியார் F.R.S.A. (Lon.) அவர்கள் தமது **விஸ்வகர்ம பிராமண வம்சப் பிரகாசிகை (1950)** எனும் நூலின் தோற்றுவாயில் நூல் எழுதக் காரணத்தை விளக்குங்கால், “கடந்த ஐயாயிரம் ஆண்டுகளிடையே வெளிவந்து, பொதுமக்கட்கும், சமூக மக்கட்கும் அறிவுச்சுடர் கொளுத்தவல்ல **ஓர் ஆகம நூல்** இல்லாக் குறையைப் போக்கவே இது போழ்து இந்நூலை எழுதும் அவசியம் ஏற்பட்டது” என எழுதியுள்ளார். இந்த விஸ்வ கர்மகுல ஆகம நூலில், 17–ம் அத்தியாயமான “விஸ்வகர்மப் பிராமண ஆச்சார்ய பீடங்கள்”

எனும் பிரிவில் தம் மக்களுக்கு வேதசம்பந்தமாகப் பண்டு தொட்டு (கிரேதா யுகம்) ஆச்சார்ய குருபீடங்கள் இருந்ததை "ஆச்சார்ய குரு பரம்பரை" எனும் சமஸ்கிருத நூலின் ஒரு ஸ்லோகத்தால் விளக்கி படிப்படியாக தென்னாட்டு மடங்கள் ஐந்தை பட்டியலிடுகிறார். இந்த ஐந்து மடங்களே இந்நூலில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டு விஸ்வகுல மடங்களைப்பற்றி, அந்தகக் கவிச்சிங்கம் பழனி மாம்பழக்கவிராயர், திருவாளர் ஊரான் அடிகளார், விஸ்வ குலோத்தாரக தி.ம.தெய்வசிகாமணி ஆச்சாரியார், ஆகியோரும் தொடர்ந்து சேலம் டெபுடி கலெக்டர், அருள் நெறியாளர் பிரம்மஸ்ரீ வே.சண்முகம் அவர்களும் இன்னும் சிலரும் எழுதியுள்ள படைப்புகளில் சிறு குறிப்புகளே உள்ளன.

ஆயினும்..... இந்நூல் தனித்தன்மையுமுடைத்து. இது நிகழ்கால நிலவரமும் விரிவானதும், கடந்தகால பெருமையும் தொடக்கமும் தெரிய ஆதாரப்பூர்வமான செய்திகளைத் திரட்டிய ஓர் ஆய்வு நூல்.

நுண்மாண் நுழைபுலத்திறமையுடன் தன் தளர்ந்த ஆயுளில் தளராத உந்துதலுடன் அகவை 70–80க்கும் மேற்பட்ட, ஐந்நூறுக்கும் அதிகமான அன்பர்களிடம் பல இன்னல்களுக்கிடையில் தன்மேல் அவர்களின் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு நேரடியாகத் திரட்டிய செய்திகள், படங்கள் அரியன; அருமையாகவும் உள்ளன. (On ground facts). இத்துறையில் எனக்குத் தெரிந்த வரையில் யாரும் செய்யாத முயற்சி. குருபீடங்கள், மடங்கள், ஆதீனங்கள், குருமார்கள் வகையில் இதுவே அரிச்சுவடி. இதை அடிப்படையாக வைத்து இளைஞர் சிலர் இந்த ஆய்வை மேலும் தொடர்வது சமூகத்துக்கு நன்மை பயக்கும். இந்த ஆய்வு உண்மைகள், மடம் சார்ந்த நிறுவனங்களை நெறிப்படுத்தி வளப்படுத்த உதவியாகும். ஆகவே மொத்த சமூக வளத்துக்கும் வழிவகுக்கும் என்பது திண்ணம்.

ஆய்வு உண்மைச் செய்திகளுடன் நில்லாது மடம், மடாதிபதி, ஆதீனம் ஆகிய சொற்பொருள் விளக்கமும், ஆதீனம் சமூகத்துக்கு செய்ய வேண்டுவன, சமூகத்தார் மடத்துக்கு செய்ய வேண்டுவன. அவை எவ்வாறு நெறிப்படுத்த இயலும், நலிந்த நிர்வாகத்தை நிமிர்த்த வழிமுறைகள் (மக்களாட்சி முறையில்) ஆகிய நெறிமுறைகள் நடைமுறையில் செயல்படுத்தத்தக்கன.

இந்நூல் குருந்தேர் ஓட்டும் பிள்ளைப் பருவத்தின் தளர்நடை என்பதால் கம்பீரத்தையும் நீண்ட தெளிவான விளக்கத்தையும் எதிர்பார்க்கலாகாது. நடை கற்பனையல்ல. உண்மைத்தகவல்களின் தொகுப்பு.

இப்பணி சிறப்பாக அமைந்திருப்பது அருள்நிதி மா.பழனிச்சாமி ஐயா அவர்களின் திறமையால் மட்டுமன்றி அவரின் குரு பக்தியும், இப்பணிக்கு அவரை ஆற்றுப்படுத்திய, மக்களால் தாடிசாமியார் என அழைக்கப்படும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிவானந்த முனீஸ் வர சுவாமிகளின் அருட்கடாச்சமும் காரணம் என்பதில் ஐயமில்லை.

இப்புனிதப்பணி வணிக நோக்கில் செய்யப்பட்டதல்ல. நூலாசிரியர் தனது ஓய்வூதியத்தையும் சேமிப்புத் தொகையையும் இருப்புத் தொகையாக வைத்து சமூகப்பணி செய்து வருகிறார். இந்நூல் விலைக்கு அல்ல என்பதும் நன்கொடைத் தொகை அனைத்தும் ஸ்ரீரங்கத்திலுள்ள விஸ்வகர்ம வேத பாட சாலைக்குப் போய்ச் சேரும் என்பதும் மேலும் சிறப்பு சேர்க்கிறது.

ஆத்மார்த்தமாக பணி செய்யும் ஆசிரியருக்கு இறைவன் மனநிறைவும் நோயற்ற செல்வமும் இறுதிநாள் வரை அளித்து அருள்பொழிய வேண்டுகின்றேன்.

வாழ்க வளமுடன்

ஜூன், 2018

அன்புடன்

வை–சுப்ரமணியன் ஆச்சாரி

அணிந்துரை

Dr.K. **கனகராஜ்** MBBS DNB
Diplomate in National Board of
Examination New Delhi
Consultant Surgeon
பென்னாகரம் – 638810



ஸ்ரீவிராட் விஸ்வகர்ம பரப்பிரம்மனே நமஹ

ஆன்றோர்களுக்கும் சான்றோர்களுக்கும் எனது நமஸ்காரம். இளவல்களுக்கு எனது ஆசீர்வாதம். ப்ரம்மஸ்ரீ மா.பழனிச்சாமி ஆச்சாரியார் அவர்களை எனக்கு வெகுகாலமாக நன்கு தெரியும். இவரது சகோதரர் ப்ரம்மஸ்ரீ மா.பொன்னுச்சாமி ஆச்சாரியார் அவர்களும், நூல் ஆசிரியர் அவர்களும் சிறந்த சமூக மற்றும் ஆன்மீக ஆர்வலர்கள். ப்ரம்மஸ்ரீ மா.பழனிச்சாமி அவர்கள் Bsc (Agri) பட்டம் பெற்றவர். வங்கிதுறையிலும் பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்றுள்ளார். பதவியில் இருந்தபோதும் சரி ஓய்வு பெற்றபின்னரும் சரி இவர் குடும்பத்திற்கு பாடுபட்டதை விட சமூகத்திற்கும் ஆன்மீகத்திற்கும் அதிகம் பாடுபட்டார் என்றால் அது மிகையாகாது. ஆன்மீகத்தில் பல மைல் கற்களை தொட்டவர் சமூக சிந்தனையிலும் சளைக்காதவர் என்பதற்கு இந்த புத்தகமே சான்று.

விஸ்வகர்ம பிராமணர்களை பற்றி எத்தனையோ நூல்கள் வெவ்வேறு காலகட்டங்களில் வெளிவந்துள்ளன. ஆனால் விஸ்வகர்ம பிராமண மடங்களைப் பற்றிய நூல் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. அந்த வகையில் இந்நூல் விஸ்வகர்ம பிராமண சமூக வரலாற்றில் ஒரு மைல்கல் என கொள்ளலாம்.

சிந்தனைகளே செயல்பாட்டுக்கு வந்து உருப்பெறுகின்றது. நல்ல சிந்தனைகளே நல்ல உறுப்பெறும். நல்ல சிந்தனைகளை உருவாக்குவது ஆன்மீகமே. ஆன்மீகத்தை மக்களிடையே

வளர்த்தெடுப்பது ஆதீனங்களின் தலையாய கடமை. அது இடர்படும்போது நற்சிந்தனைகள் பிறவா. அதன்பால் விளையும் செயல்பாடுகளும் நல்ல உறுப்பெறாது என்பது நூல் ஆசிரியரின் ஆணித்தரமான கருத்து.

விஸ்வகர்ம பிராமணர்களது மடங்கள் சரியாக செயல்பட்டிருந்தால் இன்று விஸ்வகர்ம மக்களிடையே குன்றிபோயுள்ள ஆன்மீகமும் அதன்பயனாக விளைந்த தாழ்வு நிலையும் வந்திருக்காது என்ற நூலாசிரியரின் ஆதங்கம் நியாயமானதே. இதனை சீர்படுத்தி தூக்கி நிறுத்த நூலாசிரியர் எடுத்த முயற்சிகள் அனைத்தும் பாராட்டதக்கவையே.

அவருடைய சுயநலமில்லா உழைப்பு (கர்மா) நிச்சயம் தன்னுடைய பலனை (ப்ரம்மத்தை) உடனடியாக இல்லாவிட்டாலும் தக்க காலத்தே கொடுக்கும் என்பது திண்ணம். இவரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் (தவறுகள் என்று சொல்லமாட்டேன்) இனிவரும் காலங்களில் நிவர்த்திக்கபடுமாயின் விஸ்வகர்ம மக்கள் உயர்வுபெறும் காலம், வெகுதொலைவில் இல்லை.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள விஸ்வகர்ம பிராமண மடங்களை தொகுத்து ஒவ்வொரு ஊராக சென்று கிடைத்த நூல்களையும் கல்வெட்டுகளையும் ஆராய்ந்து அங்கு வசிப்பவர்களிடம் விசாரணை செய்து தகவல்களை சேகரித்த விதமும் அப்போது அவருக்கு ஏற்பட்ட சிரமங்களும் (பணத்தால் மனத்தால் உடலால்) என்ன என்பது யூகிக்கத்தக்கவை. இவ்வகையில் ப்ரம்மஸ்ரீ பழனிச்சாமி ஆச்சாரியார் அவர்கள் நம் குலத்தில் உதித்த தமிழ் தாத்தா உ.வே.சாமிநாதய்யர் என்றால் மிகையாகாது.

லிங்க வழிபாடு பற்றிய நூலாசிரியரின் கருத்தில் இருந்து நான் சற்று மாறுபடுகின்றேன். லிங்கம் பற்றி குறிப்பிடும்போது அவரது கருத்து இறைவனால் படைக்கப்பட்ட Unisexual organisms, Asexual organisms and other inanimate creations பற்றி கவனத்தில் கொள்ளவில்லை என்பது கருத்து. படைப்பவனும் அவனே படைக்கப்பட்ட பொருளும் அவனே.

லிங்கம் என்பது Axis bywhich, through which around which every thing evolves, revolves and resolves in என்பதே சரியானதாக இருக்கும். எந்த புள்ளி (லிங்கம் Axis) யிலிருந்து எல்லாம்

உற்பத்தியாகின்றவோ, எந்த புள்ளியை (பிந்து) சுற்றி அவை வியாபித்து சுழல்கின்றதோ, எந்த புள்ளியில் அவையெல்லாம் அடங்குகின்றதோ அதுவே லிங்கம்.

ஒவ்வொரு மடத்தைப் பற்றியும் நூலாசிரியர் விரிவாக எழுதி செல்லும் பாங்கு சிறப்பாகவுள்ளது. அதில் கையாளப்பட்டுள்ள சரித்திர சான்றுகள், மெய்சிலிர்க்க வைக்கின்றன. எனது மனம் கவர்ந்த இடங்களில் சில: ஓம் கார நாத சுவாமிகள் மற்றும் நீலகண்ட பரமாச்சாரிய சுவாமிகள் பற்றிய செய்திகள் திருவாங்கூர் பழசி மஹாராஜாவுக்கும் திருநெல்வேலி மடத்துக்கும் ஆன தொடர்பு. அதனால் கிடைத்த கொழுந்து மாமலை முருகன் அதுவும் அருணகிரி நாதரால் திருப்புகழ் பாடபெற்ற ஸ்தலம் என்பது கூடுதல் மகிழ்ச்சி அளிக்கின்றது. நெல்லை மடத்திற்கும் ஊத்துமலை ஜமீன்தாருக்கும் உள்ள உறவால் கிடைக்கப்பெற்ற சுரண்டை. சிவகங்கை குறுநில மன்னரால் திருநெல்வேலி மடத்திற்கு அளிக்கப்பட்ட மானியம் சிவகங்கை கோவில், ஆற்காடு நவாப்க்கு திருநெல்வேலி மடத்தின் அருளால் கிடைக்க பெற்ற சந்தான பாக்கியத்திற்கு கைமாறாக கிடைக்க பெற்ற சென்னை கோமளீஸ்வரன்பேட்டை மீனாட்சியம்மன் கோவில், கேரளா எட்டுகரை விஸ்வகர்மாக்கள் பற்றிய குறிப்பு சிவானந்த முனீஸ்வர சுவாமிகளுக்கும் பண்டித ஜவர்கர்லால் நேருவுக்கும் ஆன தொடர்பு என விரிந்துகொண்டே போகின்றது. என்னை வாட்டியது. சிவானந்த முனீஸ்வரர் வாழ்ந்த காலத்தில் நான் வாழ்ந்தும் அவரை தரிசிக்க முடியவில்லை என்ற ஏக்கம்."

வழிபாட்டு மொழியைப் பற்றி எனக்கு நூலாசிரியரோடு ஒத்த கருத்தேயாம். ஒருவரது எண்ண அலையை உணர்வுகளை பிறர் உணர பயன்படுத்தப்படும் ஊடகமே மொழியாகும். உணர்வை சுமந்து செல்லாத மொழி வெறும் வெற்று ஒலியே ஆகும். அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ். உணர்வுக்கு முன் சொற்கள் பயனற்றுப்போகும். பல சமயங்களில் மௌனமே பெரிய மொழி மௌனம் தமிழா, சமஸ்கிருதமா ஆங்கிலமா? செல்லுவர் சிவபுரத்துள் (கடவுளினுள்). யாரெல்லாம் செல்லுவர்? சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவர். எனவே எந்த மொழியாகிலும் பொருள் அறியாது ஒப்புவிக்கும் போது எந்த பலனையும் அளிக்காது.

காஞ்சி மடம் என்றால் இந்தியா முழுவதும் தெரிகின்றது. காஞ்சிபுரத்தில் இறங்கி சங்கர மடம் என்றால் எல்லோரும் வழிகாட்டுகின்றார்கள். ஆந்திராவில் வீரபிரம்மாங்காரு மடம் என்றால் எல்லோரும் வழிகாட்டுகின்றனர். ஆனால் திருநெல்வேலியில் இறங்கி பரசமயகோளரி நாதர் மடம் என்றால் யாருக்கும் தெரிவதில்லை. அதே நிலைதான் திருவண்ணாமலையில் இறங்கி சீனந்தல் மடம் என்றால் யாருக்கும் தெரிவதில்லை.

பிரம்ம ஸ்ரீ மா.பழனிச்சாமி ஆச்சாரியரின் இந்நூல் இந்த குறையை களையும் என்பதில் ஐயமில்லை. இந்நூலின் நோக்கம் நிறைவேற வேண்டுமாயின் ஆதீனங்களையும் குருமார்களையும் போற்றி செம்மையாக வைத்திருப்போம். நாமும் செழுமை பெறுவோம். வாருங்கள் ஒன்றுபட்டு உழைப்போம். அணிந்துரை வழங்க வாய்ப்பு கொடுத்த ப்பிரம்மஸ்ரீ மா.பழனிச்சாமி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

பென்னாகரம் அன்புடன்

17-6-2018 Dr.K. **கனகராஜ்** MBBS DNB


Guru Pooja On : 24.12.2016
At : Thirunelveli Mutt
Relatives of Srimath Shivananda
Muneeshwara Swamigal

முதல் பாகம்

1. சீனந்தல் மடாலயம்

ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய குருபீடம்:

நினைத்தாலே முக்தியளிக்கும் புண்ணிய ஸ்தலம் திருவண்ணாமலை. அடிமுடி தேடியும் காணக்கிடைக்காத சிவபெருமானே, மலையாக உருவெடுத்து காட்சிதரும் திருவண்ணாமலை, தமிழ்நாட்டில் ஜவ்வாது மலைத்தொடரில் கிழக்கு அடிவாரமே திருவண்ணாமலை. இங்கு மிருகண்ட நதியின் கிழக்குக்கரையில் காந்தப்பாளையம் எனும் ஊருக்கருகில் சீனந்தல் என்ற சிறுகிராமத்தில் அமைந்துள்ளது. சீனந்தல் மடாலயம் என்ற **ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய குருபீடம். (படம் 1–பக்.52)**

இது தமிழகத்திலுதித்த பழம் பெரும் விஸ்வகுல மடமாகும். சுமார் 1400 ஆண்டுகள் பழமையானது. ஆரம்பம் முதல் இன்று வரை கிரஹஸ்தரே மடாதிபதியாகத் தொடரும் மடம். தகப்பன், பிள்ளை என்று ஆன்மீகம் கலந்த மட நிர்வாகம் தொடர்கிறது. தற்போது 65வது பீடாதிபதி பொறுப்பிலிருக்கிறார். ஸ்தாபகரான ஆதி சிவலிங்காச்சார்ய ஸ்வாமிகளும் (படம் 2) ஏழாவது பட்டம் ஸ்ரீவீரவைராக்ய ஆச்சார்ய ஸ்வாமிகளும் (படம் 3) இன்றளவும் பிரபல அருள் சக்தியை உயர்த்திக் காட்டியவர். இத்தவசீலர்களின் அற்புதங்கள் செவி வழிச் செய்திகளாகவும், கட்டுரை வெளியீடுகள் என்றும் காணக்கிடைக்கின்றன.

ஒரே மடம், சொத்து, சுமார் 2 ஏக்கர் பரப்பு நத்தம் புறம்போக்கு மண்சுவர், குடிசை, நெல்வைக்கோல், கூரை, என்றமைந்த அமைதியான சூழலும் ஆன்மீகத்தில் எளிமை என்ற பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கிய மடாலயம்.

வறுமையிலும் சொத்தைப் பாதுகாத்த செயல்: வறுமை, வரட்சி, அவசரகாலச்சட்டம், பிரகடனம் என்ற சூழ்நிலையில், இருக்கும் இரண்டு ஏக்கரையும் பிறர் ஆக்கிரமிப்பிலிருந்து தடுத்து நிறுத்திக் காப்பாற்றும் பொருட்டு 1996ம் ஆண்டு தான், நிலத்திற்கு பட்டாவாங்கும் முயற்சியில் இறங்கி வெற்றியும் கிட்டியது. (மே7) அன்றைய அரசு வருவாய்த்துறை அதிகாரிகள்/அலுவலர்களின் உதவிகரமான யோசனைப்படியே, தனித்தனியாக மூவர் பெயரில் பட்டா வாங்கப்பட்டது.

அதாவது ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய பீடம் சுமார் 1 ஏக்கர், மடாதிபதி ஸ்ரீசிவஷண்முக ஞானச்சாரியார் பேரில் சுமார் 50 செண்ட் திரு.சிவராஜன் பெயரில் 50 செண்ட் என்று மொத்தமுள்ள இரண்டு ஏக்கரும் மூன்று பெயரில் தனித்தனிப்பட்டாவாக எழுதி வாங்கப்பட்டது. (பட்டா தனிநபர் பெயரில் இருந்தாலும், சொத்து முழுவதும் ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய பீடத்துக்குத் தான் என்பது சட்டத்தின் குரல்) இம்மடத்திற்கு வேறு கிளைகளும், சொத்தும் கிடையாது.

ஆன்மீக வலிமையும், உயர்வும்:

ஸ்தாபகர் ஸ்ரீமத் ஆதிசிவலிங்காச்சார்ய ஸ்வாமிகள் தம் தவவலிமையால் அந்திம காலத்தை உணர்ந்து ஜீவசமாதி நிலையில் (நிஷ்களா) அமர்ந்த நன்னாள் கி.பி.1413 கார்த்திகை மாதம் கடைசித்திங்கள்கிழமை (சோமவாரம்) ஆகவே ஒவ்வொரு ஆண்டும் தமிழ் கார்த்திகை மாதம் கடைசி திங்கள்கிழமையன்று இந்தத்தவசீலர் குருமகானை நினைவில் நிறுத்தி வணங்கி அருள் ஆசிபெறும் குருபூஜை விழா மிகவும் பயபக்தியுடனும் விமரிசையாகவும் அன்று முதல் இன்றளவும் தொடர்ந்து நடந்து வருகிறது.

அவ்வாறே ஏழாவது மடாதிபதி ஸ்ரீமத் வீரவைராக்கிய மூர்த்தி ஸ்வாமிகளின் தவவலிமை திருவண்ணாமலை பெரும் நந்தியின் (படம்.4–பக்.52) வரலாறுடன் பின்னிப் பிணைந்துள்ளது. அந்தத் தவசீலரின் புகழை நினைத்து நன்றியுடன் நினைவு கூர்ந்து அருள் ஆசி பெறுவதற்காக குருபூஜை விழா பிரதி வருடம் வைகாசி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.

மடாதிபதிகளின் அற்புதங்களை பட்டியலிடுமுன் ஆதி சிவலிங்கமூர்த்தி மடத்தின் அருமைகளையும், சேவைகளையும் புரிந்து கொள்வது அவசியம்.

திருவண்ணாமலையிலிருந்து சற்று ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள மடம் தனிமையில் புனிதம், பெருமை என்று பாதுகாத்துயர்ந்தது. இங்கு வாழ்ந்த மடாதிபதிகள் பாதயாத்திரை என்று வடஆற்காடு, தென்ஆற்காடு, கடலூர், சென்னைப்பட்டினம் ஆந்திராவிலுள்ள சித்தூர் என்று பிரவேசித்து நற்போதனைகளை வழங்கியும், (வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு மடாதிபதிகள் அருளாட்சி செய்து வந்தார்கள்) திருவண்ணாமலைப்பகுதியைச் சுற்றியே அதிகம் பிரயாணம் இருந்துள்ளது. மடாலயத்தில் தினமும் உபாசனா மூர்த்திகள் பூஜை ஆதி சிவலிங்காச்சார்ய ஸ்வாமிகளுக்கு கார்த்திகை கடைசி சோமவாரத்திலும், வீரவைராக்ய ஸ்வாமிகளுக்கு வைகாசி முதல் ஞாயிறிலும் குருபூஜை என்ற விழாக்கள் தான் தொடர்ந்து வந்தன. **பக்தர்கள் கூட்டம் அதிகம் வராத பிறநாட்களிலும், பிரதேசயாத்திரை இல்லாத நாட்களிலும் மடாதிபதிகள் தவம், தியானம், ஜபம் என்று தம் நிலைகளை உயர்த்திக் கொள்வதில் நாட்டம் காட்டினர், அன்னாளில்.**

ஆச்சாரிமடம்:

சொத்தும், வருமானமும், இல்லாத மடத்தில் பக்தர்கள் கொண்டுவந்து கொடுத்த தானியங்கள், பாத்திரங்கள், பொற்காசுகள், ரூபாய், நாணயங்கள், தான் வரவு. அந்த வரவு செலவைக் கணக்குப்பார்த்து எழுதி வைக்கவும் மடத்துப் பாதுகாப்புக்கும் என்று சம்பளத்துக்கு உதவியாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். அக்காலத்தில் சாதி வித்யாசமில்லாமல் பல வர்ணத்தைச் சேர்ந்தவரும் (பொதுவாக விவசாயம், தறி நெசவு குயவர், வாணியச்செட்டி, வேளாளர் என்றனைவரும்) ஆன்மீக தாபத்தில் மடத்துக்கு வந்து அருளாசி உபதேசங்களை பெற்றும் ஸ்வாமிகளுக்கு காணிக்கை, மரியாதை செய்தும் வந்தனர். சமீபகாலமாக சுமார் 30–40 ஆண்டுகளாகத்தான் பொதுமக்களும் அரசு பஸ் கண்டக்டர்களும் இதை ஆச்சாரி மடம் என்று அடையாளம் காட்டுகின்றனர்.

கட்டுமான வளர்ச்சி:

மடத்தைச்சுற்றி காம்பவுண்டு சுவர் 1980–85களில் கட்டி முடிக்கப்பட்டது. (படம் 6+6எ–பக்.227) 1978ல் தொடங்கி 1996ல் பட்டா வாங்கினார்கள். 12–12–2003ல் மூலவர் சன்னதிக்கு மேல் விமானமும் முகப்பில் ராஜகோபுரமும் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. பக்தர்கள் தங்கும் மண்டபங்கள் மாவட்ட வாரியாக நன்கொடை செய்து 2005–06ல் கட்டப்பட்டது.

வேதபாடசலை:

குருகுலவாசம் அடிப்படையில் முறையான வேத அத்யாயனப் பாடசாலை துவக்கப்பட்டு நடத்தி வரும் இம்மடம், இளம் சந்ததியை ஊக்குவிப்பதில் அக்கறை காட்டியுள்ளது. இப்பாடசாலையின் அறக்கட்டளை பதிவு செய்யப்படவில்லை. மடாலயம் சுத்தம், வழிபாடு, கும்பாபிஷேகம், பாலாலயம் என்ற வேத பூர்வமான கிரியைகளில் செயல் விளக்கம் கற்றுக்கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. விஸ்வபிராமண, பிராமண வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பிற்காலத்தில் கைதேர்ந்த அர்ச்சகர், புரோகிதர் என்று சுயமாகப் பிழைப்புத் தேடிக் கொள்ளுவதற்கு இது உபயோகமான கல்வி முறை. கி.பி.2005ம் ஆண்டு துவங்கப்பட்ட இத்திட்டம் (கும்பாபிஷேகத்திற்குப் பிறகு) இன்னும் தொடர்கிறது. ஆறு ஆண்டுகாலம் தொடர்ந்து உணவு, உறைவிடத்துடன் என்ற குருகுலக்கல்வி, மேலும் சிறப்புற வகை உண்டு.

அற்புதங்களை நடத்திக்காட்டிய 7ம்மடாதிபதி ஸ்ரீமத் வீரவைக்ராக்ய ஸ்வாமிகளின் தவவலிமை அற்புதங்களான காய்ச்சிய இரும்பு பாதுகைகளை அணிந்து கொண்டு நடந்தது, மாமிச நைவேத்யம் மணக்கும் மலர்களாக மாறியது. வெட்டப்பட்ட காராம்பசு ஒன்றாக இணைந்து உயிர் பெற்றது. கல்நந்தி எழுந்து அருகம்புல்லைச் சாப்பிட்டது போன்ற தெய்வீகச் செயல்களை விவரமாக இம்மடத்தின் வெளியீடைப் படித்து மகிழலாம். **தம் தவவலிமையால் ஆக்கும் சக்தியை பிரயோகிக்கும் இந்தயோகிகள் மடாதிபதிகளாக அருளாட்சி செய்த காலம் இருந்தது என்பது வரலாற்று உண்மை.**

ஆவணங்கள்

பல மடாதிபதிகளின் அருளாட்சிக்காலம், நிகழ்த்திய அற்புதங்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கும், எடுத்துக்காட்டு வதற்கும் செப்பேடுகள், குறிஏடுகள், கல்வெட்டுகள், வெளியீடுகள், முத்திரைகள் என்று அத்தாட்சிகள் முறையாக ஆவணப்படுத்தப் படவில்லை. 63, 64வது மடாதிபதி காலத்தில் தான் குறிப்புகள் வெளியீடுகள் என்று பிரகடனம் செய்யும் முயற்சி நடந்துள்ளது. அதாவது கி.பி.1927ம் ஆண்டு பிறந்து தமது மூன்றாவது நான்காவது வயதிலேயே தந்தை திரு.சிவலிங்கராச்சரியாரை இழந்துவிட்டு, மடத்துக்கு 64வது மடாதிபதி என்ற வாரிசு உரிமைப் பொறுப்பைச் சுமக்கத்துவங்கிய ஸ்ரீசிவஷண்முக ஞானா ஆச்சாரியாரின் (படம்.9–பக்.52) வாழ்க்கைச்சரிதமே நிலைத்து நிற்குமாறு பலரும் சொல்லியும், எழுதியும் வருகிறார்கள். காசியில் வேதம் படித்தது பிற ஊர்களில் தெலுங்கு, சமஸ்கிருதம், தமிழ், உருது, இந்தி, மலையாளம் மொழி படித்தது தமது 30 வயதில் ஹேவிளம்பி ஆவணி 5ம் நாள் (17–8–1957ல்) விவாகம் செய்து கொண்டது. மகன், மகள் பேரக் குழந்தைகள் என்று ஸ்ரீசிவஷண்முக ஞானச்சார்யாரின் குடும்ப வாழ்க்கை விபரம் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

எனினும் முதன்முறையாக 12–12–2003ல் நடந்த (படம் 6, 7, 8–பக்.229) குருபூஜையை ஒட்டி ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய குருபீடத்தின் வரலாற்றுச்சான்று என்று ஒரு கையடக்கத் தொகுப்பு (மே8) நூல் வெளிவந்தது. அதில் தான் ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய குருபீடத்தை பூதபரம்பரையாக அலங்கரித்த மடாதிபதியின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது. (விபரம் 50, 51ம் பக்கம் இணைக்கப்பட்டுள்ளது) (ஒவ்வொருவரும் எந்த வருடம் தொடங்கி எந்த வருடம் வரை எத்தனை ஆண்டுகள் மடாதிபதி பதவியில் இருந்தார்கள் என்ற குறிப்பு இல்லை. இவ்வரிசையில் கடந்த 11–6–2017–ம் நாள் சீனந்தல் மடத்தின் மடாதிபதி அதிகாரம் கைமாறியது. 64வது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானச்சாரியாரின் ஆயுள் காலத்திலேயே இந்தப்பதவி அதிகாரமாற்றம் நடந்துள்ளது என்பதை அச்சமயம் வெளிவந்த “வாட்சப்” செய்தியும் திருநெல்வேலியைச் சேர்ந்த புனரமைப்பு

சங்கம் எழுத்து பூர்வமாக உயர்திரு. சிவராஜ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் காணலாம். (பக்கம் 53). ஆக தற்போது 65வது மடாதிபதி உயர்திரு. சிவராஜ் அவர்கள்.

சீனந்தல்மடம்:

இது ஆதீனமா? மடமா? கோவிலா? மடாலயமா? ஆஸ்ரமமா?

ஆதீனம் என்றால் சைவமடம். மடம் என்றால் துறவிகள் வாழும் இடம். துறவிகள் அன்றாடம் உபாசனா மூர்த்திகளை வழிபடுவதன் மூலம் தமது பக்தர்கள் சிஷ்யர்கள் வழிபடுவதற்கு எனவும் உபாசனாமூர்த்தி விக்ரஹ வழிபாடு என்று கோவில் உருவாகியது. மடத்துக்குள் கோவில். பொதுமக்கள் வழிபடும் பொதுக்கோவில் அல்ல. எனவே இதுமடாலயம் என்றும் அழைக்கப்படலாம் என்பது சட்ட வல்லுனர்களின் கருத்தாய்வுரை. மேற்சொன்ன கருத்தாய்வின் படிப் பார்த்தால் கிளைகள் இல்லாத சீனந்தல் ஆதீனம் இல்லை. துறவிகள் இல்லை. இல்லறத்தாரே அதிகாரம். எனவே மடமும் இல்லை.

வேதபாடசாலை இருக்கிறது. ஆதி சிவலிங்கமூர்த்தி ஜீவசமாதியும் (படம்.2,3–பக்.52) ஸ்ரீவீரவைராக்ய மூர்த்திகளின் ஜீவசமாதி அல்லது அனுஷ்டானம் இருப்பதோடு வேறுபல தெய்வங்களுக்குக் கோவில்களும் வந்து செல்லும் பக்தர்கள் தங்கவிடுதியும் உள்ளன. பொது ஜனம் வந்து செல்லும் ஒரு ஆஸ்ரமமாக மாறிவிட்டதோ என்று ஐயப்பாடு எழுகிறது. பலரும் இந்தக் குழப்பத்திற்கு விடைதேடுகிறார்கள் என்பது மட்டும் நம் கவனத்திற்கு வந்துள்ளது. எது எப்படியோ வருடம் ஒரு குருபூஜை விளம்பரம் விமரிசையாகவும், மற்றொரு குருபூஜை அதிக ஆர்வம் விளம்பரம் இல்லாமலும் நடந்து கொண்டிருக்கின்றன. வேதப்பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. வேதபாடசாலையின் முதல்வரும் மடத்துக்குள் தங்குவதில்லை.

இளையமடாதிபதி என்ற பட்டம்:

சீனந்தல் மடத்தில் 64வது மடாதிபதிஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானச்சார்ய ஸ்வாமிகள் மடாதிபதிக்கு உதவியாக ஸ்ரீகார்யம் என்ற பட்டத்துடன் ஒரு உதவியாளரை நியமித்துக்கொள்ள

மடாதிபதிக்கு உரிமையும் கடமையுமுள்ளன. அதைப்பயன்படுத்தி 64வது மடாதிபதியவர்கள் கி.பி.2000க்குப் பிறகு தமது மூத்தபிள்ளை திருவளர் செல்வன் சிவராஜையே ஸ்ரீகார்யம் என்று நியமித்தார்கள். திரு.சிவராஜும் ஸ்ரீகார்யம் என்ற பொறுப்பை கடமையைச் சிறப்பாகச் செய்து வந்தார்கள். திரு.சிவராஜ்க்கு திருமணமும் ஸ்ரீகார்யப்பட்டமும் மடத்துக்குள் வாசம் என்ற நிலையையும் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக ஞானச்சார்யார் உருவாக்கிக் கொடுத்தார்கள். டிசம்பர் மாதம் 2003ல் நடந்த குருபூஜை கும்பாபிஷேக நிகழ்ச்சிக்குப் பிறகு செயல்பாடு, பட்டம், பொறுப்பு, வருமானம் என்று **எல்லா வகையிலும் வேறுபாடான அதிகப்படியான முன்னேற்பாடுகளைக் கொண்டுவந்து மடத்துக்குப் பெயர் சேர்த்த பெருமை திரு.சிவராஜன் அவர்களையே சேரும்.** ஸ்ரீகார்யம் என்ற அந்தஸ்து மடத்துக்குள் செய்ய வேண்டிய வேதோக்தமான காரியங்களை மடாதிபதியின் ஆணைப்படி செயல்படுத்துவது என்பதாகும். தன்னிச்சையாக எதையும் செய்வதாகாது, மடாதிபதியின் எண்ணத்தை ஆணையைச் செயல்படுத்திடும் செயலாளர், மேலாளர், செக்ரடரி, மேனேஜர் என்ற பொறுப்பு மட்டுமே, ஸ்ரீகார்யம் ஆகும். சீனந்தல் மடத்துக்கும் குடும்பத்தவருக்கும் வருமானமும், பெயரும் சம்பாதிக்கும் எண்ணத்துடன் ஸ்ரீகார்யமான திரு.சிவராஜ் அவர்கள் **மடத்துக்கு வெளியே தமிழகம் முழுவதும் பயணம் செய்து கோவில் கும்பாபிஷேகம் என்ற பணியில்** அதிகம் ஈடுபட்டார் அதிக வருமானம் சேர்ந்தது. விழா அழைப்பிதழ்களிலும் கல்பலகையிலும் **ஸ்ரீகார்யம் என்பதைத் தவிர்த்து "இளையமடாதிபதி சிவராஜ் ஸ்வாமிகள்"** என்று விளம்பரம் வெளியாயின.

இந்திய விஸ்வகுல ஆதீனம் / மடம் வரலாற்றில் இளைய மடாதிபதி என்ற பேச்சுக்கும், பதவி பட்டத்துக்கும் இடமில்லை. சட்டம் இளையமடாதிபதி என்ற பட்டத்தை அந்தஸ்தை அங்கீகரிக்கவில்லை. **இவ்வாறாக 2002 முதல் 2017 வரை மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானச்சாரியாரின் உத்தரவு, ஆணை, அனுமதி ஏதுமின்றி பொருந்தாத, இல்லாத பட்டத்தைப் பயன்படுத்தி வருமானம் பெருக்கப்பட்டது,** தமிழக

விஸ்வகுல மக்களும் மடத்தின் அடுத்த வாரிசு இவர் தானே என்று மடத்துக்கு மரியாதை என்ற எண்ணத்தில் தான் திரு.சிவராஜ் அவர்களைக் கொண்டாடினார்கள், காணிக்கை கொடுத்தார்கள். மடாதிபதி அனுமதிக்கவில்லை. சட்டத்துக்குப் புறம்பானது என்ற விபரம் தெரியாத அறியாமையை அறுவடை செய்தது போல் நடந்த இந்தத் தனிச் சுதந்திரப் போக்கு 04–12–2015ம் நாள் சீனந்தல் மடத்தில் நடந்த குருபூஜைவிழாவில் வெளிச்சத்திற்கு வந்தது. விரிவான அறிக்கை மக்கள் முன் பிரகடனம் செய்யப்பட்டது. (எமது விழிப்புணர்வு சுற்றறிக்கை எண் 4 வெளியீடு).

சீனந்தல் மடத்தின் நிர்வாக அமைப்பும் நிர்வாகமும்:

மடாதிபதி, ஸ்ரீகார்யம், பாதுகாவலன், மடத்துகணக்குப் பிள்ளை என்ற சுருக்கமான நிர்வாக அமைப்பு இருந்தது. ஸ்ரீசிவசண்முகஞானச்சாரியார் மடத்துக்கு வந்த சமயம் அவரது தந்தை, தாயார் வழி உறவுகள் என்று மேலும் எட்டு நபர்களும் மடத்துக்கு வரும் வருமானத்தைக் கொண்டுதான் வாழும் நிலை இருந்தது. ஆக மொத்தம் 13–14 பேர் உயிர்வாழ மடத்தில் வருமானம் வந்தால் தான் என்ற நிலைமை, கணக்குப்பிள்ளையும், ஜவானும் வேலையிலிருந்து நீக்கப்பட்டு சம்பளச்சுமை குறைக்கப்பட்டது. திருமணத்துக்குப்பிறகு மனைவி குழந்தைகள் உடனுறையும் சொந்தங்கள் என்று பராமரிக்கும் அளவிற்கு வருமானம் சம்பாதிக்க ஒரே ஒரு ஸ்ரீசிவஷண்முக ஞானச்சாரியார் மட்டுமே. **அதுவும் மடாதிபதி என்ற நிலையில் கொடுத்ததை வாங்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்.** இந்த வறுமையே வருமானம் பெருக்கும் முயற்சியில் சீனந்தல் மடத்திலிருந்து திருவண்ணாமலை நகருக்கு குடிபெயரும் முயற்சிக்கு வித்திட்டது. 1968–1970 முதல் மடாதிபதி மடத்துக்குள் வாழாத மடம் என்ற நிலை உருவாகியது. கிரஹஸ்தர் மடாதிபதியானதால் இப்படியும் இக்கட்டு வந்து சேர்ந்துவிட்டது.

கி.பி.2017க்குப் பிறகு சீனந்தல் மடத்து நிர்வாகம்:

ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முகஞானச்சாரியாருக்கு 64வது மடாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெறும் நிலை ஏற்பட்டது. 65வது மடாதிபதியாக உயர்திரு. சிவராஜ் அவர்கள் 11–6–2017ல் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ளார்கள். 03–12–2015–ம் நாள் சீனந்தல்

மடத்து ஸ்ரீகார்யமாக, ஸ்ரீகோவிந்தராஜன் நியமிக்கப்பட்டார். அவரும் அந்நாள் முதல் இன்று வரை மடத்துக்குள் சரியாக அதிகம் வாசம் செய்யவில்லை. மடத்து விஷயங்களைக் கவனிக்க வாய்ப்புமில்லை. வேறு புதிய ஸ்ரீகார்யம் நியமிக்கப்படாத நிலையில் மடத்தின் சேவைகளுக்கு ஸ்ரீகார்யம் இல்லை என்றாகிறது. சுருங்கச் சொன்னால் சீனந்தல் மடத்துக்குக் கணக்குப்பிள்ளை இல்லை. ஸ்ரீகார்யம் இல்லை. எல்லாம் ஸ்ரீசிவராஜ் அவர்கள் தான் என்ற நிலைமை நாளது 11–06–2017 தேதி முதல் அமலில் உள்ளது.

சீனந்தல் மடம் 64வது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முகஞானாச்சாரியாரின் தனிச்சிறப்புகள்:

தாம் பிறந்த மூன்றாவது நாலாவது வயதில் தந்தையை இழந்ததால் வாரிசுச்சுமையாக ஒன்றும் அறியாத வயதில் மடாதிபதி என்ற பெரும் பட்டத்தை/பொறுப்பை ஏற்க வேண்டியதாயிற்று.

திண்ணைப் பள்ளிக்கூடம், குருகுலவாசம் என்று சிரமத்துடன் கல்வி ஞானத்தைத் தேடிக்கொண்டார். சுமார் எட்டு இந்திய மொழிகளில் எழுத, பேச, வாசிக்க என்று மொழி வளத்தை உயர்த்திக்கொண்டவர். தமிழில் பல்லாயிரக்கணக்கான ஆன்மீகப் பாடல்களை எழுதியுள்ளார்.

காசியில் வேதம் படிக்கத்தடை ஏற்பட்டபோது கோத்திரத்தை சாமர்த்தியமாக மாற்றிக் கூறி குருவின் அனுமதி பெற்று வேதம் பயின்றார்.

கிரஹாஸ்ரம தர்மத்தால் உறவுகளைப் போஷிக்கும் தலையாய பொறுப்பினால் மடத்துக்குள் வசிக்காமல் திருவண்ணாமலை நகரில் வசித்து சோதிடம், திருமணம் கும்பாபிஷேகம் வாஸ்து, மந்திரம் தந்திரம் என்று பலவகைத் திறமையால் முடிந்தவரை சம்பாதித்துத் தம்மையும் தம் உறவுகளையும் போஷித்து பாதுகாத்தார். 1981ஆண்டில் திருநெல்வேலி அக்கசாலைப் பிள்ளையார் கோவில் தெருவிலிருக்கும் மிகப் பழமையான ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதினத்தின் மடாதிபதி பொறுப்பும் கூடுதல் சுமையாகவந்த போதும் அதையும் ஏற்றுக்கொண்டார். இயன்ற வரை வழக்காடு மன்றங்களில் ஆதீனத்தின் நலன் காக்கப்பாடுபட்டார்.

ஸ்ரீசிவஷண்முகஞானச்சாரியாரின் இயலாமை:

சமஸ்கிருதம், வேதம் ஓதுதல் மட்டுமே தம் வாழ்வின் குறிக்கோள். மடத்தின் நிர்வாகம், சொத்துக்கள் பராமரிப்பு, மடத்துக்கு வருமானம் பெருக்குதல், சிஷ்யர்களை உருவாக்குதல் என்று நிர்வாகத்திறமையை வளர்த்துக்கொள்ள இயலவில்லை. இளமையில் வறுமை குடும்பபாரம் இவை காரணமாக சுயதைரியத்துடன் நிர்வாகத்தை முன்னெடுத்துச்செல்ல இயலாமல், சூழ்நிலைக் கைதி போல் தானும் உயராமல், மடத்தையும் உயர்த்தாமல் வாழ்நாள் கழிவதை வழக்கமாக்கிக் கொண்டார். 01–02–2018 மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பு நோட்டீஸிலும் சீனந்தல், பரசமய கோளரி நாதர் ஆதீனம் பட்டியலில் இல்லை.

சீனந்தலில் ஆதிசிவலிங்கமூர்த்தியா?
ராஜராஜேஸ்வரியா? (படம் 8-பக்.227)

ஒவ்வொரு குருபூஜையிலும் பிற பொது நிகழ்ச்சிகளிலும் ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முகஞானச்சாரியார் அவர்கள் “ஆதி சிவலிங்கம் மட்டுமே கடவுள், அதை மட்டுமே வணங்க வேண்டும்” என்று ஆணித்தரமாகக் கூறுவதுண்டு.

உபாசனமூர்த்தியாக வழிபடும் தெய்வமும், ஆதிசிவலிங்க மூர்த்தி மட்டுமே. இப்படித்தனித்தத்துவத்தில் தனித்து நின்றதால் தமிழகத்தில் பிற ஆதீனங்களின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பும் கிட்டவில்லை. மதுரை ஸ்ரீமீனாட்சியம்மன் கோவில், கும்பாபிஷேகம், கும்பகோணம் மஹாமகம், போன்ற நிகழ்வுகளுக்கும் சீனந்தல் மடாதிபதிக்கு அழைப்பு வந்ததில்லை. மடத்துக்கு வந்து செல்லும் பக்தர்களும் ஸ்ரீஆதிசிவலிங்க மூர்த்தியையும், ஸ்ரீவீரவைராக்ய ஸ்வாமிகளையும் மட்டுமே வழிபட்டுச் சென்றதுண்டு. சமீப காலமாகத் திடீரென்று ராஜராஜேஸ்வரி பீடம் உபாசனாமூர்த்தி ராஜராஜேஸ்வரி என்று மடாதிபதி குடும்பத்தினர் சிலர் கூறிக்கொள்வது பற்றி பொதுமக்களும், பக்தர்களும் குழம்பிப்போய் நிற்கிறார்கள். 12–12–2003, கும்பாபிஷேகம், குருபூஜை அழைப்பிலும் (படம்.6) ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய குருபீடம் என்று தான் உள்ளது. சீனந்தல் மடத்தின் ஆணிவேர் ஆதிசிவலிங்கமூர்த்தியே. ராஜராஜேஸ்வரி உபாசனாமூர்த்தி என்று, எப்போது, எப்படி,

வந்தது? 1968 முதல் மடாதிபதியும் மடத்துக்குள் வசிக்காதபோது உபாசனாமூர்த்தி வழிபாடு என்பதை யார் செய்தது, என்றுபலவாறாக மக்கள் பேசுவதும் நம் காதுக்கு எட்டுகிறது.

வேண்டுகோள்:

சீனந்தல் மடம் தற்போது **புதிய தலைமையின் கீழ் துடிப்புடன் செயல்பட ஏதுவாகவுள்ளது.** சீனந்தல் மடத்தின் வரலாறு செப்புபட்டயம் மடாதிபதிகளின் ஆட்சிக்காலம் தொகுப்பு 64,65வது மடாதிபதிகளின் பிறந்தநாள் மாதம் வருடம் என்று அனைத்தையும் முறையாக ஆவணப்படுத்துவது நல்லது. இது போலவே 64வது பட்டத்துக்கு **முன்பிருந்த 63வது பட்டம் திரு.சிவசங்கராச்சர்ய ஸ்வாமிகளும் தந்தை வழி வாரிசு அல்ல. 62வது பட்டம் மடாதிபதி வாரிசு இல்லாமலும், வேறு யாரையும் நியமிக்காமல் இயற்கை அடைந்த பொழுது, பொதுமக்கள் கூடி திரு.சிவசங்கராச்சார்ய ஸ்வாமிகளைத் தத்தெடுத்து மடாதிபதியாக நியமித்த வரலாறும்** குறிப்பிடவேண்டும். மடத்தின் சரித்திரம் முறையாக அத்தாட்சியுடன் முறைப்படுத்தப்பட வேண்டும். அதுவே விஸ்வகுலத்துக்குப் பெருமை தரும்.

சீனந்தல் மடமும் விஸ்வகுல **மக்களின் பொது மடமே. தனியார் குடும்பச் சொத்தல்ல. மடம் என்றாலே பொது நிறுவனம்தான்.** 62,63,64,65வது மடாதிபதிகள் பிறக்கும் முன்பே இம்மடம் இருந்தது. அவர்கள் அனுபவித்த இனாம் நத்தம், புறம்போக்கு, பின்னாளில் ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானாச்சாரியாரின் **கடும் முயற்சியால் மடத்தின் சொத்தாக பட்டாநிலமாக மாறியுள்ளது.** குடும்ப அங்கத்தினர்களோ, வாரிசோ, வேறு தனிநபரோ, சீனந்தல் மடத்து பட்டா சொத்தை, தனிநபர் பெயரில் இருக்கும் பட்டா சொத்தையும் பாகப்பிரிவினை செய்யமுடியாது, வில்லங்கப்படுத்த இயலாது. கூடாது. அது செல்லாது என்று ஆவணப்படுத்துதல், மடத்தின் சொத்துக்கும் **சட்டபூர்வமான பாதுகாப்பைத் தரும்.**

குறிப்பு

62வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிஸ்வாமிகள் வாரிசு இல்லாமலும், வேறு யாரையும் நியமிக்காமலும் இயற்கை

எய்தினார்கள். மடத்துக்கு குருபோதகர் வேண்டுமே என்ற அக்கறையில் ஊர் மக்கள் விஸ்வகுலத்தவர் ஒன்று கூடி ஸ்ரீசிவசங்கரர் ஆச்சாரி அவர்களை 63வது மடாதிபதியாக நியமித்தார்கள். இவருக்குப் பிறந்த பிள்ளை வாரிசு தான் 64வது மடாதிபதியான ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகஞானச்சார்யார்.

இது சமீபகாலத்து சரித்திர உண்மை. அதாவது மடாதிபதிக்கு வாரிசு இல்லாததால் மக்கள் வேறொருவரை நியமித்தார்கள். முற்காலத்தில் சீனந்தல் மடாதிபதி எல்லோரும் வாழையடி வாழையா? என்பது பதிவு செய்யப்படவில்லை. பிற விஸ்வகுல மடங்களிலும் இல்லற வாசிகளாக வாழ்ந்த மடாதிபதிகளுக்கு வாரிசு, சந்தான விருத்தி, இல்லாத காரணத்தால் இரண்டாம் தாரம் விவாகம் செய்து கொண்டதும், பிறரைத் தத்தெடுத்து வளர்த்ததும் அதிகம் காணப்பட்டது. அந்தந்த மடத்தைப் படிக்கும் போது இந்த விபரம் அறியப்படலாம்.

சீனந்தல் மடம் (படம்) (1 - 5) (பக்.52)

கி.பி. 605 முதல் திருமடத்தை அருளாட்சி செய்த மடாதிபதிகள்: (மே–8)

1. ஸ்ரீ ஜெகத்குரு சிவலிங்க ஆச்சார்ய சுவாமிகள்
2. தசமுகம்
3. சண்முகம்
4. விஸ்வகர்மா
5. விஸ்வலிங்க சிவம்
6. சதாசிவம் நிறை சிவம்
7. வீர வைராக்ய மூர்த்தி
8. சாந்த ரூப சிவம்
9. மூர்த்தி நாத சிவம்
10. சிவம் கண்ட பரமூர்த்தி
11. ஞானமூர்த்தி சிவம்
12. பரசித்தி சிவம்
13. மூர்த்தி நாத சிவம்

14. யோக நிலை தழைக்க சிவம்
15. ஞானபரமூர்த்தி
16. யோகேந்திர நாதர்
17. பரமமாத்ம நாதர்
18. அருளார்ந்த சிவம்
19. நிலை பரம் கண்ட சிவம்
20. சிவரூபம் நிறை சிவம்
21. சிவநேசர்
22. சிவஞானம்
23. சிவானந்தம்
24. சிவஞானமூர்த்தி
25. கருணைமலி சிவம்
26. சிவம் ஈசன்
27. தத்புருஷ சிவம்
28. சிவம் மனு
29. விஸ்வசிவம்
30. சீர்மலிசிவம்
31. விஸ்வம் நிறை சிவம்
32. மகிழ்ந்த சிவம்
33. சிவம்புரி சிவம்
34. சிவநேசர்
35. சிவசீலம் நிறை சிவம்
36. சிவசுப்ரமணியம்
37. கணநாத மகிழ்சிவம்
38. காருண்யமூர்த்தி
39. அருளார்மூர்த்தி
40. சிவபரம் தழைத்த சிவம்
41. ஆனந்த பரம்
42. பரமானந்தம்
43. பாலசிவம்
44. சிவம் தழைத்த சிவம்
45. ராஜசிவம்
46. தயாமூர்த்தி
47. மனமகிழ்விஸ்வம்
48. மூர்த்தி லிங்கம்
49. காருண்யமூர்த்தி
50. வரசித்தி மூர்த்தி
51. வாமதேவம்
52. பஞ்சானநம்
53. கலியமூர்த்தி
54. நாதமுனீஸ்வரர்
55. சிவநாதர்
56. லிங்கநாதர்
57. சங்கரலிங்கம்
58. சண்முகம்
59. சந்திரசேகரர்
60. திருக்காமீசுவரர்
61. நஞ்சுண்டீசுவரர்
62. அருணகிரி
63. சிவசங்கரர்
64. சிவசண்முக ஞானாச்சாரியார்

❀

SHEET 1



ப 2



ப 4



ப 3



ப 1



ப 9



உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

ஸ்ரீமத் பரசமய கோளரிநாதர் ஆதீன புனரமைப்பு மேம்பாட்டு சங்கம் - திருநெல்வேலி

(திருநெல்வேலி - தூத்துக்குடி மாவட்ட அனைத்து விஸ்வகர்ம சங்கங்களின் கூட்டமைப்பின் உருவாக்கம்)

பதிவு எண் : 64/2016

K.ராஜாமணி ஆச்சாரி M.A.,
தலைவர் ✆94893 02236

V.R.அசோகராஜ் B.A.,
செயலாளர் ✆94430 81011

P.V.ராஜேந்திரன்
பொருளாளர் ✆94886 65800

G.முருகமுரளிதரன் B.A.,B.L.,
P.சங்கரசுப்பிரமணியன்
துணை தலைவர்கள்

S.ஆறுமுகராஜ் B.Sc.,B.L.,
G.மாரிமுத்து
துணை செயலாளர்கள்

நாள் : 16.06.2017

மரியாதைக்குரிய சிவ ஸ்ரீ ஸ்ரீ சிவராஜன் சுவாமிகள் அவர்களுக்கு,

திருநெல்வேலி ஸ்ரீமத்பரசமய கோளரிநாதர் ஆதீன புனரமைப்பு மேம்பாட்டு சங்கத்தின் சார்பிலான வணக்கங்கள். தாங்கள் சீனந்தல் மடத்தின் ஆதீன கர்த்தராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளமைக்கு எமது நிர்வாகத்தின் வாழ்த்துக்கள்.

தாங்கள் ஆதீன கர்த்தாவாக பொறுப்பேற்க மேற்கொண்டுள்ள நடைமுறைகள் எல்லோரையும் மனச்சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. அவை தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்புக்கு கண்ணியம் சேர்ப்பதாக இல்லை. திருநெல்வேலி பரசமய கோளரிநாத ஆதீன கர்த்தரின் உடல்நிலை குறித்து வதந்தி பரப்பி பரபரப்பு ஏற்படுத்தியுள்ள விதம் ஒரு ஆதீனகர்த்தருக்கு புகழ் சேர்ப்பதாகயில்லை. இருக்கட்டும் இது உங்கள் சொந்த குடும்ப பிரச்சனை.

தற்போது, திருநெல்வேலி ஆதீனத்தின் 36வது பீடாதிபதி ராஜரத்தினம் சுவாமிகளின் குருபூஜை, ஓசூர் திரு.மா.பழனிச்சாமி அவர்களின் பெரும்முயற்சியில் கும்பகோணத்தில் ஏற்பாடு ஆகியுள்ள சூழ்நிலையில் 1954ல் சமாதிநிலை எய்திய சுவாமிகளை இத்தனை ஆண்டுகள் வசதியாக மறந்துவிட்டு, தற்போது எப்போதும்போல் விளம்பரம் தேடும் நோக்கத்தோடு தாங்கள்தான் குருபூஜை செய்ய வேண்டும் என்று உள்ளூர் மக்கள் சிலரை தூண்டிவிட்டு குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது, எதிர்காலத்தில் தங்கள் ஏற்றிருக்கும் ஆதின பொறுப்பிற்கு களங்கத்தை ஏற்படுத்தும். ஆதலால் தாங்கள் இம்மாதிரியான விஸ்வகர்ம சமூகத்தை பிளவுபடுத்தும் முயற்சிகளை தவிர்த்து விட்டு, சமூக ஆன்மீக முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டும் என வணக்கமாய் கேட்டுக்கொள்கிறோம்.

வரும் ஆண்டுகளில் நமது விஸ்வகர்ம சமுதாயத்தை சேர்ந்த ஆதின கர்த்தர்கள் தமிழகமெங்கும் எங்கெங்கெல்லாம் சமாதி நிலையிலுள்ளனர் என்பதை தங்களது பொறுப்பிலேயே கண்டுபிடித்து, அங்கெல்லாம் வருடம் தவறாமல் குருபூஜைகள் நடந்திட தாங்கள் பொறுப்பேற்றும், நமது சமூகத்தை ஆன்மீகத்தில் சிறந்த சமூகமாக மாற்றிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

திருநெல்வேலி.
16.06.2017

இப்படிக்கு
(கையொப்பம்)
தலைவர்

பதிவு முகவரி	தொடர்பு முகவரி
5.அரசடி விநாயகர் கோவில் தெரு. புதுப்பேட்டை, திருநெல்வேலி.	10-I.கூலக்கடை பஜார்,(சிவகாமி பில்டிங்), திருநெல்வேலி டவுண்.

2. திருநெல்வேலி ஸ்ரீமத் பரசமயகோளரி நாதர் ஆதீனம் தோற்றமும், வரலாறும்

அகத்திய மாமுனிவர் கால்பதித்த பொதிகைமலையில் தோன்றிய ஜீவநதியாம் தாமிரபரணி உருண்டோடும் திருநெல்வேலியில் அமைந்துள்ளது இந்த ஆதீனம். சுமார் கி.மு.5000 ஆண்டில் வடஇந்தியாவில் கங்கை, இமயமலை, அவந்தி பகுதியில் மாந்தா நகரில் உருவானது இப்புனித மடம். விஸ்வகுலஜகத்குரு ஆச்சார்ய ஸ்வாமிகள் ஸ்தாபித்த பின் இம்மடம் தொடர்ந்து பல அந்நியரின் படையெடுப்பு, உள்நாட்டு மன்னர்களுக்குள் போர் என்று யுத்தகளமாக மாறி அமைதி குறைந்த நிலையில், மடத்தின் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படும் என்பதை உணர்ந்த ஸ்வாமிகள் **விஸ்வகுலம் தழைக்க, மடம் பிழைக்க வேண்டுமென்று** கருதி, தென்னிந்தியாவில் காவிரி பாயும் கும்பகோணம் வந்தார். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கும்பகோணத்தில் ஸ்ரீமத் ஓம்(கார)பிரகாஷ் (மே9) ஞானானந்த சுவாமிகளைச் சந்தித்தார். (பூர்வாசிரமத்தில் நீலகண்டப்ரம்மாச்சாரி என்றும் தமிழ்நாட்டில் புரட்சிவாதியாக இருந்து பின்னாளில் சாது ஓங்கார் என்ற பெயரில் வாழ்ந்தவர்.)

மேலும் திக் விஜயமாக தென்னாடு புனித யாத்திரை செய்தனர். அன்றைய கொற்கை பாண்டியமன்னன் தவசீலர்களை வணங்கி உபசரித்தார். எமது நாட்டிலும் தாமிரபரணி நதி தீரத்தில் விஸ்வகுல தவசி ஒருவர் குடில் அமைத்து வாழ்ந்து வருகிறார். அவரை சந்தித்து மகிழுங்கள் என்று சந்தோஷித்தார். தவக்குடிலில் வாசம் செய்த ஸ்ரீமத் அனவரத சுந்தரராஜப் பெருமாளைச் சந்தித்து மகிழ்ந்தனர். **பாதுகாப்புக் கருதி விஸ்வகுல மூல மடத்தை**

தாமிரபரணி நதி தீரத்தில் திருநெல்வேலி சாலிவாடியில் சுமார் கி.பி.647ல் ஸ்தாபித்தார்கள். (ப.118) வயோதிகம் காரணமாக ஸ்ரீமத் நீலகண்ட(ப12) சாஸ்திரிகளையே சாது ஓங்கார் முதல் பட்டம் மடாதிபதியாக அங்கீகரித்து மகிழ்ந்தனர். ஸ்தாபர்களான ஸ்ரீமத் அனவரத சுந்தரராசப் பெருமாள் ஸ்வாமிகளும் ஸ்ரீமத் ஓம்பிர(கார)பிரகாஷ் ஸ்வாமிகளும், ஏழு ஆண்டுகள் தவத்திற்குப் பிறகு ஸ்ரீமத் ஓம்காரநாத்பிரகாஷ் ஸ்வாமிகள் நெல்லை அக்கசாலைப் பிள்ளையார் கோவிலில் ஐக்கியமானவர்கள். இவ்வாறு ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனம் உதயமாயிற்று.

இங்கு துறவிகளே மடாதிபதியாக, ஆதீனகர்த்தாவாக அருளாட்சி செய்து வந்தார்கள். எனவே நெல்லை மடம் துறவிமடம், வாரிசு மடம் இல்லை. பிற்காலத்தில் சிலர் துறவியாய் பட்டம் ஏற்றுப் பிறகு கிரஹஸ்தராய் மாறியுள்ளனர். முற்றிலும் கிரஹஸ்தராகவே அதுவும் வேறொரு மடத்தின் மடாதிபதியாக இருந்து கொண்டே கூடுதல் பொறுப்பாக நெல்லை மடத்து 38வது மடாதிபதியானது. 17–04–1981ல் பொறுப்பேற்றுக் கொண்டது ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானாச்சார்ய ஸ்வாமிகள்தான்.

தொடர்ந்து 29வது பட்டம் வரை துறவிகளே மடாதிபதி (கி.பி.1641 முதல் 1955 வரை) கி.பி.1955 முதல் 1979 வரை 37வது மடாதிபதி துறவி. இரண்டாண்டுகள் மடாதிபதி இல்லாமல் பரிபாலன கமிட்டியின் மேற்பார்வை. 1981 ஏப்ரல் முதல் மீண்டும் கிரஹஸ்தரின் ஆளுகை என்று மடம் ஆட்கொள்ளப்பட்டுள்ளது.

நெல்லை ஆதீனத்தின் தனிச்சிறப்பு:

விஸ்வபிரம புராணம் ஆதியில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது. சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக என்ற முனைப்புக்கு அணிசேர்க்கும் விதமாக கும்பகோணம் – திருவையாறு பண்டிதர் பிரம்மஸ்ரீ அ.முத்துச்சாமி பாரதியார் அவர்கள், இலக்கண சுத்தமாக இந்நூலைத் தமிழில் எழுதினார்கள். காசி, கங்கை, கும்பகோணம், காவிரி என்ற புண்ணிய தீர்த்தங்களடிப்படையில் தெற்கே தாமிரபரணி புண்ணியதீர்த்தத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, புகழேணியிலிருந்த திருநெல்வேலி, பரசமயகோளரி நாத ஸ்ரீராஜ ராஜேஸ்வரி பீடாதிபதி ஸ்வாமிகளின் திவ்ய சன்னிதானத்தில்தான் கி.பி. 1886 ஜனவரி மாதம் – இந்நூலை அரங்கேற்றம் செய்தார்கள். தமிழையும்

சைவத்தையும் ஒருசேர வளர்த்த பெருமைமிகு ஆதீனம் – நெல்லை பரசமயகோளரி நாதர் ஆதீனமாகும். (குடந்தை ஸ்ரீலஸ்ரீ இராச ரத்தினம் ஸ்வாமிகள் வரலாறு – பாம்புப் படம், கையேட்டை மீண்டும் புரட்டினால், அக்காலத்தில் தமிழுக்குக் குரல் ஏறிய விபரம் மேலும் அறியலாம்.)

அங்கமும், கிளைகளும்:

ஸ்ரீமத் பரசமயகோளரி நாதர் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடமாக உருவானது. தினசரி உபாசனாமூர்த்தி அருள்மிகு ராஜராஜேஸ்வரி அம்பாள். சாலிவாடிபுரத்தில் அக்கசாலைப் பிள்ளையார் கோவில் தெரு என்பது தாமிரபரணி ஆற்றுக்கால்வாய் ஓரத்தில் அமைந்தது. திருநெல்வேலி டவுண் முனிசிபல் எல்லைக்குட்பட்டது.

ஒரே நீண்ட தெரு. தெருவின் ஒரு கோடியில் அக்கசாலை விநாயகர் கோவில் மறுகோடியில் காமாட்சியம்மன் கோவிலும், நந்தவனமும், யானை, குதிரை கொட்டடியும் இடையில் வரிசையாக ஆதிகுரு மூர்த்தி மூலஸ்தானம் அதன் பின்னால் முன்னாள் மடாதிபதிகளின் சமாதிகள் அனுஷ்டானம், கொலு மண்டபம், ராஜராஜேஸ்வரி பீடம், ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகளின் தவச்சாலை, தியானமண்டபம் பின்புறம் மடாதிபதிகள் தங்கும் அஹம், வீடு அருகில் வி.கே. நர்சரிப்பள்ளி, ஸ்ரீ உஜ்ஜயினி மாகாளி அம்மன் கோவில், அன்னை பரமேஸ்வரி அம்பாள் கோவில் என்று ஒரே வரிசையில் அடுத்தடுத்து அமைந்துள்ளன. இவ்வரிசைக்குப் பின்புறம் தாமிரபரணி நதிக் கால்வாய். கால்வாய்க்குப் பின்புறம் கோவில் ஆதீனத்திற்குச் சொந்தமான நெல்வயல் என்று இயற்கையுடன் இணைந்து பின்னப்பட்ட சொத்துக்கள். மடாதிபதியின் திக் விஜயம், பிரதேசயாத்திரை தவ வலிமையால் பிறருக்குச் செய்த நன்மையை வியந்து அரசர்கள், ஜமீன்தாரர்கள், சிஷ்யர்கள், விலைக்கு வாங்கப்பட்டவையும், மனமுவந்து மடத்துக்குத் தானமாக எழுதி வைத்த சொத்துக்களும் ஏராளம். அவற்றுள் சில இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன.

கொழுந்து மாமலை:

அருள்மிகு சுப்ரமணியஸ்வாமி திருக்கோவில் சேரன் மாதேவி 40 ஏக்கர், 30 ஏக்கராகி தற்சமயம் 15.01 ஏக்கராக உள்ளது.

சுரண்டை சிங்கிப்பட்டி ஜமீன்தார் எழுதிக் கொடுத்த 15 ஏக்கர் நஞ்சை, புஞ்சை அக்கால மக்கள் உருவாக்கிய மடம், கோவில் அனைத்தும் பிறர் கைவசமுள்ளது. சிறுகிராமம் திடீர் வளர்ச்சியானதால் ஊர் பொதுச் சாலை, நிர்வாகக் கட்டிடம் வலியோர் வாழும் வீடு, கடை என்று உருமாறியுள்ளது. நெல்லையும், சுரண்டையும் தூரம் போலும்! கேட்பாரில்லை!!

சிவகங்கை:

மதுரைமுக்கு காளிகாம்பாள் கோவில் வளாகம் மருதுபாண்டியர் வகையறா சிவகங்கை ஜமீன் நெல்லை மடத்துக்கு வழங்கிய சொத்து உள்ளூர் விஸ்வகுல மக்களால் உரிமை கொண்டாடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

திண்டிவனம்:

அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலும், வளாகமும் 23 செண்ட் முனிசிபல் எல்லைக்குட்பட்டது. காம்பவுண்டு சுவருள்ளது. முழுவதும் பலரால் துண்டு துண்டாக ஆக்ரமிக்கப்பட்டுள்ளது.

கோமாளீஸ்வரன் பேட்டை:

புதுப்பேட்டை சென்னை (பழைய சித்ரா டாக்கீஸ் பின்புறம்) 16 சந்திரபானு தெரு. ஆற்காடு நவாப் (அமீர் மஹால்) ஆதீனகர்த்தாவுக்கு அன்பளிப்பாக வழங்கியது. 4 1/2 செண்ட் கோவில் கிணறு, காலியிடம் உள்ளூர் விஸ்வகுல மக்கள் உரிமையிலிருந்து மீட்கப்பட்டு ஆதீனத்தின் சொத்துரிமையில் பராமரிப்பில்லாமலுள்ளது. **திருவிதாங்கூர், ஆரல்வாய்மொழி** (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம்) கிருஷ்ணாபுரம் 45 செண்ட் நஞ்சை நிலம் அடையாளம் காண்பதில் சிரமமுள்ளது.

கொச்சின் பிரிட்டிஷ் மலபார்:

கொச்சின் பிரிட்டிஷ் மலபார் என்பது வயநாடு பகுதி. சொத்து எந்த கிராமத்தில் எந்தவுருவிலுள்ளது என்பதைப் பற்றிய விபரம் தெரியவில்லை. தேடியும் கிடைக்கவில்லை. சென்னை உயர்நீதிமன்றம், டெல்லி உயர்நீதிமன்றத் தீர்ப்புகளிலும், கொச்சின் பிரிட்டிஷ்மலபார் திருவிதாங்கூரில் சொத்துக்கள் உள்ளன என்று தான் குறிப்புகள் உள்ளன. சொத்து விபரம் இல்லை.

நீதிமன்ற வழக்காடிப் போராடும் போர்க்குணம்:

ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீனம் – ஆதீனகர்த்தர் மடாதிபதியை, தம் குலகுருவை மதிக்காமல், எதிர்த்துப் போராடி சிறுமைப்படுத்தி தொல்லை கொடுத்த இந்த நெல்லை நகர விஸ்வகுல மக்களின் செயல்களில் சில இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலைத்துறைச்சட்டமும் துறையும் துவங்கிய பிறகு வந்த முதல் வழக்கு பரசமயகோளரிநாத ஆதீனகர்த்தாவை எதிர்த்து உள்ளூர் விஸ்வகுலமக்கள் நெல்லை மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்த முதல் வழக்கு என்று அறியப்படுகிறது.

1841–1898. 34வது மடாதிபதி ஜெகத்குரு மீனாட்சி சுந்தர ஸ்வாமிகள்

1898–1904. 35வது மடாதிபதி ஜெகத்குரு முத்துக்குமார ஸ்வாமிகள் (மீனாட்சிசுந்தர ஸ்வாமிகள்)

1904–1955. 36வது மடாதிபதி குடந்தை இராசரத்தினம் ஸ்வாமிகள்.

புன்னைவனம் ஆச்சாரி V/s **நெல்லையப்பஆச்சாரி** O.S**, 58** of **1922 (மே.6)**

ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகள் (35வது மடாதிபதி 1898 – 1904) பிரதேச யாத்திரையின் போது அம்பாசமுத்திரத்தில் 02–12–1904ல் இயற்கை எய்தினார்கள்.

அச்சமயம் அன்னாரது மனைவி திருமதி. ஆவுடையாச்சி கர்ப்பிணியாயிருந்து அன்னார் மறைவுக்குப் பிறகு ஆண்மகவை பெற்றெடுத்தார். அச்சிசுவும் 18–10–1905ல் இறந்தது. பிறந்த ஆண்குழந்தை பத்தாவது மாதத்தில் இறந்தது. கணவரும் இல்லை. வேறு ஆண்வாரிசும் இல்லை. எனவே எப்படியும் மடத்துக்குள்ளேயே வாசம் செய்யும் பிடிமானம் வேண்டும் என்றெண்ணினார் திருமதி. ஆவுடையாச்சி. இதற்கிடையில் மடத்தின் அபிமானிகள் முயன்று குடந்தை ஸ்ரீராசரத்தினம் ஸ்வாமிகளை 36வது மடாதிபதியாகப் பட்டம் சூட்டிவிட்டார்கள். இவருக்கு பட்டம் சூட்டும் முயற்சி நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் திருமதி.ஆவுடையாச்சி, திரு.மீனாட்சிசுந்தரம் ஆச்சாரி என்பவரை தத்தெடுத்ததாக

வழக்குப்போட்டு அவரே மடாதிபதி என்று கொண்டாடி முறையற்ற வகையில் மடத்தில் ஒரே சமயத்தில் இரண்டு மடாதிபதி என்ற இக்கட்டை ஏற்படுத்தினார். (மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடந்தை இராசரத்தினமும், தத்தெடுத்த மீனாட்சிசுந்தரமும்) தத்து செல்லாதுஎன்று உள்ளூர் விஸ்வகர்மாக்கள் O.S.No.7/1907 என்று வழக்குப் போட்டார்கள். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போதே மீனாட்சிசுந்தரம் இறந்துவிட்டார். விதவை ஆவுடையாச்சி விடவில்லை. இறந்துபோன மீனாட்சிசுந்தரத்தின் தம்பியை தத்தெடுத்து 26–05–1910ல் மடாதிபதி என்று பிரகடனம் செய்தார்.

இதை எதிர்த்து இராஜரத்தினஸ்வாமிகளே O.S.No.12/1911 என்று வழக்குப்பதிவு செய்தார். (முதல் தத்து செல்லாது தவறு என்று **சில சிஷ்யர்கள் வழக்குப்** போட்டார்கள். இரண்டாவது தத்து செல்லாது என்று **இராசரத்தினம் ஸ்வாமிகளே** வழக்குத் தொடர்ந்தார்.)

அதாவது அம்பையில் 35வது மடாதிபதி ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகள் இறந்தபிறகு நெல்லை மடத்துக்குப் பட்டம் சூட்டி மடாதிபதி என்று கொண்டாடுவதற்கும், மடத்தின் சொத்துக்கள் பாராதீனமாகாமல் பாதுகாப்பதற்கும் கடும் முயற்சியும், குழப்பமும், போட்டியும் ஏற்பட்டது. சில சிஷ்யர்கள் O.S.4/1919 என்று வழக்குப்போட்டு மடத்துக்கு எதிராக வழக்காடுபவர்கள் பக்கம் நியாயம் இல்லை. எனவே மடத்து சொத்துக்களைத் தம் பக்கம் எடுத்துக்கொள்வது அல்லது நீதிமன்றமே **ரிசீவரை** நியமிப்பது என்று வேறு கோணத்தில் பிரச்சனையைத் திசை திருப்பினார்கள். பிரதிவாதிகளில் ஒவ்வொருவரும் வேறு வேறு சுயநோக்கோடு, ஆனால் ஒன்றாக இணைந்து வழக்குப் போட்டதும் வாதத்தின் போது தெரியவந்தது.

34வது மடாதிபதி ஸ்ரீமீனாட்சி சுந்தரஸ்வாமிகள் (33வது பட்டம் ஸ்ரீஅனவரதஸ்வாமிகளின் புதல்வர்) 57 ஆண்டு அருளாட்சிக்குப் பிறகு ஆண்வாரிசு இல்லாமல் இறந்துவிடவே. அவருடன் பிறந்த சகோதரர் முத்துக்குமாரஸ்வாமிகள் 35வது மடாதிபதியனார். அவரும் **ஆறு ஆண்டுகள்** பொறுப்பிலிருந்த பிறகு, பிறந்த ஆண் குழந்தை 09–10–1905ல் இறந்தது என்று மேலே பார்த்தோம்.

கணவர் இறந்துவிட்டார். தானோ கர்ப்பிணி என்பதால் சுந்தரம் ஐயர் என்பவரை மடத்து நிர்வாகம் பார்க்கச் சொன்னார் ஆவுடையாச்சி. சுந்தரம் ஐயர் மற்றும் ராஜகோபால ஸ்தபதி இருவரின் தூண்டுதலால் ஆவுடையாச்சி ராஜகோபால ஸ்தபதியின் பையன் மீனாட்சிசுந்தரத்தைத் தத்தெடுத்ததாக ஜோடித்து வழக்குப் போட்டனர். இந்தத் தத்துப்பிள்ளை மீனாட்சிசுந்தரத்துக்கு உபநயனம் செய்வித்து மடாதிபதியாகப் பிரகடனம் செய்து மடத்துச் செலவிலேயே திருமணமும் செய்ய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இதைச் சகித்துக் கொள்ளாமல் எதிர்க்கவே O.S.No.7/1907 என்று வழக்கு (ஆவுடையாச்சி மீனாட்சிசுந்தரம் ராஜகோபால் ஸ்தபதிக்கு எதிராக தொடரப்பட்டது.) வழக்கு நடக்கும் போதே தத்துபிள்ளை மீனாட்சிசுந்தரம் இறந்துவிட்டார். அதாவது ராஜகோபால் ஸ்பதியின் பிள்ளை ஆவுடையாச்சியால் தத்தெடுக்கப்பட்டு மடாதிபதி என்று கொண்டாடப்பட்டு ராசரத்தினம் ஸ்வாமிகளுக்குப் போட்டியாக நிறுத்தப்பட்டு, வழக்காடு மன்றம் வரை பொய் வழக்கு என்று போனவர் இறந்துவிட்டார். **கவனம் இதனால் ஏற்பட்ட குழப்பத்தினால் தான் என்னவோ 35வது மடாதிபதி மீனாட்சிசுந்தரம் என்று தவறாகப் பதிவு செய்துள்ளார்கள். ஆறு வருடம் ஆட்சி செய்த முத்துக்குமார ஸ்வாமிகள் பெயருக்குப் பதில் தத்துப்பிள்ளை மீனாட்சி சுந்தரம் பெயர் மீண்டும் பெயர் பலகையில் வந்துவிட்டது.** கட்சிக்காரர்கள் சொத்தில் கண்வைத்துப் போலி வழக்குத் தொடர்ந்துள்ளது. வழக்கு விசாரணையில் தெரியவந்தது.

சொத்து வந்த விபரம் முதன்முதலில் கி.பி.1779ல் திருநெல்வேலி நாதஸ்வாமி கோவிலுக்குத் தந்த பல்லக்கு செய்து கொடுத்தற்காக திரு.ஆழ்வார் ஆச்சாரிக்கு மடத்துக்காக மடத்தின் பெயரில் மான்யமாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்று உண்மையைக் கண்டறிந்த நீதிபதிகள், **மடாதிபதி** சொத்துக்கள் அனைத்தும் ஆதீனத்திற்கே. தனிநபர் உரிமை கோர இயலாது, செல்லாது. ஆவுடையாச்சியின் முதல் தத்து, இரண்டாம் தத்து அனைத்தும் ஜோடிக்கப்பட்டது உண்மையில்லை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடந்தை இராசரத்தினமே மடாதிபதி. சொத்துக்கும் உரிமையுடையவர்.

ஆனாலும் ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீனத்திற்கு மடாதிபதி நியமனம் விஷயத்தில் குழப்பம் வராமல் இருக்க

நியமன உரிமை வழிகாட்டுதல் என்ற **ஸ்கீமை 02-05-1925ல்** நீதிமன்றம் உருவாக்கியது. அந்த ஸ்கீம் படி ஸ்ரீமத் ராசரத்தினம் ஸ்வாமிகள் பெரும்பான்மை விஸ்வ குலமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரே 36வது மடாதிபதி என்று **இறுதித்தீர்ப்பை 10-09-1927ல்** நெல்லை நீதிமன்றம் வழங்கியது. 1904ல் கும்பகோணத்திலிருந்து விமரிசையாக அழைத்து வரப்பட்டு **மடாதிபதியாகப் பட்டம் சூட்டப்பட்டாலும்** ஒரு விதவையும் பல ஆச்சாரிகளும் சேர்ந்து சுந்தரராமையரையும் கையில் வைத்துக்கொண்டு 1927வரை குடந்தை ஸ்ரீராசரத்தினம் ஸ்வாமிகளை நிம்மதியாக மடத்துக்குள் வாசம் செய்யவிடாமல் துன்புறுத்திய பெருமை நெல்லைமடத்தைச் சுற்றி வாழ்ந்த அக்கால விஸ்வகுலமக்களையே சாரும். அந்த குடந்தை ஸ்ரீராசரத்தினம் ஸ்வாமிகளும் வாரிசு இல்லாமல் தம் மனைவியிடம், "மடத்தைப்பார்த்துக் கொள் வேறு ஆதீனகர்த்தா வரும் வரை" என்று சொல்லிவிட்டு மனம் நொந்துபோய் கும்பகோணத்தில் தாம் பிறந்து வாழ்ந்த வீட்டிலேயே நாளது 04-07-1954ம் நாள் இயற்கை எய்தினார்.

இந்த மடாதிபதி மாண்டபிறகு விட்டுச் சென்ற விதவை அனாதையாக மடமே கதி என்று வாழ்ந்தார். பிரச்சனை வேறு விதமாயிற்று. எப்படியோ விதவையும் நெல்லையிலேயே காலமானார். அதாவது முத்துக்குமாரஸ்வாமிகள் விட்டுச்சென்ற ஆவுடையாச்சியும் குடந்தை ஸ்ரீராசரத்தினம் ஸ்வாமிகள் விட்டுச்சென்ற விதவை சுந்தரம்மாளும் ஏககாலத்தில் மடத்துக்குள் வசித்தனர். ஆவுடையாச்சி இறந்தார். சுந்தரம்மாள் மட்டும் மடத்தில் வாசம் செய்தார். சுவாமி ஸ்ரீசிவானந்த முனீஸ்வரர் மடாதிபதியாக உள்ளே வந்தார்.

குடந்தை இராசரத்தினம் ஸ்வாமிகள் மறைவுக்குப் பிறகு மடத்தைக் காத்து விளக்கேற்றியது அவரது மனைவி சுந்தரம்மாள். மடத்துக்கு வருவோரில்லை. இவரைப் போஷிப்பாரும் இல்லை. திரு.சூரியநாராயணனின் மனைவி திருமதி.வாசமுத்து மாரியம்மாள் தான் அவ்வப்போது அவருக்கு ஆகாரம் அளித்து வந்தார். வறுமையிலும் காமாட்சியம்மன் கோவிலுக்கு இடதுபுறம் அமைந்துள்ள காலிமனைசமாதி நந்தவனம், யானைக் கொட்டடியில் ஒரு பகுதியை உள்ளூர்க்காரருக்கு ஒத்தி வைத்து வந்த காசைப்

பயன்படுத்தி சிக்கனமாக தனியாளாக மடத்தில் வாழ்ந்துவந்தார். **அந்த ஒத்தியில் கைமாறியது தான் இன்றைய தனியார் கூட்டுறவு பால்பண்ணை.** பின்னாளில் இந்த அம்மையாரும் மடத்திலேயே மாண்டார். 11–07–1955ம் நாள் ஸ்ரீலஸ்ரீ சிவானந்தமுனீஸ்வரர் ஸ்வாமிகள் பட்டம் சூட்டப்பட்டு 37வது மடாதிபதியாக துறவியாக மடத்துக்குள் வாசம் செய்யலானார். 1979வரை துறவியாகவே பார் புகழ் பெருமையுடன் அருளாட்சி செய்து மடத்திலேயே 09–12–1979ல் இயற்கையானார்.

நெல்லைமடம் அமைதிப்போர் நடக்கும் யுத்தகளம்:

துறவி ஒரு தேசாந்திரி. தவ வலிமையால் தம்மைத்தாமே உயர்த்திக்கொண்டு சிவஞானப் பெருவெளியைச் சிந்தித்து அனுபவிப்பவர். மன்னரும், மக்களும் தானமாகக் கொடுத்த சொத்தைப் பராமரித்து வருமானத்தைப் பெருக்கி மடத்தை நிர்வகிக்கத் தெரியவில்லை. அமெரிக்கா, லண்டன் சென்று திரும்பிய **ஸ்வாமி விவேகானந்தர்,** மேலைநாட்டு நிர்வாக ஆளுமைக் கட்டமைப்புக்களை/கட்டமைப்புக்களைப் போல் இந்தியாவிலும் ஏற்படுத்தி இந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டும்... என்ற அடிப்படை நம்பிக்கையில் **தான் ராமகிருஷ்ணமடம்** என்ற அமைப்பு நிர்வாக சட்டதிட்டம் கொண்டு வந்து முதல் மடத்தைச் சென்னையில் உருவாக்கினார். எனவே ஆங்காங்கே உள்ளூர் விஸ்வகுலமக்களின் கையில் சிக்கிய சொத்துக்கள் வில்லங்கமாகின்றன. கரைகின்றன. காணாமல் போகின்றன. ஆதீனச் சொத்து ஆவணப்பேரேடு என்ற அடிப்படை பதிவேடு இன்று வரை உருவாக்கப்படவில்லை. 1981க்குப் பிறகு மடாதிபதிகள் சொத்துள்ள இடங்களுக்கு, நேரில் சென்று, கால்பதித்து, நலம் விசாரித்து, வருமானம் பெருக்கும் வழிவகை செய்யவில்லை. பட்டினப்பிரவேசம் காணிக்கை வசூல் என்று மட்டுமே நடந்தது, நடக்கிறது. சில சமூக விரோதிகள் தடி எடுத்தவன் தண்டல்காரன், உதாசீனம், நமக்கேன், நாம் ஒண்ணுக்குள் ஒண்ணு... என்று பல விதமான போர் யுக்திகள் களம் இறங்கியுள்ளன. (இவை சரியான தலைமை நிர்வாகத்திறமை, நடைமுறைச் செயல்திட்டங்கள், தேவை என்பதை நினைவுபடுத்துகின்றன)

உதாரணத்திற்கு சில:

உதாசீனம்:

சென்னை கோமளீஸ்வரன் பேட்டை கோவிலுக்குச் சொந்தமான சில்லரை வியாபாரக்கடை வாடகைக்கு விடப்பட்டுள்ளது. வாடகை வசூலுக்கு ரசீது இல்லை. அதை வாங்கி அனுபவிக்கும் பூசாரிக்கு மாதச்சம்பளம் பட்டுவாடா என்று ரசீது இல்லை. உச்சநீதிமன்றம் (சுப்ரீம்கோர்ட்) உள்ளூர் விஸ்வகுல மக்களின் பிரதிநிதிகள் கொண்ட கமிட்டியை நியமித்து கோவிலைப் பராமரிக்க வேண்டும் என்ற ஆணையை மதித்து கமிட்டியை அமைக்காமல் உதாசீனம் செய்வது மடாதிபதி.

சேரன் மாதேவி கொழுந்து மாமலை சுப்ரமணியர் ஸ்வாமி கோவில் பூசாரிக்குப் பல மாதங்களாகச் சம்பளப்பாக்கி ஆனால் மாதாமாதம் கடைசி வெள்ளியன்று மட்டும் கோவில் வருமானம் வைகாசி விசாகத்திற்கு அதிகம் வருவாய், லாபம் அனைத்தையும் உள்ளூர் மக்கள் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். கோவில் சொத்துக்கு சர்வேக்கல், வேலி, நான்கெல்லை அடையாளம் இல்லை. பக்தர்களுக்குக் கழிப்பறை இல்லை. நெல்லை ஆதீன நல அபிவிருத்திக் கமிட்டியும், திருவண்ணாமலையில் ஓய்வெடுக்கும் மடாதிபதியும் கண்டுகொள்வதில்லை.

தண்டல்காரன்:

சுரண்டையில் சமூகசங்கத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர் தமது இரண்டு, மூன்று ஆண்டு அதிகாரக்காலத்தில் "தம் அதிகாரம், ஆளுமை அனுபவத்திலிருக்கும் மேற்படி தபசில்....... என்று" பத்திரம் எழுதி கடை, வீடு வாடகை ஒத்தி என்று வசூல் செய்வது தொடர்கிறது.

புதியசகுணம் புதிய சிக்கலின் ஆரம்பம்:

இராசரத்தினம் ஸ்வாமிகள் வாழும்போது மடத்துக்குள் இரண்டு மடாதிபதிகள். மடத்தைவிட்டு வெளியேறும்போது மடத்துக்குள் இரண்டு விதவைகள் அதாவது முத்துக் குமாரஸ்வாமிகள் விட்டுச்சென்ற போராளி ஆவுடையாச்சியும், இராசரத்தினம் ஸ்வாமிகள் விட்டுச் சென்ற சுந்தரம்மாளும்.

09-12-1979 வரை துறவியாகவே பார் புகழ் வாழ்ந்த ஸ்ரீமத் சிவானந்த ஸ்வாமிகள் மடத்தின் அன்றைய நிலைமையும், அங்கு வாழ்ந்து வந்த விஸ்வகுலமக்களின் மனோநிலையையும் படம் பிடித்ததுபோல் குறிப்பெழுதி வைத்துள்ளதைப் படியுங்கள்.

மடாதிபதியை எதிர்த்து மீண்டும் போர்க்கொடி:

ஆதீனத்தை எதிர்த்து நீதிமன்றம் செல்லும் போர்க்குணம் (34 35 36 37 39வது மடாதிபதிகள் காலம் அதாவது 1905 1922 முதல் 2011 வரை)

விஸ்வகுல ஆன்மீக அனுஷ்டானத்தில் அதிகக் கவனம் காட்டிய ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகள் பெயருக்கேற்ப மடத்தைப் புகழின் உச்சாணிக்கு எடுத்துச் செல்ல விரும்பித் தீவிரத் திட்டம் தீட்டி செயல்படுத்த ஆரம்பித்தார்கள். மடத்துக்குள்ளும், வெளியிலும் கிடைத்த தகவல்கள், ஏடுகள், செப்பேடுகள், புகைப்படங்கள், எல்லாம் ஸ்வாமிகளுக்கு மன அதிர்ச்சியைக் கொடுத்தன. எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் அதிகம் என்று விரைவிலேயே புரிந்து கொண்டார்.

அக்கசாலைப்பிள்ளையார் கோவிலையும் அதன் நெல் வயலையும் மடத்தின் சொத்துக்குள் இணைத்து ஒரு பெரிய வளாகம் உண்டாக்க எண்ணினார்கள். உள்ளூர் விஸ்வகுல மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். மடாதிபதி மீது வழக்குத் தொடர்ந்து தடை ஏற்படுத்தி அக்கசாலைப்பிள்ளையார் கோவிலை ஊர்மக்கள் நிர்வாகத்தில் மடத்துக்குப் போட்டியாக தக்க வைத்துப் பெருமிதம் கொண்டார்கள். அப்பெருமிதம் நீடிக்கவில்லை. இந்து சமய அறநிலையத்துறை கொக்கி போட்டுவிட்டது. இடைக்காலத்தடை வாங்கியதோடு சரி. நிரந்திர நிவாரணத்துக்கு முயற்சியும், சிந்தனையும், செயலும் இதுவரை இல்லை. அதாவது இருக்கும் ஒரே கோவிலையும் சீராக நிர்வகிக்கத் தெரியாமல் கோட்டைவிட்டதற்குப் பதில் ஆதீனத்தின் பெயரில் இருந்தாலாவது சொத்துக்கு ஆபத்து குறைந்திருக்கும். **இதில் வேறொரு வித்யாசத்தையும் பார்க்கவேண்டும். ஐந்து கிராமத்தைச் சேர்ந்த விஸ்வ குலமக்கள் ஒரே ஒரு கொழுந்து மலைக்**

கோவிலைக் கவனிக்க இயலாமல் பரசமயகோளரிநாதர் ஆதீனம் கவனிக்கட்டும் என்று கொடுத்துச் சென்றார்கள். இங்கேயோ, ஒரே தெருவில் ஆதீனத்தையும் மடாதிபதியையும் வைத்துக்கொண்டு மடம் வேண்டாம் என்றார்கள்.

ஆம். ஆரம்பம் முதலே தட்டார்கள், கன்னார்கள் என்று அணிபிரித்து நிர்வாக உரிமைக்குப் போட்டி போட்டு வாழ்ந்தவர்களிடம் மடம் சிக்கித்தவித்தது. பின்னாளில் ஆன்மீகம் குறைந்தது. குலத்தொழில் குறைந்து வருமானம் குறைந்து பள்ளிக்கல்வி, மாதசம்பளத்து உத்யோகம் என்றும் போலி கௌரவம், ஆணவம், (Ego) ஈகோ மட்டும் குறையவில்லை என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி. **ஆனாலும் ஆன்மீக வளர்ச்சி முன்னேற்றத்துக்கு** ஒவ்வாத **ஒண்ணுக்குள் ஒண்ணு** என்ற புதுமையான போக்கு, மடம் போனாலும் பரவாயில்லையோ என்று எண்ணுகிறார்களோ? என்ற சந்தேகத்தை உண்டு பண்ணுகிறது.

37வது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகள் 09–12–1979ல் ஐக்கியமானார்கள். ஸ்வாமிகளே திட்டம் தீட்டி தனது சமாதியை அமைத்து மாவட்ட கலெக்டர், வி.ஏ.ஓ, ஆகியோரிடம் ஒப்புதலும் பெற்று ஆவணப்படுத்திய படியே அன்னாருக்கு தவச்சாலையிலேயே சமாதியும், அதன் மேல் சிவலிங்கம் பிரதிஷ்டையும் செய்விக்கப்பட்டுள்ளது. ஸ்வாமிகள் பயன்படுத்திய பாதுகைகளும், சங்கும் பத்திரமாகப் பக்தர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீன குரு பரம்பரை விளக்கம்

வரிசை எண்	கி.பி. முதல்	கி.பி. வரை	அரசுஆண்ட வருடம்	பட்டம் ஏற்ற சுவாமிகளின் பெயர்கள்
1.	647	737	90	ஸ்ரீமத் நீலகண்ட பரமாச்சார்ய ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீ அனவரத சுந்தரராசப் பெருமாள் சுவாமிகள்
2.	737	747	10	ஸ்ரீ அருள்நந்த நாதஞானாச்சாரிய சுவாமிகள்
3.	747	777	30	ஸ்ரீபொன்னம்பலநாத ஞானாச்சாரியசுவாமிகள்

SHEET 3


ப 118
Srimath Para samaya Kolari Naathar
Aathinam - Sri Raja Rajeshwari
Peedam Thirunelveli
ஸ்ரீ மத் பரசமய கோளரி நாத பீடாதிபதி
ஸ்ரீ ஆதிகுருமூர்த்திசன்னதி


Guru Pooja On : 24.12.2016
At : Thirunelveli Mutt
His Holiness Aadhi Guru Moorthy
After Abishekam & Alangaram
ப 11


ஸ்ரீமத் பரசமயகோளரி நாதர் ஆதீனம், திருநெல்வேலி
ப 12
ஸ்ரீமத் நீலகண்ட சாஸ்திரிகள் - முதல் பட்டம்
ஸ்ரீ ஆதி குரு மூர்த்தி
ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் சுவாமிகள்

வரிசை எண்	கி.பி. முதல்	கி.பி. வரை	அரசுஆண்ட வருடம்	பட்டம் ஏற்ற சுவாமிகளின் பெயர்கள்
4.	777	865	88	ஸ்ரீருத்ரயோகமூர்த்தி ஞானாச்சாரியசுவாமிகள்
5.	865	921	56	ஸ்ரீகடம்பவனஞானாச் சாரியசுவாமிகள்
6.	921	984	63	ஸ்ரீதிருமூர்த்திசுந்தரானந்த ஞானாச்சாரியசுவாமிகள்
7.	984	1063	79	ஸ்ரீபஞ்சநாதமூர்த்தி ஞானாச்சாரிய சுவாமிகள்
8.	1063	1072	9	ஸ்ரீபொன்னம்பலநாத பௌரிசேஷய சுவாமிகள்
9.	1072	1078	6	ஸ்ரீமேற்கண்ட சுவாமிகளின் தங்கை சுந்தரேசன் ஞான கைவல்ய சுந்தராச்சி அவர்களுக்காக சுந்தரானந்த சுவாமிகள்
10.	1078	1108	30	ஸ்ரீவித்தியகனந்த ஞானகுரு சுவாமிகள்
11.	1108	1162	54	ஸ்ரீஞானகுருசௌந்தர்ய மௌன ஞானாச்சாரிய சுவாமிகள்
12.	1162	1231	69	ஸ்ரீகுமரநாகேஸ்வர அன்பார்ந்த ஞானதேசிக சுவாமிகள்
13.	1231	1248	17	ஸ்ரீதிருமலைநாத யோகவல்லப ஞானாச்சாரியசுவாமிகள்
14.	1248	1275	27	ஸ்ரீசாலிவாபிநாத கைவல்ய ஞானாச்சாரிய சுவாமிகள்
15.	1275	1329	54	ஸ்ரீஞானகைவல்ய ஆனந்த யோகநாத சிவாச்சாரிய சுவாமிகள்
16.	1329	1372	43	ஸ்ரீஅர்த்தநாரீஸ்வர ஞானேந்திர சுவாமிகள்
17.	1372	1372	6 மாதம்	ஸ்ரீசதாசிவ விபீஷானந்த (1/2 வருடம்) சுவாமிகள்
18.	1372	1395	23	ஸ்ரீசந்திரசேகர நிரஞ்சன யோக சுவாமிகள்
19.	1395	1406	11	ஸ்ரீதிருவண்ணாமலை நாத எதீந்திர யோகீஸ்வர சுவாமிகள்
20.	1406	1489	83	ஸ்ரீபால்வண்ணநாத பரமாசாரிய சுவாமிகள்

வரிசை எண்	கி.பி. முதல்	கி.பி. வரை	அரசு ஆண்ட வருடம்	பட்டம் ஏற்ற சுவாமிகளின் பெயர்கள்
21.	1489	1508	19	ஸ்ரீ அகண்டவேதிநாத அத்துவைதானந்த ஞானாச்சாரிய சுவாமிகள்
22.	1508	1551	43	ஸ்ரீஅனவரத அபேசுவானந்த ஞானாச்சாரிய சுவாமிகள்
23.	1551	1568	17	ஸ்ரீகாமாட்ஷிநாத கைவல்ய ஞானாச்சாரிய சுவாமிகள்
24.	1568	1577	9	ஸ்ரீசட்டநாதஸ்ரீகந்த சிவாச்சாரிய சுவாமிகள்
25.	1577	1578	1	ஸ்ரீகெங்காதர கரபாத்திர நாத சுவாமிகள்
26.	1578	1592	14	ஸ்ரீசதுரகிரி சதானந்த சுவாமிகள்
27.	1592	1598	6	ஸ்ரீ தட்சிணாமூர்த்தி மகாகுருவானந்த சுவாமிகள்
28.	1598	1607	9	ஸ்ரீதிருகுற்றாலநாத சுவாமிகள்
29.	1607	1641	34	கம்பத்து ஸ்ரீ முத்துகுமார சுவாமிகள் (இது வரை துறவிகள்)
30.	1641	1681	40	நெல்லை அனவரதநாத அன்னாபிஷேக ஞானாச்சாரிய சுவாமிகள்
31.	1681	1741	60	ஸ்ரீமுத்துக்குமார சுவாமிகள் (சிவகங்கையில் முக்தியடைந்தவர்)
32.	1741	1781	40	ஸ்ரீமீனாட்சி சுந்தர சுவாமிகள்
33.	1781	1841	60	நெல்லை ஸ்ரீஅனவரதநாத சுவாமிகள்
34.	1841	1898	57	ஸ்ரீமீனாட்சி சுந்தரசுவாமிகள்
35.	1898	1904	6	ஸ்ரீமுத்துக்குமார ஸ்வாமிகள்
36.	1904	1955	50	குடந்தை ஸ்ரீஇராசரத்தினம் சுவாமிகள்
37.	1955	1979	24	ஸ்ரீகைலாச நிவாசி ஸ்ரீமத் பரிவிராஜக சிவானந்த முனீஸ்வரசுவாமிகள் (நெல்லையில் 09-12-1979ல் முக்தி அடைந்தார்)
	1979	1981		பரிபாலன கமிட்டி மேற்பார்வை
38.	1981	...	...	ஸ்ரீசிவசண்முக ஞானாச்சாரிய குரு சுவாமிகள் 17-04-1981ல்
				பட்டம் ஏற்றார்கள்.

ஸ்ரீகாமாட்சி அம்பாள் நவராத்திரி மகோற்சவ பத்திரிக்கை

நாளது மங்களகரமான 1133ம் வருடம் ஹேவிளம்பி புரட்டாசி மீ 8ம் உ மங்களவாரமும் சுக்கிலபிரதமையும் அஸ்த நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் அன்று காலை மணி 10.30க்கு மேல் 12–க்குள்ளாக ஸ்ரீகாமாட்சி பரமேஸ்வரிக்கும், ஸ்ரீபரதேவதா ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள், ஸ்ரீசதாசிவமூர்த்தி, பார்வதி அம்பாள், சிவகாமசுந்தரி, வள்ளி தேவசேன, மனோன்மணி முதலிய மூர்த்தங்களுக்கு அபிஷேக ஆராதனைகளும் அன்றிரவு விசேஷ அலங்கார தூப தீப நைவேத்தியாதி அர்ச்சனா மந்திரபுஷ்ப சோடச உபசாரங்களும் நடைபெற்றன.

பழநி முத்தமிழ் சக்கரவர்த்தி ப்ரஹ்மஸ்ரீ மு.மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அருளிச் செய்த பிரபந்தத்திரட்டு என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்ட சில பாடல்கள். (ஐந்து மடம் பற்றியது) (மே10)

புகரரிய **நெல்லை**யம் பதிவீற் றிருக்கின்ற
பரசமய கோளரி எனும்
பரமகுரு **சீனந்தல்** மேவுசிவ லிங்க குரு
பரவு திந்தினிபு ராதி
பத்யதிட **மௌனகுரு** ருத்ரமூர்த் திக்கடவுள்
பலனுதவு **போதலூரில்**
பவரகித புனித**வீர ப்ரம்ம** தேசிகன்
பலவளம் நிறைந்த **வீப்பூர்**
பார்த்திபன் வெங்கடாச் சாரி கெம்பீரசௌ
பாக்கியமிகு **நந்தி கொண்டைப்**
பகவானும் சிவசங்கர யோகீஸ்வரன் கவிஞர்
பன்னுசீர்க் **கன்னபுரி** வாழ்
பாஸ்கரோ தயஞான மூர்த்திஉயர் **தில்லை**யில்
பவுசுற் றுயர்ந்த திவ்ய
பக்தி வடிவாம்**கமல மூர்த்தி**மெய்ஞ்
ஞானி இவர்
பத த்யானம் மனசிருத்தி

நெல்லை – திருநெல்வேலி. சீனந்தல் – சீனந்தல் என்னும் பதி. திந்தினி புராதி – திந்தினி புரத்தின் முதல்வர். பத்ய – பக்தி கொண்ட போதலூரில் – போதலூர் என்னும் பதியில். வீப்பூர் – வீப்பூர் என்னும் பதி. நந்தி கொண்டை – நந்திகொண்டை என்னும் தலம். கன்னபுரி – கன்னபுரித்தலம். தில்லை – சிதம்பரம்.

திருநெல்வேலியில் பரசமயகோளரி என்னும் பரமகுருவும், சீனந்தலில் சிவலிங்க குருவும், திந்தினபுரத்தில் மௌனகுரு மூர்த்திக் கடவுளும், போதலூரில் வீரப்ரம்ம தேசிகரும், வீப்பூரில் வெங்கடாச்சாரியும். நந்தி கொண்டையில் சிவசங்கர யோகீஸ்வரரும், கன்னபுரியில் பாஸ்கரரோகய ஞானமூர்த்தியும், சிதம்பரத்தில் கமலமூர்த்தியும் விஸ்வகர்ம பஞ்சப்ரம்ம குருமூர்த்திகளாம். பததியானம் – பாததியானம். மனசுஇருத்தி – மனதில் வைத்து.

நெல்லை மடம். (படம் 15–பக்.79) **திரு.** A.பழனி என்ற மெய்க்காப்பாளர்: (ப.15) திருநெல்வேலி டவுண் அக்கசாலை வினாயகர் கோவில் தெருவில் வசித்து வரும் திரு.பழனி (த/பெ.ஆறுமுகம்) என்ற கைவினைஞருக்குத் தற்சமயம் வயது 67. வெள்ளியில் கால் தண்டை கொலுசு அதிகமாகத் தண்டை தயார் செய்து நேரடியாக விற்பனை செய்து ஜீவிக்கிறார். பட்டறைத் தொழிலாளி. சொந்த வீடு, சொந்தப் பட்டறை என்று தனக்குத் தானே தொழிலாளி, முதலாளி என்று வாழ்பவர். ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, சித்தாந்தம், திருமணம் வேண்டாம் என்று நீடித்த வாலிப வாழ்க்கைக்கு, ஊர்மக்களும் இவரது பெற்றோர்களும் சமயோசிதமாக அன்றைய மடாதிபதி ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகளின் கவனத்துக்கு பழனியின் நிலையை விண்ணப்பித்தார்கள். ஒரே தெருவில் வசிக்கும் வாலிபர் விஸ்வகர்மாவை நல்வழிப்படுத்த மனம் இறங்கிய ஸ்வாமிகள் மெதுவாகக் காய் நகர்த்தினார்கள். பட்டறை வேலை நேரம் போக மீதி நேரத்தில் மடத்துக்கு வந்து என்னுடன் எனக்குப் பாதுகாப்பாக இரு என்று புதுமையான ஆணை பிறப்பித்தார். சிறு சிறு கணக்கு, பேரேடு எழுதுதல், கொழுந்து மாமலைக் கோவில் நிர்வாகம், கணக்குப் பார்த்தல் என்று படிப்படியாகப் பதப்படுத்தினார்கள்.

திருமணம் செய்து கொள்ள இசைய வைத்து பழனியை குடும்பஸ்தராக்கி மேலும் பொறுப்புள்ளவ ராக்கினார்கள். இரவில் மடத்துக்குக் காவல். மடத்துச் சொத்துரிகார்டுகள் தயாரித்துப் பராமரித்து வைத்தல் என்று நம்பிக்கை வளரும் பாத்திரமாக மாறி வளர்ந்தார். மடத்தில் சொத்துக்களுக்கு செப்புப் பட்டயங்கள் இருந்ததைக் கண்டவர் இந்த பழனி. சொத்து விபரம் அனைத்தும் 40 பக்கம் நோட்டில் எழுதி வைத்தவர் பழனி.

தவத்திரு.சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள் சுகவீனமடைந்து படுக்கையிலிருந்த காலத்தில் உடன் இருந்து அவருக்குத் தொண்டு செய்தவர். ஸ்வாமிகளின் அக்காள் பையன்கள் கடைசி வாரத்தில் நேரில் வந்து ஸ்வாமிகள் பயன்படுத்திய சொந்த காமிரா, பைனாகுலரை அந்த இளைஞர் ஸ்வாமியின் கைகளால் வாங்கிச் சென்றதைப் பார்த்தவர். ஸ்வாமிகள் முக்தியான வேளை மதியம் 3.05 மணி 09–12–1979. ஞாயிற்றுக்கிழமை ஸ்வாமிகளைச் சுற்றியிருந்த தட்டுமுட்டுச் சாமான்கள், பாத்திரங்களை எடுத்துப் பத்திரமாகப் பூட்டிப் பாதுகாத்தவர் திரு.பழனி. மடத்தின் முற்கால ரகசியங்களை ஸ்வாமிகள் இவரிடம் நேரில் பகிர்ந்து கொண்டதாகத் தகவல்.

ஸ்வாமிகள் முக்திக்குப் பிறகு இரண்டாண்டு மடாதிபதி இல்லாத நிர்வாகம் பிறகு 17–04–1981ல் திருவண்ணாமலை ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக ஞானா ஆச்சாரி கூடுதல் பொறுப்பேற்று 38வது மடாதிபதியாக வந்த பிறகு, பரசமயகோளரிநாத மட நிர்வாகத்தில் கோட்டம், கோளாறு, விரிசல் ஏற்படுவதைக் கண்டு மனம் பதைத்தார்.

தெய்வத்திரு P.T. தங்கவேல் என்ற உள்ளூர் வாசி, செயலாளர் என்று புதிய மடாதிபதியுடன் கை கோர்த்து மடத்தின் சொத்துக்களை வித்தியாசமாகக் கையாண்டதைக் கண்டார். வி.கே.பள்ளிக்கூடச் சொத்தையும் விற்க முயற்சி என்று வந்தபோது உள்ளூர் விஸ்வகுல மடத்து அபிமானிகள் சிலருடன் கை கோர்த்து மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகஞானாச்சாரியை எச்சரித்து வக்கீல் நோட்டீஸ் விட்டதும் இதே திரு.பழனி தான். மடத்தின் நிர்வாகமும், சொத்தும், ஆரோக்கியமும் குறைந்து வருவதைக் கண்டு மனம் நொந்து போனாலும் இவருடன் கைகோர்க்க கருத்தொருமித்தவர்கள் உள்ளூரில் இல்லையே! மடம் என்னவாகுமோ? என்று கவலைப்படுகிறார். ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரரின் சேவை, மடத்தை, முன்னெடுத்துச் சென்ற போக்குக்கு, முற்றிலும் மாறாக மடத்துக்குள் வாசம் செய்யாத, மடாதிபதி சொத்துக்களை வில்லங்கம் செய்யும் மடாதிபதி, நிர்வாகம் பற்றிக் கவலைப்படாத மடாதிபதியை, இவ்வளவு சீக்கிரத்தில் கண்கூடாகக் காணநேரிட்டதே என்று கண் கலங்குகிறார்.

2.1 கொழுந்து மாமலை அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில்

திருநெல்வேலி மாவட்டம் சேரன் மாதேவி தாலுகாவில், சேரன் மாதேவி ஊரிலிருந்து களக்காடு செல்லும் வழித்தடத்தில் சுமார் 2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள இந்த வனக்கோவில், நெல்லை ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனத்திற்குப் பாத்தியப்பட்டது.

கொழுந்து மாமலை அடிவாரத்தில் அடர்ந்த முள்புதர் காட்டில் அமைந்துள்ள ஸ்ரீபாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் அருணகிரிநாதராலும் பாடப்பட்ட புண்ணியஸ்தலம். வைகாசி விசாகம், பங்குனி உத்திரம், இரண்டும் பெரும் விழா நாட்கள். ஒவ்வொரு மாதக்கடைசி வெள்ளியும் சிறப்பு பூஜை என்று பக்தர்களைக் கவர்ந்திழுக்கும் இக்கோவில் நெல்லை ஆதீனத்துக்கு எப்படிச் சொந்தமானது என்பது முதல் தற்கால நிர்வாகம் வரையில் சுவாரஸ்யம் மிக்க வரலாற்று நிகழ்வுகள் பல.

வரலாறு:

பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவைக் காலனி ஆதிக்கம் செய்த காலத்தில் சென்னை ராஜதானியில் திருவாங்கூர், கொச்சின், மலபார் என்ற மலை நாட்டு கேரளப் பகுதியும் இணைந்திருந்தன. மொழிவாரி மாநிலம் பிரிந்த பின், இவை மலையாள மொழி பேசும் கேரளம் என்று பிரித்து வைக்கப்பட்டன. தாமிரபரணி புண்ணிய தீர்த்தத்தில் நெல்லையில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீமத் பரசமய கோளரி நாதர் ஆதீனம் என்ற திருநெல்வேலியும் அப்போது திருநெல்வேலி, கன்யாகுமரி, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஜில்லாக்களை உள்ளடக்கிய பெரிய மாவட்டமாக இருந்தது.

அரசர், ஜமீன்தார் உறவுகள்:

திருநெல்வேலிப் பகுதி பலகாலமாக மதுரை நாயக்கர், சிவகங்கை சேதுபதி, கேரளத்து சேர அரசுகள், மதுரை பாண்டிய மன்னன் என்று மாறி, மாறி வதைப்பட்ட காலம். பிளவுபட்ட ஆட்சியாளர்களை அடிமைப்படுத்திய பிரிட்டிஷ் அன்னியர் ஆட்சியை எதிர்த்து, நின்றவர்களில் வீரபாண்டியகட்டபொம்மன், மருதுபாண்டிய சகோதரர்கள், வேலுநாச்சியார் என்பவரோடு கொச்சின் கோட்டயம் மகாராஜா பழசி ராஜாவும் நினைவில் நிற்பவர்கள்.

பழசி ராஜாவும், நெல்லை மடாதிபதியும் (1753-1805):

அக்காலத்தில் ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீனத்தின் 11வது மடாதிபதியவர்கள் பழசிராஜாவுக்கு பிரதான ராஜகுருவாகவும், செயலாற்றி வந்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடிய தேச பக்தரை பிரிட்டிஷ் ராணுவம் கொச்சின் அருகில் முற்றுகையிட்டது. சிறைபிடிக்கப்பட்டார். பிரிட்டிஷ் ராணுவத்தினர் கையில் சிக்கிட மனம் வெட்கி, சுயகௌரவத்தோடு பழசிராஜா தன்னைத்தானே மாய்த்துக்கொண்டார் என்பது சரித்திர உண்மை.

கொழுந்துமலை:

கொச்சின் போருக்கு முன்பாகவே, பழசிராஜா திருவிதாங்கூருக்கு ஓடி ஒளிந்து கொண்டிருந்த நிலையில் தான்– நம் மடாதிபதியின் ஆலோசனைப்படி இருவரும் சேர்ந்து வந்து கொழுந்து மலைக்காட்டில் மறைவாக சில காலம் வாழ்ந்தார்கள். ராஜாவின் உயிரைத் தக்க சமயத்தில் காப்பாற்றிய ராஜகுருவுக்கு/ மடாதிபதிக்கு நன்றிக் கடனாகப் பழசிராஜா அன்று தானமாகக் கொடுத்தது தான் இந்த கொழுந்துமலைக் கோவில் சொத்து. முதலில் 30–40 ஏக்கர் என்றார்கள். இன்று அடங்கல், சிட்டா, பட்டா என்று உறுதியாகக் கையிலிருப்பது 15.01 ஏக்கர் மட்டுமே.

மடாதிபதியின் திக் விஜயம்:

ஸ்வாமிகள் நெல்லையிலிருந்து சுரண்டை, கல்லிடை, கொழுந்துமலை, குற்றாலம் என்று பிரதேச யாத்திரை செய்ததுண்டு. 36வது மடாதிபதி ஸ்ரீமத் முத்துக் குமாரஸ்வாமிகள் பின்னாளில் 37வது பட்டம் ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகளும் இக்கோவிலில் முகாமிட்டு ஆன்மீக சேவை செய்திருக்கிறார்கள்.

தினத்தந்தியும், கொழுந்து மலைச் சொத்தும்:

தினத்தந்தி நாளிதழ் ஸ்தாபகர் தெய்வத்திரு. சி.பா.ஆதித்தனார் அவரின் புதல்வர் திரு.சிவந்திஆதித்தனார் அவர்கள் திருச்செந்தூர் அருள்மிகு பாலசுப்ரமணியஸ்வாமி கோவிலுக்கு அறங்காவலராக இருந்தார். அச்சமயம் தினத்தந்தி நிறுவனத்திற்குத் தேவையான காகிதங்களை உற்பத்தி செய்யும் "சன்பேப்பர் மில்" என்ற காகித மரக்கூழ் ஆலையை, கொழுந்து மலைக்கருகிலுள்ள வனப்பகுதியில் அமைத்தார்கள். கொழுந்து மலை சுப்ரமணியஸ்வாமி கோவிலைச் சுற்றிலும் காட்டுமரங்கள் என்பதால் தமது காகித ஆலைக்கு உதவும் என்பதாலும் திரு.சிவந்தி ஆதித்தன் அவர்கள் அரசு அதிகாரம், செல்வாக்கு (எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆர்.எம்.வி. இந்து சமய அறநிலையத் துறை மந்திரி) எல்லாம் பயன்படுத்தி திருச்செந்தூர் முருகன் கோவிலுக்குச் சொந்தமானதே கொழுந்து மலை ஸ்ரீபாலசுப்ரமணியஸ்வாமி கோவில் என்று வழக்குப் போட்டு சொத்தை அபகரித்துக்கொண்டார். தமது அபகரிப்பு செயலை மறைக்க பக்தர்களுக்கு வசதி செய்வதாக பஸ்வழித்தடத்தில் ஆர்ச் முகப்பு கட்டினார். ரோட்டிலிருந்து காட்டுக்குள் இருக்கும் கோவில் வரை தார் ரோடு போட்டார். சேரன் மாதேவியிலிருந்து அரசு பேருந்துகளைக் கோவிலுக்கும் போய்வர ஏற்பாடு செய்தார். பொதுமக்கள் இந்த வெளிப்பூச்சு வசதியில் மகிழ்ந்தார்கள் கோவில் சொத்து அபகரிக்கப்பட்டதை பெரிதுபடுத்தவில்லை.

போர்க்கொடி - எதிர்வழக்கு:

நெல்லை, தூத்துக்குடி, சேரன்மாதேவி, வாழ் விஸ்வகுல மக்கள் மனம் நொந்தார்கள். தினத்தந்தி முதலாளியையும், எம்.ஜி.ஆர். அரசையும் எதிர்த்துப் போராடுவதற்கு எப்படியோ தைரியம் வரவழைத்துக் கொண்டு, அப்போது தான் மடாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முகாச்சாரியாரின் மடாதிபதிப் பதவியைக் கேடயமாகப் பயன்படுத்தி எதிர்மனுப் போட்டு வழக்காடினார்கள். நீதியரசரின் இறுதித்தீர்ப்பு: திருச்செந்தூரிலும் சுப்ரமண்யஸ்வாமி,கொழுந்துமலையிலும் சுப்ரமண்யஸ்வாமி. ஆகவே இரண்டும் ஒன்று என்றும் ஒரே ஆளுகைக்குள் அபகரித்தது என்பது தவறு. செல்லாது. ஒன்று அறநிலையத் துறைக்குச் **சேர்ந்த**

சொத்து. மற்றொன்று பழமையான **ஆதீனத்துச் சொத்து.** ஆதீனச் சொத்தை விடுவிக்க வேண்டும் என்று விடுதலை கிடைத்தது. (முழுவிபரத்துக்கு 1982 முதல் 1991 வரையான வழக்கின் வழக்கு எண் தீர்ப்புக்கு திரு.சின்னத்தம்பி – வி.கே.நர்சரிப்பள்ளி அக்கசாலைப்பிள்ளையார் கோவில் நெல்லை அணுகலாம்)

விடுதலை வந்தும் நொந்து போன சொத்து:

சேரன்மாதேவியில் வசித்து வந்த திரு.சொரிமுத்து ஆச்சாரியிடம் (சர்வே டிபார்ட்மெண்டில் கடைநிலை ஊழியராக வேலை பார்த்து ஓய்வு பெற்று வேலையில்லாமல் சும்மா இருந்தவரிடம்) கோவில் சாவியைக் கொடுத்து பூசாரி/காவலாளி என்றாக்கியது ஆதீன நல அபிவிருத்திக் கமிட்டி என்ற உள்ளூர் நிர்வாகம். சமூக அந்தஸ்து? பணவசதி உள்ளூர் மக்களின் நம்பிக்கை ஏதுமில்லாத தனிநபர், கோவில் சாவியை வைத்திருந்தார். நித்ய பூஜைகள் சிறக்கவில்லை உள்ளூரில் பலரும் இச்சொத்துக்கு வில்லங்கம் ஏற்படுத்தினார்கள். நெல்லையிலிருந்த ஆதீன நலக் கமிட்டியினரோ திருவண்ணாமலையிலிருந்த மடாதிபதியோ, இக்கோவிலையும், சொத்தையும் சரியாகப் பராமரிக்கவில்லை.

கார்த்திகை தீபம் ஏற்றும் உரிமையை இழந்த விஸ்வகுலம்:

கோவிலுக்கு அருகிலுள்ள மலை உச்சியில் கார்த்திகை மாதம் பௌர்ணமி இரவில் (திருவண்ணாமலைத்தீபம் ஏற்றப்படுவதுபோல) தீபம் ஏற்றுவதற்காக சேரன்மாதேவி விஸ்வகுலமக்களுக்குச் சொந்தமான 1 1/2 ஏக்கர் பொதுச் சொத்தையும் பராமரித்து வந்த ஒரு தனிநபர் ஆச்சாரி வேறு இனத்தைச் சேர்ந்தவருக்கு விற்கிரயம் செய்துவிட்டதால் கார்த்திகை தீபம் ஏற்றும் ஆச்சாரமான உயரிய கௌரவம் சேரன் மாதேவி விஸ்வகுல மக்களிடமிருந்து வழுவிச் சென்றது. (முழு விபரத்துக்கு திரு.ஆ.கணபதி வக்கீல் மதுரையை அணுகலாம்.)

சொத்துப்பாதுகாப்புக்கு முன்னேற்பாடு திட்டம்:

சொத்து இருந்தும் வருமானம் இல்லை, பாதுகாப்பில்லை என்ற நிலையை மாற்றியமைத்து பாதுகாப்பைப் பலப்படுத்தி, சீரான வருமானம் ஆதீனத்துக்கு வருமாறு ஒரு திட்டம் தீட்டப்பட்டது. தமிழ்நாடு விஸ்வகர்ம சமுதாய நல அறக்கட்டளையானது

23–02–2007ல் பதிவு செய்யப்பட்டு பாளையங்கோட்டையிலிருந்து செயல்படத் துவங்கியது. திரு.தி.மா.நா.மோகனனும், திரு.தங்கவேலுவும் மற்றோரும் உழைத்தார்கள். உறுப்பினர் பங்குத் தொகை ரூ.10,000 வாங்கிக் கொண்டு வருமான வரித்துறையிடமிருந்து வரிக்கு விதிவிலக்கு (80.G) என்றும் விபரமான அணுகுமுறையில் கொழுந்துமலைக் கோவில் சொத்தை லீஸ்/ குத்தகைக்கு எடுத்து வீட்டுமனைகள், பத்தர்கள் தங்கும் ஓய்வு விடுதி, பள்ளிக்கூடம், நந்தவனம், ரோடு, மின்வசதி குடிநீர் வடிகால் வசதி, என்று கட்டமைப்பு வசதி பெருக்கும் திட்டம் தீட்டினார்கள். விஸ்வகுல மக்களும் ஆர்வத்துடனும், நம்பிக்கையுடனும் பங்குத் தொகைக்குப்பணம் செலுத்தினார்கள். (படம் 12) (படம் 120) (பக்.79)

கொழுந்து மாமலை செயல்திட்டத்திற்கு ஆதரவு, ஆசீர்வாதம், அனுமதி, காலி நிலத்துக்கு லீஸ், குத்தகை, ஒப்பந்தம் என்று மடாதிபதியிடம் அணுகினார்கள். மாதாமாதம் ஆதீனத்திற்கு இவ்வளவு தொகை வந்து சேரும் கோவிலுக்கு பக்தர்கள் கூட்டம் கூடும் வருமானம் பெருகும் பாதுகாப்புக் கூடும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. சாமியார் சம்மதம் தெரிவிக்கும்/ தெரிவித்த சமயத்தில் அவரது குடும்பத்தார் குறுக்கிட்டு அதிகமான பொருளாதார ஆதாரத்தை கோரிக்கையாக நிர்ப்பந்தித்து, அனுமதி மறுத்து விட்டார்கள். (கிரஹஸ்தர் மடத்தில் ஆதீன கர்த்தாவின் குடும்ப குறுக்கீடு என்பது மடத்தின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்தது என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு)

நிர்வாகம் மனம் நொந்தது. பணம் கொடுத்த பங்குதாரர்கள் ஆத்திரப்பட்டு தொந்தரவு செய்தார்கள். சமயோசிதமாக சேரன் மாதேவிக்கருகிலேயே மேலச்செவல்லுக்கு அருகில் பிரான்மலை கிராமத்தில் 43 ஏக்கர் வாங்கி செப்பனிட்டு கொழுந்துமலையில் செய்ய நினைத்த திட்டத்தை பிரான்மலையில் செய்துமுடித்தார்கள் இந்த சமூக நல அறக்கட்டளையாளர்கள். கொழுந்துமலை பின் தங்கியது.

திரு.சொரிமுத்து ஆச்சாரி காலமானார். சேரன்மாதேவி வாழ்விஸ்வகர்ம சமூகத்தில் இரண்டு, மூன்று உட்பிரிவுகள்

உண்டாகின. கொழுந்துமலைசுப்ரமணியஸ்வாமி கோவில் நிர்வாகம் மாதவருமானம் அனைத்தையும் பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலி ஆதினநலக்கமிட்டி எதையும் கண்டு கொள்ள விரும்பவில்லை. சுப்ரமணிய சுவாமி கோவில் பூசாரிக்கு மாதச்சம்பளம் பாக்கி. அருகிலுள்ள நிலத்தில் செம்மண், மணல் அள்ளுவதற்கு குத்தகை அனுமதி என்று ஆதீனநலக்கமிட்டியும் கோவிலின் மாதவருமானத்தைக் கூட்டாகவும் பங்கு போடுவதென உள்ளூர் விஸ்வகர்மாவும் காலத்தைப் போக்குகிறார்கள் என்று கேள்வி.

கொழுந்து மலைக்கோவில், கோவில் நிலத்தின் வருமானத்தைப் பெருக்கவும் நிர்வாகத்தை சீர் செய்து ஆதீனப் பொறுப்பில் கொண்டு வரவும் 23 பேர் அடங்கிய “உயர்மட்ட ஆலோசனைக்குழு” 03–04–2016 நாளில் தயாரித்தளித்த திட்ட அறிக்கையையும் மடாதிபதி நிராகரித்துவிட்டார்.

கொழுந்து மலைக்கோவில் சொத்து விபரம்

நஞ்சை 14 செண்ட், புஞ்சை 14.87 ஏக்கர் மொத்தம் 15.01 ஏக்கர். குத்தகைக்கு விடப்பட்ட நஞ்சை மீட்கப்படவில்லை. பனைமரங்களும், மூலிகைச் செடிகளும் நட்டு ஆண்டுக்கு கோடி ரூபாய் வருமானம் சேர்க்க வாய்ப்புள்ளது. மடாதிபதியும் உள்ளூர் விஸ்வகுலமக்களும் நெல்லையிலுள்ள ஆதீன நல அபிவிருத்திக் கமிட்டியும் சுயநலநோக்கத்துடன் கொழுந்து மாமலைக் கோவிலை முடக்கி வைக்கின்றனர்.

காட்டுக்கோவிலுக்குக் கூட்டம் சேர்க்கும் முயற்சி (படம் எண்.13, 14)

அருள் சக்தி மிகுந்த ஸ்ரீசுப்ரமண்யஸ்வாமி கோவில் மெயின் ரோட்டிலிருந்து காட்டுக்குள் இருப்பதாலும், சேரன் மாதேவி ஊரிலிருந்து 2 கி.மீ. தொலைவில் இருப்பதாலும் மக்கள் கூட்டம் வரவு குறைவாகத்தான் இருந்தது. வரும் கூட்டத்தின் எண்ணிக்கைப் பெருக்க நினைத்தவர். திரு.கணபதி எம்.ஏ.பி.எல். (படம் 14A) என்ற வக்கீல். சேரன் மாதேவியில் பிறந்து, படித்து தற்போது மதுரையில் வக்கீலாகப் புகழோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஊரில் தோட்டம், வீடு, கடை, வருமானம்,

மதுரையில் வக்கீல் வருமானம். இதில் ஒரு கணிசமான தொகையை தமது அப்பா தெய்வத்திரு. ஆவுடயப்பன் ஆச்சாரி பெயரில் பண்டு ஏற்படுத்தி மாதாமாதம் கடைசி வெள்ளிக்கிழமை காலை 11 மணி முதல் மாலை 5 மணிவரை கொழுந்து மலைக்கோவிலில் அன்னதானம் சிறப்பாகச் செய்து வருகிறார்.

இவ்வாறே வைகாசி விசாகப் பெருவிழாவிற்கு (படம்.13,14) வரும் பக்தர்களுக்கும் பாளையங்கோட்டை திரு. V.அனந்த நாராயணன் குடும்பத்தினரும் பாளையங்கோட்டையில் தயார் செய்த அன்னத்தை வேனில் கொண்டு வந்து கொழுந்து மலைக்கோவிலில் அன்னதானம் செய்து மகிழ்கிறார்கள். இது 30 வருடத்திற்கும் மேலாகத் தொடர்கிறது. (படம் எண்.126–பக்.211)

கொழுந்து மலையில் மக்களின் ஆர்வம்:

சேரன் மாதேவியிலும், அதனருகிலுள்ள பிற கிராமங்களி லிருந்தும் (படம். 13, 14) வைகாசி விசாகத்திற்கு பல இனத்தவரும் திரளாக வருகை தந்து சாமி தரிசனம் செய்கிறார்கள். கூட்டமாகக் குடும்பமாக வந்து கோவிலில் சமைத்து பரிமாறி உண்டு மகிழ்கிறார்கள். பொருளாதார வசதி பெருகிவிட்ட இக்காலத்தில் பெரும்பாலான மக்கள் இரு சக்கரவாகனங்கள் கார், வேன் என்று சௌகர்யத்துடன் சாமி கும்பிட வருகிறார்கள். மாட்டு வண்டியில் வருவோர், நடைப்பயணம் செய்வோர் இல்லை.

உள்ளூர் பஞ்சாயத்தும், ஆதீன நல அபிவிருத்தி கமிட்டியும்:

உள்ளூர் பஞ்சாயத்து நிர்வாகம் இக்கோவிலின் மகிமை புரிந்து, வரும் பக்தர்கள் கூட்டத்திற்காக குடிநீர், கழிப்பிட வசதிகள் செய்து தர முன் வந்தாலும் ஆதீன நல அபிவிருத்தி கமிட்டி ஒரு சிறிய கோரிக்கை விண்ணப்பத்தை சமர்ப்பிக்கத் தயங்குவதால்..... கேளுங்கள் கொடுக்கப்படும் என்று காத்திருக்கிறது. பஞ்சாயத்து நிர்வாகம் ஆதீன நல அபிவிருத்திக் கமிட்டி என்று கேட்கும்? இவர்களைக் கேட்க வைப்பது? யார்? எப்போது?

ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனத்தை நினைத்தும், அம்மடத்தைச் சேர்ந்த கொழுந்து மாமலை சுப்ரமணியஸ்வாமி கோவிலையும் நினைத்துப்பாடி பரவசமானார். அருணகிரிநாதர். திருப்புகழ் மலர்மாலை 362 இதோ:

SHEET 4



தமிழ்நாடு விஸ்வகர்ம சமுதாய நல அறக்கட்டளை

பதிவு எண்: 372 / 2007


(TAMIL NADU VISWAKARMA COMMUNITY WELFARE TRUST)

அறக்கட்டளை ரசீது

ரசீது எண்: 220 நாள் 7.9.09

(ம. தங்கவேல்) (கி.ம.ந. மோகனன்)

ப 12



தமிழ்நாடு விஸ்வகர்ம சமுதாய நல அறக்கட்டளை

459, 20வது தெரு, சாந்தி நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 002.

ப 120



ப 13



ப 14



ப 14எ



ப 15

பெரியமடம்

அலகில்தமி ழாலுயர்ச மர்த்தனே போற்றி
அருணைநகர் கோபுரவி ருப்பனே போற்றி
அடல்மயில்ந டாவியப்ரி யத்தனே போற்றி
அவதான-
அறுமுகசு வாமியெனும் அத்தனே போற்றி
அகிலதல மோடிவரு நிர்த்தனே போற்றி
அருணகிரி நாதஎனும் அப்பனே போற்றி
அசுரேசர்:
பெலமடிய வேல்விடுக ரத்தனே போற்றி
கரதலக பாலிகுரு வித்தனே போற்றி
பெரியகுற மாதணைபு யத்தனே போற்றி
பெருவாழ்வாம்.....
பிரமனறி யாவிரத தக்ஷிணாமூர்த்தி
பரசமய கோளரித வத்தினால் வாய்த்த
பெரியமட மேவியசு கத்தனே யோக்யர்
பெருமாளே:
தலையறிவிலேனைநெறி நிற்கநீ தீக்ஷைதர
வேணும்

சரித்திரப் பின்னணி

2.1 ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனம் - நெல்லை

திருநெல்வேலியிலமைந்துள்ள நம் ஆதீனம் கி.பி. 600 ஆண்டு வாக்கில் நிறுவப்பட்டது. 1400 ஆண்டுகளுக்கு மேல் பழமையான இந்த ஆதீனம் அமைந்துள்ள இடம் தாமிரபரணி தீர்த்தம் என்றாலும் இந்தப்பகுதி பூகோள ரீதியாகத் தொடர்ந்து சர்ச்சைக்குள்ளானதுவும் ஒரு சரித்திரமே.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, ராஜபாளையம், காரைக்குடி, கமுதி, புதுக்கோட்டை, மதுரை என்ற அகண்ட நிலப்பரப்பு அவ்வப்போது மதுரையை ஆண்ட சொக்கனாதர் நாயக்கர் மன்னர் சேதுபதி, மருதுபாண்டியர், சோழர், பாண்டியர், திருவிதாங்கூர், கோட்டயம், கொச்சி மண்ணில் (சேர மன்னர்கள்) அவ்வப்போது கைகோர்த்துக் கொண்டு உறவாடிய கிழக்கிந்தியக் கம்பனியர்கள் என்று பலரும் பல காரணத்திற்காகப் போரிட்ட பகுதியாகும். 13ம் நூற்றாண்டில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை கன்னியாகுமரியிலிருந்து ஆட்சிசெய்த

மார்த்தாண்ட வர்மா தெற்கு கேரளா முழுமையும் கைப்பற்றுவதற்குப் போர் தொடர்ந்தார். கொச்சின் கோட்டயத்திலிருந்து அரசாண்ட பழசிராஜா ஆங்கிலேயர் பிடியில் சிக்காமலிருக்க, களக்காடு, கொழுந்துமலைக்காட்டில் மறைந்து கொண்டார். அவ்வாறே **தாமிரபரணிப் போரும்** குறிப்பிடத்தக்கவொன்று. திருவிதாங்கூர் சமஸ்தான மகாராஜா, பூதாள, வீர, உதயா, மார்த்தாண்டவர்மா, செல்லப்பாநாயக், தும்பிச்சி நாயக்கர் ஆகிய கூட்டணியை எதிர்த்து, விஜயநகர சக்ரவர்த்தியின் படைகளுள் **ஆரல்வாய் மொழிகண**வாயில், களக்காடு வரையிலும் நடந்த பெரும்போர், தாமிரபரணிப்போர். (மே11) இதில் திருவிதாங்கூர் கூட்டணி வீரர்கள் புறமுதுகிட்டு ஓடித்தோற்றார்கள் என்பது அழகிய ஓவியங்களாகத் திருப்புடைமருதூர் கோவில் கோபுர மாடங்களில் கிடைக்கின்றன. **13ம் நூற்றாண்டு முதல் 16–17ம் நூற்றாண்டு வரை மன்னர்களின் யுத்தகளம். பிறகு திருநெல்வேலி டவுணில் வாழும் விஸ்வகர்மாக்களும், மடாதிபதிகளும் தொடர் போராட்டம் என்று ஒரு புனிதமான மடம், போரிட்டுக் கொண்டே இந்துசமயத்தை வளர்த்த கதையை வரும் பக்கங்களில் படித்து ரசிக்க வாருங்கள்.**

கொழுந்து மாமலை, சிவகங்கை, கும்பகோணம், கோமாளீஸ்வரன்பேட்டை பற்றிய சரித்திர வரலாறுகள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. திண்டிவனத்தில் மடம் என்ற ஒன்றில்லை. மீனாட்சியம்மன் ஆலயம் நெல்லை ஆதீனத்தைச் சேர்ந்தது. 23 செண்ட், காம்பவுண்டு சுவருக்குள், முனிசிபல் எல்லைக்குள் அமைந்துள்ளது. செஞ்சிக்கோட்டை போரில் திண்டிவனம் சிதலமடைந்தாலும், இந்தக் கோவில் சொத்து போரினால் பாதிக்கப்படவில்லை.

கச்சிராபாளையம், ஐந்து சகோதரர்கள் தச்சுத்தொழிலில் சம்பாதித்த விவசாயநிலம். நான்குபேர் அவரவர் பங்கை பிரித்துக் கொண்டார்கள். ஸ்வாமிகளின் பங்கான இரண்டு ஏக்கர் மட்டும், அவர் காலத்திலேயே அவரால் ஊரிலுள்ள விஸ்வகுலமக்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டது. மடம், ஆதீனம் ஒன்றுமில்லை. தனிநபர், ஆன்மீகம் சந்நியாசி, சிதம்பரம் மௌனகுரு ஸ்வாமிகளின் பக்தர் அவ்வளவே. மன்னர்களின் போர்கள்

இவரையும் இவரது சொத்துக்களையும் பாதிக்கவில்லை. கோமுகி ஆறு, கோமுகி அணை இவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்தது.

சீனந்தல் மடம்:

காந்தப்பாளையம் ஒரு தனியாக ஒதுங்கிக் கொண்ட உள்மாவட்டப்பகுதி. மலைகளால் சூழப்பட்ட பகுதி. மன்னர்கள், ஆற்காடு நவாப் என்று படையெடுப்பில்லாத குக்கிராமம் பகுதி. இரண்டு ஏக்கர், நாலு ஏக்கர் என்று வேறு வேறு குறிப்புக்கள் உள்ளன. பல நூற்றாண்டுகளாகப் புறம்போக்காக அனுபவ பாத்தியதையை 1996க்குப் பிறகு தான் பட்டா வாங்கி உரிமையை நிலை நாட்டியுள்ளார்கள். திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலுக்கும், இம்மடத்துக்குமான உறவுகள் தான் ஆன்மீகச் சரித்திரம். அரசியல் சரித்திரம் இல்லை.

சிதம்பரம் ஸ்ரீமத் கமலமூர்த்தி மௌனகுரு ஸ்வாமிகள்:

சிதம்பரம், சேலம், ஆத்தூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், சிறுவாச்சூர், தஞ்சை, கருந்தட்டாங்குடி, தாராபுரம் என்று பல ஊர்களில் சுமார் கி.பி.1700–1800க்குப் பிறகு ஸ்ரீமத் பூர்ணானந்தஸ்வாமி ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகளுக்கு நன்கொடையாகவும் விற்கிரயமாகவும் வந்த சொத்துக்களும், மடத்துக் கிளைகளும், **பிறரால் அதிகம் சேதப்படவில்லை.** உண்மையில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஸ்வாமிகளுக்குக் கொடுத்த போலீஸ் உதவி, ராணுவ மரியாதை என்பதுவே சரித்திரப் பின்புலம். **மடாதிபதியும், வாரிசுகளுமே சொத்தை வில்லங்கம் செய்து கொண்டார்கள்.** சிப்பாய்க்கலகம், முதலாம் உலகப் போருக்குதவ இராணுவத்துக்கு ஆளெடுப்பு என்பதைத் தவிர்த்து உபத்திரம் இல்லை. ஆனால் அக்காலத்தில் திருச்சிராப்பள்ளி, மைசூர் சமஸ்தானம், தஞ்சைமன்னர்கள், வீர சிவாஜியின் வம்சம், மதுரை சொக்கனாதர், ஹைதர்அலி, பின்னர் பிரிட்டிஷ் காலனியாளர் ராபர்ட் கிளைவ் என்று அதிகம் சிரமப்பட்டபோது இம்மடத்து சொத்து கிராமங்களில் இராணுவத்துக்கு ஆள்எடுப்பு என்ற பிரச்சனையும், மைசூர் மன்னரின் வைஷ்ணவமும் பாண்டிய, சோழரின் சைவமும் போட்டியிட்ட ஸ்ரீரங்கம் என்பதுவே வரலாறு.

2.2 கோமளீஸ்வரன்பேட்டை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவில் புதுப்பேட்டை-சென்னை

திருநெல்வேலி ஸ்ரீமத் பரசமயகோளரி நாதர் ஆதீனம் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீட ஆதீனத்திற்குச் சொந்தமான இக்கோவில் புதுப்பேட்டை 20/16 சந்திரபானு தெருவில் உள்ளது. (போலீஸ் செக்போஸ்ட்டுக்கு எதிர்சந்து. மோட்டார் வாகன உதிரிசாமான்கள் காயிலாங்கடையுள்ளது. அன்னாளைய சித்ரா டாக்கீஸிக்குப் பின்புறம் என்பதும் சரியே)

சரித்திரம்

அக்காலத்து கோமளீஸ்வரன் பேட்டை என்பது பரந்து விரிந்த பகுதி. பின்னாளில் சென்னை மாநகராட்சியான போது கோமளீஸ்வரன் பேட்டையின் சில வார்டுகள், தெருக்கள், பகுதிகள், சிந்தாதிரிப்பேட்டை, திருவல்லிக்கேணி, சேப்பாக்கம், எக்மோர் என்ற பிறகு) கோமளீஸ்வரன் பேட்டை மிகவும் சுருங்கிய பரப்பளவில் அடங்கிவிட்டது.

பைகிராப்ட்ஸ் சாலையிலுள்ள அமீர் மஹால் என்பது அன்றைய ஆற்காடு நவாப்பின் வாசஸ்தலம்/அரண்மனை. இன்றும் நவாப்பின் மரபுவழிப் பரம்பரையினர் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். ஆற்காட்டு நவாப் ஒரு காலத்தில் கோமளீஸ்வரன்பேட்டை மடாலயத்தில் தங்கி அருளாட்சி செய்த தவசீலரின் இறைதன்மையை அறிந்து தமக்கு சந்தான விருத்தி வேண்டியபடி, வாரிசு உண்டாகவும், பெருமகிழ்ச்சியில் இந்தக் கோவில் இடத்தை ஸ்வாமிகளுக்குத் தானமாகக் கொடுத்து நன்றி செலுத்தி மகிழ்ந்தார்கள்.

ஸ்தல வரலாறு:

ஸ்ரீபரதேவதா பராசக்தியின் மகிமை பிரதாபங்களை வெளிப்படுத்திய திவ்ய ஸ்தலங்களுள் மதுராபுரி பிரதானம். இங்கு மீனாட்சியாகவும், வாரணாசியில் விசாலாட்சியாகவும் அனுகிரகிக்கிறாள். இந்த தூரத்தை அனுசரித்து ஸ்ரீவித்யா சிரேஷ்டர்களின் இதயபாவத்தை உணர்ந்த அம்பாள், ஸ்ரீவித்ய சிரேஷ்டரான தாமிரபரணி புராதின ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடாதிபதி, ஜெகத்குரு ஸ்ரீமத் அனவரத ஆச்சார்ய ஸ்வாமிகள், அம்பாளின் சான்னியத்தை கிரகிக்க முற்பட்டபோது, அம்பாள் பிரத்யட்சமாகி ஸ்ரீவித்யா உபாசகரின் இஷ்ட பூர்த்திக்காக கூவநதி தீரத்தில் கோமளீஸ்வரன் பேட்டையில் எழுந்தருளினாள்.

கோமளீஸ்வரன் பேட்டை வாழ் அக்காலத்து விஸ்வகுல மக்களில் பெரும்பாலோர் பொற்கொல்லர் மற்றும் கொல்லர். பிரிட்டிஷ் ஆட்சி, அதன் பிறகு ஏற்பட்ட இந்தியா ஜனநாயக ஆட்சிமுறை, கல்வி தொழில், பொருளாதார மாற்றத்தால், மாற்றுத்தொழில், அரசுத்துறை சம்பள வேலை என்று பலரும் சென்னையின் பல திசையிலும் புலம் பெயர்ந்து விட்டார்கள். 2016–17ம் ஆண்டில் கோமளீஸ்வரன் பேட்டையில் சுமார் பத்து தெருக்களில் – 34 குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்து வருகிறார்கள். இதிலும் குலத்தொழில் செய்பவர் அரிதே.

இவ்வாறே சென்னை அண்ணாசாலை தலைமை தபால் நிலையம், அருகில் அமைந்துள்ள தர்காவும் அதைச் சுற்றியுள்ள பிற மசூதிகளும் முஸ்லீம் மக்கள் பலரையும் அருகில் ஈர்த்த காரணத்தால் இந்த கோமளீஸ்வரன் பேட்டையில் முஸ்லீம்கள் அதிக அளவில் குடியேறினார்கள். (1920–1980களில்) பழைய இரும்புக்கடைகள் அதிகம் பெருகின. இவ்வாறாக இந்தப்பேட்டை, புதுப்பேட்டை, புதுப்பட்டினமாக வழக்கில் மாறிவிட்டது.

அதாவது கோமளீஸ்வரன் பேட்டையே புதுப்பேட்டையாக மாறிவிட்டது, மேலே சொன்ன மூன்று சரித்திர உண்மை நிகழ்வுகளைப் புரிந்துகொண்டால் தான் இந்த அருள்மிகு. மீனாட்சியம்மன் கோவிலின் வரலாறையும், இன்றைய நிலையையும் சரியாகப் புரிந்துகொள்ள இயலும்.

பழமை:

ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனத்தின் பீடாதிபதிகளில் ஒருவரான நெல்லை அனவரத ஞானஅன்னாபிஷேக ஆச்சாரி சாமிகள் (30வது பட்டம்) 16–17ம் நூற்றாண்டிலேயே இங்கு பிரதேசயாத்திரை முகாம் காலங்களில் தங்கி வழிபடுவதற்காக அருள்மிகு.மீனாட்சியம்மன் மூலவிக்ரஹமும் ஆதிகுருமூர்த்தியின் திருவுருவச் சிலையும் பாதுகைகளையும் ஒரு சேர ஸ்தாபித்தார்கள். மடாதிபதிகள், முகாம் இல்லாத காலங்களில் நித்ய பூஜை முறைகளையும் கோவில் சொத்துக்களையும் பராமரித்துப் பாதுகாக்கும் பொறுப்பை கோமளீஸ்வரன் பேட்டையில் வசித்து வந்த விஸ்வகர்ம இனத்தவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீமீனாட்சியம்மன் திருக்கல்யாணம் 05–06–1960ல் நெல்லை ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடம் 37வது பட்டம் ஜகத்குரு ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரஸ்வாமிகள் முன்னிலையில் வெகு விமர்சையாக நடந்தது. அச்சமயம் தமிழ் சினிமா நகைச்சுவை நடிகர் தங்கவேலு தலைமையில் தெய்வத்திரு.தி.ம.நடராஜனின் பிள்ளை திரு.தி.மா.ந.மோகன் (வி.கே.டைரி ஒருங்கிணைப்பாளர்) காரியதரசியின் செயல்பாட்டில் ஸ்வாமிகளுக்கு வரவேற்பு நிகழ்ச்சியும் நடந்தது.

1963ல் திரு.P.வேணுகோபால் ஆச்சாரி என்பவருக்கு கோவில் நிர்வாகப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. அவர் அப்பொறுப்பை திரு.கனகசபை ஆச்சாரிக்குக் கொடுத்துவிட்டார். இவரும் பிற்காலத்தில்; P.நடேசஆச்சாரி மற்றும் T.R.நடராஜ் ஆச்சாரி வசம் பொறுப்பை ஒப்படைத்தார். அதாவது கோமளீஸ்வரன் பேட்டை வாழ் விஸ்வகுலமக்களின் பெரும்பான்மை நம்பிக்கை பெற்ற பெரியோர்கள் குழு / தக்கார் என்ற முறையில் 1932–33 முதல் இக்கோவிலைப் பராமரித்தும் விழாக்களை நடத்தியும் வந்தனர் (1938 வரை ராஜீ ஆச்சாரி, அதன்பின் ஆதிமூலஆச்சாரி, 1963ல் கனகசபை ஆச்சாரி, 1969ல் நடேசஆச்சாரி, நடராஜ் ஆச்சாரி, என்று)

பிணக்கு:

ஸ்ரீமத் சிவானந்தமுனீஸ்வரஸ்வாமிகளின் 1960ம் வருட முகாம் சமயத்தில் உள்ளூர் விஸ்வகர்மாக்கள் இக்கோவில்

சொத்து கோமளீஸ்வரன் பேட்டை விஸ்வகுல மக்களுக்குத் தான் சொந்தம் நெல்லை மடத்துக்குச் சொத்துரிமை இல்லை என்று வாக்குவாதம் செய்தார்கள். ஸ்வாமிகள் பல உண்மையான ஆதாரங்களைக் காண்பித்து "சொத்துக்கு உரிமை நெல்லைமடம் தினசரி பராமரிப்பு கோமளீஸ்வரன் பேட்டை வாழ் விஸ்வகர்மாக்கள்" என்று நிலை நாட்டினார்கள்.

இருந்தாலும் அறியாமையின் காரணமாக P.நடேச ஆச்சாரியும் மற்றவரும் E.S.No.2/1983 என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குப்பதிவு செய்து மடத்துக்கும், மடாதிபதிக்கும் எதிராகத் தீர்ப்பையும் வாங்கினார்கள்.

எதிர்வழக்கு 1981ல் 38வது பட்டத்துக்கு வந்த ஶ்ரீலஶ்ரீ சிவஷண்முகஞானாச்சாரியார் காலத்தில் மறுவழக்கு தொடரப்பட்டு டெல்லி உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்காடி (திரு.அக்னி மற்றும் திரு.அழகர்) வென்று கோவிலையும், கோவில் சொத்தையும், ஆதீனத்தின் சொத்து என்று மீட்டார்கள் (8439/2001).

காழ்ப்புணர்ச்சியும், போராட்டமும்:

சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கைப்பதிவு செய்த பின்னரும் கோவில் சொத்துக்கு உரிமை கொண்டாடும் போராட்ட குணத்தோடு உள்ளூர் விஸ்வகுல நிர்வாகம் செயல்பட்டது. **20-01-1983ல் காஞ்சிபுரம்** ஶ்ரீஜெயயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருள்மிகு மீனாட்சியம்மாள் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்வித்து மகிழ்ந்தார்கள். (1981ல் ஶ்ரீசிவஷண்முக ஞானாச்சாரியார் நெல்லை மடத்துக்கு மடாதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்டபிறகு) 1983 முதல் 2006ல் தர்ம கர்த்தா நடேச ஆச்சாரி காலம் வரை இக்கோவிலின் வரவு, செலவு கணக்கைத் தவறாமல் இந்து சமய அறநிலையத் துறையிடம் (HRCE) சமர்பித்து மகிழ்ந்தார்கள். இந்த கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பில் அன்று தொட்டு இன்று வரை கோவில் பூசாரியாக இருக்கும் பாபு ஐயர் அதிகம் ஆர்வமும், அக்கறையும் காட்டிவந்தார்.

வெந்தும், வேகாததும்:

சுப்ரீம்கோர்ட் (உச்சநீதிமன்றம்) தீர்ப்பு வந்தது (22-09-2011)

– 8439/2001 தீர்ப்பில் சொத்துரிமை பரசமய கோளரிநாத ஆதீனத்திற்குத்தான். ஆனாலும் நெல்லையும் சென்னையும் தொலைவில் இருப்பதால் உள்ளூர் மக்களின் கமிட்டி நிர்வாகமே கோவில் நிர்வாகத்துக்கு மேன்மை தரும். எனவே மடாதிபதியின் தலைமையில் மடாதிபதியால் நியமிக்கப்பட்ட மூவரும் உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரும் என்ற புதிய கமிட்டியை உருவாக்கி நெல்லை மடாதிபதி இக்கோவிலைப் பேண வேண்டும் என்று கூறியது.

இந்த கமிட்டி இதுவரையில் நிறுவப்படவில்லை. செயலற்ற தன்மை நிர்வாகக்கோளாறு என்று மடாதிபதி காலம் போக்குகிறார். சொத்தே சொத்துக்குரிமையே போய்விட்டது. உள்ளூர் ட்ரஸ்டி தக்கார் என்ற பதவியும் போய்விட்டது. இனி நமக்கென்ன வேலை என்று உள்ளூர் மக்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். கோவில் மட்டும் தனியாகத்தவிக்கிறது.

கோவிலா? மடமா? என்ற குழப்பம்:

ஆரம்பம் முதல் 2001வரை கோமளீஸ்வரன்பேட்டை மக்கள் அருள்மிகு.மீனாட்சியம்மன் கோவில் ஆலயம் என்று சொல்லியும், பேசியும், எழுதியும், வந்து வணங்கியும், பழகிவிட்டார்கள். உயர்நீதி மன்றத்தீர்ப்பிலும், உச்ச நீதிமன்றத்திலும், மடம், கோவில் இரண்டுக்கும் தெளிவான விளக்கம் கூறப்பட்டுள்ளது. மடாதிபதிகள் வந்து தங்கும் இடம் மடம். அவர்களது அன்றாட வழிபாட்டுக்கு உபாசன மூர்த்திகள் உள்ளதால் மடம் சேர்ந்த கோவில் அதாவது **மடாலயம்** என்று இந்தக் குழப்பத்துக்கு முடிவும் வந்துவிட்டது, இதை முறையாகப் பொதுமக்களிடம் எடுத்துச் சொல்லாத காரணத்தால் மடத்துக்கு ஏன் செல்ல வேண்டும்? கோவில் என்றால் தானே போகலாம் என்று உள்ளூர் மக்கள் தயக்கம் காட்டுகிறார்கள்.

ஒப்புக்கு விழா:

சுப்ரீம் கோர்ட் ஆணைப்படி உள்ளூர் நிர்வாகக் கமிட்டியை அமைத்து உள்ளூர் விஸ்வ குலமக்களை அரவணைத்துச் செல்லும் மனம், சாதுர்யமில்லாத மடாதிபதி குடும்பத்தினர் 23–03–2016ல் பெயருக்கு ஒரு கும்பாபிஷேகத்தை அருள்மிகு மீனாட்சியம்மன்

ஆலயத்துக்குச் செய்தும் 26–07–2017ல் ஆடிப்பூர வளைகாப்பு விழா என்றும் பங்குனியில் திருக்கல்யாண உற்சவம் என்றும் நோட்டீஸ் அடித்து விளம்பரம் செய்து கொள்கிறார்கள். அதிலும் உள்ளூர் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. உச்சநீதிமன்றம் சொன்ன கமிட்டி அமைக்கப்படாமலே, தாங்களே தங்கள் குடும்பத்தாரை முன்னிலைப்படுத்தி, உள்ளூர் மக்களை தனிமைப்படுத்தும் முயற்சி இது. (படம்.44,45,115,116–பக்.90)

கோமாளீஸ்வரன்பேட்டை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் சொத்து:

20/16 லக்கத்தில் சந்திரபானு தெருவிலுள்ள இம்மடாலய வளாகம் சுமார் 4 1/2 செண்ட் பரப்பிலுள்ளது. கோவில் முன்கோபுரம், கிணறு, நாகர் பிரதிஷ்டை மேடை, நவக்கிரஹமேடை, ஒருசேமிப்பு அறை, வெற்றிடம் என்றமைந்துள்ளது. முன்வாசல் (தெற்குபார்த்தது) அருகில் ஒரு சிறுகடையுள்ளது.

இந்தச் சொத்துக்கு அடங்கல், சிட்டா, பட்டா என்ற எந்த ரிக்கார்டும் இதுவரை சேகரித்துப் பராமரிக்கப்படவில்லை. கடையின் மாதவாடகை வருமானம் (ஆயிரத்துக்கும் குறைவே) கோவிலுக்கு மின் கட்டணம், சுத்தம் செய்பவர் கூலி, பூசாரிக்குச் சம்பளம் என்று வரவும், செலவும் சுருக்கமாகிறது. ரசீது, வவுச்சர் என்று எவ்வித ஆவணம் ரிக்கார்டும் இல்லை. நெல்லையிலுள்ள ஆதீன நல அபிவிருத்தி கமிட்டி இக்கோவிலைக் கண்டு கொள்வதில்லை.

தொடரும் காதல்:

இந்தச்சூழலில் 64 தலைக்கட்டு விஸ்வகர்ம சங்கத்தினர் இந்த மீனாட்சியம்மன் கோவிலுக்குத் தொடர்ந்து **பல தலைமுறையாக** குருபூஜை விழா நடத்தி வருகிறார்கள். செங்கல்பட்டு முதல் சென்னை வரை பரந்து விரிந்து வாழும் இப்பங்காளிகளின் சமூக ஒற்றுமையும் இக்கோவில் மீதுள்ள பக்தியும் பாராட்டி வியத்தக்கவை. ஆனால் இவர்கள் ஒரு போதும் இக்கோவில் நிர்வாகக் கமிட்டியில் பதவி கேட்கவில்லை. கோவில் சொத்துக்குரிமையும் கொண்டாடவில்லை என்பதும் இவர்களது உண்மையான பக்திக்கு எடுத்துக்காட்டு. அடுத்து என்ன? இவர்களையும் கோவில் நிர்வாக கமிட்டியில் சேர்த்துக் கொள்வது நீண்டகாலத்துக்கு நன்மை பயக்கும்.

இவ்வாறே கோமளீஸ்வரன் பேட்டை வாழ் விஸ்வகர்ம குலத்தவர்கள் ஸ்ரீசின்னசடைஅம்மனின் ஆடி பிரம்மோற்சவ விழாவை 60 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கொண்டாடுவதும், வரவு செலவு கணக்கை அறிக்கையாக அச்சிட்டு வெளியிடுவதும் என்று ஆன்மீகத்துடன் வாழ்கிறார்கள். உள்ளூர் மக்களை அரவணைத்து சுப்ரீம்கோர்ட் ஆணைப்படி நிர்வாக கமிட்டி அமைத்து கோவிலை மேம்படுத்துவது நலம்.

SHEET 5





கிளை மடம், சென்னை, கோமளீஸ்வரன்பேட்டை,



திருநெல்வேலி ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீன
37-வது மடாதிபதி
ஸ்ரீ சிவாநந்த முனிவரர் திருக்கையால தர்சன காட்சி





2.3 ஓம் விராட் விஸ்வகர்ம பரப் பிரம்மணே நம–ஸ்ரீமத் பரசமயகோளரி நாதர் ஆதீனம்

ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடம் – அக்கசாலைப்பிள்ளையார் கோவில் தெரு, திருநெல்வேலி

சிவகங்கையில் ஓர் சித்தர்

மிகப் பழமையானதும் விஸ்வகுல ஜெகத்குரு பீடாதிபதிகள் அருளாட்சி செய்ததுமான ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனத்தை அலங்கரித்த 31வது பட்டம் குருமஹாசன்னிதானம் – ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகளாவார்கள். கி.பி. 1681 முதல் 1741ம் ஆண்டு வரை தொடர்ந்து 60 ஆண்டுகள் மடாதிபதியாக அருளாட்சி செய்த **தவசீலர் – துறவி.**

அன்னாரது பூர்வீகம், பிறப்பு பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இன்னும் தேடப்படுகின்றன. விஸ்வகுல ஆச்சார அனுஷ்டானங்களைத் தீவிரமாகக் கடைப்பிடித்தும், அதற்குகந்த மத போதனைகளை, விஸ்வகுல மக்களுக்கு போதித்தும் வந்த இந்த மகாதவசீலர். திக்விஜயம் என்ற பிரதேசப் பிரயாணங்கள் செய்து மக்களுக்கு ஆன்மீக தர்ம போதனைகளையும், சேவைகளையும் தொடர்ந்து வழங்கினார்கள். கிடைத்திருக்கும் தகவல்களின்படி ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகளது இரண்டு அரிய அற்புதச் சாதனைகள் புலனாகின்றன.

ஒன்று:

ஸ்வாமிகள் பிரதேசப்பயணமாக **சுரண்டை** மடம் சென்று வாசம் செய்து ஆன்மீகத் தொண்டு செய்து வரும் சமயத்தில் அருகிலுள்ள ஊத்துமலை ஜமீன்தார் அவர்கள் அடிக்கடி ஸ்வாமிகளைத் தரிசிப்பதும் பெருமைப்படுத்துவதும் வழக்கமாக

இருந்தது. ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகளின் தேஜஸ், ஒளி, தெய்வீக சித்து விளையாட்டு, பாமர மக்களுக்கு பக்தியைப் புகட்டும் அருள்சேவை, இவற்றை நேரில் கண்டும் கேட்டும் மனம் மகிழ்ந்த ஊத்துமலை ஜமீன்தார் ஸ்வாமிகளுக்கு ஐந்து கோட்டை (சுமார் 10 ஏக்கர்) விதைப்பாடு நஞ்சை நிலத்தை மானியமாக எழுதிக் கொடுத்துள்ளார்கள். (பின்னால் வந்துள்ள வழக்குகளிலும் சுரண்டையில் இந்த நம் ஆதீனத்திற்கு சொத்துச் சேர்ந்த விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.)

இந்த மானிய சொத்துக்கள், சுரண்டையில் விஸ்வகுல மடமும், ஆதீன கர்த்தாக்களின் அருள் சேவையும் தொடர்வதற்குப் பெரிதும் உதவியது. ஊத்துமலை ஜமீனுக்கும் சிவகங்கை ஜமீனுக்கும் அக்காலத்திலிருந்தே திருமண சம்பந்த உறவுகள் தொடர்ந்தன. இதன் நிமித்தம் ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகளும் திக் விஜயத்தில் சிவகங்கை வரை பயணம் செய்து அருளாட்சி செய்தார்கள். செட்டிநாட்டில் சைவமதம் தழைத்தோங்கிய அக்காலத்தில் சிவகங்கை ஜமீனுக்குட்பட்ட சிவகங்கை ஊரில் அருள்மிகு காளியம்மன் கோவில் வளாகத்தில் ஆதளை மரத்தடியில் முகாமிட்டிருந்தார்கள். (தற்கால மதுரை முக்கு காளியம்மன் கோவில் வளாகம்)

குதிரை மேல் சவாரி செய்து நாட்டு நடப்பை கண்காணிக்கும் ஜமீன்தார், தினமும் இந்த காளியம்மன் கோவிலைக் கடந்து செல்வது வழக்கம். ஜமீன்தார் வரும் சமயம் மக்கள் எழுந்து நின்றும், ஒளிந்து நின்றும், குனிந்து கொண்டும், மரியாதை செய்யும் அக்காலத்தில், ஜமீன்தார் ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகளை வணங்கிச் செல்வதை வழக்கமாக கொண்டார். ஜமீன்தார் வணங்க, ஸ்வாமிகளோ எதிர்வணக்கம்/ஆசீர்வாதம் என்று ஏதும் செய்யாமல் வாளாவிருந்தார். ஜமீன்தாருக்குண்டான ஆணவம் ராஜகம்பீரம் (EGO) காரணமாக ஜமீன்தாரின் முக பாவங்களிலிருந்து தன் மீது ஜமீன்தார் கோபம் கொண்டுள்ளார் என்பதை உணர்ந்து கொண்டார்கள் ஸ்வாமிகள்.

சிதறிய தேங்காய்:

ஒரு நாள் குதிரைமேல் வலம் வந்த ஜமீன்தாரை நேரில் அழைத்த ஸ்வாமிகள் ஒரு தேங்காயைக் கொண்டுவரச் செய்து

அத்தேங்காயைத் தன் முன் வைத்து வணங்கினார்கள். தொடவில்லை. அத்தேங்காய் சுக்குநூறாக உடைந்து சிதறியது.

தவவலிமை

சிதறிய தேங்காயையும் புன்முறுவல் பூக்கும் ஸ்வாமிகளையும் நேரில் கண்ட ஜமீன்தார் பயந்தார், வியந்தார். ஸ்வாமிகள் தம்மை உதாசீனம் செய்தாரோ என்று தவறாக எண்ணியதை உணர்ந்தார். மன்னிக்க வேண்டுமென்று ஸ்வாமிகளிடம் மண்டியிட்டார். தமக்கு மேலும் கட்டளையிடுமாறு பணிந்து வேண்டி நின்றார் ஜமீன்தார்.

"தமக்கு இவ்விடத்திலேயே சமாதிக்கு திருக்கோவில் அமைத்துக் கொடு" என்று ஸ்வாமிகள் ஜமீன்தாருக்கு உத்திரவிட்டார். தமது ஜமீனில் இப்படி ஒரு புண்ணிய மகான் தவசீலர் அருளாட்சி முகாமிட்டதை நன்றிப் பெருக்கோடு எண்ணி மகிழ்ந்து அந்த இடத்தையே தானமாகக் கொடுத்து திருக்கோவில் அமைத்து ஸ்வாமிகளுக்கு நித்திய பூஜைக்கு ஏற்பாடு செய்தார் ஜமீன்தார். உளம் மகிழ்ந்த ஸ்வாமிகள் சில காலம் அங்கேயே தங்கியிருந்து பின் அவ்விடத்திலேயே 1741ல் தை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் முக்தியடைந்தார்கள் என்பது வரலாறு.

பாரம்பரியப் பெருமை:

ஒவ்வொரு மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் பூஜை செய்வதும் ஒவ்வொரு தை மாத ரோகிணியில் குருபூஜை செய்யும் பழக்கமும் இப்பொழுது நீங்கள் ஒன்று கூடி வழிபடும் இந்த இடம் இவ்வளவு மாட்சிமை, புனிதம் பொருந்திய இடம் என்பதை மனதில் கொண்டு நிமிர்ந்து பெருமை கொள்ள வைப்பது இந்த குருபூஜையும் காளியம்மன் கோவில் வளாகமும் தான்.

சிவகங்கையில் குருபூஜை: 05-02-2017

சிவகங்கையில் விஸ்வகர்ம சமூக சங்கம் சார்பில் 05-02-2017ல் தை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் தை மாதம் 23ம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று குருபூஜை சிறப்பாக நடந்தேறியது.

சிவகங்கை விஸ்வகர்ம சமுதாய சங்கம், அவ்வூர் மதுரை முக்கு ரோட்டில் உள்ள ஸ்ரீகாளிகாம்பாள் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகள் (ஸ்ரீமத்

பரசமயகோளரி நாதர் ஆதீனம் – ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பீடம்: திருநெல்வேலி மடத்தின் 31வது பீடாதிபதியாக அருளாட்சி செய்தவர்), அந்திமகாலத்தில் அப்பெருந்தகை வழிபட்ட உபாசனாமூர்த்தி ஸ்ரீலிங்கம் இங்கு பிரதிஷ்டையாகியுள்ளது.

சன்னதியின் சிறப்பு:

சிவலிங்கமூர்த்தி நந்தி, பலிபீடம் என்று சிறப்பாக அமையப் பெற்ற தனிக்கோவில் இந்தப் பெரும் வளாகத்திற்குள் அமைந்துள்ளது. சிவகங்கை சமஸ்தானத்து ராஜா அல்லது ஜமீன் அவர்கள் முன் வந்து தவசீலரான ஸ்ரீமத் முத்துக் குமாரஸ்வாமிகளுக்காக அவர்களின் வேண்டுகோளின் படி கட்டப்பட்ட அம்சமான கோவில்.

வழிபாடு முறை:

ஒவ்வொரு மாதமும் ரோகிணி நட்சத்திரத்தன்று சிறப்பு அர்ச்சனை, அபிஷேகம் நடைபெற்று வருகிறது. அன்னை ஸ்ரீகாளிகாம்பாள் சன்னதிக்கும் ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகள் சன்னதிக்கும் சேர்ந்து ஒரு அர்ச்சகர் சேவை செய்து வருகிறார். கோவில் வளாகம் காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 9 மணி வரையிலும் பக்தர்களின் வழிபாட்டுக்காகத் திறந்து வைக்கப்படுகிறது.

குருபூஜை, பழைய பழக்கம்:

கி.பி. 2016ம் ஆண்டு வரையிலும், சிவகங்கையில், கோவில் நிர்வாகத்தையும் சமூகச்சங்கத்தையும் நிர்வகித்து வரும் சங்க நிர்வாகிகளே, முன்னின்று ஊர் பொது மக்களுக்கும், விஸ்வகுல மக்களுக்கும் நோட்டீஸ் அச்சடித்து வினியோகித்து வழிபாடு செய்து வந்தார்கள். சிவகங்கையில் பலருக்கும் பிற ஊர் மக்களுக்கும் இதுவும் ஒரு ரோகிணி நட்சத்திர பூஜை என்று மட்டுமே தெரிய வந்தது. ஆனால் தை மாதம் ரோகிணி நட்சத்திரத்தன்று கற்பூர ஆராத்தியுடன், சாதம், சாம்பார், காய்கறி கலந்த அன்னம் பிரசாதமாக அன்னதானமாக வழங்கப்பட்டு வந்தது. மாலை 6 மணிக்கு ஆரம்பித்து, கற்பூர ஆரத்தி 7 மணிக்குள் முடிந்து அன்னதானம் 9–10 மணி வரை தொடர்ந்து நடைபெறுவது வழக்கமாம். விஸ்வகுல மக்களோடு பிற இனத்தவர் பலரும் அதிக அளவில் இந்த அன்னதானத்தில் கலந்துகொள்வது வாடிக்கை.

கி.பி. 2017ம் ஆண்டு முதல் - புதிய முன்னேற்றமான வழிபாட்டு முறை அமலுக்கு வந்தது

ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகள் நெல்லை மடத்தின் 31வது பட்டமாக ஜகத் குருவாக அருளாட்சி செய்தவர்கள். தமிழகம் முழுவதும், இந்தியா முழுவதும் புகழோச்சிய மகானது குருபூஜைவிழா, சிவகங்கை ஊர் **மக்களுக்கு மட்டும் என்று இல்லாமல், தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களிலிருந்தும் விஸ்வகுல பக்தர்கள்** வந்து கொண்டாடி குருவணக்கம் செய்து குருவருள் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தான். சிவகங்கை விழாவைப் பெரிதுபடுத்தி, சிறப்பாக செய்ய திட்டமிடப்பட்டது. இதற்கு முன்னோடியாக, சிவகங்கைச் சங்க நிர்வாகிகளை நெல்லைக்கு அழைத்து 24–12–2016ல் நெல்லையில் நடந்த குருபூஜையில் கலந்துகொள்ளச் செய்து, கௌரவம் செய்து, விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. நோட்டீஸ்க்குப் பதில் **விழா அழைப்பிதழ்** என்று அச்சிடப்பட்டது. இந்த அழைப்பிதழில் "**நெல்லை ஆதீனத்தின் 31வது மடாதிபதிக்கு சிவகங்கையில் குருபூஜை**" என்று தொடர்பைப் பலப்படுத்த வகை செய்யப்பட்டது.

சிவகங்கையில் இதுவரை செய்யாத, (படம் 18,85,122, 122A–பக்.97) யாகசாலைப் பூஜைமுறை முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. பிற மாவட்டத்திலிருந்து விஸ்வகுல மக்கள் அதிக அளவில் ஈடுபாட்டுடன் கலந்து, வழிபட்டு, குருவருள் பெற வகை செய்யப்பட்டது. வெற்றிகரமான மனமகிழ்ச்சியைத் தந்தது. உள்ளூர் மக்களுக்கு பிரசாதப்பை வழங்கப்பட்டது. நெல்லை ஆதீனத்தின் சார்பில் புனரமைப்பு மேம்பாட்டுச் சங்கத்தினர் (படம் 18) தட்டு வரிசை, வஸ்திரம் என்று பூஜைப் பொருட்களைச் சமர்பித்துப் பெருமிதம் கொண்டார்கள். கூடியிருந்த பக்தர்கள், ஆணும், பெண்ணும் என்று ஒன்று கூடி **குருவந்தனப்பாடல்கள்,** சிவபுராணம், திருவாசகம் என்று பஜனைபாடி மகிழ்ந்தார்கள். சுமார் 400–500 அன்பர்கள் அன்னதானத்தில் கலந்து உண்டு மகிழ்ந்தார்கள்.

சமூகச் சங்க, கோவில் நிர்வாகிகளும், ஊர் மக்களும், வெளிமாவட்டத்தவரும், இந்தச் சிறிய விரிவு நிகழ்ச்சியில் பெரும்


ஆனந்தமடைந்தார்கள். **விஸ்வபிராமண வேதப் பாடசாலை மாணாக்கரையும், ஆசிரியரையும் மதித்துப் போற்றி பயன் பெற பழக வேண்டும். இந்த மனப்பழக்கம் வந்துவிட்டால், பணக்கஷ்டம் தெரியாது/இராது.**

"சிவகங்கையில் ஓர் சித்தர்" என்ற குருபூஜை வெளியூடு நல்ல வரவேற்பையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. சிவகங்கைக் கோவில் வரலாறும், குருவந்தனம், காளிகாம்பாள் அர்ச்சனைப் பாடல்கள் என்று இனித் தொடர்ந்து வெளியிடுவது நன்மை தரும். மகளிரையும், மாணவர்களையும் கோவில் வளாகத்திற்கு அழைத்து அதிக ஈடுபாடு காட்டிட புதிய யுக்தியைக் கடைப்பிடித்துச் செயல்படுத்த வேண்டும். நிர்வாகிகள் குழுவில் மனமாற்றம் தேவை. நெல்லை, சிவகங்கை, கும்பகோணம், திண்டிவனம், அம்பாசமுத்திரம், கோமளீஸ்வரன்பேட்டை, சதுரகிரி என்று வரிசையாகக் குருபூஜை விழாவை நடத்தி நெல்லை ஆதீன அபிமானிகளிடையே நல்ல, நெருக்கமான, நேசமான, உறவைப் பலப்படுத்தினால், நெல்லையிலுள்ள ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனம் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடம் – மடம் விரைவில் புத்துணர்ச்சி பெறும். சிவகங்கை மடமும் பலருக்கும் தெரியவரும். **சொத்துக்கு வெளியூர் மக்கள் உரிமை கொண்டாடமாட்டார்கள்.** நிர்வாகத்திலும் பதவி கேட்க மாட்டார்கள். ஆனால் இன உணர்வுடன் குலகுருவை வணங்கி மகிழ பெரும் சந்தர்ப்பம் ஏற்படும்.

SHEET 6



சிவகங்கை குரு பூஜை விழா
குருபூஜை நாயகர் முக்தி விபரம் 05.02.,2017



ப 85





2.4 குடந்தை ஸ்ரீமத் இராசரத்தினம் ஸ்வாமிகள்

ஸ்ரீமத் பரசமய கோளரிநாத ஆதீனத்தின் 36வது மடாதிபதியாக, திருநெல்வேலியில் அருளாட்சி செய்த தவசீலர். தமிழகத்தில் விஸ்வகுலம் தழைக்கும் வரை, ஒவ்வொரு விஸ்வகுல விஸ்வகர்மாவும் நினைத்து நன்றி கூற வேண்டிய மடாதிபதி, பொறுமையே பெருமை என்று வாழ்ந்து காட்டிய புரட்சிமிக்க ஆன்மீகத்தலைவர்.

கி.பி.1870–71ல் வற்றாத ஜீவநதி வளத்தால் சங்கீதம், ஆன்மீகம், பக்திஇயக்கம் என்று வளமாய் வளர்ந்த காலத்தில் பால பருவத்திலேயே வேத ஞானமும், பன் மொழி புலமையும், ஒரு சேரப் பெற்றார். கும்பகோணம், மொட்டைக் கோபுர வாசல் தெருவுக்கு எதிரே வண்டிக்கானா என்ற புதுப்பாளையத்தில் பிறந்து வளர்ந்த வாலிபர் இறையுணர்வு / சந்நியாசம் என்று பிரம்மச்சாரியாக இருந்த காலம்.

அன்னாரை நெல்லை மடத்துக்கு மடாதிபதியாக அழைத்து வர, மடத்திலிருந்து, பல்லக்கு மரியாதையுடன் பரிவாரம் வந்து அழைத்துச் சென்றார்கள் அப்படி என்ன திடீர் அவசர அழைப்பு?

நெல்லை மடத்தில் 35வது மடாதிபதியாய் இருந்த அருளாளர் ஸ்ரீமத்முத்துக்குமார ஸ்வாமிகள். ஒரு கிரகஹஸ்தர். தம் மனைவி ஆவடையாச்சியுடன் மடத்துக்குள் வாசம் செய்து வந்தார்கள். தமது பிரதேச யாத்திரையின் போது அம்பாசமுத்திரத்தில் 02–12–1904ல் இயற்கை எய்தினார். தாமிரபரணியாற்றுத் தென்கரையில் கல்லிடைக் குறிச்சியில் அன்னாரது அனுஷ்டானம் அமைந்துள்ளது. கற்பமாயிருந்த திருமதி ஆவடையம்மாளுக்கு ஓர் ஆண் மகவு பிறந்து இறந்துவிட்டது. கணவனும் இல்லை, மகவும்

இல்லை என்ற விதவை மடத்தில் பிடி வேண்டுமென்று ஒரு குழந்தையைத் தத்தெடுத்து அதுவே மடாதிபதி என்று போர்க்கொடி தூக்கத் திட்டம் தீட்டினார்.

இதை ஏற்றுக் கொள்ளாத உள்ளூர் விஸ்வகுல மடத்து விஸ்வாசிகள், கும்பகோணம் ஸ்ரீராசரத்தினம் ஸ்வாமிகளை அழைத்து வந்து மடாதிபதியாகப் பட்டம் சூட்டினார்கள்.

பிரச்சனை ஆரம்பம்:

10–10–1905ல் சிசுவைப் பறிகொடுத்த திருமதி. ஆவுடையாச்சி, ஸ்ரீமத் ராசரத்தினம் ஸ்வாமிகளுக்கு எதிராக வேறொருவரை தத்தெடுத்து மடத்துக்குள் வாசம் செய்ய வைத்து அவரே மடாதிபதி என்று போர்க்கொடி தூக்கினார். அதாவது ஒரே மடத்துக்குள் ஒரே சமயத்தில் பெரும்பான்மை விஸ்வகுல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மடாதிபதியும் விதவையால் தத்தெடுக்கப்பட்டு அதிகாரம் காட்டுபவரும் என இரு அதிகார மையங்கள் தோன்றின.

நெல்லை வழக்காடு மன்றத்தில் ஸ்ரீமத் ராசரத்தினம் ஸ்வாமிகள் வழக்கொன்றைத் துவக்கினார். பெரும்பான்மை விஸ்வகுல மக்களால் தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்ட தாமே மடாதிபதி என்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் தத்து செல்லாது என்றும் நீதி கோரி மனுப் போட்டார்.

1910–11ல் தொடர்ந்த வழக்கு உள்ளூர் விஸ்வ குலமக்கள் சிலரின் எதிர்மறைப் போக்கினால் சிக்கல்களுடன் 1922வரை தொடர்ந்தது, 1924–25/27ல் முடிவுக்கு வந்தது.

வரலாற்று முக்கியத்துவம் கொண்ட தீர்ப்பு:

நெல்லை பரசமயகோளரிநாத ஆதீனத்திற்கு மடாதிபதி நியமனம் சம்பந்தமாக ஒரு **நிரந்தர வழிகாட்டுதலை உருவாக்கிட** கமிஷன் ஒன்றை உருவாக்கிய நீதிபதி, அந்த கமிஷன் தந்த ஸ்கீம் சட்டமுறைப்படி, ஜனநாயக முறைப்படி அதிகமான விஸ்வகுலமக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவரே மடாதிபதியாக நியமிக்கப்படவேண்டும் என்ற கருத்தை நீதிமன்ற உத்தரவாகப் பிரகடனம் செய்தார். 1925ல் ஸ்கீம் 1927ல் நீதி மன்ற உத்தரவானது.

தமிழகத்தில் ஏன் இந்தியாவில் விஸ்வகுல மடங்களுக்கு மடாதிபதி என்பவர் பெரும்பான்மை விஸ்வகுல மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதே இன்றும் தொடரும் சட்டம்/நியதி.

இந்த தீர்ப்புக்காகப் போராடி வெற்றி கண்ட ஸ்ரீமத் குடந்தை இராசரத்தினம் ஸ்வாமிகள் **1904ல் மடத்துக்கு அழைத்துவரப்பட்டு பட்டம் சூட்டப்பட்டாலும்** உள்ளூர் மக்களின் காழ்ப்புணர்ச்சி, பகை, பொறாமை, அறியாமை என்ற தீயசக்தியைப் போராடி வென்று மீண்டும் **1927ல் தான் மடாதிபதி என்ற அமைதியான தர்ம** செயலுக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடிந்தது.

விவாகம்:

மடத்தில் வாசம் செய்து கொண்டே திருமதி. சுந்தராம்பாள் என்பவரை மணந்து கொண்டார். குழந்தைப் பேறு இல்லை. 1904 முதல் 1955 வரை நெல்லை மடத்தின் 36வது மடாதிபதியாக ஆன்மீக அருளாட்சி செய்தார்கள். பிதேச யாத்திரை தொடர்ந்தது வயோதிகம் நினைவுறுத்தியது.

அந்திம காலம்:

போராட்ட குணமுள்ள நெல்லை மக்களிடையே மரணம் அடையவிரும்பவில்லை. தாம் பிறந்து வளர்ந்த கும்பகோணத்திற்குத் திரும்பி தம் சுற்றத்தார் சமூக மக்களை ஆசீர்வதித்து இயற்கையடைய எண்ணினார். மடத்துக்குத் தொடர்ந்து சேவை செய்ய மனைவிக்கு ஆணையிட்டுத் தான் மட்டும் தனியே ஆரவாரமில்லாமல் கும்பகோணம் சென்றுவிட்டார். பிறந்த வீட்டில் (22/39 புதுப்பாளையம் தெரு) வாசம். தினமும் கும்பேஸ்வரர் கோவில் தரிசனம் பிறகு பேட்டைஆற்றங்கரைத் தெரு ஆதிவினாயகர் கோவிலில் ஓய்வு, தரிசனம், மாலையில் வீடு திரும்பி தியானம், பக்தர்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்குதல் என்று நாளைக் கடத்தினார். ஒரு ஜெகத்குருவாக ஆன்மீகக் குலகுருவாக, மடாதிபதியாக கும்பகோணம் மக்கள் ஸ்வாமிகளை பாராட்டி ஆதரிக்கத் தெரியாமல் விட்டுவிட்டார்கள்.

முக்தி:

ஆனிமாதம் வளர்பிறை பஞ்சமியில் வீட்டிலேயே இயற்கை எய்தினார்கள். பட்டினப் பிரவேசம் செய்வித்து மரியாதை

ஊர்வலம் வந்து பேட்டை அரசலாற்றங்கரை ஆதி மூல விநாயகர் கோவில் வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.


காவிரியில் பிறந்து வளர்ந்து தாமிரபரணியில் பல சிரமங்களுக்கிடையில் **மடாதிபதி நிர்ணய சட்ட விதி ஏற்படுத்தி,** மீண்டும் மனம் நொந்து, தாய் வீடு வந்து, இயற்கை எய்திய ஸ்ரீமத் குடந்தை ராசரத்தினம் ஸ்வாமிகள் குடந்தையில் பிறந்த குல விளக்கு. (படம் 19+86)

❁

குடந்தையில் பிறந்த குல விளக்கு

ஸ்ரீமத் இராசரத்தினம் ஸ்வாமிகள் 36வது பீடாதிபதி

தொடர்ந்து ஒளிர்விடும் மாணிக்கமாக மடத்தைக் காப்பாற்றினார்கள்



ஸ்ரீமத் பரசமய கோளரி நாதர் ஆதீனம் – ஸ்ரீ ராஜராஜேஸ்வரிபீடம்

திருநெல்வேலி

கருத்தாக்கம் : **மா.பழனிச்சாமி,** அருள்நிதி – ஓசூர். **செல் : 9486897191**

SHEET 7


ஆதி மூல விநாயகர்
ஆற்றங்கரை தெரு,கும்பகோணம்
ஸ்டிக்) சிவா மெட்டல்ஸ் 30/14, வியாபாரி
ஆதிமூல விநாயக
குடந்தை ஜகத்குரு ஸ்ரீலஸ்ரீ ராசரத்தினம் சுவாமிகள் - 36வது மடாதிபதி
குருபூஜை - 28.06.2017 - ஆனி வளர்பிறை பஞ்சமி, கும்பகோணம்
சுவாமிகள் முக்தி அடைந்த இடம்
ப 86


உ
குடந்தையில் பிறந்து திருநெல்வேலியில்
ஸ்ரீ மத் பரசமய கோளரி நாதர் ஆதினம்
ராஜராஜேஸ்வரிபீடம் 36 வது மடாதிபதியாக
கிபி 1904 முதல் 1954 வரை அருளாட்சி செய்த
தவசீலர் ஜெகத்குரு
ஸ்ரீலஸ்ரீ ராசரத்தினம் ஸ்வாமிகள்
04.07.1954 ம் நாள்
முக்தியடைந்த அனுஷ்டானம்
ப 19

குடந்தை ஸ்ரீ இராசரத்தினம் ஸ்வாமிகளின் உறவினர்கள் பட்டியல்:

ஸ்ரீ இராசரத்தினம் ஸ்வாமிகளின் சகோதரர் ←→ ஸ்ரீஇராமசந்திரன் v/s அமிர்தம்

- ஸ்ரீ நாகராஜன் v/s பார்வதி
  - ஸ்ரீ மதிவாணன் v/s வனஜா கும்பகோணம்
  - ஸ்ரீ மயில்வாகனன் v/s சரஸ்வதி கும்பகோணம்
    - தாய்மாமா சதாசிவம் v/s பத்மா திருச்சி
    - தாய்மாமா பெரியசாமி பிரேமா கும்பகோணம்
- ருக்மணி v/s ஸ்ரீ குப்புசாமி
  - ராஜம்மா v/s கோவிந்தன்
  - நாகரத்தினம் ஆறுமுகம்
  - தாய்மாமா திருச்சி
- ஸ்ரீ குமாரசாமி v/s

கோவிந்தராஜன் கிருஷ்ணன் (புதுக்கோட்டை) சகோதரி ராணி v/s ரங்கநாதன் (சென்னை) சகோதரர்கள் 2 ஜனார்தனன் குமார். ராஜம்மா கோவிந்தன் (காரைக்குடி) நடராஜன் ஆறுமுகம்.

கோவிந்தராஜன் v/s ராஜம்மாள் (ராயவரம்)

2.5 கல்லிடைக்குறிச்சி

ஜெகத்குரு ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார ஸ்வாமிகள் 35வது பட்டம் சம்மந்தமாக 29/30 ஜுலை மாதம் 2017ல் நேரில் சேகரித்த தகவல்கள்:

அம்மாசமுத்திரத்தையும், கல்லிடைக்குறிச்சியையும் பிரித்து அல்லது இணைத்து இடையில் ஓடும் ஜீவநதி தாமிரபரணி, நெடுஞ்சாலைப் பாலத்தின் தென்புறத்தில், பாலத்திற்கு மேற்கே அருள்மிகு பழனி ஆண்டவர் திருக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் வளாகத்தில் வல்லப வினாயகரும், காவல் தெய்வமும், நாகர் சந்நதியும் உள்ளன. பழனி ஆண்டவர் மூல விக்ரகத்திற்கு இடதுபக்கம் வடகிழக்கு திசையில் **பாதாளலிங்கம்** (ப.97–பக்.114) என்ற லிங்கம் உள்ளது. இந்தக் கருவறையில் லிங்கத்திற்குக் கீழே சித்தர் ஸ்வாமிகள் சமாதி உள்ளது. அருளாற்றல்மிக்க இந்த சித்தரை அறிவானந்த சித்தர் என்று செல்லமாகவும், பயபக்தியுடனும் பெயரிட்டவர் திரு.முருகேசன் ஆச்சாரி என்ற பூசாரி.

திரு.முருகேசன் ஆச்சாரி (ப.21–பக்.114) சிறு பிள்ளையாக இருக்கும் காலத்தில் இவரது தந்தை ஹரிஹரன் ஆச்சாரியே இந்த பழனியாண்டவர் ஆலயத்தில் பூசைசெய்து கொண்டிருந்தார். அக்காலத்தில் இந்தப் பாதாள லிங்கத்தில் சமாதி கொண்டிருப்பவர் ஒரு விஸ்வகுல சித்தர் என்றும் அற்புதம் பலவற்றைச் செய்து காண்பிக்கும் வல்லமையுடையவர் என்றும் கூறிச் சென்றுள்ளார். ஆனால் பெயர் ஏதும் தெரியாமலே இருவரும் தொடர்ந்து பூசை செய்து வந்துள்ளனர். கல்லிடை, அகஸ்திய கோவில் தெரு 12/5ல் இன்றும் வாழ்ந்து வரும் திரு.நடராஜன் ஆச்சாரி (94) அவர் தம், சொக்கார் மகாலிங்கஆச்சாரி, சிவனாச்சாரி, பல்லாண்டு பூசை செய்து வந்தப் பின் வயோதிகம் காரணமாக இந்த முருகேசன்

பூசாரியிடம் கோவில் சாவியை கொடுத்து பூசை முறை செய்து வருமாறு ஆணையிட்டதை இன்றும் நினைவு கூறி மகிழ்கிறார்.

அருள்மிகு பழனி ஆண்டவர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் 11–06–2014ம் நாளில் வைகாசி 28ம்தேதி விசாக நட்சத்திரத்தில் நடந்தேறிய சமயத்தில், ஹோம குண்டம் அக்னி வளர்ப்பதற்கு வந்த பிராமணப் புரோகிதர்கள் சித்தரின் பெயரை மீண்டும் மீண்டும் கேட்கவே அறிவானந்தர் சித்தர் என்று செல்லப் பெயரிட்டார் முருகேசன் ஆச்சாரி (பூசாரி) அன்று முதல் இந்தச் சித்தருக்கு "அறிவானந்த சித்தர்" என்ற பெயர் நிலைக்கிறது. 30–07–2017ல் நேர்காணலின்போது தமது 22ம் வயது முதலே இக்கோவிலில் பூசாரியாக உழைத்து சேவை செய்து வருவதைப் பெருமையுடன் கூறிய முருகேசன், அங்கு தாம் நாட்டிய அரசமரத்துக்கு வயது 66 என்றும் அம்மரம் இன்றும் அந்த நாகர் பீடத்தைப் பாதுகாத்து அலங்கரிப்பதாகவும் பெருமிதம் கொண்டார்.

புளியமரம்:

காகம் இட்ட எச்சலில் விழுந்து முளைத்த இரண்டு பெரிய புளியமரம். ஒன்று பழனியாண்டவர் சந்நதியில் இடக்கைப் புரத்திலுள்ளது. மற்றொன்று பாதாளலிங்கத்தின் பக்கம் உள்ளது. மிகப்பெரிய இந்த இரண்டு புளியமரங்களின் வேர்கள் பழனி ஆண்டவர் சிலைக்கும் பாதாளலிங்கத்திற்கும் வெடிப்புகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு மரங்களையும் வேருடன் அப்புறப்படுத்துவது அவசியமாகிறது. காவல் தெய்வமாக உள்ள கருங்கல் சிலை உருவம் வெட்ட வெளியில் உள்ளது. வல்லப வினாயகர் தம் மடியில் அம்பாளை வைத்துக் கொண்டிருக்கும் விக்ரஹமும் வெட்டவெளியில் உள்ளது. மொத்தத்தில் இது ஒரு கிராம தேவதை கோவில் போன்று, அதிகம் கவனிக்கப்படாமல் உள்ளது. கல்லிடைக்குறிச்சியில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் ஆன்மீகப்பக்தர் பரம்பரை பூசாரியாக தன்னால் இயன்ற சேவையை செய்து வாழ்ந்து மகிழ்கிறார் திரு.முருகேசன் ஆச்சாரி.

ஆர்ச்: (படம் 20)

அருள்வாக்குப் பலனில் பக்தர் ஒருவர் முகப்பில் ஒரு ஆர்ச் கட்டி உபயம் செய்துள்ளது பெருமை. சித்தர் முன் அமர்ந்து

தியானித்து மனமுருகி வேண்டுபவர் நல்ல பலனை அனுபவிக்கத் துவங்கியது இத்தலத்தின் பெருமைக்குச் சான்று. பல நிகழ்வுகள் குறிப்பாக எழுதி வைக்கப்பட்டுள்ளன. இது திரு.முருகேசன் பூசாரி செய்துள்ள நல்ல காரியம்.

பூசை முறையும், பக்தர்கள் வருகையும்:

பவுர்ணமி தினத்தில் காலை முதல் உச்சிக்காலம் வரையிலும் பக்தர்கள் வர ஆரம்பித்ததால் அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, பிரசாதம் வழங்குதல் என்று ஆரம்பித்து படிப்படியாக சுமார் 70 பக்தர்களுக்கு நண்பகலில் அன்னதானம் வழங்கும் அளவிற்கு பக்தர்களின் வரவு கூடியுள்ளது. கோவிலில் உண்டியல் இல்லை. தட்டு வருமானம் மட்டுமே முருகேசன் பூசாரிக்கு வாழ்வாதாரமும் உணவும், கோவிலில் விளக்கேற்றவும் உதவுகின்றன.

அணையாவிளக்கு:

பாதாளலிங்கம் ஆற்றங்கரை மேட்டில் இருக்கிறது. தாமிரபரணியில் நீரோட்டம் தொடர்ந்தாலும் ஆற்றில் நீரின் ஆழம் உயரம் மிகவும் குறைவானதே. இருந்தாலும் அரிதாக அவ்வப்போது காட்டாற்று வெள்ளம் வந்து தாமிரபரணி ஆற்றின் கொள்ளளவு மிகுந்து கரை உடைந்து போன சம்பவம் நடந்துள்ளன. 1986/87லும், 1992/93லும் அளவு கடந்த வெள்ளம் கரை புரண்டோடிய சமயத்தில் பாதாள லிங்கக் கட்டுமானம் கரைய ஆரம்பித்தது. வெள்ளம் வடிந்த பிறகு பாதாள விங்கத்திற்குக் கீழே பள்ளம், குழி, குகை தெரிந்தது. பழனியாண்டவர் விக்ரஹத்திற்கும் இதற்கும் இடையிலுள்ள சுரங்கப்பாதையாக இருக்கலாம் என்று யூகித்து விட்டுவிட்டார்கள்.

தொடர்ந்து தரிசனத்திற்கு வந்த பக்தர்களும், சாதுக்களும், சந்நியாசிகளும், தவமியற்றி வழிபாடு செய்திடும் சமயம் அப்பாதாளத்தில் சித்தர் சமாதி கொண்டிருப்பதைக் கண்டறிந்து உறுதியாகக் கூறத் தொடங்கினார்கள்.

கேபிள் சந்துரு:

யோகாசனப் பயிற்சி தவம் செய்யும் பழக்கமுள்ள அம்பையைச் சேர்ந்த வெங்கடாசலம் என்ற சந்துரு பாதாள லிங்கத்தில் தொடர்ந்து தியானித்து தவம் செய்து கொண்டிருக்கும்

வேளையில் தியானச் சக்கரத்தில் சக்தி மண்டலத்தில் நல்ல அதிர்வலைகளை அனுபவித்து இன்புற்றிருக்கிறார். அவரது பயிற்சி ஆசிரியரும் இவ்விடத்திலுள்ள சித்தரின் சமாதியை உறுதி செய்துள்ளார். இதன் பிறகு கடந்த மூன்றாண்டுகளாக அதாவது 2014க்குப் பிறகு தினமும் இரண்டு மூன்று முறை அம்பையிலிருந்து நேரில் வந்து (சுமார் 1 கி.மீட்டர் தூரம்) பாதாளலிங்கத்திலுள்ள மாடக்குழியில் அகண்ட விளக்கில் எள் எண்ணெயும், திரியும் இட்டு விளக்கை அணையாமல் பாதுகாத்து சித்தரை நம்பிக்கையுடன் நன்றியுடன் வணங்கி வருகிறார். இவரின் இச்சேவை தொடர்கிறது. உடல்நலம், பொருள், வளம் என்று தம் குடும்பத்தில் நன்மை பெருகுவதையும் அனுபவிக்கிறார்.

வெளிநாட்டவர் வருகை:

பூசாரி முருகேசனுக்கு மேலும் நம்பிக்கை ஊட்டும் விதமாக நடந்த நிகழ்வும் இரண்டாண்டுக்கு முன்னர் இங்கு நடந்துள்ளது. ஐரோப்பியர் இருவர் இங்கு வந்து பயபக்தியுடன் வணங்கிச் சென்றுள்ளார்கள். அவர்களிடம் விண்மின் ஜீவகாந்த சக்தியை BIO MAGNETIC FIELD STRENGTH கண்டறிந்து அளக்கும் கருவி ஒன்றும் இருந்ததாம். அதை பாதாள லிங்கப்பலகையில் வைத்து தியானம் செய்யும்போது உள்ளிருந்து அதிர்வலைகளையும், ஒலி அலைகளையும் உணர்ந்த அந்த அயல்நாட்டுப்பக்தர்கள் "வல்லப நாட்டில் ஓரிடத்திலும் இந்தப் பாதாளலிங்கத்திலும் மட்டுமே இவ்வளவு அதிகமான ஆற்றல் மிகுந்த ஆன்மீக அலைகளை உணர்ந்தோம். இப்புனிதமான இடத்தைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்" என்று கூறிச் சென்றுள்ளார்கள். இவர்களின் பெயர், விலாசம், தேதி, குறித்து வைக்கப்படவில்லை.

சித்தரின் பாதக்குறடும், பழனியாண்டவர் விக்ரஹமும்:

மூலவர் நின்ற கோலத்திலுள்ள பழனியாண்டவர் சிலைக்கு ஆரம்ப காலத்தில் பாதத்தில் பாதக்குறடு இல்லை என்று தெளிவாகக் கூறும் முருகேசன் பூசாரி, மெய்சிலிர்க்க கூறும் ஒரு சம்பவம் வியக்கத்தக்கது. ஒரு சமயம் கோவிலுக்கு வந்த சித்தர், வழிபாட்டிற்குப் பிறகு தம் பாதக்குறடுகளை கோவிலின் முன்னால் விட்டுச் சென்றுவிட்டார். அதைப்பார்த்த முருகேசன் என்ன செய்வது

என்று திகைத்தார். மறுநாள் முதல் மூலவர் பழனியாண்டவர் சிலையில் பாதக்குறடு உருவம் தோன்ற ஆரம்பித்துள்ளது. இன்றும் இதைக் காணலாம். சித்தரின் பாதக்குறடு பழனியாண்டவர் காலுக்கு அணி செய்வது விந்தை.

பூசாரியின் பக்தி: (படம் 21-பக்.114)

அப்பாவின் ஆணைப்படி இளம் வயது முதலே இக்கோவிலே கதி என்று வாழும் முருகேசன் இல்லற வாழ்வில் ஈடுபட்டுள்ளார். சித்தர் போகரின் பெரும் பக்தர். பழனியாண்டவரின் அடிமை. அருள்வாக்குப் பலிக்குமாறு தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டுள்ளார். பகல் முழுவதும் ஆற்றங்கரைக் கோவில் இரவில் மட்டும் கல்லிடைக்குறிச்சி வீடு என்று வாழ்கிறார். எளிமை தான் இவரது ஆன்மீகத்துக்கு உறுதுணை.

கோவில் நிலமும், சொத்துரிமையும்:

அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோவிலும், பாதாளலிங்கமும் அமைந்துள்ள இடம் ஆற்றுப் புறம்போக்கு. கோவிலுக்கு மேற்குப்புறம் (பின்புறம்) சுடுகாடாக இருந்துள்ளது. அன்றைய மாவட்ட ஆட்சியர் திருமதி.சந்திரகாந்தா அம்மையாரின் நேரடிப்பார்வையில் /ஆணையில், சுடு காடு சுத்தம் செய்யப்பட்டது. அப்புறப்படுத்தப்பட்டது, இப்போது இடு, சுடுகாடு இல்லை. அந்தக் கலெக்டரின் ஆணைப்படி கோவிலுக்கு வடக்குப்புறம் (ஆற்றங்கரைப்பள்ளம்) வடமேற்கு மூலையில் இரண்டு தென்னை மரம் நட்டும் வடகிழக்கில் (பாலம் அருகில்) ஒரு தென்னை மரம் நட்டும் கோவில் நிலத்துக்கு நான்கெல்லை வகுத்துப் பாதுகாப்பு ஏற்படுத்தினார் முருகேசன்.

கோவிலுக்கும், தனக்கும் வருமானம் சேர்ப்பதற்காக நெல், வாழை, பூந்தோட்டம் என்றும் சாகுபடி செய்து உழைத்தார். வயோதிகம் முதிர்ந்தது. மண்ணில் உழைக்க முடியவில்லை. வெள்ளம் ஏற்படுத்திய சேதாரம் அதிகம். தனிமனிதனாக ஊக்கமாக உழைக்கவும் முதலீடு செய்யவும் முடியாத நிலையில், கோவிலுக்குப் பூசை, நிலத்திற்குப் பாதுகாப்பு என்று காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார் முருகேசன். ஆயினும் தொடர்ந்து 60, 70 வருடமாக நிலத்திற்கு தீர்வை ரசீது செலுத்திக் கொண்டிருக்கிறார். கோவிலுக்கு மின் இணைப்பும் வாங்கவில்லை.

இவர் தனிக்காட்டு இராசாவாக சுயநலமாக இல்லாமல் ஊர் மக்களை அணைத்துச் சென்றிருந்தால் கோவில் வளமாயிருக்கும்.

மேலத்தெரு, கீழத்தெரு:

கல்லிடைக்குறிச்சியிலுள்ள விஸ்வகர்ம சமூகத்தாரில் மெயின்ரோட்டிற்கு மேற்குப் பக்கம் வசிக்கும் விஸ்வகர்மாக்களுக்கு இக்கோவில் பாத்தியப்பட்டது என்று ஒரு கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. (படம் 22–பக்.114) ஆச்சாரி சித்தரை, ஆச்சாரி இனம் உரிமையுடன் கொண்டாடி வணங்கி நன்றியுடன் பயபக்தியுடன் கோவிலை பேண வேண்டும் என்ற எண்ணம் பிரதிபலிக்கிறது.

மடாதிபதியைத் தேடுதல்:

ஓசூரில் வசிக்கும் மா.பழனிச்சாமி தமிழ்நாட்டில் விஸ்வகுல ஐந்து மடங்களின் சரித்திரக்குறிப்பை ஆவணப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளார். திருநெல்வேலியிலுள்ள ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீனம் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடம் பற்றிய தேடல் விரிவானது. 36வது மடாதிபதி ஸ்ரீமத் குடந்தை இராசரத்தினம் ஸ்வாமிகளது அனுஷ்டானத்தைத் தேடிக்கண்டுபிடித்து குருபூஜை 28–06–2017ல் கும்பகோணத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. வேலையோடு வேலையாக மார்ச், ஏப்ரல், மாதம் முதல் 35வது பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகளின் அனுஷ்டானத்தைத் தேடும் பணியும் துவங்கியது. இந்த ஸ்வாமிகளின் குருபூஜை கார்த்திகை மாதம் தான் என்பதாலும் 36வது மடாதிபதியின் குருபூஜை ஆடி மாதம் என்பதாலும் மடாதிபதியின் வரிசை எண் மாறுதலைப் பெரிதுபடுத்தாமல் ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை என்ற வகையில் தேடுதலை விரைவுபடுத்தினோம்.

அம்பையில் சீடர்கள்:

அம்பாசமுத்திரத்தில் ஆன்மீக அன்பர்களிடையே இத்தேடுதல் வேட்டையைத் தலைமை ஏற்று தீவிரப்படுத்தியவர் திருமதி.வேலம்மாள் (ஓய்வு பெற்ற தாசில்தார்) அவருக்கு உதவியவர்களுள் திரு.சந்துரு என்ற கேபிள் நிறுவனத் தொழிலாளியும் திரு.சீனிவாசன் என்ற அவரது தோழரும் கொடுத்து வைத்த புண்ணியர்கள். மூன்றாண்டு கால ஆன்மீகத்

தேடலில் இந்த பாதாளலிங்கத்தையும் முருகேசன் ஆச்சாரி பூசாரியின் வாழ்க்கை வரலாற்றையும் நீதிமன்றத் தீர்ப்புக் குறிப்புக்களையும் ஒருங்கிணைத்து முனைப்புடன் செயல்பட்டார்கள். இவர்களது தகவல்களும் தடயமும் 30-07-2017ல் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதாகும்.

மூன்று கல்வெட்டுக்கள்:

இக்கோவில் வளாகத்தில் மூன்று கல்வெட்டுக்கள் இருந்ததை பூசாரியும் கேபிள் சந்துருவும் உறுதி செய்கிறார்கள். அதில் ஒரு கல்வெட்டில் ஜகத்குரு முத்துக்குமாரஸ்வாமியின் பெயரும் ஹரிஹரன் பெயரும் இருந்ததை நினைவு கூறுகிறார்கள். ஆனால் தமிழ்வருடம் 1087 என்று பொறிக்கப்பட்ட ஒரே ஒரு கல்வெட்டு மட்டும்தான் பழனிஆண்டவர் சன்னதிக்கு இடதுபுறம் வடக்குபிரகார காம்பவுண்டு சுவரில் இன்னும் பதிந்துள்ளது. மற்ற இரண்டும் இடம் மாறி ஆற்றங்கரையில் ஒதுங்கியிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. பொதுமக்கள் துணி துவைப்பதற்கும், குளிப்பதற்கும் வசதியாக ஆற்றில் தண்ணீர் ஓடும் கரையை ஒட்டி இதுபோன்ற கற்களை எடுத்துச் செல்வது வழக்கம். ஆக மீதமுள்ள இரண்டு கற்களையும் தேட வேண்டும். சுவரில் பூசிப்புதைந்து இருக்கும் கல்லின் வட்டெழுத்துக்களைப் பிரதி எடுத்து படித்துப் பாதுகாக்க வேண்டும். தமிழ் ஆண்டு 1087 என்பது இந்த மடாதிபதி முத்துக்குமாரஸ்வாமிகள் வாழ்ந்த ஆங்கில வருடம் கி.பி.1897-1904 என்பதுடன் ஒத்துப் போகிறது.

ஆலயவளாகத்தில் செய்ய வேண்டிய பணிகள்:

கோவிலும், கோவிலைச்சுற்றியுமுள்ள நிலமும் சிதலமடைந்துள்ளன. பராமரிப்பில்லை. வயசான பூசாரிக்கு வலுவில்லை.

1. நிலத்தீர்வை ரசீதின் அடிப்படையில் கோவில் நிலத்தின் சொத்துரிமை பாதுகாக்கப்படவேண்டும். பூசாரியின் தனி நபர் சொத்தா? மேற்குத் தெரு விஸ்வகர்மா மக்களின் பொது சொத்தா? நில அளவை நான்கெல்லை வரைபடம், சிட்டா, பட்டா என்று உறுதி செய்யப்படவேண்டும்.

2. கரைந்து போன கல், மண் சுவர்கள் மேலும் புதிதாக வலுவுடன் கட்டப்பட வேண்டும்.
3. கருவறைகளுக்கு ஊறுவிளைவிக்கும் இரண்டு புளிய மரங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
4. கோவிலைச்சுற்றிலும் புன்னை, மருது, மகிழம், வில்வம், புங்கம், வேம்பு, நெட்டிலிங்கம் தேக்கு, ஆல், அரசு மரங்கள் நடப்பட வேண்டும். ஆற்றுப் படுகையில் வாழையும் பூந்தோட்ட நந்தவனமும் அமைத்தல் அவசியம். கோவிலின் மேற்குப் பகுதியில் நோனி ஆடாதொடா, மலைவேம்பு மரமும் ஆற்றுப்படுக்கையில் நொச்சியும் நட்டல்' நலம் கோவிலுக்குத் தென்புறம் பக்தர்களுக்கு இருப்பு, ஓய்வு, பஜனை, அன்னதானம் மண்டபம் வேண்டும்.
5. நாகர்பீடத்தருகில் போர்வெல் என்ற ஆழ்குழாய் அல்லது அடிபம்பு. கிணறும் குடிநீர் கை, கால் அலம்ப நீர் தொட்டி குழாய் பைப்களும் கற்பக்கிரஹம் சமீபத்தில் நீர் மேல் நிலைத்தொட்டியும் தேவை.
6. பாதாள லிங்கம் உள்கட்டமைப்பு சுவர்கள் வெடிப்பு விட்டுள்ளதால் அதை எடுத்துக்கட்டி விரிவாக்கம் செய்து பக்தர்கள் அமர்ந்து தியானம் செய்ய உதவியாகக் கட்டுமானம் செய்வது அவசியம்.
7. காலை, மாலை வேளைகளில் பக்திப்பாடல் ஒலிக்கும் படி மைக்செட், கேசட் ஆம்ளிபையர் இசை நாடாக்கள் குறுந்தகடுகள் சேர்க்க வேண்டும்.
8. பூசாரிக்கு முறையான பூசை முறைகளைக்கற்றுத் தேர்ந்த ஒரு உதவியாளர் வேண்டும்.
9. கோவில் நிர்வாகக்கமிட்டியும் பக்தர்கள் சபாவும் உருவாக்கிட வேண்டும்.
10. தொடர்ந்த நிதி ஆதாரத்துக்கு வழிவகுக்க வேண்டும்.
11. நெடுஞ்சாலைப்பாலத்திலிருந்து கோவிலுக்கு நடைபாதை சீராக அமைக்க வேண்டும்.

12. அம்பை, கல்லிடையிலிருந்து இருபுறமும் செல்லும் டவுண் ரூட் பஸ்கள் அருகிலுள்ள எலும்பு முறிவு மருத்துவமனைக்கருகில் நிறுத்தப்பட வேண்டும். இது இக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு வசதியாகும்.
13. கோவிலுக்கு வடகிழக்கில் பாலத்தடியில் படித்துறையும் குளிக்க, துணிமாற்ற மறைவிட வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.
14. சுற்றுப்புறம் மாசுபடாமல் கழிப்பறைகள் கட்டப்பட வேண்டும்.
15. குருபூஜைக்காக நான்கு மாதங்கள் உழைத்த சமயத்தில் துவங்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் அரசு துறைகள் தொடர்புடன் மேலும் தொடர்ந்து வெற்றி பெற ஊர் மக்கள் பாடுபட வேண்டும்.

SHEET 8


கல்லிடைக்குறிச்சி குரு பூஜை 12.12.2017
பிரசாதம் நிவேதனம் - ஆரத்தி
ப 97


ப 98
கல்லிடைக்குறிச்சி குரு பூஜை 12.12.2017
பக்தர்களுக்கு அபிஷேக பிரசாதம் வழங்குதல்


கல்லிடைக்குறிச்சி குரு பூஜை 12.12.2017
பக்தர்கள் பரவசம்
ப 99


கல்லிடைகுறிச்சி - பூசாரி
முருகேசன் ஆச்சாரி
ப 21


ப 22
விஸ்வகர்ம கம்மாளர்
ஸ்ரீபழனியாண்டவர்
அவர்கள்.


கல்லிடைகுறிச்சி
ப 20

2.6 நெல்லைமடம் - திண்டிவனம் - கோவிலும், சொத்தும்

ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனம் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடத்தின் ஆளுகைக்குட்பட்டதுவே அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் திண்டிவனம். திண்டிவனம் முனிசிபல் எல்லைக்குள், தியாகி, சண்முகம் தெரு பழைய டோர் நம்பர் 3A ல் (புதிய நம்பர் 39A) 23 செண்ட் நிலம் தான் இந்த கோவிலும் சொத்தும். இது அயன் புஞ்சை சர்வே 403/6ரிலுள்ளது. தொடர்ந்து முனிசிபல் வரியும் செலுத்தப்பட்டு வருகிறது.

காம்பவுண்டு கட்ட அனுமதி:

06-10-1962ல் திண்டிவனம் முனிசிபல் கமிஷனர் அவர்கள்.

"ஜகத்குரு சந்திரசேகர இராமலிங்காச்சாரியார் ஸ்வாமிகளது மனுவைப் பரிசீலித்து" காம்பவுண்டு சுவர் கட்டுவதற்கு சம்மதம் தெரிவித்து ஆணையிட்டுள்ளார். 10-01-**1982ம்** தேதியிட்ட தமது கடிதத்தில் ஸ்ரீசிவஷண்முக ஞானச்சார்ய ஸ்வாமிகள் திருவண்ணாமலை (திருநெல்வேலி மடத்துக்கு 19-04-**1981ல்** 38வது மடாதிபதியாகப் பொறுப்பேற்ற பிறகு) தமது கடிதத்தில் இந்த சொத்து மீனாட்சியம்மன் கோவிலைப் பற்றி நேரில் ஆய்வு செய்த பின் "பன்னெடு நாட்களுக்கு முன்பு எங்களது ஆதீனம் திருநெல்வேலி ஸ்ரீபரசமயகோளரிநாதர் சுவாமிகள் ஆதீனத்தின் முந்தைய பீடாதிபதிகளால் ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடு சமயபோதனை, சமயகலாசாரம், குரு, சிஷ்யா, ஆசிதமாய் செங்கோல் ஆட்சி அதிஷ்டான பீடமாய் சந்திரசேகர் சுவாமிகள் காலம் தொட்டு, இன்று வரை, இராமலிங்க சுவாமிகள் காலம் வரை, எமது ஆதீனம், அதிஷ்டானம் நிர்வாகத்தையும், எங்கள் ஆதீன பராமரிப்பு இருந்து வரும் புவன மாதா ஸ்ரீமீனாட்சியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள கோவிலும் அதைச்சுற்றியுள்ள

மடத்தின் இடங்களும், இராமலிங்க சுவாமிகள் மகாசந்நதிக்கு பின்னர் கீழ்க்கண்ட பரிபாலன நலக்குழுவை ஆதீனத்தால் நியமிக்கப்பட்டது. மேற்படி நலக்குழு ஆதீனத்தின் மறுநியமனம் செய்யும்வரை மேற்படி ஆதீனம், பவுர்ணமி குருபூஜை மற்றும் நித்யபூஜை பராமரிப்பு இவைகளைச் செய்து வரவேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி குழு தலைவராக:

திரு. K.வீரராகவன் ஆச்சாரி, திரு. C.அங்கப்பன் ஆச்சாரி, திரு. J.ராமலிங்கம் ஆச்சாரி, திரு. D.ஏழுமலை ஆச்சாரி, திரு. N.மாரிமுத்து ஆச்சாரி ஆகிய ஐந்து பேர் கொண்ட நலக்குழுவை நியமிக்கப்பட்டது.

(கையொப்பம்) ஆதீனகர்த்தர் 10–01–1982.

ஸ்ரீபரசமயகோளரிநாத ஸ்வாமிகள் ஆதீனம் நெல்லை 6:

பார்ப்பாரற்ற சொத்து:

பின்னாளில் "அகிலபாரத விஸ்வகர்ம மடாதிபதி" அவர்களின் பொது அறிவிப்பு என்று ஒரு நோட்டீஸ் அச்சிடப்பட்டு வினியோகமானது. (படம் 26+25)

"மீனாட்சியம்மன் கோவிலுக்கு பாத்தியமான சொத்தை பாராதீனம் செய்ய எவருக்கும் உரிமை கிடையாது. இப்படிக்கு திண்டிவனம் அருள்மிகு மீனாட்சியம்மன் விஸ்வகர்ம சமூக மக்கள் திண்டிவனம்." ஆனாலும் முரட்டுத்தனமுள்ளவர்கள் மேற்படி 23 செண்டில் சிறு, சிறு பங்காக சர்வே செய்து பிரித்து கிரயப்பத்திரம் செய்து கொண்டுள்ளார்கள். (படம் 25எ–பக்.118) கடைசியாக, திரு.ஆனந்தாச்சாரி என்பவர் மேற்படி சொத்தை விற்கிரய பத்திரம் மூலமாக வாங்கிக்கொண்டார் (257/1987 10–08–1987) கோவில் ஆதீனச் சொத்தை விற்றது / வாங்கியது செல்லாது என்று திரு.வீரராகவ ஆச்சாரி அவர்கள் வழக்குத் தொடர்ந்தார்கள். தற்சமயம் (2015–2016ல் திரு.ஆனந்தாச்சாரியும், திரு.வீரராகவ ஆச்சாரியும் (படம் 23–பக்.118) பிரதிவாதி–வாதி) வயோதிகத்தில் இயற்கை அடைந்தார்கள். வழக்கை தொடர்ந்து நடத்த ஆள் இல்லை. கோவிலில் நித்யபூஜை குருபூஜை நடக்கவில்லை.

திண்டிவனம் விஸ்வகர்ம மக்களின் மனோநிலை:

திண்டிவனம் விஸ்வகர்ம சமுதாயத்துக்குப் பாத்யப்பட்ட அருள்மிகு**காமாட்சியம்மன் கோவில்** சீரும், சிறப்புமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. தட்டார்களும், தச்சர்களும் போட்டிபோட்டுக் கொண்டு நவராத்திரி மார்கழி உற்சவம், ஆவணி அவிட்டம் என்று கோவிலைக் கவனிக்கிறார்கள். ஆனால் **மீனாட்சியம்மன் கோவிலைக் கூடுதல் சுமையாகக்** கருதும் எண்ணம் உள்ளது. சொத்தை வில்லங்கம் செய்தவர்களுடன் எதிர்த்துப் போராட வசதியுமில்லை) எது எப்படியாயினும் பழமையான இக்கோவிலில் 1850ல் ஸ்ரீமத் சந்திரசேகர ஸ்வாமிகள், 1960ல் ஸ்ரீமத் சக்கரைஸ்வாமிகள், 1975ல் ஸ்ரீமத் ராமலிங்ககாச்சார்ய ஸ்வாமிகள் என்று முப்பெரும் தவசீலர் ஆச்சார்ய புருஷர்களின் அனுஷ்டானங்கள், சமாதிகள் உள்ளன. இந்த புனிதமான இடத்தில் ஸ்வாமிகளின் சமாதிகள் சிவலிங்கம், மூர்த்தங்கள் என்ற சமய அடையாளங்கள் அழிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வருகின்றன. (படம் 24, 25)

பின்வரும் சந்ததிகளை ஆசீர்வதிக்கும் தவசீலர்களின் அனுஷ்டானத்தில் குருபூஜை செய்வது அவசியம். நன்மை தரக்கூடிய செயல். போட்டியும், விளம்பரமும், ஆரவாரமும் என்று ஸ்ரீகாமாட்சியம்மன் கோவிலைக் கொண்டாடும் அதே முயற்சியில் சிறிதளவாவது ஸ்ரீமீனாட்சியம்மன் கோவில் பக்கம் திசை திரும்பினால் நல்லது. (படம் 25)

❀

SHEET 9


ப 23
திண்டிவனம் - வீரராகவ ஆச்சாரி - ஆதீனகோவில் பாதுகாவலர்


ஸ்ரீ மத் பரசமய கோளரிநாதர் ஆதீனம்
அ/மி மீனாட்சியம்மன் ஆலயம் சொத்து திண்டிவனம்
புவன பீடம் ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகராசாரிய சுவாமிகள்
1850
ப 24


ஸ்ரீ மத் பரசமய கோளரிநாதர் ஆதீனம்
அ/மி மீனாட்சியம்மன் ஆலயம் சொத்து திண்டிவனம்
ப 25எ


ஸ்ரீ மத் பரசமய கோளரிநாதர் ஆதீனம்
ப 27
T6F 5960
10.01.1990


ஸ்ரீ மத் பரசமய கோளரிநாதர் ஆதீனம்
அ/மி மீனாட்சியம்மன் ஆலயம் சொத்து திண்டிவனம்
அ/மி மீனாட்சியம்மனுக்கு அபிசேகம்
செய்வது மடாதிபதி
ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானச்சாரிய
ஸ்வாமிகள் 10.01.1990
ப 26


ஸ்ரீ மத் பரசமய கோளரிநாதர் ஆதீனம்
அ/மி மீனாட்சியம்மன் ஆலயம் சொத்து திண்டிவனம்
ப 25

2.7. கேரள மக்கள்

புலம் பெயர்ந்த சொந்தங்கள். ஸ்ரீமத் பரசமய கோளரிநாதர் ஆதீனம் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடம் திருநெல்வேலி

கேரள மக்களின் ஆதங்கம்

கி.பி. 2015ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கேரளாவில் 51 லட்சம் விஸ்வகர்மாக்கள் வாழ்கிறார்கள் என்று கருதப்படுகிறது. மலைப்பிரதேசமான கேரளாவில் நகரம் ஊர் என்று சொல்லிக் கொள்ள சில இடங்கள் மட்டுமே. பரந்து விரிந்த மலை காடுப்பகுதிகளில் தோட்டம், எஸ்டேட் என்ற பசுமைகளுக்கிடையே அங்குமிங்குமாக பண்ணை வீடு என்று வாழ்வது தெரிந்ததே. கூலித்தொழில் செய்யும் ஐந்தொழிலாளர்கள் பரவலாகச் சிதறிக் கிடப்பது மறுக்கமுடியாத உண்மை.

தட்டாவிழா:

இவர்களுள் சுமார் 500, 600 ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து குறிப்பாகப் புளியங்குடி, சங்கரன்கோவில் போன்ற அக்கால வறண்ட பூமியிலிருந்து பிழைப்புக்காக கொல்லம், செங்கண்ணூர், செங்கணாச்சேரி, எர்ணாகுளம், கொச்சி, திருச்சூர் ஆகிய பகுதிகளுக்குப் புலம் பெயர்ந்து சென்ற குடும்பங்கள் சுமார் 1000 என்று கணிக்கப்படுகிறது. கன்னார் வேலை, கல்தச்சு, பொற்கொல்லர் என்று நகர்ந்து வந்தார்கள். அப்படி வந்தாரை வாழ வைத்தது இந்தக் கேரளபூமி.

அருள்மிகு சாஸ்தா ஐயப்பா கோவிலிலுள்ள தங்க விக்ரஹத்தை நிர்மாணித்த சிற்பியும் இவர்களுள் ஒருவர். கொச்சியிலுள்ள விஷ்ணுகோவில் திருச்சூர் வடக்குநாதன் கோவில் சிற்ப வேலைப்பாடுகள் இதற்கு சான்று. 500, 600

ஆண்டுகளுக்கு முன்பாக வேதங்கள் ஓதுவதும், வைதீக மந்திரங்களை உச்சரித்து கிரியை செய்வதும் (வாஸ்து செய்வது கிரஹப்பிரவேசம் குடமுழுக்கு, திருமணம் சடங்கு, உபநயனம் போன்ற புண்ணிய காரியங்கள்) இந்த விஸ்வகர்மாக்களுக்கு எளிதில் கை வந்த கலை. 1978/79ல் திருநெல்வேலி மடத்தில் ராஜசூய யாகம் நடத்திய மடாதிபதி ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகளுக்கு **யாகசாலைப் பணிகளை வேத விதியின்படி நடத்திக்காட்டிய பெருமை புளியங்குடியிலிருந்து செங்கண்ணூருக்குப் புலம்பெயர்ந்து சென்ற தமிழ் விஸ்வகாமாக்களைச் சாரும். அவ்வழியில் வந்தவர்கள் தட்டாவிழா குடும்பத்தினர் என்று செங்கண்ணூரில் அழைக்கப்பட்டார்கள்.**

இந்த ஆயிரம் குடும்பத்தாரும் **எட்டுக்கரைகாரர்கள்** என்றும் 10 **கோத்திரவாதிகள்** என்றும் **நான்கு வேறு வேறு விஸ்வகர்ம கோவிலை** வணங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் இப்போது தெளிவாகிறது.

பூர்வீகப்பந்தம்:

இந்த எட்டுக்கரை விஸ்வகர்ம குடும்பத்தினரது பூர்வீகங்கள் கிருஷ்ணாபுரம், குலசேகரப்பட்டினம், பாளையம்கோட்டை, கொடுங்கல்லூர் (பாளையங்கோட்டை) பிரம்மங்கலம் (சோழநாடு) என்றும் கருதப்படுகிறது. தற்போதைய கேரளாவில் திருப்பூணித்துறை (எர்ணாக்குளம் அருகில்)யை மையமாகக் கொண்டு வசித்து வரும் பல விஸ்வகர்மாக்கள் முளந்துருத்தி காரிக் கோடு என்னும் கிராமத்தில் (அருள்மிகு சோட்டானிக்கரை பகவதியம்மன் கோவில் சமீபம்) அருள்மிகு பேச்சியம்மன் என்று ஸ்ரீமாரியம்மன் கோவிலை நிர்மாணித்து வணங்கி வருகிறார்கள். கோவில் நிர்வாகம், பங்காளிகள் உறவு என்ற வகையில் சிரமம் ஏற்பட்டபோது தேவப்பிரஷ்ணம் என்ற சோவி போட்டுப் பிரச்சனைக்கு பரிகாரம் தேட முயன்றபோது “நீங்கள் அனைவரும் உங்கள் முன்னோர் வழிபட்ட தெய்வத்தை வணங்காமல் மறந்து விட்டீர்கள். திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றங்கரையிலமைந்துள்ள ஸ்ரீமத்பரசமயகோளரிநாதர் ஆதீனம், ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடம்

என்று அதனருகிலுள்ள கருப்பசாமியையும், மாடசாமியையும், பேச்சியம்மனையும், வணங்கி வழிபாடு செய்திட வேண்டும். இந்த வழிபாடு தொடர்ந்தால் அங்கிருந்து மண் எடுத்து வந்து காரிகோடு பேச்சியம்மன் ஆலயத்தில் சேர்த்து வழிபட்டால் குலத்துக்கு மேன்மை பெருகும்" என்ற அருள்வாக்கு விடை கிடைத்தது. இது நடந்தது கி.பி.1999–2000ம் ஆண்டு.

ஆதீனம் வந்து போதலும், வழிபடுதலும்:

அது முதல் ஒவ்வொரு ஆண்டும் கும்பமாதத்தில் (மாசிமாதத்தில்) ஒரு நாள் குறித்து காரிகோடு பேச்சியம்மனை வழிபடும் திருப்பூணித்துறை மற்றும் அந்தப்பகுதி எட்டுக்கரை விஸ்வகர்மாக்கள் கூட்டம் கூட்டமாக பஸ்/வேனில் இங்கு வந்து செல்கிறார்கள். 2017 மார்ச் மாதம் முடிய 18 ஆண்டுகள் தொடர்ந்து வழிபாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தப்புனிதப்பயணத்தை வழிநின்று நடத்துவது பிரம்ம ஸ்ரீ P. விஸ்வனாதன். பார்வதி ஜீவல்லரி திருப்பூணித்துறா என்ற விஸ்வகர்மாவார்.

யாரை வழிபடுவது? குலதெய்வமா? என்ன நம்பிக்கை?

பிரஷ்ணம் பார்த்துச் சொன்னவர் மடத்தினருகில் கருப்பசாமியும் அதன் அருகில் பேச்சியம்மனும் இருக்கிறார்கள் குலதெய்வமாக வழிபடுங்கள் என்றார். இதைத்தான் இந்த எட்டுக்கரை வம்சத்தார் 18 வருடமாக பக்தி சிரத்தையுடன் செய்து வருகிறார்கள்.

காரிகோடு, திருபூணித்துறை, எர்ணாகுளம் என்று துவங்கி செங்கோட்டை குற்றாலம், புளியங்குடி, சங்கரன்கோவில் என்று பயணித்து திருநெல்வேலி அக்கசாலைப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் தங்கி ஓய்வெடுக்கிறார்கள். பிறகு **அவரவர் கொண்டு வந்துள்ள காணிக்கை முடிகளை அக்கசாலைப் பிள்ளையார்/** காமாட்சியம்மன் கோவில் பூசாரியிடம் ஒப்படைக்கிறார்கள். காணிக்கையை ஏற்றுக்கொண்ட பின் கற்பூர ஆரத்தி காட்டி விபூதி, குங்குமம் கொடுத்து மகிழ்விக்கிறார். பக்தி சிரத்தையுடன் காமாட்சியம்மனை வழிபட்டபின் அக்கோவிலுக்குப் பின்புற வாய்க்காலுக்குப் பின்புறம் (ஆதீன சொத்துக்கு

அப்பாற்பட்ட!?) கருப்பசாமி தெய்வத்தின் (ப.136) முன் கற்பூரம் ஏற்றி வழிபடுகிறார்கள். அருகே நடை திறக்காமல் பல்லாண்டு பூட்டப்பட்ட அனுமான கோவிலைப் பார்த்து விட்டுத் திரும்புகிறார்கள். இந்தக் கருப்பசாமிக் கோவிலுக்குச் செல்லும் வழியில் சாணம், குப்பை, களிமண், சகதி, கழிவுப்பொருட்கள் என்று பலவகையான அசுத்தங்கள் குவிந்து கிடப்பதையும் சன்னதிக்கு நேரில் சென்று வழிபட ஒரு வழித்தடம் நடைபாதை இல்லையே என்றும் மனம் வருந்துகிறார்கள். (ப.136–பக்.224)

நெல்லையில் இவர்களுக்குத் தங்க இடம் தரும் அக்கசாலைப்பிள்ளையார் கோவில் நிர்வாகத்தினரும், காமாட்சியம்மன் கோவிலில் காணிக்கையைப் பெற்றுக்கொண்டு கற்பூர ஆரத்தி காட்டும் ஆதின உள்ளூர் நிர்வாகமும், இவர்கள் கருப்பசாமியை வழிபடுவதற்கு, "உதவி ஏதும் செய்ய இயலாது. அது பிறர் சொத்து ஆதீனத்தின் இடத்தில் இல்லை" என்று கையைப் பிசைகிறார்கள். இருந்த போதிலும் 18 வருடமாகத் தொடர்ந்து இங்கு வந்து பக்தியுடன் வழிபடுவதால் நன்மையும், சந்தோஷமும் கை மேல் பலன் என்று திருப்தி கொள்பவர்கள் நெல்லையில் ஏற்படும் இடர்பாடுகளையும் கிடைக்காத உதவிகளையும் பற்றி அதிகம் பேசுவதில்லை. கவலைப்படுவதுமில்லை. சுத்தமிருந்தால், நடைபாதை கிடைத்தால், போதும் என்று அவர்கள் ஏங்குவது நியாயமாகப்படுகிறது. அதன் பிறகு நெல்லையப்பர்கோவில் திருச்செந்தூர் சென்று தரிசனத்தை முடித்தபின்பு கேரளா, எர்ணாகுளம் திரும்புகிறார்கள்.

கேள்வி? சந்தேகம்? குழப்பத்திற்கு விடைதேடுதல்:

500–600 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பிழைப்புத்தேடி கேரளாவிற்கு வந்த இந்த எட்டுக்கரை விஸ்வகர்ம குலத்தவர்களின் முன்னோர்களில் எத்தனை பேர் இன்றைய சந்ததியில்? எத்தனை பேர் அக்கசாலைப் பிள்ளையார் கோவில் தெருவிலுள்ள 1600 ஆண்டுகளுக்கும் பழமையான ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனம், ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடத்தை வணங்கி வழிபட்டு மடத்தின் விஸ்வாசிகளாயிருக்கிறார்கள்?

இந்த ஆதீனத்திற்கு திருவிதாங்கூர், கொச்சின், பிரிட்டிஷ், மலபார் என்ற பிரதேசங்களில் சொத்துக்கள் உள்ளன என்ற உண்மைத் தகவலையும், விபரத்தையும் தெரிந்து கொள்ளாமலே இருப்பது ஏன்? ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனத்தில் நடைபெறும் குருபூஜையில் கலந்துகொள்வதே இல்லையே ஏன்? காமாட்சியம்மன் கோவிலுக்கு காணிக்கை கிடைத்தால் போதும் குருபூஜைக்கு ஏன் அழைப்பு என்ற ஆதீன நிர்வாகத்தின் மெத்தனமா? கருப்பசாமியையும், பேச்சியம்மனையும் வணங்கினால் போதும் எதுக்கு ஆதி குருவை வணங்கவேண்டும் என்ற எட்டுமனைக்காரரின் மனப்போக்கா? இரண்டுமா? ஸ்ரீராஜராஜேஸ்வரியை வணங்காமல் பேச்சியம்மனை வணங்கியது சரியா? பேச்சியம்மன் தான் குலதெய்வம் என்ற பின் அதுவும் சரியே... (படம் 136–பக்.224)

இவ்வளவு தெளிவற்ற நிலையில் விஸ்வபிரம்மம் என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் இதழில் 2013 முதல் பதிப்பில் முன் பக்க அட்டையில் எட்டுக்கரை விஸ்வகர்மகுலம் (**பிரம்ம வம்சம் திருநெல்வேலி ஆதீன பரம்பரை**) என்று அச்சிட்டிருப்பது வியப்பாக உள்ளது. ஆதீனப்பரம்பரை என்றால் கிரஹஸ்த ஆதீன கர்த்தாவின் வாரிசு பரம்பரை என்றாகிறது. துறவிகள் மடத்தை இப்படித் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. பரம்பரை என்ற வார்த்தை தவிர்க்கப்படவேண்டும். ஆதீனசேவார்த்திகள், அபிமானிகள் என்று கூறிக்கொள்ளலாம்.

ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடம் திருநெல்வேலி டவுண் - மடாதிபதிக்கு மகுடம் சூட்டும் முறை:

சுமார் 1400 ஆண்டுக்கும் மேற்பட்ட இந்த ஆதீனத்தில் அருள் ஆட்சி செய்யப் பொறுப்பேற்கும் மடாதிபதிக்கு அபிஷேகம், பட்டம் சூட்டுதல், பட்டினபிரவேசம் என்ற வைதீக முறை வகுக்கப்பட்டு அமலில் உள்ளது. (ப.110–பக்.126)

தென்தமிழ்நாட்டில் தமிழ்பேசும் விஸ்வகுல மக்களால் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு **மானூரில்** விழாவெடுத்து பட்டம் சூட்டுவதே இம்மடத்தின் வழக்கம். திருநெல்வேலியிலிருந்து இராசபாளையம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 17 கி.மீட்டரில் சாலையோரத்தில் அமைந்துள்ள சிற்றூர் **மானூர்**

(ப.109–பக்.126) இங்கு பழமையான சிவன் கோவிலுள்ளது. கருவூர் சித்தருக்கும் தனிச் சன்னதியுள்ளது சிறப்பம்சம்.

கருவூர் சித்தர் விஸ்வகுலம். திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோவிலில் இச்சித்தருக்கு சிவபெருமான் முறையாக தரிசனம் தரவில்லை. பிறகு நெல்லையப்பரே அசரீரியாக கருவூராரே மானூருக்கு வருக காட்சி தருகிறேன் என்று பிரியமுடன் ஆணையிட்டார். ஆவணி மாதம் மூல நட்சத்திரத்தில், மானூரில் கருவூர் சித்தருக்கு, நெல்லையப்பர் நேரில் வந்து காட்சி கொடுத்து அருளினார். இதை நினைவுப்படுத்திச் சிறப்பிக்கும் முறையில் நெல்லையப்பர் ஆலயத்தில் ஆவணிமாதம் நடைபெறும் பத்துநாள் திருவிழாவில் ஒரு நாள் மண்டகப்படி ஆச்சாரித்திருவிழா என்று நெல்லையப்பர் ஆலயமே நோட்டீஸ் அச்சடித்து வினியோகம் செய்து அரசாங்க செலவில் விழா நடத்துகிறார்கள். இன்றும் இத்திருவிழா தொடர்கிறது. நெல்லையப்பர் கோவிலிருந்து மானூர் வந்து ஒரு இரவு தங்கி மறுநாள் கருவூராருக்குக் காட்சி தந்த பிறகு மீண்டும் நெல்லையப்பர் ஆலயம் திருநெல்வேலிக்கு சாமி திரும்புவது இன்றும் வழக்கில் உள்ளது. எல்லா இனத்தவரும் பொங்கலிட்டுக் கொண்டாடும் இம்மானூர் திருவிழா இவ்வாறு வரலாற்றுச் சிறப்புடையது.

பட்டாபிஷேகம்:

சிவனே விஸ்வகர்மா என்று சைவத்தையும், சிவலிங்கத்தையும் வணங்கும் பரசமயகோளரிநாத மடத்துக்குப் பட்டம் சூட்டி வரும் அருளாளர், சைவமதத்தையும் விஸ்வகுல ஆச்சார பழக்கவழக்கங்களையும் பரப்பிடும் மதருகுருவாக, ஆன்மீக தவசீலராக, வாழ்ந்து காட்ட வேண்டும் என்று நினைவுறுத்தும் ஒரு சங்கல்பம், காப்பு கட்டும்முறை என்று சுருக்கமாகப் புரிந்து கொண்டாலே போதும். விரிவை அவரவர் விருப்பம்போல் அறிந்து கொள்ளலாம். இந்த மானூர் விழா பற்றிய விரிவான விழிப்புணர்வு சுற்றறிக்கை வெளியாகியுள்ளது. விரிவை இங்கேயும் காணலாம். ஆவணி மூலத்தின் பெருமையை திருவிளையாடல் புராணத்தில் அறியலாம்.

மானூரா? சுரண்டையா? விஸ்வகுல ஆதீனங்களிலே இந்தியத் தலைமையகமாக விளங்குவதற்கு எல்லாத்தகுதியும் உள்ளடக்கியது நெல்லைமடம், வெவ்வேறு துறவிகள் அருளாட்சி அற்புதங்களை நடத்தினார்கள். இடையில் வந்த ஐந்து, ஆறு கிரகஸ்தர் சாமியார்கள் மடத்துக்குக் களங்கம் உண்டாக்கினர். இந்த வேறுபாட்டினால் ஆதீனகர்த்தருள் பலருக்கு மானூரில் பட்டம் சூட்டினார்கள். சில குருமார்களுக்கு (மூன்று, நான்கு பேர்களுக்கு) சுரண்டையில் பட்டம் சூட்டி மடத்துக்கு அழைத்து வந்தார்கள். சுரண்டை ஒரு சிறுகிராமம். சங்கரன்கோவில், கடயநல்லூருக்கு அருகிலுள்ளது. குற்றால அருவி நதி பாசனம் என்பதால் செழுமையான ஊர். ஒரு சிற்றூர் இப்போது பெரிய வியாபார ஸ்தலமாக நாளொன்றுக்கு பல கோடி ரூபாய் புரளும் நகரமாக வளர்ந்துவிட்டது. குளு, குளு தனியார் பஸ்கள், சென்னை, பெங்களூலிருந்து தினமும் வந்து செல்லும் ஊராகிவிட்டது. 300, 400 வருடங்களுக்கு முன்பே, சுரண்டையில் விஸ்வகுல மடம் இருந்தது. 600க்கும் அதிகமான விஸ்வகுல குடும்பங்கள் வாழ்ந்த ஊர். 1981க்குப் பிறகு நெல்லைமட நிர்வாகம் சுரண்டையை மறந்துவிட்டது. சுரண்டையிலுள்ள ஆதீனச் சொத்துக்கள் தற்போது பிற தனியார் கைக்கு மாறிவருகிறது. நெல்லை மடம் சுரண்டையை நினைவில் கொண்டு சொத்துக்களை மீட்டெடுத்து, மடத்துக்கிளையை, தியான மண்டபத்தைப் புதுப்பிப்பது அவசியம். அங்கு மீண்டும் நெல்லை மடாதிபதிகளுக்குப் பட்டம் சூட்டும் முறையை அமுல்படுத்துவது நன்மை பயக்கும். மானூரில் விஸ்வகுலகுடிகள் இல்லை. ஆதீனத்தின் சொத்து இல்லை என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

✿

SHEET 10





3.ஜகத்குரு சிதம்பர மடாதிபதி

ஸ்ரீ அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த ஸற்குரு மூர்த்திகளாகிய ஸ்ரீ பூலோக கைலாச சிதம்பர மடாதீஸ்வர ஸ்ரீமத் கமலமூர்த்தி மௌனகுரு ஸ்வாமிகள் (ஆத்தூர்) – சேலம்.

சிதம்பரம் ஸ்வாமிகள்:

ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரெங்கநாதர் ஆலயத்தில் ஆஸ்தானத் தட்டாராகப் பணி செய்து வந்தவர் பிரம்ம ஸ்ரீ.S.P. ஸ்ரீனிவாச ஆச்சாரி (படம் 135–பக்.136). அதாவது ஸ்ரீரங்கம் கோவிலில் மூலஸ்தானம் எரிந்து போன சமயம் (உத்தேசமாக 1903). இவரது மகள் திருமதி. காமாட்சியம்மாள் வெங்கடேசன், தம்பதிக்கு பிறந்த திரு. V. ஆறுமுகம் அவர்கள் தற்சமயம் உறையூரில் வசித்து வருகிறார்கள். ஆறுமுகம் அவர்களை 5ம் வகுப்பு முதல் B.Sc வரை படிக்க வைத்து எடுத்து வளர்த்தவர் ஸ்ரீ S.P.ஸ்ரீனிவாச ஆச்சாரி. திரு.ஸ்ரீனிவாச ஆச்சாரி அவர்கள் ஸ்ரீரங்கம் கோவிலில் ஆஸ்தான தட்டார் என்று ஆன்மீகத்துடன் ஒட்டிக்கொண்டவர். எனவே அக்காலத்தில் மிகவும் புகழுடன் விளங்கிய சிதம்பரம் ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீமத் ராஜமாணிக்கம், ஸ்ரீமத் ராஜரத்தினம் ஸ்வாமிகளின் தீவிர பக்தர், அபிமானி விஸ்வாசியானார்கள். இதன் மூலம் திருமூலாராண்யம் சீனந்தல் மடத்து மடாதிபதிகளுடனும் பழக்கம் ஏற்பட்டது. பிள்ளைப் பருவத்திலிருந்தே தாத்தாவுடன் வளர்ந்து வந்த திரு.ஆறுமுகம் அவர் தம்பி பழனி வயலூர் அவர்களுக்கும் சேலம் ஆத்தூர் மடத்திலிருந்த ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள், ஸ்ரீமத் ராஜமாணிக்கம், ஸ்ரீமத் ராஜரத்தினம் ஸ்வாமிகளின் வாழ்க்கை சரித்திரங்கள், அற்புதங்கள் என்று அதிகம் தெரிந்துள்ளன. தகவலும் தந்தார்கள். ஸ்ரீமத்ராஜரத்தினம் ஸ்வாமிகளின் வாரிசு திரு.விஜயகுரு அவர்கள் தான் அதிக ஆதாரங்கள், தகவல்கள் தந்து உதவினார்கள்.

ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள்–சந்நியாசி (யதீஸ்வரர்)– வாரிசு இல்லை இவரின் ஸ்ரீகார்யம், மடத்து நிர்வாகியாக உடனிருந்து வாழ்ந்தவர் ஸ்ரீமஹாதேவஸ்வாமிகள். (ப.35–பக்.136)

ஸ்ரீமத்ராஜமாணிக்கம் ஸ்வாமிகள் திருமதி. அனந்தலட்சுமி தம்பதிகள்:

ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் சந்நியாசியாகவே மடத்தின் பீடத்தை அலங்கரித்தவர். மஹாதேவ ஆச்சாரிக்கு வேதஉபதேசம் செய்து வைத்துப் பின்னர் விவாகமும் செய்து வைத்து, சந்ததியைப் பெருக்கி, மடத்தை நிலை நாட்ட விரும்பினார்கள். மஹாதேவ ஆச்சாரிக்கும் முதல் தாரம் அம்மையாரோ, குழந்தைப் பேற்றைத் தள்ளிப்போடாமல் குடும்ப வாழ்வில் அக்கறை காட்ட வேண்டும் என்று விரும்பினாள். அதன் பயனாக ஸ்ரீராஜமாணிக்கம் என்ற ஒரே மகப்பேறு கிட்டியது. ராஜமாணிக்கம் (ப.39–பக்.136) என்ற குழந்தை பிறந்தவுடனேயே தாயார் நோய்வாய்ப்பட்டார்கள். தாயில்லாத குழந்தையை அதுவும் மடாதிபதியின் வீட்டுக்குழந்தையை அனாதையாகப் பிறர் வீட்டில் கையேந்தியோ எச்சில் உணவோ உண்ணும் நிலையை உருவாக்குவதற்குப் பதில் இப்பச்சிளங் குழந்தையைத் தானே எடுத்துச் செல்வதே மேல் என்று அழுது புலம்பினாள். இந்த வருத்தத்தைப் போக்குவதற்காக ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் முன் வந்து அப்பேதை உள்ளத்திற்கு உறுதி மொழி கொடுத்தார். "வருந்தாதே. கவலை வேண்டாம். காளிகாம்பாள் ரூபாமான உன் குழந்தை ராஜமாணிக்கம் என்ற இந்த உன் சிசுவை, நானே என் பொறுப்பில் வளர்த்து, வேதம், ஞானம், போதித்து பின்னாளில் பிறருக்கு ஆசீர்வாதம் அளிக்கும் தகுதியடையச் செய்வேன்" என்று கூறினார். குழந்தையை தானே வளர்த்தார். **ராஜமாணிக்கத்துக்கு ஏழு வயதில் மடாதிபதி பட்டம்** சூட்டி விட்டேன், ஆனாலும் 14 வயதில் மடத்தின் நிர்வாகத்தை ஒப்படைத்து விடு **என்று உயில் எழுதினார்.** மஹாதேவர் குழந்தைக்கு பாதுகாவலராகவும், புரவலராகவும், வாழ்ந்து காட்டினர். முதல் மனைவியும் காலமானார், மஹாதேவஸ்வாமிகள் இரண்டாம் விவாகம் செய்து கொள்ள நேரிட்டது.

ஸ்ரீராஜமாணிக்கம் (ப.39–பக்.136) ஸ்வாமிகள் 7 **வயதிலேயே பட்டம் சூட்டப்பட்டு வளர்ந்து** வரும் வேளையில்

மஹாதேவஸ்வாமிகள் இரண்டாவது மனைவி, ராஜரத்தினம், ராஜகுரு என்று இரண்டு ஆண் குழந்தைகளை அடுத்தடுத்துப் பிரசவித்து மகிழ்ந்தார்கள். ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகளின் கனிவும், வேதோக்தமாக சந்ததிகளை வளர்த்து மடத்தைப் பேண வேண்டும் என்ற உத்வேகத்தினால், ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகளிடமே, மஹாதேவஸ்வாமிகள் ராஜமாணிக்கம், (முதல் மனைவியின் ஒரே ஆண்வாரிசு) ராஜரத்தினம் (இரண்டாம் மனைவியின் முதல் ஆண்வாரிசு ஆகிய மூவரும் ஒரு சேர வேதம் பயின்றார்கள்.

ஸ்ரீகமலமூர்த்தி (ப.29–பக்.136) ஸ்வாமிகள் பன்மொழிப் புலமை பெற்றவர். பல இடங்களுக்குப் பிரதேச யாத்திரை சென்று மக்களுக்கு ஆன்மீக நற்போதனைகளை வழங்கி சேவை செய்த தவசீலர். தமது தலைமையிடமாக ராமநாயக்கன் பாளையம் என்ற கிராமத்தில் (சேலம் ஆத்தூருக்கு 7 கி.மீ. தொலைவு) ஏற்படுத்திய பூர்வீக மடாலயத்தில் வாசம் செய்தார்கள். இதுவே மடத்தின் தலைமை ஸ்தாபனம். இந்த ராமநாயக்கன் பாளையம் ஜமீன் சொத்து தான் சிதம்பர மடத்துக்கு மானியமாக வந்த மூலாதார சொத்து.

வயோதிகத்தின் காரணமாகவும், பிரதேசயாத்திரை காரணமாகவும், ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகளே முன் வந்து சேலம் ஆத்தூர் காமாட்சியம்மன் கோவில் தர்மகர்த்தாவான திரு.கணபதி ஆச்சாரிக்கு மேற்படி மடத்தை நிர்வகிக்கும் பொறுப்பையும், சொத்துக்கள் பராமரிப்பு, வரவு, செலவு, நிர்வாகம் குறிப்பாக, நவராத்திரி கொலு விழா செலவு, ஸ்வாமிகளின் பட்டினப்பிரவேச செலவு என்று நிர்வகிக்க வாய்மொழி அதிகாரம் அளித்திருந்தார்.

கமலமூர்த்தி ஸ்வாமிகளின் ஜீவசமாதி:

பிரதேச யாத்திரையின் போது ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிககள் தமது அந்திம காலம் நெருங்குவதை உணர்ந்தார். தாம் நிஷ்களமாக ஜீவசமாதி அடையவிருப்பத்தையும், இடம், காலம் இரண்டையும் சுட்டிக் காட்டி மக்களுக்கும், அரசுக்கும் பரவலாகத் தகவல் தெரிவித்தார். (படம் 30–பக்.136)

பிரிட்டிஷ் ராணுவம், போலீஸ்:

1938ம் ஆண்டு நடந்த இந்த நிகழ்வின்போது (இந்தியா சுதந்திரம் அடையாதகாலம்) இப்பகுதியை ஆண்ட பிரிட்டிஷ் நிர்வாகத்திற்கு ஜீவசமாதியின் விபரம், ஆன்மீகப் புனிதம், மேன்மை தெரியாத காரணத்தினால் ஸ்வாமிகள் தற்கொலைக்குத் தயார் செய்கிறார்கள் என்றும் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் முடிவெடுத்து ஆத்தூர் தட்டான் சாவடிப்பகுதியிலுள்ள அந்த 3 1/2 ஏக்கர் நந்தவனப் பகுதியில் (தற்போதைய பஞ்சுமார்கெட்) பலத்த போலீஸ் ராணுவபடைகளை அணிவகுக்கச் செய்து, பாதுகாப்பைப் பலப்படுத்தியது. **1938ம் வருடம் புரட்டாசி மாதம் 27ம் நாள்** குறித்த முகூர்த்தத்தில் ஜீவசமாதி நடப்பதற்காக சமாதி மேடை ஏற்பாடாகியது. பக்தர்கள் கூட்டம் பெருகியது.

நேரம் தவறாமை:

ஸ்ரீமத் கமலமூர்த்திஸ்வாமிகளை காமாட்சியம்மன் கோவில் தெருவிலுள்ள மடாலயத்திலிருந்து (டோர் நம்பர் 18) பல்லக்கு, மேளதாளம், பரிவாரங்களுடன் மிகவும் மரியாதையுடனும், பௌமியத்துடனும், உரியவேளையில், சமாதிக் கட்டத்திற்கு அனுப்பி அழைத்துச் சென்ற பாக்கியம் அப்போது இதற்காக அங்கு முகாமிட்டிருந்த ஸ்ரீரங்கம் ஸ்ரீ S.P.ஸ்ரீனிவாச ஆச்சாரிக்கும் (படம் 135–பக்.136) பாடலூர் ஸ்ரீநடேசஆச்சாரி, தம்மம்பட்டி கந்தசாமி ஆச்சாரி ஆகியவருக்கு சேரும். இந்த ஜீவசமாதி நிகழ்வின்போது திரு.ராஜமாணிக்கம் ஸ்வாமிகள் உடன் இருந்தார். எனவே மஹாதேவ (ஆச்சாரியே) ஸ்வாமிகளே மடத்தின் மொத்த நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு 1941ல் ஸ்ரீராஜமாணிக்கத்துக்குப் பொறுப்பைக் கொடுக்கும் வரை பாதுகாவலர், வழிகாட்டி என்றிருந்தார். ஸ்ரீமஹாதேவஸ்வாமிகளும் 1958ம் ஆண்டு ஆடிமாதம் 20ம் நாள் இயற்கையானார்.

ஸ்ரீராஜரத்தினம் ஸ்வாமிகள் (மனைவி மயிலம்மாள்). ஸ்ரீமஹாதேவ ஸ்வாமிகளின் இரண்டாம் தாரத்திற்கு ஸ்ரீராஜரத்தினம், ஸ்ரீராஜகுரு என்ற இரு ஆண்பிள்ளைகள். ஸ்ரீராஜரத்தினம் (மூத்ததாரத்தின் ஒரே மகனான ஸ்ரீராஜமாணிக்கம் போன்றே ஆன்மீகத்தில் ஈடுபாடு. வேதமும் பயின்றார். ஸ்ரீராஜகுருவுக்கு (இளைய வாரிசு என்பதால் மடத்துக்குப்பட்டம் என்ற உரிமையில்லை,

எனவே மடவிஷயங்களில் ஆர்வம் காட்டவுமில்லை). பருவம் வந்த ஸ்ரீராஜரத்தினத்திற்கு திருமதி.மயிலம்மாள் என்ற மனைவியும், ஸ்ரீராஜகுருவுக்கு திருமதி. சரஸ்வதி என்ற மனைவியும், கிரகஸ்தர் என்ற அந்தஸ்தை வழங்கினார்கள்.

பிரிவு:

1941ல் ஸ்ரீராஜமாணிக்கம் மடாதிபதி என்ற பட்டம் சூட்டப்பட்டார். மடத்தின் சொத்துக்கு அதிபதியானார். ஸ்ரீராஜரத்தினத்திற்கு மடாதிபதி பட்டம் கிடைக்கவில்லை என்ற ஏக்கமும், கவலையும் தொடர்ந்தது. **பின்னாளில் ஸ்ரீராஜரத்தினம் ஸ்வாமிகளுக்கும் மக்களே பட்டம் சூட்டினார்கள். அதாவது ஸ்ரீமஹாதேவையா ஆச்சாரிக்குப்** பிறகு இம்மடத்தில் சமகாலத்தில் **ஸ்ரீராஜமாணிக்கம்** மற்றும் **ஸ்ரீராஜரத்தினம் என்று இரண்டு பேர் மடாதிபதியாக வாழ்ந்தார்கள்.** (விஜயகுரு, தேவசேனாதிபதி, கமலமூர்த்தி, சூர்யமூர்த்தி சந்ததிகள்) ஆத்தூர், புதுப்பேட்டை, தட்டான்சாவடி என்ற 3 1/2 ஏக்கர் நிலப்பரப்பை – நந்தவனம் சார்ந்தது பிரிட்டிஷ் அரசாங்கம் செப்புப்பட்டயம் மூலம் மடத்துக்கு மானியமாக வழங்கியது. இந்த 3 1/2 ஏக்கரில் மடம், நந்தவனம், யந்திரங்களைப் பூஜிக்க கோவில் என்று இருந்தன. (தற்போதைய அரசாங்க பஞ்சு மார்க்கெட்). இதற்குள் தனியாக 13 1/2 சென்ட் நிலத்தில்தான் ஜீவசமாதியும் கோவிலும் இன்றும் உள்ளன. (படம் 30–பக்.136)

ஸ்ரீமத் கமலமூர்த்திஸ்வாமிகள் வணங்கிய ஸ்ரீகமளீஸ்வரர் (படம் 32–பக்.150) என்று ஆயிரமாண்டுக்கும் முந்தைய ஸ்வாமிகளுக்கு இங்கே (அனுஷ்டானத்தில்) பூஜை செய்து வந்தார்கள். அதன் அருகே கட்டடத்தின் நடுவே தான் கமலமூர்த்திஸ்வாமிகள் ஜீவசமாதி ஆன இடம். இதற்கும் தெற்கே தான் மஹாதேவஸ்வாமிகள் (1958) ராஜரத்தினம் ஸ்வாமிகள் (1977) ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகள் (1990) என்று தென்கிழக்கிலிருந்து, தென்மேற்காக வரிசையில் சமாதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மடத்தின் தோற்றம் தலைமையும், கிளைகளும்

விஸ்வகுலகுரு சிதம்பரம் மௌனகுருஸ்வாமிகள் **சபாபதிஸ்வாமிகளின்** முன்னோர் குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. சபாபதிஸ்வாமிகள் சிதம்பரத்தில் தோற்றுவித்த அந்த விஸ்வகுல

மடத்தின் தலைமை ஸ்தானம் காலப்போக்கில் கேட்பாரற்ற நிலையில் தற்சமயம் சிதம்பரம் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகமாகச் செயல்பட்டு வருகிறது என்று கேள்வி. பின்னாளில் **ஸ்ரீஉலகநாத ஆச்சாரி,** திருமதி. உலகநாயகி அம்மாளுக்கும் வாரிசு இல்லாத நிலையில், பட்டத்து வாரிசான தாயார், குருசுவாமி என்ற இயற்பெயருடைய கமலமூர்த்தியை சிதம்பரம் தாமரைத் தடாகத்தில் கண்டு, தத்தெடுத்து வளர்த்தார்கள். (படம் 33–பக்.150).

ஸ்ரீபூலோக கைலாச சிதம்பர மடாதீஸ்வர அனந்த கிரிவாச ஸ்ரீமத் கமலமூர்த்தி மௌனகுரு ஸ்வாமிகள். ஸ்ரீசிதம்பர புண்யநகரில், ஸ்ரீநடராஜப் பெருமாள் ஆளுகையில் தேரடிப்பிள்ளையார் கோவில் தெருவில் ஸ்ரீகமலீஸ்வரர் ஆலயம் (படம் 32) உள்ளது. சிதம்பரம் கோவில் தாமரைக்குளத்தில் சித்தர் ஒரு சித்து விளையாடினார். தாமரைக்குளத்தில் சூரிய உதயகாலத்தில் அழகிய குழந்தை தோன்றியது. இதையறிந்த தீட்சிதர்கள் பூர்ணகலசம் வாத்யம் என்று அனேகர் படைசூழ தாமரைக்குளம் வந்து குழந்தையைக் கண்டு மகிழ்ந்தனர். திடீரென வந்த அசரீரீ இவ்வூரில் மனுகுலத்தவரான உலகநாதஆச்சாரியும் அவர் இல்லாள் உலகநாயகியும், நம்மைக் குறித்து தவம் செய்து சந்தான விருத்தி வேண்டினர். இக்குழந்தையை உலகநாதஆச்சாரி தத்தெடுத்து வளர்த்து நமது சந்நிதானத்தில் சேர்க்கக் கடவுது என்பது அசரீரீ.

அக்குழந்தை தாமரைக் குளத்தில் பிறந்ததால் கமலமூர்த்தி என்றும், குளத்தில் மௌனமாக விருந்ததால் மௌனகுரு என்றும் பெயரிட்டு மகிழ்ந்தார்கள்.

இப்பாலகன் பதினாறு வயதுக்குள் பலவும் கற்றுணர்ந்து பாண்டியத்யமடைந்தார். பிறகு பஞ்சப் பிரம்ம குலம் தழைத்தோங்க மந்திரம், எந்திரம், தந்திரம், கற்றுத் தெளிந்து பிறருக்கு உபதேசம் சீர்திருத்தங்கள் செய்து நடராஜமூர்த்தியின் திருவடி நிழலையடைந்தார்.

இன்றும் சிதம்பரத்தில் மௌனகுரு ஸ்வாமிகள் மடமென்றும் கமலீஸ்வரமூர்த்தி கோவிலொன்றும் இருக்கிறது.

ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகள் வழியில் பலர் பட்டம், பட்டாபிஷேகம் செய்து கொண்டு சிவ சேவை செய்து வந்தனர்.

சிஷ்யயாத்திரை செய்து வந்த காலத்தில் சேலம் ஜில்லா ஆத்தூர் தாலுகா கஸ்பா அனந்தகிரியானது வசிஷ்டா நதிக்கரையில் அமைந்த திவ்ய ஷேத்திரம் என்று எண்ணி, அங்கே வாசம் செய்து ஸ்ரீகமலமூர்த்தி மௌனகுரு ஸ்வாமிகள் ஆதீனத்தை ஸ்தாபித்தார்கள்.

ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் என்ற சந்நியாசி, மடாதிபதிக்கு, அவர் தம் தவவலிமை, அருளாசியின் பயனாகச் சிதம்பரமடத்துக்கு மானியமாகக் கிடைத்தது தான் சேலம் ஜில்லா ஆத்தூர் புதுப்பட்டினம், ராமநாயக்கன்பாளையம் ஜமீன் சொத்து 9 ஏக்கர் நஞ்சை. ஆக சிதம்பரத்தில் மடம் உதயம் ஸ்தாபனம், ஆனாலும் மடத்தின் தலைமைச் சேலம் ஆத்தூர் ராமநாயக்கன் பாளையமும் அதன் பின்னர் ஆத்தூர் தட்டான் சாவடி என்ற காமாட்சியம்மன் நகரும்தான்.

சிதம்பரம், சேலம், ஆத்தூர் மடத்தின் சொத்தும் பிற கிளைகளும்:

மடாதிபதிகளின் பிரதேச யாத்திரையின்போது சுவாமிகளின் சித்து தவவலிமை செய்துகாட்டிய அற்புதங்கள், அருளாசியுரைகள், ஆன்மீக சமூக நற்சேவைகளைப் பாராட்டி ஜமீன்தார்கள், சமூகப் பிரபலங்கள் ஸ்வாமிகளுக்கு மடத்தின் பெயரில் எழுதி வைத்த சொத்தின்படி ஆங்காங்கே கிளைகள், மடாலயங்கள், தோற்றுவிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டன. அதன் விபரங்களாவன.

1. சிதம்பரம் – பெரியமடம். வீடு – மூன்று தலைமுறை சொத்து – கைமாறி – கம்யூனிஸ்டு கட்சி அலுவலகமாக உள்ளது என்று அறியப்படுகிறது.
2. சேலம், ஆத்தூர் – ராமநாயக்கன்பாளையம் நஞ்சை 9 ஏக்கரில் தலைமை மடம் – 5 ஏக்கர் தச்சர், கொல்லர்களுக்கு தானமாகவும், மானியமாகவும் பின்னாளில் கை மாறி கரைந்தது.
3. ஆத்தூர் தட்டான்சாவடி 31/2 ஏக்கர் சொத்து (ஜீவசாமதியுள்ள 131/2 செண்ட் உள் அடக்கம்) தற்சமயம் தமிழகரசு வேளாண்மை கூட்டுறவு பருத்தி உற்பத்தி விற்பனை சங்க வளாகமாக கை மாறியுள்ளது.
4. 9–5 = 4 – 3 1/2 = 1/2 மீதமுள்ள 1/2 ஏக்கர், 1 ஏக்கரில், 4 பங்காக மடமும் வீடும் என்றும் சகோதரர்கள்

பிரித்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். இதுவே தற்போதைய டோர் நம்பர் 18/18 A – காமாட்சியம்மன் கோவில் தெரு, தலைமை மடாலயம்.

5. திருச்சிராப்பள்ளி – பெரம்பலூர் நெடுஞ்சாலையில் பாடாலூர், சிறுவாசச்சூரில் மடமும், வீடும் இருந்தது. 1988ல் அண்ணன், தம்பி, பங்காளிகள் கை மாற்றினார்கள்.
6. தஞ்சாவூர் கருந்தட்டாங்குடியில் ஸ்ரீராஜரத்தினம் ஸ்வாமிகளின் மகன் சூரியமூர்த்தியின் காலத்தில் கைமாறியது. இப்பொழுது எந்தக் கிளையும் இல்லை. சொத்துமில்லை.
7. ஜீவ சமாதி 13 1/2 செண்ட்டும் தாவாவில் இருந்து, வழக்கும் தோற்றுவிட்டது. காமாட்சிஅம்மன் கோவில் தெரு கதவு எண் 18 மற்றும் 18 A மட்டும் தான் மடத்தின் வாரிசுதாரர்கள் வசித்து வருவதாலும் ஆண்டுக்கு ஒருமுறை குருபூஜை செய்விப்பதாலும் மடத்தின் நினைவாகவுள்ளன.

சிறப்புகள்:

ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகள் ஈஸ்வர வருஷம் 1937 ஆடி 27ல் ஸ்ரீரங்கம் விஜயம். நகர்வலம் பாதபூஜை அம்பிகை பூஜை சிறப்பாக நடந்தேறியது. கோவிலில் 11–08–1937ல் சிறப்பு பூஜை (அச்சடிக்கப்பட்ட நோட்டீஸ் உள்ளது.) திருச்சி துறையூர் அருகேயுள்ள தம்மம்பட்டியில் வாழ்ந்த கந்தசாமி ஆச்சாரி, ஸ்ரீரங்கம் பிரம்மஸ்ரீ S.P.ஸ்ரீனிவாச ஆச்சாரி, பாடாலூர் பிரம்மஸ்ரீ நடேசன் ஆச்சாரி அவர்கள் ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகளின் உயிலைப்படித்து உயிலின் படி ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகள் பட்டம் சூடுவதற்கு உடன் இருந்து உதவினர். அப்போது பட்டம் கிடைக்கவில்லையே என்ற விரக்தியில் கூட்டுக்குடும்பத்துக்குள் குழப்பம் பிறந்தது. காழ்ப்புணர்ச்சி பகையாக மாறியது.

மரியாதையும், சமாதி வரிசையும்:

தட்டான்சாவடியிலுள்ள அந்த தமிழ்நாடு கூட்டுறவு பருத்தி உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சங்கக் கட்டடத்திற்குள்

13 1/2 சென்ட் இடத்தில் தான் சமாதிகள் உள்ளன. அங்கு தான் குருபூஜையும் தொடர்ந்து நடக்கிறது. (படம் 40–பக்.136)

கமலமூர்த்தி ஸ்வாமிகள் ஜீவசமாதிக்குத் தேர்ந்தெடுத்த அதே இடத்தில் தான் வரிசையாக மேலும் மூன்று சமாதிகள் உள்ளன. கமலமூர்த்தி ஸ்வாமிகள் வணங்கி வந்த ஸ்வாமிகளின் சமாதி தான் மூலஸ்தம்பம்.

ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகள் 1938–புரட்டாசி 4ம்நாள் பிரகடனம் செய்து ஜீவசமாதியடைந்தவர்கள்.

ஸ்ரீமஹாதேவஸ்வாமிகள் 1958ல் ஆடி 20ம் நாள் முக்தி அடைந்தார்கள்.


ஸ்ரீராஜரத்தினம் ஸ்வாமிகள் (படம். 71–பக்.150) 1977 ஆடி 6ம் நாள் உடுமலைப்பேட்டையில் முக்தி அடைந்தார்கள். பூதவுடல் ஆத்தூர் தட்டான் சாவடிக்குக் கொண்டு வரப்பட்டு உரிய மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகள் 1990ம் ஆண்டு தை 8ம் நாள் திருச்சி ஸ்ரீரங்கத்தில் நிஷ்டையில் முக்தியடைந்தார்கள். தட்டான்சாவடியில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஸ்ரீராஜகுருஞானமூர்த்தி ஸ்வாமிகள் (படம். 36-பக்.136)

ஸ்ரீஞானமூர்த்தி (பூர்வீகப் பெயர் பெருமாள்) ஸ்வாமிகள் கருந்தட்டாங்குடி மடத்தில் வாசம். ஸ்ரீராஜகுரு என்ற கமலமூர்த்திஸ்வாமிகள் விருத்தாச்சலம் மங்களம்பேட்டை அருகிலுள்ள கர்ணத்தம் ஊரில் திருமதி.விசாலாட்சியை இரண்டாம் தாரமாக மணந்தார். ஆண்வாரிசு இல்லை. விசாலாட்சி வழியில் சுவீகாரம் எடுத்ததே ஸ்ரீஞானமூர்த்தி. கர்ணத்தம் ஊருக்கருகில் காட்டுப்பரூர் கிராமம் ஆதிகேசப்பெருமாள் கோவில் தெரு அருகில் கஸ்தூரி என்பவர் திருமதி.உதயம்பாளின் தம்பி பட்ராசின் மனைவி. இன்றும் குப்பம்மாள் என்ற கஸ்தூரி மகள் வாழ்கிறார். இந்த ராஜகுரு என்ற ஞானமூர்த்தி 35வது பட்டமாக 18–02–1929ல் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டார். 1988ல் புரட்டாசி ஏகாதசி வியாழனன்று (06–10–1988)ல் தொளாரில் இயற்கை எய்தினார். (எங்கு, யார், பட்டாபிஷேகம் செய்வித்தார்கள் என்ற விவரம் நேரிலும், போட்டோவிலும் கிடைக்கவில்லை.)

SHEET 12













திருமதி - திரு.ஆறுமுகம் - திருச்சி











ஸ்ரீமத்கமலமூர்த்தி ஸ்வாமிகளின் அருளாட்சியில் சில நிகழ்வுகள்:

ஆத்தூர் தட்டான்சாவடி காமாட்சியம்மன் கோவில் தெரு மடத்தில் புரட்டாசி 27 குருபூஜையன்று தினமும் 10 மூட்டை அரிசி சமைத்து அன்னதானம் நடந்த அளவுக்குப் பக்தர்கள் கூட்டம், அந்நாளில் இருந்தது.

ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகளின் பட்டினப்பிரவேசம் **1937ல் திருச்சி ஸ்ரீரங்கத்தில்** நடந்தது. இவ்விழாவிற்கான பத்திரிக்கையும், போட்டோவும் சம்மந்தபத்தர்பிள்ளை சேகரின் சித்தப்பா வீட்டிலுள்ளது என்று கூறப்படுகிறது. திரு.சேகர் மார்ச் 8ஆம் தேதி 2018ல் மரணமடைந்தார்.

ஸ்ரீராஜமாணிக்கம் என்ற ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகளுக்கு நீண்டகாலம் சந்தானபாக்கியம் கிட்டவில்லை. ஸ்ரீசக்கரம் செய்து, கலச ஆவாஹனம் செய்து பக்தியுடன் பூசித்த வேளையில், கலசத்தில் இருந்த தேங்காய் தொடர்ந்து 12 வருடம் கெடாமல் இருந்து ஸ்வாமிகளுக்கு நல்சகுனம் வழங்கியது. அவ்வாறே 12 வருடம் கழித்து முதல் பெண்குழந்தை பிறந்தது. பாரதி என்று பெயர் வைத்தார். அதன் பிறகு தான் கமலகுரு பிறந்தார்.

ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகள் வாய்மொழி உத்தரவாக அவ்வூர் காமாட்சியம்மன் கோவில் தர்ம கர்த்தாவான திரு.கணபதி ஆச்சாரிக்கு தட்டான்சாவடி 31/2 ஏக்கர் நிலத்தைப் பராமரித்து அந்த வருமானத்தில் ஸ்வாமிகளுக்குப் பட்டினப்பிரவேசம் செலவு, நவராத்திரி கொலு, ஊருக்குத் திரும்பு முன் அந்த கணபதி ஆச்சாரி மடத்துச் சொத்துக்களை வேறு தனி நபருக்கு விற்றுவிட்டார். அதுவே இன்று தமிழக அரசு கூட்டுறவு பருத்தி உற்பத்தி விற்பனைக் கூடமாக வளர்ந்துவிட்டது.

ஸ்ரீகமலமூர்த்தி மற்றும் ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகளின் பிரதேச யாத்திரை அதிகமாக புதுக்கோட்டை, ஸ்ரீரங்கம், திருச்சி, முசிறி, சிறுவாச்சூர், சேந்தமங்கலம், சின்னதாராபுரம், கிணத்துக்கடவு என்றும் மறுபக்கம் சிதம்பரம் வழி என்றும் அமைந்திருந்தன. **சில காலம் தென்ஜில்லா பயணம் செய்தார். நெல்லை மடம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது.**

ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகளின் உயில் சாசனப்படி இந்த சிதம்பர மௌனகுரு ஸ்வாமிகள் மடத்திற்கு ஐந்து இடத்தில் கிளைகள் இருந்ததாக அறியப்படுகிறது. சிதம்பரம், சேலம், ஆத்தூர், ராமநாயக்கன்பாளையம், ஆத்தூர் மடம் (நந்தவனம்), சிறுவாச்சூர், தஞ்சை கருந்தட்டாங்குடி.

ஸ்வாமிகள் திருச்சி ஸ்ரீஆறுமுகம் (படம் 36, 38–பக்.136) மற்றும் ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாச ஆச்சாரிக்கு எழுதிய ஸ்ரீமுகம் என்ற கடிதம் பாதுகாக்கப்படுகிறது. கமலமூர்த்தி ராஜமாணிக்கம் ஸ்வாமிகள் பாடிய தமிழ்கவிதைகள் ஏராளம் (படம் 37–பக்.150) கமலமூர்த்தி ஸ்வாமிகளின் அருமை, பெருமை, புகழ்பற்றிப் பலரும் பாடியுள்ளார்கள்.

குருபூஜை விபரம்:

சேலம் ஆத்தூர் காமாட்சியம்மன் கோவில் தெரு தட்டான் சாவடியில் குருபூஜை நடந்து வருகிறது. 1970 முதல் ஆத்தூர் மடத்தில் தொடர்ந்து குருபூஜை நடக்கிறது. பின்னாளில் ஊர்மக்களின் ஒத்தாசையுடன் திரு.விஜயகுரு, (படம் 34–பக்.150) திரு.கமலகுருவின் முயற்சியால் சற்று விரிவாக குருபூஜை அன்னதானம் என்று நடக்கிறது.

குருபூஜை நாளன்று ஸ்ரீமத் கமலமூர்த்திஸ்வாமிகள் திருவுருவப்படம் மாட்டு (படம் 39–பக்.136) வண்டியில் வைத்து தெருவில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறது– மடம் வீட்டிலிருந்து பஞ்சு மார்கெட்டுக்குள் அன்றுமட்டும் வாரிசுகளும், பக்தர்களும் சென்று 13 1/2 செண்ட் சமாதியில் குருபூஜை செய்து திரும்பிவர அனுமதிக்கப்படுகின்றனர்.

வழக்கு எண் O.S.840/1993ல் வெளியான தீர்ப்பின்படி கரைந்து கொண்டிருக்கும் மேற்படி சமாதி கோவில் கட்டிடம் புதுப்பிக்க அனுமதியில்லை என்று ஆணையிடப்பட்டுள்ளது.

மீண்டும் வீட்டிற்குள் தெருவெளியில் மட்டும்தான் குருபூஜை என்ற நிலை திரும்பிவிடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

குருபூஜைவிபரம்:

கி.பி. 1891ல் ஸ்ரீமத் பூர்ணானந்த ஸ்வாமிகள் மறைவு.

கி.பி. 1938ல் ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகள் புரட்டாசி 27ல் ஜீவசாமி.

கி.பி.1958ல் ஸ்ரீமஹாதேவையாஸ்வாமிகள் ஆடி 20ல் மறைவு

கி.பி. 1977ல் ஸ்ரீராஜரத்தினம் ஸ்வாமிகள் ஆடி 6ல் மறைவு.

கி.பி.1990ல் ஸ்ரீராஜ மாணிக்கம் ஸ்வாமிகள் தை 8ல் மறைவு.

இவ்வாறாக ஐந்து மடாதிபதிகள், குருமார்கள் முக்தியடைந்திருந்தாலும் புரட்டாசி 27ல் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் குருபூஜை விழா நடைபெற்று வருவதாக வரவு, செலவுக் கணக்கும் வெளியிடப்படுகிறது. மடத்து வாரிசுகளில் தற்போதைய **மூத்த தலைமை திரு.விஜயகுரு அவர்கள் இக்காலங்களில் குருபூஜை ஏற்பாட்டுக்கு முனைப்புக் காட்டுகிறார்.**

பிறர் விஜயம்:

2015, 2016, 2017ம் ஆண்டு குருபூஜையின்போது திருவண்ணாமலை சீனந்தல் மடாதிபதி ஸ்ரீசிவஷண்முக ஞானாச்சாரியார் ஸ்வாமிகளும் நேரில் இங்கு வந்து கலந்துகொண்டு குருவணக்கம் செய்திருக்கிறார்கள். அதாவது திரு.சிவஷண்முக ஞானாச்சாரியாரின் சிறுபிள்ளைப்பிராயத்திலிருந்து ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகளையும், ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகளையும் நேரில் கண்டு ஆன்மீகமாகப் பழகிய குருபீடப் பாசத்தை இந்நன்னாளில் குருபூஜை என்று நன்றி செலுத்தும் விதமாக வந்து செல்கிறார்.

சிறப்பு குறிப்பு:

காஞ்சி பரமாச்சாரியார் பெரியவர் ஸ்ரீசந்திரசேகர சரஸ்வதி அவர்கள் சீனந்தல் மடத்தின் நிஷ்களா (ஜீவசமாதி) உயர்வையும், சேலம், ஆத்தூர் மடத்தின் ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகளின் நிஷ்களா (ஜீவசமாதி) உயர்வையும், நினைந்து மனதாரப்பாராட்டி வியந்ததுண்டு என்றும் ஒருகாலகட்டத்தில் மேற்சொன்ன இரு விஸ்வகர்ம மடங்களையும் காஞ்சி மடத்துடன் எடுத்துக்கொள்ள விட்டுத் தருமாறு கரூர் முகாமில் கேட்டதாகவும் அதற்கு நம் ஸ்வாமிகள் விரும்பவில்லை, ஒத்துக்கொள்ளவில்லை என்றும் நம்பத்தகுந்த செவிவழிச் செய்திகளுண்டு.

ஜீவசமாதி ரகசியம்:

ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகள் தவவலிமை, சித்து விளையாட்டுக்களில் அதிகம் ஈடுபாடும், பாண்டித்யமும் கொண்டிருந்தார்கள். நீலகிரி சிறுமுகை தொழிற்சாலை நச்சுப்புகையை உள் சுவாசிக்கும் நிலை ஏற்பட்டதால் தமது வாசி, ஓடுதல் மூச்சுத் திறனில் குறை ஏற்பட்டதாக உணர்ந்தார்கள். அது போலவே காஞ்சி பெரியவாளும் ஜீவசமாதி ரகஸ்யங்களைப் பற்றி ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகளிடம் விவாதிக்கும் போது "சந்நியாசி வாழ்வில் தமது 30 வயதுக்குள் குண்டலினியோகம், காயகல்பம் முழுமைப் பெற்றாலே ஜீவசமாதி என்ற தீர்க்க தரிசனம் அருளப்படுவார்" என்று கூறியதாகவும் செவி வழிச் செய்தியுண்டு.

தகனமா? சமாதியா?

முக்தியடைந்த மடாதிபதி தவயோகிக்கு எரிதகனம் செய்வது சிறப்பல்ல முழுசமாதியே சிறப்பு, உயர்வு என்றும் காஞ்சி பெரியவாளும் கமலமூர்த்தி, ராஜமாணிக்கம் ஸ்வாமிகளும் உரையாடிக்கொண்டார்கள் என்பது செவிவழிச் செய்தி (சாய்பாபா–சமாதி–ஸ்ரீசந்திரசேகரசரஸ்வதி ஸ்வாமிகள் சமாதி–ரமணமகரிஷி சமாதி அரவிந்தர் – அன்னை பாண்டியில் சமாதி. ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகள் சேலம் ஆத்தூரில் சமாதி)

சேலம் ஆத்தூர் சிதம்பரம் மடம் நிர்வாகம்: (படம் 39)

1938ம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ கமலமூர்த்தி ஸ்வாமிகள் ஜீவசமாதியடையும் தருவாயில் குழந்தை ராஜமாணிக்கத்திற்கு வயது 14/16. மடாதிபதியாகப் பட்டம் சூட்டப்பட்டும் மடத்தின் நிர்வாகப் பொறுப்பும் ராஜமாணிக்கத்திற்கு கார்டியன் என்ற பொறுப்பு ஸ்ரீமஹாதேவஸ்வாமிகள் வசம் இருந்தன. அதே சமயம் 7 வயதிலேயே ராஜமாணிக்கத்திற்கு பாலஸ்வாமிகள் என்று ஆட்சிப்பொறுப்பைக் கொடுத்தது. ஸ்ரீலஸ்ரீ கமலமூர்த்தி ஸ்வாமிகளின் வாக்குத்தவறாமையையும் பாலனுக்கு கார்டியனாக மஹாதேவ ஸ்வாமிகளை நியமித்தது மடத்தின் ஒட்டுமொத்த நிர்வாகத்தில் ஸ்ரீலஸ்ரீ கமலமூர்த்தி ஸ்வாமிகள் மிகுந்த அக்கறையுடன் நடந்து கொண்டதைக் குறிக்கின்றன.

ஸ்ரீலஸ்ரீ கமலமூர்த்தி ஸ்வாமிகள் நிஷ்களமாகும் (ஜீவசமாதி) நேரத்தில் தன்னுடனேயே 14 வயது ஆகும் வரை பாதயாத்திரை செய்தும் வேதஆகமங்களைக் கற்றவருமான ஸ்ரீராஜமாணிக்கத்தை மானசீகமாக ஆசீர்வசித்தார். மஹாதேவஸ்வாமிகளே மடத்துக்குப் பொறுப்பேற்று நடத்தச் செய்து ஆசீர்வதித்தார்.

ஸ்ரீமஹாதேவ ஆச்சாரி ஸ்வாமிகள் 1958ல் இயற்கை எய்தும் சமயத்தில் வாக்குத்தவறாமல் ஸ்ரீராஜமாணிக்கமே முழுப் பொறுப்பும் ஏற்கும் நிலை ஏற்பட்டது. மஹாதேவ ஆச்சாரியின் மறைவும் ராஜமாணிக்கம் பட்டமும், சொத்துக்கு முழுப்பொறுப்பும் ஏற்றதும் ஆத்தூர் மடம் சிதறிய தேங்காய் ஆனது, ஆம் மஹாதேவ ஆச்சாரிக்கு இரண்டு சம்சாரம். முதல்தாரம் ஆண்மகன் வாரிசுக்கும், இரண்டாம் தாரம் ஆண், மக்கள் வாரிசுக்கும் பட்டம், பதவி சொத்துக்குப் போட்டி என்ற பங்காளிச் சண்டையில் பகை முற்றியது. மடம் முறிந்து போனது.

கிரகஸ்தர் மடத்தில் மனைவி வழியில் இது போல் பிரச்சனைகள் உருவாகி மடத்துக்கு அவப்பெயர் வருவது நெல்லை மடத்திலும் நடந்தேறியது. ராஜரத்தினம் (என்ற பூர்ணானந்தம்) 1977ல் உடுமலைப்பேட்டையில் இயற்கை மரணமடைந்தார்.

வறுமைப்பிடியில் வாழ்ந்த இந்த நால்வரின் குடும்பம் ஆத்தூர் மட சொத்தில் (முதல் தாரம், இரண்டாம் தாரம் என்ற வகையில்) எப்படியும் காலூன்றி நிற்க வேண்டும் என்ற தொலைநோக்கு எண்ணத்தில் மறைந்த ஸ்ரீராஜரத்தினத்தின் பூதவுடலை சேலம் ஆத்தூருக்கே கொண்டுவந்து அதிக மரியாதையுடன் அடக்கம் செய்தார்கள்.

விதவையும் (மயிலாம்பாள்) 4 குழந்தைகளுமாக மடத்துக்குத் திரும்பி வந்தவர்களுக்கு ஸ்ரீராஜமாணிக்கத்தின் திருமதி. அனந்தலட்சுமியாரே முன்வந்து மடத்தின் வீட்டின் ஒரு பகுதியில் குடியமர்த்தி வாழவைத்தார்கள். மடம் இல்லை. **ஸ்ரீராஜமாணிக்கத்தின் ஒரே மகன் கமலகுருவுக்கும் ராஜரத்தினத்தின் நான்கு மகன்களுக்கும் மடத்தின் ஆன்மீக ஆச்சாரப் பழக்கமில்லை சமஸ்கிருதமும், வேதமும் தெரியாது.**

எனவே பிற சாதாரண விஸ்வகர்மாக்கள் போல் சம்பளத்துக்கு வேலை செய்து குடும்பம் நடத்தும் வழியில் இறங்கினார்கள். மடத்திலிருந்த பல்லக்கு, வெள்ளிப்பாத்திரங்கள், மறையலாயின. யந்திரங்கள் எழுதப்பட்ட தாமிரசெம்புப் பட்டயம் தகடுகள் அண்ணன், தம்பிகளுக்குள் இடம் மாறின. ராஜரத்தினத்தின் 4 மகன்களும் சம்பாதித்து பெரியப்பா ராஜமாணிக்கம் மடத்து சொத்தில் பெரும் பகுதியை விலை கொடுத்து படிப்படியாக வாங்கி பத்திரம் பதிந்து கொண்டு கதவு எண்.18 என்று வாழ்ந்து வருகிறார்கள்.

சிதம்பரம் மடாதீஸ்வரர் ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் - ஆத்தூர் மடம் வழக்கும், தீர்ப்பும் - சிறு குறிப்பு:

அசல் வழக்கு 192/2004, மாவட்ட உரிமையியல் நீதிபதி 26–10–2016, கமலமூர்த்தி விஜயகுரு, துரைராஜ் ஆச்சாரி v/s 8672 ஆத்தூர் விவசாய உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிமிடெட். இறுதி விசாரணை 05–10–2016.

வழக்குரையின் சுருக்கம்:

வாதி தன் வழக்கை தங்களுக்காகவும், ஆத்தூரிலுள்ள விஸ்வகர்ம சமூகத்திற்காக அதன் பிரதிநிதிகள் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளனர்.

சர்வே எண் 571/3ல் 3.48 ஏக்கர் 19ம் நூற்றாண்டு முதலே இந்த சொத்து ஆத்தூர் விஸ்வகர்மா சமூகத்தினர் அனுபவத்தில் தான் இருந்து வந்தது. 1870 முதல் நந்தவனம் என்றே அரசு ரிஜிஸ்டரில் பதிவாகியுள்ளது. சமாதி மடாலயமான 13 1/2 செண்ட் ஆத்தூர் நகராட்சி வரி விலக்கு அளித்துள்ளார்கள். 09–12–1968ல் கணபதி ஆச்சாரி மனைவி தங்கம்மாள் மற்றும் சிலரிடமிருந்து கிரயப்பத்திரம் மூலம் விவசாய உற்பத்தியாளர் சங்கம் கிரயம் பெற்றது. பூஜை செய்யும் உரிமை தவிர வேறு எதையும் வாதி கோர இயலாது. 1968 முதல் பிரதிவாதி தான் சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார். சொத்துக்கு **உரிமை மூலம் உள்ளது** என்பதை ஆவணம் மூலம் வாதி நிரூபிக்க தவறிவிட்டனர். சமாதி சிதலமடையும் வரையில் சமாதியில் பூஜை செய்வதற்கும் அங்கு செல்வதற்கும் பாதை உரிமையும் வாதியின் சமூகத்திற்கு உள்ளது.

உரிமைபத்திரம், அனுபவப்பாத்தியதை இரண்டும் உள்ளதால் மொத்த சொத்துக்கும் உரிமை பிரதிவாதிக்கே உள்ளது.

பிற சிறப்புகள்:

சேலம் ஜில்லா தாலுகா ஓலைப்பாடி நகர ஊர்வலம் வழக்கும் தீர்ப்பும்.

06–09–1910ல் தீர்ப்பு: 13–07–1910ல் கீழ்கோர்ட் தீர்ப்பை நிராகரித்து ஊர்வலத்தை அனுமதித்த விபரம்:

விபரம்:

ஓலைப்பாடி கம்மாளர்கள் தங்கள் மதகுரு, ஜகத்குரு, ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகளை ஊருக்குள் பிரதான வீதிகளில் ஊர்வலமாகப் பட்டினப்பிரவேசமாக அழைத்துச் செல்வதற்கு அவ்வூரிலுள்ள பிற ஜாதியினர் அனுமதி மறுத்து தடை செய்தார்கள்.

கீழ்கோர்டாரும் அனுமதி மறுக்கவே, ஓலைப்பாடி கம்மாளர்கள், மாவட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். இரு பக்க வாதத்தையும் ஆராய்ந்து தெளிந்தபின் டெபுடி மேஜிஸ்திரேட் மாண்புமிகு சேட்டர்டன் வழங்கிய தீர்ப்பின் சாராம்சம்: 13–07–1910ம் நாள் கீழ்கோர்ட்டு 144 தடையுத்தரவு பிறப்பித்து ஓலைப்பாடி கம்மாளர்களது குருவின் ஊர்கோலத்துக்குத் தடைவிதித்தது செல்லாது. கம்மாளர்கள் தாழ்ந்த வகுப்பினர் அல்லர். அவர்களது ஊர்கோலத்தினால் யாருக்கும் இழிவும், அவமானமும் ஏற்படப்போவதில்லை. ரஸ்தாவானது பப்ளிக் வீதி அதில் எல்லா ஜாதியரும் இலவசமாய் நடமாட சுதந்திரம் பெற்றுள்ளனர். கலகம் ஏற்படும் என்று தெரிந்தால் காரணமானவர்களை ஜாமீனுக்குட்படுத்த வேண்டுமேயல்லாது ஊர்கோலத்தை தடை செய்வது நியாயமற்றதாகாது. (இந்தத் தீர்ப்பு, பாடல் விபரங்களை, பெங்களூரு பிரம்மஸ்ரீ வை.சுப்ரமணியன் ஆச்சாரி அவர்களிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம்).

இதன் பிறகு கன்யா மாதம் 8ம் தேதியன்று அதிக விமர்சையுடனும், வாத்ய கோஷ்டியுடனும் உற்சவம் நடத்தி, ஸ்வாமிகளிடம் பிரசாதம் பெற்றுக்கொண்டார்கள்.

சிஷ்யர்களை அரவணைத்துப் பாதுகாத்தல்:

சிதம்பரம் நடராஜரின் திருவருளால் துறவியாகவே வாழ்ந்து பல அற்புதங்களை நிகழ்த்தியும் மந்திர, யந்திர, விபூதி பிரசாதத்தால் குழந்தைகளுக்குண்டாகும் கிரஹதோஷத்தை நீக்கியும், ஸ்திரீ புருஷர்களுக்குண்டாகும், சூனியம், வைப்பு, ஏவல் முதலிய தீமைகளை நீக்கியும், பைத்தியம், வெறி முதலிய குறைகளைப் போக்கியும் மலடிக்கு சந்தான விருத்தி, மோடியாயிருக்கும் மாதர்க்கும் ருதுவர்த்தினி உண்டாகச் செய்தல் என்று பலவகை மனிதநேயச் செயலில் ஈடுபட்டு பக்தியை வளர்த்தார்.

போலிக்கு வேலி:

பிற போலி குருமார்களைப் போல கள்ளவேடம் புனைந்து படோடாபஞ் செய்து பிச்சா, தட்சணை பெற்று மது, மாமிசம், மங்கைக்கு பங்கிட்டுக் கொடுத்து வாழ்நாளை வீழ்நாளாய் செய்யாமல்..., உண்மையான சிவவேடம் தரித்து உணவு ஒழித்து பால், பழம் அருந்தி, தினமும் அனுஷ்டானம் யோகம், தவம் என்று வாழ்ந்து சந்நியாசியாய் உலா வந்து செயல்பட்டார்.

பொறாமை:

அருள் உண்மை விளக்கப்பிரகடனம். (27–06–1892ம் ஆண்டு, நந்தன வருடம் ஆனி 15ல்) சேலத்தில் அச்சிடப்பட்டு அனந்தகிரி ஸ்தலத்தில் வெளியான பதிப்பு:

ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் தட்சிணாசேஷ்த்திர சிஷ்யாத்திரை செய்து பெரும் சிறப்பும், பெருமையும் சம்பாதித்த காலத்தில் ஸ்ரீமத் பரசமயகோளரிநாதஸ்வாமிகள் ஆதீனம் திருநெல்வேலியிலிருந்து பலரால் கேள்விப்பட்டு சிதம்பரம் ஸ்வாமிகள் மீது பொறாமைப்பட்டு தம்மைச் சார்ந்த கம்மாளருக்கு பல வகையாகப் போதித்தும், வதந்திகளை உண்டாக்கியும், நல்லெண்ணத்தைக் கெடுக்கும் முயற்சி தொடர்ந்தது. அப்போது பாளையங்கோட்டை பஞ்ச பிரம்மசந்ததி சபையினர் சிதம்பரம் ஸ்வாமிகளது ஸ்தலங்களிலிருந்து அனுப்பிய கடிதங்களையும், ரிக்கார்டுகளையும் பார்வையிட்டுச் சந்தேகம் தெளிந்தார்கள். வதந்தியும், பொறாமையும் தேவையற்றவை என்று உண்மையைப் புரிந்துகொண்டபின் சிதம்பரம், ஆத்தூர் சென்று ஸ்வாமிகளுக்கு

மஹோத்சவம் செய்வித்து, காணிக்கையும் கொடுத்து மங்களாசீர்வாதம் பெற்று மகிழ்ந்தார்கள். இது நடந்தது 15–11–1891 பாளையங்கோட்டையார் செய்த பைசல் தீர்ப்புக்கு விரோதமாய் கையொப்பமிட்டு அவ்வாண்டு மார்கழி 30ம் நாள் ஒரு தனிப் பத்திரிக்கை வெளி வந்தது.

சிஷ்யர் பட்டியல்: புதுமையான பேரேடு:

அனந்தகிரி ஆதீனத்தில் சேலம் ஜில்லா ஆத்தூர் தாலுகாவில் கிராமந்தோறும் மனு, மய, துவஷ்ட விஸ்வக்ஞ என்று **கோத்திர வாரியாக ஆச்சாரிகளின் பெயரைப்** பட்டியலிட்டு பேரேடு ஒன்றையும் நந்தன வருடம் ஆனிமாதம் 15ம் தேதியில் தயாரித்து வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு கிராமங்களில் பரவிக் குடியிருக்கும் பஞ்சப்பிரம்ம சந்ததிகளின் பெயர் பட்டியல் தொகுப்பு அந்நாளில் எப்படியெல்லாம் பயன்பட்டதென்று எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

குரு, சிஷ்ய உறவு, பழக்கம் உணர்வு எப்படியெல்லாம் மேம்படவேண்டும் என்ற யுத்தியைக் கையாண்ட விதம் நம்மை யோசிக்க வைக்கிறது. பக்தி என்பது புற உணர்வு உறுப்புக்களை (கண், காது, மூக்கு, வாய், தோல்) அனுசரிப்பது. ஆழ்மனம் உள்மன உணர்வைத்தட்டி எழுப்புவது ஊட்டி மேம்படுத்திட திக் விஜயம் என்ற பிரதேசயாத்திரையும் அச்சமயம் அணிவகுக்கும் பல்லக்கு, மேளா, பரிவாரக்குடைகள், பஜனைகோஷ்டிகள், ஜவான்கள், உபாசனாமூர்த்தியும் அலங்கார அபிஷேகப் பொருட்கள், விபூதி, குங்குமப்பிரசாதம் என்ற உற்சவக்கோலம் (அன்று பல்லக்கு, மேனா, குதிரை, மாட்டுவண்டி...... இன்று கார், ஏரோபிளேன்) **பாதபூஜை, உபநயனம்,** ஊர்பஞ்சாயத்து மங்களகாரியங்களுக்குண்டான குரு காணிக்கை என்று ஒரு வகையான வசூல், நிதி ஆதாரம் திரட்டுதல் (படம் 35–பக்.150) (இக்காலத்து ஜி.எஸ்.டி. டோல் கேட் வரி போல)

இதன் மூலம் ஆண், பெண் குழந்தைகள் அனைவரது ஈடுபாட்டையும் கவர்ந்து அரவணைத்தல்.

நிதி நிர்வாகம் : ஆதாரம் இதோ:

சிஷ்யர்கள் பாதுகாப்பு, குருபாத காணிக்கையாக இல்லறத்தில் இருப்பவர்களை குடும்பத்துக்கு **ஆண்டுக்கு ஏழு ரூபாய் ஐம்பது**

பைசா வீதமும், மணமாகாத பிரம்மச்சாரி ஆள் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூபாய் மூன்றும் எழுபத்தைந்து பைசாவும் ஆதீனத்திற்கு சமர்ப்பணம் செய்ய வேண்டும். மடத்தில் தேவதா அர்ச்சனைக்கு **ஒரு நாளுக்கு ரூபாய் பதினைந்து** (ப37–பக்.150), செலுத்த வேண்டும் (இன்று பெரிய கோவில்களில் அபிஷேகம், அர்ச்சனைக்கு 100, 200, 1000 என்று வசூலிப்பது போல) இதைப்போன்று சற்று விரிவான விபரமடங்கிய பட்டியலை, நெல்லை பரசமயகோளரிநாத ஆதீனர் ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள் வெளியிட்டிருந்ததைக் காணலாம்) அதாவது **சுத்த பரவச நிலையில் சார்ந்து சித்தியடைந்த பரம புருஷர்கள் விஸ்வகுல மேன்மைக்காக நிர்வாகம் செய்த முறையே இது.** (ப111–பக்.235)

மொழிவளமும், கவிநயமும்:

ஸ்ரீமத் கமலமூர்த்தி, ராஜமாணிக்கம் ஸ்வாமிகள் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஸமஸ்கிருதம், உருது என்று பல மொழிகளைப் பேசியும், எழுதியும் வந்துள்ளார்கள். தமிழில், ஞானசூத்திரத்திரட்டு மோளக்கும்மி சிவசக்தி பூஜை, தேவியெந்திர மாலிகை, சத்தியவேத சிவ ஞானபோதம், அகஸ்திய முனிவர் அருளிச் செய்த தீட்சை, கமலமாமுனிவர் அருளிச் செய்த ஞானம்.......... இன்ன பிற. (ப.35)

இவ்வாறே ஸ்ரீமத் ராஜமாணிக்கம் ஸ்வாமிகள் (படம் 37) அருளிச் செய்த பல பாடல்களும் (படம் 37–பக்.150) உண்டு. இன்று நமக்குக் கிடைத்திருப்பவை மிகச் சிலவே.

சிதம்பரம் மௌன மடாதீஸ்வரர் மடத்தின் பிற கிளைகளும், சொத்துக்களும்:

சிதம்பரம், தஞ்சை கருந்தட்டாங்குடி, பெரம்பலூர், சிறுவாச்சூர், சேந்தமங்கலம், தாராபுரம், சின்னதாராபுரம், கிணத்துக்கடவு, முசிறி, சேலம், ஆத்தூர். இவ்வளவு கிளைகளும் சொத்துக்களுமிருந்த சக்தி மிகுந்த, பழமையானமடம் **அனைத்தையும் இழந்து சமாதியில் குருபூஜை செய்வதற்கும் பிறரிடம் அனுமதி வாங்க வேண்டிய நிலைக்கு வெகு வேகமாகக் கரைந்துவிட்டது.**

குருமார்களின் முக்தியும், மடத்தின் சரிவும்:

வருடம்	குருஸ்வாமிகள்	மாதம்(நாள்)	வயது
1990	ராஜமாணிக்கம்	தை 8	68 வயதில் திருச்சியில்
1988	ராஜகுரு ஞானமூர்த்தி	6.10.88 புரட்டாசி ஏகாதசி	தொளாரில் (வறுமை)
1977	ராஜரத்தினம்	ஆடி 6	57வது வயதில் (ஆஸ்துமா நோய்) (உடுமலைப் பேட்டையில்)
1958	மஹாதேவய்யா	ஆடி 20	செங்கத்தில்
1938	கமலமூர்த்தி	புரட்டாசி27	ஜீவசமாதி சேலம் ஆத்தூர்

சிதம்பரம் ஆத்தூர் மடத்தைத்தோற்றுவித்தவர். சித்தர் புருஷர் தத்து எடுக்கப்பட்ட ஞானபாலகர் துறவியாக வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீமத் கமலமூர்த்தி மௌனகுரு ஸ்வாமிகள்/அவருடன் தோழமை பரமசிஷ்யராக வாழ்ந்த மகாதேவ ஸ்வாமிகளுக்கு இரண்டுதாரம் முதல் மனைவி மூலம் வாரிசு இரண்டாம் மனைவி மூலம் வாரிசு என்ற கிளைகள் தோன்ற ஆரம்பித்தனர்.

வாழையடி வாழை, வாழைக்குப் பின் வாழை, வித்தில்லா வாழை என்ற நிலை மாறி, விந்து.... சந்தான உறவு என்று வாரிசுகள் பிறந்தார்கள். இல்லறம், மனைவிமார்கள், என் குழந்தைகள், மூத்தவள், இளையவள் என்ற இல்லற மானிடப் பேதங்கள் தொடர்ந்து வளர்ந்தன. ஆதீன வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்தன. ஆன்மீகம் அனுஷ்டானம் பக்தி என்ற **ஆச்சார்யகுல அச்சு கழண்டுவிட்டதால்** வாழ்க்கைச் சக்கரம் தடம் மாறியது. மனதை விஸ்வகுல தர்மம் என்று ஓட்டிச்செல்லும் தேரோட்டி, சாரதி இல்லாததால், இலக்கு தெரியாமல் கடலில் தத்தளித்த கப்பல் போல, மடமே மூழ்கியது.

ஸ்ரீமத் ராஜமாணிக்கம் ஸ்வாமிகள்:

பிரதேச யாத்திரை செய்வதிலும், ஆன்மீக நெறிகளைப் பரப்புவதிலும் அதிக தீவிரம் காட்டினார்கள். மாட்டுவண்டி, ஜவான்கள் சகிதமாய் மாதக்கணக்கில் தொடர் பயணம் என்று சேவை செய்தார்கள்.

வாசம்:

யாத்திரை இல்லாத சமயம், காமாட்சியம்மன் கோவில் தெருவிலுள்ள பெரிய மடத்தில்தான் தங்குவது வழக்கம், திருச்சி, தஞ்சை, சேலம் என்ற பல பகுதியிலிருந்தும், நிலச்சுவான்களும், பக்தர்களும், நெல், அரிசி பிற தானியங்களை மடத்துக்கு அனுப்பி ஸ்வாமிகளைப் பேணி வந்தனர். குருகாணிக்கை என்ற ரொக்கம், காசு – என்பதை விஸ்வகுல மக்களிடம் மட்டுமே கோத்திர வாரியாகக் குறிப்பறிந்து பெற்றுக்கொண்டு ஆசீர்வதித்தார்கள்.

கவி மற்றும் இலக்கிய சேவை:

முகாம்களில் ஓய்வு நேரத்தில் (படம் 37–பக்.150) தமிழில் கவிகள் எழுதுவதும், வசனநடையில் கருத்துக்கள் எழுதுவதும் என்று பிரியமாய் இருந்தார்கள். இவர்களது பாடல்களும், வசனங்களும் தனித்தொகுப்பாக வெளியிடும் அளவிற்கு அதிகமுள்ளன. ஒரு சில மட்டும் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

தவ வலிமையால் செய்துகாண்பித்த அற்புதங்கள் மிகப்பல, அவற்றுள் ஊமையைப் பேச வைத்தது, கரூரில் கிராமத்துக்குள் பிரவேசிக்க அனுமதி மறுத்த துஷ்யர்களைப் பாடல்பாடி, கும்பத்தில் பூசை செய்து, மழையை வரவழைத்துப் பாடம் புகட்டியது, கட்டுக்கடங்காமல் கொழுந்துவிட்டு எரிந்த கெரோசின் ஸ்டவ் தீ கூரையைத் தீண்ட விடாமல், பாடல்பாடியே, குறைத்து, குறைத்து, அணைத்தது என்றும் பல உள்ளன.

ஆத்தூரில் அந்திமக்காலம்:

வீட்டில் தனிமை, தியானம் என்று மணிக்கணக்கில் உட்காருவதுண்டு. அருகிலுள்ள ஜீவசமாதி ஸ்தலத்திலும், இரவு பகல் தங்கி தியானம், தவம் என்று இருந்திருக்கிறார்கள்.

தமது இறுதிக் காலத்தில் வறுமையைச் சந்தித்தார். மகன் கமலகுருவுக்கு ஆன்மீக ஆச்சாரப் பழக்கத்தில் ஈடுபாடு குறைவே

என்றும் மனம் வருந்தினார். திருச்சியில் இயற்கை மரணம். ஆத்தூரில் சமாதி. சமாதிக்கும் இடையூறு வரும் என்றுணர்ந்த தீர்க்கதரிசனப் பாடல் – கல்மனத்தையும் கரைக்கவல்லது. (பக்கம் 198).

ஸ்ரீஞானமூர்த்தி ஸ்வாமிகள் (படம் 36–பக்.136) தஞ்சை கருந்தட்டாங்குடி மடத்தில் வாசம் செய்தார்கள். இவரது இரண்டாவது மனைவி உதயாம்பாள் (வயது 93) அவர்களைக் கடந்த 05–03–18ல் அவினாசியை அடுத்த சேவூரில் நேரில் சந்தித்து உரையாடித் தகவல் சேர்த்தோம். ராஜகுரு என்ற கமலமூர்த்தி ஸ்வாமிகள் விருத்தாச்சலம். மங்களம் பேட்டையருகிலுள்ள கர்ணத்தம் ஊரில் திருமதி. விசாலாட்சியை இரண்டாம் தாரமாக மணந்தார். ஆண்வாரிசு இல்லை. முதல் மனைவி வழியில் ஒரு ஆணும் பெண்ணும் பிறந்து சிசுவில் மரணம். இரண்டாம் தாரத்திற்கும் வாரிசு இல்லை. எனவே ஞானமூர்த்தி ஸ்வாமிகளை தத்தெடுத்து வளர்த்து ஆளாக்கினார். இந்த ஞானமூர்த்தி ஸ்வாமிகளும் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டார். 1988ல் புரட்டாசி ஏகாதசி வியாழனன்று 06–10–1988ல் இயற்கை எய்தினார். பட்டாபிஷேகம் போட்டோ கிடைத்துள்ளது. விழா அழைப்பிதழ் விவரம் இல்லை, எங்கே, யார்? பட்டாபிஷேகம் செய்தனர் என்ற விபரமும் இல்லை. ராஜகுரு, ஞானமூர்த்தி ஸ்வாமிகள் வகையறா, பிற பங்காளிகளைப் பார்த்துப் பழகவும் இல்லை.

ஸ்ரீமத் ராஜமாணிக்கம் ஸ்வாமிகளின் அருமை, பெருமை: நினைவு கூறுவது திரு.ப.பழனி வயலூர் (படம் 31-பக்.136)

ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகள் ஸ்ரீஅகண்ட பரிபூரண சச்சிதானந்த சத்குரு மூர்த்திகளாகிய ஸ்ரீபூலோக கைலாச சிதம்பர மடாதீஸ்வர ஸ்ரீமத் கமலமூர்த்தி மௌனகுரு ஸ்வாமிகள் பட்டம் கட்டிய பிறகு தொடர்ந்து திக் விஜய யாத்திரைகள் (தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா) செய்தார்கள். யோக நிஷ்டை உபதேஸங்கள் செய்து வந்தார்கள். குலஸ்தர்களும், ஏனையோரும் ஸ்வாமிகளிடம் மிகுந்த பக்திஸ்ரத்தையுடன் இருந்தார்கள். ஸ்ரீராஜ மாணிக்கம் ஸ்வாமிகள் கமலமூர்த்தி ஸ்வாமிகளைப் போலவே இருந்தார்கள். ஸ்வாமிகளுக்கு விருப்பு, வெறுப்பு, விரக்தி, எதுவும் கிடையாது. யோக தண்டத்தை வீசி எறியவுமில்லை.

SHEET 11


ப 32



ப 33
சிதம்பரம் நடராஜர் கோயில்
தாமரை குளம்


ப 34


ப 35



ப 36
ஸ்ரீ முகப் பத்திரிகை.


ப 38


ப 37


ப 71

மௌனகுரு ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் - துறவி



யோகதண்டம், கமண்டலம், நவரத்னஜப மாலை, மூன்றையும் ஸ்வாமிகளுடனேயே வைத்துதான் சமாதி செய்துள்ளார்கள்.

அந்தரத்தில் பல்லக்கு:

கும்பகோணத்தில் ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் பட்டினப்ரவேஸம் செய்த காலத்தில் விஸ்வகர்ம மக்களும் ஏனையோரும் சகல மரியாதைகளுடன் செய்வித்தனர். ஜவான்களும், விஸ்வகர்ம மக்களும் ஸ்வாமிகளை பல்லக்கில் ஏற்றி நகர்வலம் வந்தார்கள். அக்ரஹார சங்கரமடம் வழியாக வரும் பொழுது சங்கர மடத்து பார்ப்பனர்கள் ஆசாரி சாமியார் வரக்கூடாது என்று கலகம் செய்து பாகனிடம் கூறி யானையை ஏவிவிட்டார்கள். யானை ஓடி வரவே எல்லோரும் பயந்து ஓடினார்கள். பல்லக்கை தூக்கி கொண்டிருந்தவர்களும் நடுங்கினார்கள். உடனே ஜவான் ஸ்வாமிகளிடம் “ஸ்வாமி யானையை ஏவி விட்டுவிட்டார்கள்” என கூற ஸ்வாமிகளும் “யாரும் பயப்படாதீர்கள் பல்லக்கை விட்டுவிடுங்கள்” என்று கூற **பல்லக்கும் அந்தரத்தில் நின்றது.** ஸ்வாமிகள் யானையிடம், “கஜா ஏன் இந்த மூர்க்கம் என கேட்டு பல்லக்கை ஏந்திக் கொள்” என உத்தரவிட்டார்கள். உடனே யானையும் ஸ்வாமிகளை அடிபணிந்து பல்லக்கை சுமந்தது. இதைக் கண்ட அனைத்து மக்களும் ஈஸ்வராய நம: கமலேஸ்வராய நம: ஜகத்குருவே நம: என்று ரோட்டில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்கள். இதைக்கண்ட பார்ப்பனர்கள் அஞ்சி நடுநடுங்கி மடத்திற்குள் இருந்த ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளிடம் ஓடிப்போய் விபரம் கூறினார்கள். அவர்கள் தான் ஜெகத்குரு, ஈஸ்வரரூபமானவர், ஆகையால் **ஜகத்குருவிற்கு சகல மரியாதைகளும் உடனடியாக செய்ய வேண்டும்** என கூற மேளதாள வாத்ய பட்டுப் பீதாம்பரத்துடன் ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் ரோட்டில் வந்து ஸ்ரீகமலமூர்த்தி ஸ்வாமிகளை ஆசீர்வதிக்கும்படி வேண்டி நின்றார். இதைக்கண்ட மக்கள் அனைவரும் விழுந்து வணங்கினர்.

முருகன் வரமாட்டான்:

திருமுருகேற்றூரில் ஸ்ரீஇராஜமாணிக்கம் ஸ்வாமிகளை ஊர் விஸ்வகர்ம மக்கள் அழைத்திருந்தனர். யாத்திரை செய்த

நேரத்தில் நோயுற்றிருந்த சங்க தலைவரின் மகன் இறந்துவிட்டான். ஆகையால் ஆச்சாரியார் அவ்வூர் செட்டியாரிடம் எங்கள் குலகுரு வருகிறார்கள். உங்கள் கோவிலில் அழைத்து இறக்கி வையுங்கள் என கேட்டுக்கொண்டார். சரியென கூறிவிட்டு வெளியூர் செல்வதினால் கோயில் குருக்களிடம் (பார்ப்பனர்) ஸ்வாமிகளை பெரிய மஹான் வருகிறார். கோவிலில் அமர்த்தி மரியாதை செய்யுமாறு கூறிவிட்டு செட்டியார் சென்றுவிட்டார். மாலை நேரமானதும் ஸ்வாமிகளும் கோயிலுக்கு வந்துவிட்டார்கள், பார்ப்பனர்கள் சேர்ந்துகொண்டு ஆசாரிக்கு ஒரு சாமியாராங், ஒரு குலகுருவாங் என கூறி அவதித்து ஏளனம் செய்தார்கள்.

ஸ்வாமிகளும் மாசானிடம் வண்டியை நகர்த்தி நிறுத்து என கூறி அறம் பாடினார்கள். நீயிருக்க என் மனம் நோகலாமா என்றவுடன் அரசமரம் முறிந்து விழுந்து அவ்விடத்திலேயே 18 பேர்கள் இறந்தனர். 41 பேர் காயமடைந்தனர். உடனே அவர்கள் மனைவி மக்களெல்லோரும் ஈஸ்வரா எங்கள் கணவன்மார்கள் செய்த தவறை மன்னியுங்கள் என அழுது புலம்பினர். ஸ்வாமிகளும் போனது போனது தான். மீதியுள்ளவர்கள் நன்றாக இருங்கள் என ஆசீர்வாதம் செய்தார்கள். பின் வெளியூர் சென்ற செட்டியாரும் வந்துவிட்டார். நடந்த தவறுக்கு மன்னிப்பு கோரினார்கள். ஊர் மக்களும் கோயிலும் நன்றாக இருக்க வேண்டினார்கள். ஸ்வாமிகளும் சரியென கூறி இனி இக்கோவிலுக்கு முருகன் வரமாட்டான் 2 மைல் தள்ளி கோவில் கட்டி பிரதிஷ்டை செய்யுங்கள் என கூறி மூன்று நாட்கள் அவ்வூரிலேயே நிஷ்டையில் இருந்து நன்மைகளை வழங்கிவிட்டு வேறு ஊருக்கு யாத்திரை செய்தார்கள்.

ஆத்தூர் ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகள் ஸ்ரீரங்க விஜயத்தின் போது ஸ்வாமிகளுக்குப் பிறகு அடுத்து யாருக்கு பட்டம் கட்டுவது என்று கேட்டோம். அதற்கு ஸ்வாமிகளும் நாம் இனி எவரையும் ஏற்பாடு பண்ணுவதற்கில்லை. **இனி வருங்காலத்தில் குலஸ்தர்கள் ஒருவரை தேர்ந்தெடுத்து பட்டம் சூட்டலாம் என ஆசி கூறிவிட்டார்கள்.** ஸ்ரீரங்கவிஜயத்தில் கமலமூர்த்தி ஸ்வாமிகள் நவராத்திரி 10 நாட்களும் கல்மாதிரி பத்மாசனத்தில் நிஷ்டையில் இருப்பார்கள். இது நிகழ்ந்த இடம்

No-50, கிருஷ்ணமாச்சாரியார் வீடு, வடக்குவீதி, ஸ்ரீரங்கம் இதையெல்லாம் கண்டு எமக்கு கூறியது எங்களது தாத்தா சதுர்வேதி ஸ்ரீ S.P.ஸ்ரீனிவாச ஆச்சாரியார் அவர்கள்தான்.

ஆசீர்வாதம் - ஸ்வாமிகள் செய்யும் ஆசீர்வாதம் எப்படியென்றால்?

"சகல சம்பத்துகளுடன் இன்புற்றிருக்க சிவாசீர்வாதம் என அருளுவார்கள். யாரையும் தொடமாட்டார்கள். கையில்தான் திருநீறு கொடுப்பார்கள்."

சிதம்பரம் - ஸ்ரீகமலீஸ்வரர் ஆலயம்

சிதம்பரம் – பொன்னம்பலம் நடராஜர் ஆலய தரிசனமும் – ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் – சிதம்பர மடாதிபதி – மௌனகுருஸ்வாமிகள் வரலாற்றுத் தடம் தேடுதலும் என்று இருநாள் முகாமிட்டுத் திரட்டிய தகவல்கள்.

சிதம்பரம் ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் தாம் தினமும் பூசை செய்த ஸ்ரீகமலீஸ்வரர் ஆலயம் பற்றி தெரிந்துகொள்ள முடிந்தது. அக்னி லிங்கம் என்ற ஸ்ரீகமலீஸ்வரர் ஆலயம். ஸ்ரீகமலாம்பிகை ஸமேத ஸ்ரீகமலீஸ்வரர் ஆலயம் சுமார் ஓராயிரம் ஆண்டுக்கு முற்பட்டது. ஸ்ரீகமலீஸ்வரர் ஆலயம் தெரு என்ற பெயரில் சிதம்பரம் நாயுடு சங்க திருமண மண்டபத்திற்கு எதிரில் அமைந்துள்ள சிறுகோவில் மேற்கு பார்த்த வாசல். கிழக்குப்புறம் காம்பவுண்டு சுவர் இடிந்து செடி, கொடிகள் வளர்ந்து, பாதுகாப்பு குறைந்துள்ளது. சிவலிங்கமே மூல விக்ரஹம். காலையில் 9–10 மணிக்குள் தினமும் அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடக்கிறது. பின் இரவில் நடை திறந்தாலும் பூசை இல்லை. ஒரு காலபூசையைத் தினமும் செய்து வருவது மதிப்பிற்குரிய ஆர்.சண்முகம் தீட்சிதர். (வீடு. 71. மாலை கட்டி தெரு, சிதம்பரம் 608001 செல்.9994545759). இவருக்குதவியாக கோவில் நடைதிறப்பு, நடைசாத்துதல், சுத்தம் செய்தல், கோலம் இடுவது, வஸ்திரம் துவைத்து உலர்த்துவது, விளக்கு, பூசை சாமான்களைத் தேய்த்து வைப்பது என்ற சிவனடி சேவை செய்வது. திருமதி ஜெயா W/o திருமுருகன் விதவை Mother of திரு.முத்துக்குமரன். மாற்றுத்திறனாளி 49/50. ஸ்ரீகமலீஸ்வரர் கோவில் தெரு, சிதம்பரம். 608001.

பழைய கல்வெட்டு:

கோவிலின் வெளிப்பிரகாரத்தில் அக்னி மூலையில் (தென்கிழக்கு) கோவில் கற்பக்கிரக சுவரையொட்டி, படுக்கை வசமாக ஒரு கல் உள்ளது. பழங்கால வட்டஎழுத்து, தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் தான் நேரில் வந்து படித்து சுத்தம் செய்து விபரம் தர வேண்டியுள்ளது. வருமானம் இல்லாத இக்கோவிலுக்கு ஒரு வேளை பூசை முறை தினமும் நடப்பதே பெரிய விஷயமாகப் பேசப்படுகிறது.

கும்பாபிஷேகம்:

இந்தக் கோவிலுக்கு 18–6–2003ல் பிரம்ம ஸ்ரீ V.S.வைத்யநாத தீட்சிதரின் பெருமுயற்சியில் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

மகிமை:

சிதம்பரம் பெரும்கோவில் நடராசப் பெருமான் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் ஊரின் பல தெருக்களில், எட்டுத்திசையிலும் எட்டு சிவலிங்கங்கள் தோன்றி பிரதிஷ்டை செய்யப்பட்டு, நித்ய வழிபாடு தொன்று தொட்டு நடந்து வருகிறது. அவ்வகையில் **அக்னி மூலையில் (தென்கிழக்கு)** எழுந்தருளியிருக்கும் இக்கோவில் சிறப்புப் பெறுகிறது.

சிதம்பரம் மௌனகுரு ஸ்வாமிகள் மடம் ஒன்று இன்றுமுள்ளது. தீட்சதர்களும் பாமர பொதுமக்களும் நினைவு கூர்கிறார்கள். சிதம்பரம் நடராசர் கோவில், தெற்குக் கோபுர வாசலுக்கு எதிரே செல்லும் நீண்டசாலை தான் சீர்காழி சாலை. அதில் நகர போலீஸ், ஆணையர்வீடு, அலுவலகம் எதிரில் அமைந்துள்ளது இம்மடம். விஸ்தாரமான இடம் பெரிய காம்பவுண்டு. மரங்கள் அடர்ந்த அமைதியான சூழ்நிலை. 20–04–2018ல் வெளி கேட்டும், உள்புறமுள்ள வாசல்தலமும் பூட்டுப் போட்டிருந்தன. உள்ளே ஆள் இல்லை.

விசாரித்ததில் கிடைத்த தகவல்:

இம்மடம் பழமையானது. இம்மடத்தில் தற்சமயம் திரு.சுந்தரமூர்த்தி சுவாமிகள் வசித்து வருகிறார்கள். இம்மடத்திற்கும், திருவண்ணாமலை கோவிலுக்கும் தொடர்புள்ளது. மடாதிபதி திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த பிள்ளைமார்.

மடத்திற்குச் சொந்தமாக வயல்வெளி, விவசாயம், சொத்துள்ளது. சாமியாருடன் வசித்து சேவை செய்து வந்த சிலர் மடத்தின் நிர்வாகம், பட்டத்து உரிமைக்குப் போர் குரல் எழுப்பி சென்னை நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இவ்வழக்கின் காரணமாக மடம் பூட்டப்பட்டிருக்கலாம்.

பூர்வீகம்:

இம்மடத்தின் பூர்வீகம் பலருக்கும் தெரியவில்லை. இம்மடத்திற்கும் சிதம்பரம் மௌனகுரு ஸ்வாமிகள் ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகளுக்கும் தொடர்புண்டா என்பதும் தெளிவில்லை. தெரியவில்லை. பழைய காலத்தில் ஓட்டு வீடாக இருந்த மடம், பின்னாளில் அடையாளம் காட்டவும் யாரும் கிடைக்கவில்லை.

❀



Guru Pooja On : 24.12.2016
At : Thirunelveli Mutt

Women Vishwa Karma Members
who Performed Pushpanjali

4. ஜெகத்குரு ஸ்ரீ மத் சுக்ஞானமூர்த்தி சுவாமிகள் மடம் –ஓசூர்

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதாதி ஜகத்குரு சுக்ஞானப்பிரபு மஹா சம்ஸ்தான மடம்

மடமூர் கிராமம், சம்பரசனப்பள்ளி அஞ்சல், சூளகிரி யூனியன், ஓசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம், தமிழ்நாடு.

ஸ்ரீமன்மூல சம்பரசனபுரவாத்யக்ஷ வஜ்ர சிம்ஹாசனாதீஷ சத்ர சாமரோந்ததோளிக ஜகஜ்ஜேகீயமான பேரீரவ ஹனுமத்வஜ லாஞ்சனானேக பிருதாங்கித ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதாதி ஜெகத்குரு சுக்ஞானமூர்த்தி மகாஸ்வாமி பரம்பராயமான

ஸ்ரீமத் வேதந்த ரஹஸ்ய மார்காவலோகன ருக் யஜீர் சாம அதர்வண பிரணவ வேத பாராயண நிரதயமணியமாஸன பிராணாயம பிரத்யாஹார தியான தாரண சமாத்யஸ்டாங்க யோக நிஷ்டாகரிஷ்ட ஷட்தர்சன ஸம்ஸ்தாபனாச்சாரிய ஸ்ரீமன் மகா சம்பரசனபுரா மடத்தின் வஜ்ர சிம்ஹாசனாரூட பட்டத ஸ்ரீசுக்ஞானப்ரபு குருஸ்வாமி மட சன்னிதானேன்:

ஸ்ரீமத் அனந்த கோடி பிரம்ஹாண்ட தண்டோபதண்ட பாண்டோதரன் அகண்டாத்விதீயாச்சல பரிபூர்ணனும், நித்யநிரஞ்சன நிர்விகல்ப நிர்குண கமலோதர கமல சம்பவ சுரேஷ சுராசுர விசர சேவியனும், சர்வ பூதஸ்தித லயோத்பவ காரணனும் விஸ்வகுரு விஸ்வ காரணனும்மான பரமசிவன், தர்ம ஸம்ஸ்தாபனார்தாய சம்பவாமி யுகே, யுகே என்னும் சொல்லிற்கேற்ப பாஷாண்டாதி துர்மதங்களை கண்டித்து சிவ தர்ம ஸ்தாபனை செய்ய தற்போதுக்கு ஐந்தாம் நூற்றாண்டில், கொல்லி பாக்கி என்னும் தேசத்தில் அயோனிஜன் என்று லிங்கத்தில் உற்பவித்து ஆசேது இமாச்சல வரை, இந்த பரதகண்டத்தில், துர்மதத்தை அழித்து உண்மை மகிமையை பவாடங்களை வென்று கோரஷாதி யோக

சித்தர்களை வென்று, அனைவருக்கும் லிங்கதாரணை சிவ மந்திரோபதேசம், சிவதர்மத்தினை, உபதேசித்து, தீக்ஷயை கொடுத்த ஸ்ரீஜகத்குரு சுக்ஞானபிரபுஸ்வாமி என்னும் பெயர் கொண்ட அன்றைய ராஜாதி ராஜர்களால் விருதுகள் பெற்ற சம்பரசனபுரத்தின் அருகில் மடத்தை நிறுவி அவருடைய யோக பலத்தினால் போற்றப்பட்டு வந்த, சிவயோக நிஷ்டையை விஸ்வபிரம்ம மண்டலி அயோத்திய நகர மண்டலி மற்றும் இன்னும் வைஷவ மண்டலி மற்றும் அனேகமான வர்ணத்தினரை சிஷ்யர்களாக அடைந்த அஷ்டாவர்ணங்களும் அடைந்த மந்திர தர்ம, கர்ம லிங்கதாரணை போன்றவை சிஷ்ய பரம்பரை மண்டலியருக்கு நிறைவேற்ற ஆணையிட்டு, சக்கோர்லே மலையில் முக்தியடைந்தார். பின்னர் சத்குரு உபதேசத்தின்படி அவ்வழியில் சிஷ்யர்களுடன் சம்பரசனபுரா மடத்தைவிட்டு நவ்வியபுரி என்னும் பெயர் கொண்ட ஓசூர் நகரத்தில் மடத்தை நிறுவி இதுநாள் வரை ஸ்ரீ குருவின் கட்டளையின்படி சிஷ்யர்களை உத்தரித்து வந்தனர்–வரலாறு.

சூளகிரி – மடம் சம்பரசனப்பள்ளி – மடமூர் – புல்லரசி – புலியரசி – புளியரசி – செக்கோர்ல மலை. மூலமடம் – பயணமும், தூரமும் (படம் 41, 47–பக்.164)

ஓசூரிலிருந்து சூளகிரி 21 கி.மீ. அதிலிருந்து பாகலூர்–வேப்பனபள்ளி ரோட்டில் 6 கி.மீ. கட்டிகானப்பள்ளியிலிருந்து கலிங்காவரம் செல்லும் சாலையில் 1 கி.மீ. தூரம் சென்றால் மடம் சம்பரசனப்பள்ளி கிராமம். அங்குள்ள அரசுப்பள்ளிக்கு பின்னால் சமதளத்தில் உள்ளது ஸ்வாமி சுக்ஞானந்தரின் ஜீவசமாதி. (படம் எண்.42–பக்.164)

சமாதிக்கு மேற்குத்திசையில் சுமார் 1 கி.மீ. தூரத்திலுள்ளது புல்லரசி, புளியரசி என்ற கிராமம். இங்குள்ள சுவாமிகள் அக்காலத்தில் தம் தவவலிமையால் உண்டாக்கிய குளம் உள்ளது. அதிலிருந்து 1/2 கி.மீ தூரத்தில் உயர்ந்து நிற்பது செக்கோர்லமலை. குறுக்கே காட்டு வழியில் நடந்தால் 1/2 கி.மீ. தூரம். அரசு அமைத்துள்ள தார் ரோட்டில் போக வேண்டுமென்றால் 7 கி.மீ. தூரம். அதாவது மடம் சம்பரசனப்பள்ளியிலிருந்து சூளகிரிக்கருகில் அத்திமுகம் ரோடு பிரிவு வரை 5 கி.மீ. அத்திமுகப் பிரிவிலிருந்து

புலியரசி 2 கி.மீ. புலியரசி கிராமம் செக்கோர்லமலையை ஒட்டி அடிவாரத்தில் நெடுஞ்சாலையில் உள்ளது. அங்கு அச்செட்டிப்பள்ளி வனப்பாதுகாப்பு திட்டம் என்ற வன இலாகா போர்டு அருகிலிருந்து மலையின் மேலே செல்வதற்கு சுமார் 3/4 கி.மீ. தூரம் காட்டுப்பாதை உள்ளது.

மூலமடம் கரைந்து போன கதை: (படம் 42-பக்.164)

சுமார் 2011ல் மூலமடம் ஜீவசமாதி என்பது கட்டுமானத்துடன் இருந்தது. (படம் எண்.42) பழங்கால சுண்ணாம்பு காரை கட்டிடம் திறந்த வெளியில் மழை, வெயில், பறவைகள் எச்சம் என்று கட்டுமானம் விரிசல்விட்டது. அத்துடன் ஆண்டுதோறும் சமாதிபூஜை நடந்தது. ஆயினும் விரிந்து இடிந்து போன சமாதி கட்டிடத்தை இடித்துவிட்டு அதை சுத்தம் செய்து புதிதாக பெரியளவில் சமாதி கோவில் கட்டுவதற்காகத் திட்டம் தீட்டப்பட்டது. வேலையும் நடந்துகொண்டு இருக்கிறது.

உள்ளூர் மக்களின் பங்களிப்பு:

காட்டு முள், மரங்கள், செடிகள், மூடியிருந்த சமாதியை சுத்தம் செய்து 1961 ஆண்டு கும்பாபிஷேகம் செய்து மகிழ்ந்தார்கள் உள்ளூர் மக்கள். இம்மக்கள் இன்னும் ஸ்ரீமத் சுக்ஞானந்த மூர்த்தி ஸ்வாமிகள் மீது அதிகப்பற்றும் நம்பிக்கையும் கொண்டுள்ளார்கள். சமாதியிலுள்ள ஒரு கல்லைக்கூட யாரும் எடுத்துச் சென்று பயன்படுத்தப் பயப்படுகிறார்கள். விரைவில் புதிய கோவில் கட்டப்படவேண்டும் என்று ஓசூரில் வசிக்கும் தற்போதைய சந்ததியாரிடம் தொடர்ந்து முறையிட்டார்கள். வேலையும் துவங்கிவிட்டது.

பாதுகை, சக்கரம், கல்சிற்பம்: (படம் 41, 42, 43, 43 எ-பக்.164)

மழை, வெயிலுக்குப் பாதுகாப்பாக ஒரு மேல்கூரை மட்டும் உள்ளது. கல்லில் செதுக்கிய இரண்டு பாதங்களை மக்கள் வணங்குகிறார்கள். ஸ்ரீமத் சுக்ஞானந்த ஸ்வாமிகளின் கற்சிலையை, தற்காலிகமாக, செங்கல் கட்டுமான சுவர் எழுப்பிப் பாதுகாத்து வருகிறார்கள். சிலை வெளியில் தெரியாமல் பாதுகாக்கப்படுகிறது. ஸ்வாமிகள் எழுதி வணங்கிய சக்கரம் அன்று

கல்லில் பதிக்கப்பட்டிருந்தது. இன்றும் திறந்த வெளியில் புளிய மரத்தடியில் பாதுகாக்கப்படுகிறது.

புல்லரசிக்குளம்:

(படம் 44–பக்.164) நான்குபுறமும் கல்படித்துறை என்ற சிறியகுளம். இன்று பராமரிக்கப்படவில்லை. அருகே உள்ளூர் மக்கள் அறியாமையால் முனீஸ்வரன் சுதை சிலையால் ஆலயம் அமைத்து கும்பிடுகிறார்கள்.

செக்கோர்லமலைக்கு (படம் 45–பக்.164) இன்றும் மக்கள் போக்கு வரவுள்ளது. குகைக்கோவிலில் சிறு சிற்பங்கள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் மகாசிவராத்திரியன்று இப்பகுதி ஊர் மக்கள் இம்மலை மீது ஏறி சாமி கும்பிடுவது தற்போது வழக்கத்திலுள்ளது. மேலும் பிரதி கார்த்திகை மாதம் சோமவாரத்தில் (திங்கள்) கர்நாடகா வட்டத்திலிருந்து பக்தர்கள் பலரும், வேன், பஸ் என்று கூட்டமாக வருகிறார்கள். புல்லரசியில் குளித்துவிட்டு மலை ஏறி, சாமிகும்பிட்டு இறங்கியபின், புல்லரசியில் சமைத்து சாப்பிட்டு, ஓய்வெடுத்த பிறகு கர்நாடகா திரும்புகிறார்கள். இப்படியாக ஸ்வாமிகள் மீது தம் குருபக்தியை வெளிக்காட்டுகிறார்கள். மூல மடத்தை சேர்ந்த பீடாதிபதி வம்சவழிகள், ஒவ்வொரு ஆண்டும், மடமூர் செக்கோர்லமலைக்கு தவறாமல் சென்று வழிபடுகிறார்கள்.

மூலமடத்தை யார் எடுத்துக்கட்டுவது?

கர்நாடக மாநிலம், ஹாசன் மாவட்டம், அரகல்கூடு தாலுகா, அரேமாதனஹள்ளியில்மடம் அமைத்து சேவை செய்து வரும் **சிஷ்யர் மரபு துறவி** சாமியார் ஸ்ரீமத்சிவசுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகள் இரண்டு முறை இங்கு வந்து வழிபட்டுச் சென்றுள்ளதாகவும், சமாதி இடத்தில் பெரிய மண்டபம், கோவில் அமைக்க இசைவு காட்டியதாகவும் உள்ளூர் மக்கள் நினைவு கூர்கிறார்கள்.

ஓசூரில் வாழும் ரத்த சம்பந்த வம்சாவழி மரபினர் (தற்போதைய பீடாதிபதி திரு.நவீன் என்ற சுக்ஞானமூர்த்தி) தாங்களே முயற்சி செய்து பெரியஅளவில் மண்டபம் கட்டுவதாக கூறி, நிலத்தை சுத்தம் செய்து கல்தூண்களை அடுக்கி வைத்துள்ளார்கள். வேலை தொடர்கிறது. (படம் 46, 47)

ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகளின் பவாடா, அற்புதங்களிலும் உள்ளூர் மக்கள் சமீபத்தில் சந்தித்த நிகழ்வு.

பசுவுக்கு நோவு:

சுவாமிகளின் ஜீவசமாதிக் கட்டிடம், காலிமனையிலிருந்து ஒரு செங்கல், கருங்கல்லைக்கூட யாரும் களவு செய்வதில்லை. அவ்வளவு பயம், பக்தி, மரியாதை, இருந்தாலும் ஒரு குடும்பத்தினர் கருங்கல்லை எடுத்துச்சென்று தமது மாட்டுப் பட்டியில் பயன்படுத்தினார். வீட்டில் பெரியவர்கள் எச்சரித்தும் மறுப்பு தெரிவித்தார்கள். ஊர் மக்களும் கண்டித்தார்கள். எதிர்ப்பை புறந்தள்ளி தமது சண்டியர் தனத்தை நிலை நிறுத்தியே வந்தார். திடீரென்று மாட்டுக்கு நோவு வந்து இறந்துவிட்டது. முதலே போய்விட்டது என்றுணர்ந்தார். வீட்டில் தந்தையிடமும் ஊர் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு மீண்டும் அந்தக்கல்லை சமாதியில் சேர்த்துவிட்டார்.

ஓசூர் ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி மடம்

கிளைகளில் நேரில் கண்ட காட்சிகள்: சாரஹப்பள்ளி: ஓசூர் – மதகொண்டப்பள்ளி – சாரஹப்பள்ளி (படம் 48). ஊரிலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் தோட்டத்திற்கு செல்லும் வண்டித் தடப்பாதையில் உள்ளது கோவில். சுமார் 1.5 ஏக்கர், கம்பி வேலியுள்ளது. கம்பிவேலி பாதுகாப்பு, கும்பாபிஷேகம்செலவு என்று ஓசூர் மடவாரிசுகள் பொருள் கொடுத்து உடன் உழைத்தார்கள். ஓசூர் மடத்துப் பெரியஸ்வாமிகள் மற்றும் அன்னாரின் விஸ்வாசமான குதிரைக்கும் இத்தலத்தில் தான் சமாதியுள்ளது. புதிதாக கோவில் எடுத்துக்கட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டு புனருத்தாரணம் செய்விக்கப்பட்டுள்ளது. (2004)

மாளிகேஸ்வரர் (சிவன்) நந்தியுள்ளது. உற்சவமூர்த்தி அலங்காரமாய் பஞ்ச லோகத்தில் உள்ளது. கார்த்திகை மாதம் சோமவாரம் (திங்கள்கிழமையும்) மகாசிவராத்திரியும் சிறப்பு வழிபாடும் உண்டு. கிராமத்திலுள்ள எல்லா இனத்தவரும், லிங்காயகவுண்டர்களும், பக்தியுடன் வணங்கும் இக்கோவில் அருகிலேயே சமாதிகளும், பெரிய புற்றும் பூசிக்கப்படுகிறது. தொடர்ந்து கல் கட்டிடங்கள், கட்டுமான வேலைகள் நடந்து

கொண்டிருக்கின்றன. நவக்கிரஹமேடையும், அன்னதான கூடமும் தனியே அமைந்துள்ளன. புராதன கோவில் நன்றாகப் பராமரிக்கப்பட்டு வளர்ந்து வருகிறது.

சுமார் 1987 சமீபத்தில் இவ்வூரில் கிளைக் கோவிலை உருவாக்கி மதகொண்டபள்ளியின் ஜாத்ரா வழிபாடுடன் உயர்த்திய உழைப்பாளி ஓசூர் மடாதிபதி ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி MA. PhD. LLB ஆவார்கள்.

கும்ளாபுரம்: (படம் 51, 52-பக்.167)

ஆனேக்கல் பஸ் நிலையத்திலிருந்து தளி செல்லும் சாலையில் 6வது கிலோமீட்டரில் கும்ளாபுரம் உள்ளது. உயரமான பூமி, தைலமரக்காடுகள். 101 அற்புதங்கள் நிகழ்ந்து 101 கோவில்களும் 101 குளம், ஏரியும் உள்ளன. சைவம் தழைக்கிறது. வைணவமும் வாழ்கிறது. லிங்காயக் கவுண்டர்கள் இவ்வூரில் செல்வாக்குடன் வாழ்கிறார்கள். இவ்வூர் மக்கள் அனைவரும் புகழ் பெற்ற ஸ்ரீமத்சுக்ஞானமூர்த்தி மடம் அன்று இருந்தது. சரியாகப் பராமரிக்கவில்லை. இப்போது இல்லை என்கிறார்கள்.

கௌமாரம்மா கோவிலுக்குச் செல்லும் வழியில் வீரபத்திரசாமி மடத்துக்கு சற்று முன்பாகவே ரோட்டோரத்தில் ஒரு 8–10 அடி உயரத்திலுள்ள மண் மேடுதான் முற்காலத்திலிருந்த சுக்ஞானந்தமூர்த்தி மடம் அல்லது மாகாளீஸ்வரர் ஆலயம் படம்.

எடவுனஹள்ளி: (படம் 49, 50 -பக்.167)

ஓசூர், பெங்களூர் தேசியநெடுஞ்சாலை (N.H.7)யில், ஓசூரிலிருந்து 3வது கி.மீட்டரில் அத்திப்பள்ளி செக்போஸ்ட் தாண்டியபிறகு ரோட்டின் வடக்குப்பகுதியில் எடவுனஹள்ளி என்ற பெயரில் பஸ்ஸ்டாப் இருக்கிறது. அந்த இடத்தில் வடக்கே சுமார் ஒரு கி.மீட்டருக்கும் குறைவான தூரம் சென்றால் கிராமத்தின் மையப்பகுதியில், பரந்த மைதானம் உள்ளது. சிவன்கோவிலுக்கு அருகில் திரு.ருத்ராச்சாரி என்ற கோவில் பூசாரி வீடு உள்ளது. ஸ்ரீசுக்ஞான பிரபு மடம் கோவில் ஈசானியத்தில் அமைந்துள்ளது. அழகிய சிறு கோவில் சுற்றிலும் திறந்த வெளி, பட்டா நிலம், பலரது வீடுகள் சூழ்ந்துள்ளன. ஒரு நாகர் சந்நிதி அருகில் பழமையான (படம் எண்.49) புற்று என்ற வழிபாட்டுஸ்தலத்தில்

SHEET 13






பழைமையான ஸ்ரீமடத்தின் படம்

புதிதாக நிர்மாணிக்க உள்ள ஸ்ரீமடத்தின் மாதிரி படம்













சிவன் சந்நிதி மூல விக்ரஹம் என்ற கோவில் அமைப்பு, கதவும், பூட்டும் என்ற பாதுகாப்பு, 17–11–1989ல் தான் இந்த சிறிய கட்டயமைப்பு கோவில் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. மூலவிக்ரஹம் உட்பட இந்த ஏற்பாட்டில் நேரில் நின்று உழைத்தது அன்றைய பீடாதிபதி ஸ்ரீமத் சுக்ஞானந்த பிரபு MA. PhD. LLB ஆவார்கள்.

இன்றைய தின கருத்துக்கணிப்பு:

சாரஹப்பள்ளி பிழைத்துக் கொண்டது. மேலும் உயர்ந்து கொண்டிருக்கிறது. ஓசூர் மடம் சம்பரசனப்பள்ளியை, மூலமடத்தை இன்னும் நினைவில் நிறுத்துகிறார்கள்.

கும்ளாபுரம்:

பலராலும் போற்றி வணங்கப்பட்ட இந்த மடாலயம் தற்போது யாராலும் அடையாளம் காட்டப்படாமல் கரைந்து போனது காலத்தின் கோலம். படம் 51, 52.

எடவுனஹள்ளி:

சிறிய அளவில் தினசரி பூசை நடக்கிறது.

தேவனஹள்ளி மடம்:

ஓசூர் மடத்தின் தற்போதைய பீடாதிபதியின் முயற்சியால், இங்குள்ள பவாடா பஸ்வேஸ்வரா கோவில், 2004, 2005ல் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. ஜாதி வித்தியாசமில்லாமல் அனைவரும் ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகளையே வணங்குகிறார்கள். கோவில் வளர்கிறது. (படம் 53, 54–பக்.167)

பெங்களூர் கிளைமடம்:

கே.ஆர்.மார்கட்டிலிருந்து அவின்யூ ரோடு ராஜாமார்க்கெட் (படம் 55, 56–பக்.172) (நகைக்கடைகள்) சமீபத்திலுள்ளது. விஸ்வகர்மருக்குச் சொந்தமான காளிகாம்பாள் கோவில் அதற்கு எதிர்புறம் உள்ள சந்துதான் எஸ்.எம்.லேன் தெரு. சுக்ஞானந்த மூர்த்தி மடம் சந்து தெருவார்டு 19. (படம்.56) குறுகலான சந்துக்கள் அமைந்துள்ளது இக்குலவிளக்கு. கீழ்தளத்தில் அருள்மிகு நந்தீஸ்வரர் கம்பீரமாக தனிசந்நிதி கொண்டுள்ளார். உபாசனா உற்சவமூர்த்தி பஞ்சலோகத்தில் சிவன்பார்வதி அமைதியான அருள் கவ்வும் சூழல். சுவாமி ஸ்ரீமத் சுக்ஞானந்தர்

MA. Phd.LLB அவர்கள் பிறந்து வளர்ந்து புகழ்பரப்பி வாழ்ந்த இடம் இதுவே. அன்னாரின் துணைவியார் திருமதி.சுனந்தா என்றும் நித்ய பூஜை நடக்கும்படி உறுதியான ஏற்பாடு செய்விக்கிறார். சிலிர்க்க வைக்கும் பழமைப் பண்டங்கள் இங்கு ஒரு அரிய பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. (படம் 57–பக்.172)

நந்தீஸ்வரர்: (படம் 57)

மிகப்பெரிய நந்தீஸ்வரர் முற்றிலும் பித்தளைத்தகடு. அழகிய வேலைப்பாடு கம்பீரமானதோற்றம். நித்திய பூ அலங்காரம் பூஜை. உபாசன மூர்த்தியாக ஐம்பொன்னாலான சிவனும் பார்வதியுமான அழகிய சிலை பொலிவாகக் காட்சி தருகிறார்கள். **கும்பளாப்புரத்தில் அற்புதத்தை நடத்திக் காண்பித்த கையளவு பவாடா பஸ்வேஸ்வரர், பழமை எனப் பறைசாற்றும் தேய்மானத்துடனான ஐம்பொன் சிலை.** (படம் எண்.55–63–பக்.172)

பாதுகா: (படம் 56 எ-பக்.172)

மூல ஜெகத்குரு உபயோகித்த யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட கலைநயமிக்க பாதுகைகள். பயன்படுத்தப்பட்டுப் பழுதான அடையாளங்கள். எங்கும் காணக்கிடைக்காத யானைத்தந்தம் பாதுகை மெய்சிலிர்க்க வைக்கிறது. மான் தோல் இருக்கை விரிப்பு, வலம்புரி சங்கு, பயன்பாட்டில் இருந்த கைச்சூரி (கத்தி) கையில் உபயோகித்த பிரம்புக் கம்பு என்ற மந்திரக்கோல், ரத்தினக்கல் பதித்த மோதிரம், பட்டினபிரவேசத்தில் டவாலி பயன்படுத்திய அடையாள முத்திரை போக மேலும் பிரமிக்க வைப்பவை, இரண்டு தொப்பி குல்லா. இரண்டும் வெள்ளிசரிகையால் கையால் இழைத்துச் சித்திரம் செய்யப்பட்ட அணிகலன்கள். அனைத்தும் மெய்சிலிர்க்கும் பழமையும், புனிதமும் ஆகும்.

கணிப்பு:

சூளகிரி, சம்பரசனப்பள்ளி, புல்லரசி, செக்கோர்ல மலை என்ற வானம் பார்த்த வனப்பகுதியில் தோன்றிய மடமும் மடாதிபதியும் அவர் தம் வம்சமும், காலத்தின் ஓடத்தில் ஓசூர், பெங்களூர் என்று நகரங்களுக்கு நகர்ந்து வந்து அரசாங்க உத்தியோகம், காலத்திற்கேற்ற பிற வகைத் தொழில்கள் என்றும்

SHEET 14


ப 48


ப 52


ப 51


ப 49


ப 50


பாவுடா பஸ்வேஸ்வரா கோயில் தேவனஹள்ளி,
பெங்களூர்
ப 53


பாவுடா பஸ்வேஸ்வரா கோயில் தேவனஹள்ளி,
பெங்களூர்
ப 54

மடம், மடாதிபதிகளை போஷிக்காத பக்தர்களின் மனப் போக்கினாலும் வாழ்வாதாரம் தேடுதல் முயற்சியில் ஆன்மீகம், ஆதீனம், ஆதீனத்துக்கு, வந்த சொத்துக்களையும் உண்டான கிளை மடங்களையும் பறி கொடுத்துவிட்டு நிற்கும் பரிதாபம் ஏற்பட்டது. சிறுவயதிலிருந்தே வாரிசுகளை முறையாகப் பேணி போஷித்து பாதுகாக்க இயலாமல் போன குடும்ப வாரிசில், இளம் வயதிலேயே சம்பவித்த மரணங்கள் மட்டுமல்லாமல், பிரிட்டிஷார் காலத்தில் உதித்து மலர்ந்து விட்ட ஆங்கிலேயே வழிக்கல்வி மோகமும், இயந்திர மயமாக்கலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்திடவிட்டன என்றும் நம்பலாம். மொழிவாரி மாநிலப் பிரிவும் அதன் பங்கைச் செய்துள்ளது.

ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகள் ஆதீனம்:

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரிக்கருகிலுள்ள சம்பரசனப்பள்ளி மடமூர் தான் மூலஸ்தானம்

கிரகிஸ்தர்மடம்

மடம் சம்பரசனபள்ளி ஓசூர்

பெங்களூர்

சாரஹப்பள்ளி

கும்ளாப்புரம்

எடவுனஹள்ளி

பேகூர்

தேவனஹள்ளி

த்யாவகனாஹள்ளி

சூலிபலே, நம்பிளே

ஷெட்டி கொத்தனூர்

22 இடங்கள் ஊர்கள்

சரித்திர பின்னனி ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகளின் மடம் ஓசூர் (படம் 121, 122, 123, 124, 125, 126, 127- பக்.175) :

ஈரோடு முதல் காஷ்மீரம் வரை மடத்து கிளைகள் இருந்தன என்று இவர்களது முன்னோர்கள் கூறிச் சென்றிருக்கிறார்கள். 777 பவாடாக்கள் என்ற அற்புதங்களை நடத்திக் காண்பித்தவர்கள்

பழைய தலைமுறை மடாதிபதிகள். சரியான ஆதார, ஆவணம் எழுதி பாதுகாக்கப்படவில்லை.

சுமார் கி.பி.1200–1300 ஆண்டுகளில் (இன்றைக்கு 700–800 வருடத்திற்கு முன்பு தோன்றிய மடம் என்று கூறப்படுகிறது. ஆயினும் இருநூறு ஆண்டுகளுக்குட்பட்ட தகவல்கள் கல்வெட்டுக்கள், அச்சடித்த காகிதங்கள் என்று கிடைக்கின்றன. இத்தோடு மைசூர் உடையார் வம்சத்து (மே.21) இராஜாங்ககாலம் (கி.பி.1610 முதல் 1748) வரையிலான சரித்திர பூர்வமான ஆராய்ச்சித் தொகுப்பு புத்தகத்தை திரு. A.சத்யநாராயணா எழுதிய அரசு வெளியீடு (தொல்கலை மற்றும் அருங்காட்சியகம் மைசூர்) ஒன்றையும் புரட்டிப் பார்க்க முயன்றபோது கிடைத்த தகவல்களையும் இங்கு பதிவு செய்கிறோம்.

மைசூர் சமஸ்தானம் என்பது கர்நாடகாவில் பீஜாப்பூரிலிருந்து, குடகு, பெங்களூர், கோலார், ஓசூர், சூளகிரி, தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, சேலம், ஈரோடு, தாராபுரம், செஞ்சி, ஆர்காடு தஞ்சாவூர், மன்னார்குடி என்று பரவியிருந்தது. சாம்ராஜ்யத்தை விரிவாக்கம் செய்வதற்காக அவ்வப்போது மதுரையையும் தொட்டுப் பார்த்தது. எனவே மைசூர் மன்னர்களின் ஆளுகையிலும் திப்பு சுல்தான் சிவாஜி, அதன் பின்னர் பிரிட்டிஷ்காலனி ஆதிக்கத்திலும் இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு தமிழ்நாடு, கர்நாடகா என்ற மாநிலங்களின் அரசியல் ஆட்சி அதிகாரத்திற்குட்பட்டது.

கி.பி. 1400 முதல் 1748 வரையிலும் இப்பூமி உள்நாட்டு மன்னர்களின் ஆதிக்க வெறி போர்களில் தொடர்ந்து அவதிப்பட்டது. **கோல்கொண்டாவிலிருந்தும்** விஜயநகரமன்னர்கள் மைசூருக்குப் படையெடுப்பு. **டெல்லியை ஆண்ட ஔரங்கசிப்** முகமதிய மன்னர்கள் ஆற்காடு நவாப்புகளின் மூலம் மைசூரின் மீதும் திருச்சி, தஞ்சை, மதுரை மீது படையெடுப்பு என்றும் மராட்டா மன்னர் வீர சிவாஜி மைசூர் மீது படையெடுப்பு, மைசூரின் செல்வ வளங்களான தங்கம், செம்பு, இரும்பு ஆகியவற்றை கொள்ளையடிப்பதிலும் அதிக நோக்கம் கொண்ட யுத்தகளமாயிருந்தது. இக்காலத்தில் சுமார் 1673 சமயத்தில் மைசூரை ஆண்ட சிக்கதேவராஜா சேனைக்கும் அவரை எதிர்த்துப் போரிட்ட கூட்டணிகளான விஜயநகரா இக்கேரி ராணி, மதுரையை

ஆண்ட சொக்கநாதர் ஆகியோருக்கும் கடும் போர் நடந்த இடம் **அரக்கல்கோடு ஹாசன்.** சிக்கதேவராயருக்கும், சிவாஜியின் ஏஜண்ட் ஈகோஜிக்கும் 1689ல் **தர்மபுரியில்** நடந்த சண்டையில் தர்மபுரியை, காவேரிபட்டினத்தை சிக்கதேவராயர் கைப்பற்றினார். (தர்மபுரியும் **சூளகிரியும்** சுக்ஞானந்த ஸ்வாமிகளின் **மூலமடம். மடம் சம்பரசனப்பள்ளியும்** அருகிலுள்ளன. கி.பி. 1710, 1724–26ல் மகதி கோலார் (தங்கசுரங்கம்) சண்டையில் **ஷெட்டி கொத்தனூர், சூலிபலே, நம்பிளே, த்யாதவனஹள்ளி, தேவனஹள்ளி ஆகிய கிளைகள் யுத்த களத்தில் சிக்கின.**

கி.பி. 1746–1747ல் தேவனஹள்ளியில் மிகக் கடும் போர் நடந்தது. தேவனஹள்ளி என்பது தற்போதைய பெங்களூர் பன்னாட்டு ஆகாய விமானத்தளம் அருகில் தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. தேவனஹள்ளி புதிய பஸ்நிலையம் காவல் நிலையத்திற்கருகில் தான் ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி மடம் கிளை பவாடா பஸ்வேஸ்வரர் கோவிலுள்ளது.

பின்னர் ஒசூரிலும், பிரிட்டிஷ்ராணுவத்துடன் சண்டை நடந்தது. (ஓசூர் கோட்டை படம் 125–பக்.175) ஓசூர் மடம் தாக்குப் பிடித்தது. ஓசூருக்கு தெற்கே 30 கி.மீ. மடம் சம்பரசனப்பள்ளி ஓசூருக்கு வடக்கே 42 கி.மீ.ல் பெங்களூரு மடம்.

டாக்டர் B.**ஷேக்அலி,** (மே 21) மங்களூர், கோவா பல்கலைக்கழகங்களின் முன்னாள் துணைவேந்தர் அவர்கள் இப்புத்தகத்திற்கு 15–05–1996ல் எழுதியுள்ள அணிந்துரையில் கொடுத்துள்ள வாசகங்கள் நினைவில் நிற்பவை:

"ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட இக்காலகட்டம் போர்களால் பூமியைப் பிரித்தாண்டகாலம். எனினும் கர்நாடகாவின் ஒரு மூலையிலிருந்து மறுமூலைவரையிலும் ஒருமித்து **தழைத்தோங்கிய பக்தி இயக்கம்** தான் கர்நாடகாவையும், இந்தியாவையும் இப்போது இப்படி உயர்த்திப் பிடித்து நிற்க வைக்கிறது. மதஉணர்வுகள் மனிதனின் மனத்தையும் ஆன்மீக உணர்வுகளையும் சாந்தப்படுத்தி ஒருங்கிணைத்துச் செல்லும் பெரியசக்தி. இக்காலத்தில் வாழ்ந்த சாதுக்கள், முனிவர்கள், துறவிகள், மதபோதகர்கள் எல்லாம் இறைசக்தியை உள்வாங்கி உலாவினார்கள். அவர்களது சத்தியமான ஆன்மீக வாழ்வும் பின் சந்ததிக்குவிட்டு வைத்த தியாகதுறவு மனப்பான்மையும் தான்

இந்தியாவுக்கு என்றும் நிலைத்து நிற்கும் புகழைத் தந்துள்ளன. குறிப்பிட்டுச் சொல்லும் படியான பக்தி இயக்கத்தை அக்கால கர்நாடகா கையாண்டது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது."

துணைவேந்தர் குறிப்பிட்டுள்ள பெயர் குறிப்பிடாத எத்தனையோ புண்ணியர்களில் ஒருவரான ஸ்ரீமத் சுக்ஞானந்த ஸ்வாமிகளைப் பற்றி மைசூர் பல்கலைக்கழகம் இரண்டு கவிகளை அச்சிட்டு பெருமைப்படுத்தியதையும் பிற விபரங்களையும், பின்வரும் பக்கங்களில் படித்து மகிழுங்கள் (**அக்ஞானம் அறிவில்லாமை அறியாமை இருள். சுக்ஞானம் சுகம் தரும் ஞானம் ஒளிவிளக்கு அறிவுடைமை கலந்த ஆனந்த ஞானம்**)

குறிப்பு: விஸ்வகுலமடம் இருந்ததனால் மன்னர்கள் போரிடவில்லை. ஆதிக்க வெறியில் போரிட்ட இடத்திலெல்லாம் ஸ்வாமிகளின் மடமும் சொத்தும் இருந்தன. போர்காலத்தையும் சமாளித்து இன்றும் நீடிக்கின்றன.

ஓசூர் - ஹாசன் மடம்

மூலமடம் சூளகிரி வம்சாவழி ஸ்ரீமத் சுக்ஞானந்தமூர்த்தி ஸ்வாமிகள் (படம் 64-67-பக்.180)

தற்போதைய துறவி மடாதிபதி 17-04-1981ல் ஸ்ராவண மாதம் சுக்ல திரிதியையில் சந்நியாசி தீட்சை பெற்றார். 1983ல் சைத்ர மாசே சுக்ல பஞ்சமி திதியில் மகுடாபிஷேகம் செய்விக்கப்பட்டார்கள். தொடர்ந்து இன்று வரை அரே மாதன ஹள்ளி மடத்தின் பீடாதிபதியாகச் சேவை செய்து வருகிறார்கள்.

நித்ய அனுஷ்டானடம்: (படம் 65)

சிவனையே நித்ய வழிபாடு செய்கிறார்கள். சிவ பஞ்சாயதன விஸ்வகர்மா பூஜை, ஸ்ரீசக்ரா பூஜை, குரு பரம்பரா பாதுகாபூஜை என்று தினமும் காலையில் அபிஷேகம், அலங்காரம் அர்ச்சனை என்று ஸ்வாமிகளே விரிவாகச் செய்கிறார்கள். அதன் பிறகே மடத்துக்கு வரும் பக்தர்களுக்குத் தரிசனம் தருகிறார்கள்.

அரேமாதனஹள்ளி:

அரேமாதனஹள்ளி என்பது ஒரு குக்கிராமம். 40 வீடுகள் மட்டுமே உள்ள இந்த சிற்றூரில் ஆடு, மாடு, விவசாயம் என்று மக்கள் அமைதியாக, வசதியாக வாழ்ந்து வருகிறார்கள்.

SHEET 15




ப 55


ப 57


ப 62


ப 63



ப 60


ப 61


ப 59



ப 56


ப 56எ

இந்த சிற்றூரில் தான் ஸ்வாமிகள் ஆஸ்ரம் என்ற சிறு மடத்தை ஸ்தாபித்து வசித்து வருகிறார்கள். (படம் 66)

ஹாசன் மாவட்டம், அரகலே கூடு தாலுகாவில், ஹேமாவதி அணைப்பாசன கால்வாய்க்கு அருகிலுள்ளது அரே மாதன ஹள்ளி. போக்குவரத்துக்கு பஸ் வசதியுள்ளது.

இக்கிராமத்தில் முந்தைய பீடாதிபதியான ஸ்வாமிகளுக்கு ஜீவசமாதியுள்ளது. ஜீவசமாதியில் நித்ய பூஜை நடக்கிறது. 27–01–2018, வளர்பிறை (சுக்லபட்சம்) தசமி திதியில் ரோகிணி நட்சத்திரத்தில் குரு பூஜையும் சிறப்பாக நடந்தது. (படம் 67)

ஓசூர் சூளகிரி மடத்துக்கும், ஹாசன் அரேமாதன ஹள்ளி மடத்துக்கும் உள்ள தொடர்பு:

இரண்டும் சுவாமி ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகள் மடமே. ஓசூர் சூளகிரி மடம் மூலமடம், கிரஹஸ்தர், சந்தான மரபு, அரேமாதனஹள்ளி துறவி, சிஷ்யர் மரபு மடம்.

புல்லரசி:

வானம் பார்த்த அப்பூமியில் கால்நடைகளுக்கும் மக்களுக்கும் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் ஸ்ரீமத்சுக்ஞானந்த ஸ்வாமிகளை வேண்டினார்கள். தமது தவ வலிமையால் ஸ்வாமிகள் புல்லேரியைத் தோற்றுவித்தார்கள். இந்த ஏரியில் முறையாக ஸ்நானம் செய்த பிறகே செக்கோர்ல மலை மேலுள்ள குகைக் கோவிலுக்குப் பக்தியுடன் நடந்து ஏறிச் செல்வது வழக்கம். சுத்தக் குறைவுடன் யாரும் மலை ஏறினால் அங்குள்ள தேனீக்கள், தொடர்ந்து விரட்டிச் சென்று தோஷ மனிதர்களை கொட்டுவதும் வழக்கம். தேனீக்களின் இப்புனிதக் காவல் பணி இன்றும் தொடர்கிறது என்கிறார்கள்.

சூளகிரியும், மைசூரும் இணைந்த விபரம்

சூளகிரி சம்பரசனப் பள்ளியில் வாழ்ந்த ஸ்வாமி ஸ்ரீமத்சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகள், காலப்போக்கில் ஹொசாவூர் (ஓசூரில்) மடம் அமைத்தார்கள். ஒசூரைச் சுற்றிலும் சுமார் 22 கிளைகள்/ மடங்களை அமைத்து பிரதேச யாத்திரை செய்து ஆன்மீக சேவை செய்து வந்தார்கள்.

ஹாசன் மடத்தின் கிளைகள்:

துறவியாக ஆரம்பித்து, 1983ம் ஆண்டு, தீட்சை பெற்றுத் துறவியாகவே இன்றும் தொடர்ந்து வாழும் இன்றைய ஸ்ரீசிவ சுக்ஞானந்த தீர்த்த ஸ்வாமிகள் (படம்.64–பக்.178), விஸ்வகுலம் ஆன்மீகத்தில் தழைக்கவும், சைவ நெறி பெருகவும் தொடர்ந்து பணி செய்து வருகிறார்கள். திக்விஜயம் செய்து வருகிறார்கள். வேதபாட சாலைகளையும் நடத்தி வருகிறார்கள்.

ஹாசனின் கிளை மடங்கள்:

1. ஹாசன் மாவட்டம், அரிகலகோடு தாலுகா, இராமனாதபுர கிராமத்தில் (அரே மாதன ஹள்ளியிலிருந்து 25 கி.மீ) ரத வீதியில் சுமார் 3 ஏக்கர் பரப்பில் மடமும், வேதபாடசாலையும் உள்ளது.
2. மைசூர் ஜில்லாவில் ஹீன்சூரிலும்
3. மைசூர் டவுனில் 3/4 ஏக்கரிலும் கிளைகள் நிறுவப்பட்டுள்ளன.
4. மைசூர் அரண்மனையிலிருந்து 6 கி.மீ. தூரத்தில் தேசிய நெடுஞ்சாலையில் ஒருமடம் தயாராகிக் கொண்டிருக்கிறது.
5. பங்களூரில் நாகர்பாவி அருகில் பாபிரெட்டிபாளயாவில் சிறிய பாடசாலை துவக்கப்பட்டுள்ளது.

முடிவுரை:

ஓசூர் சூளகிரி அருகிலுள்ள சம்பரசனப்பள்ளியில் ஸ்ரீமத் சுக்ஞானந்த ஸ்வாமிகளால் துவங்கப்பட்ட மடம், நந்தீஸ்வரரை உபாசன மூர்த்தியாகக் கொண்டு வளர்ந்து சுமார் 22 கிளைகளில் ஓசூர் தலைமையிடத்திலிருந்து செயல்படுகிறது.

இன்றைய பீடாதிபதி ஸ்ரீநவீன்குமார் என்ற ஸ்ரீமத்சுக் ஞானமூர்த்தி (படம் 121–பக்.175) 1983ல் ஓசூர் மடத்துக்குப் பொறுப்பேற்றார்கள். ஐந்தே வயதான சிறுவனுக்கு அன்றைய தினம் ஸ்ரீம் சுக்ஞானமூர்த்தி சுவாமிகளும், ஸ்ரீமச்சேந்திரரும் (படம் 121 எ–பக்.175) சேர்ந்திருந்து மகுடாபிஷேகம் செய்வித்தது விசேஷம். இவரது பெரியப்பாவும், முந்தைய பீடாதிபதியுமான ஸ்ரீமத்சுக் ஞானமூர்த்தி ஸ்வாமிகள் 26–02–2003ல்

SHEET 16







பீடாதிபதி ஸ்ரீ
குரு சுக்ஞானமூர்த்தி
சுவாமிகள்



பீடாதிபதி ஸ்ரீ
பட்டத்து சுக்ஞானமூர்த்தி
சுவாமி



பீடாதிபதி ஸ்ரீ
சுக்ஞானமூர்த்தி சுவாமி
M.A., PhD., LLB.,



பீடாதிபதி ஸ்ரீ
சுக்ஞானமூர்த்தி சுவாமி
(நவீன்குமார்)





ஒசூர் ராம்நகரில் பிரிட்டிஷ் ஆட்சியில் கலெக்டர் பிரட் கட்டிய, 'ஹெனில் ஓத்' அரண்மனை.
கடந்த 1860ம் ஆண்டு ஹென்றி டிக்சன் இந்த ஃபோட்டோ எடுத்துள்ளார்.





முக்தியடைந்தார்கள். அதற்கு முன்பாகவே, தமக்கு ஆண்வாரிசு இல்லாததால் ஓசூர் மடத்து நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்வதற்காக தமது உடன் பிறந்த தம்பி மகனுக்கு இளம் வயதிலேயே பட்டம் சூட்டி, மகிழ்ந்தார்கள். மடத்துக்குப் பாதுகாப்பும் தேடி வைத்தார்கள். (படம் 123–பக்.175).

கவனம்:

இந்த மடத்துக்கு பல தலைமுறையாகவே, பீடாதிகள் திடீரென இயற்கையடைவதும், ஆண்வாரிசுகள் இளம் வயதிலேயே பட்டம் ஏற்பதும் என்ற நிலை தொடர்கிறது. பெரியவர்களின் வழிகாட்டுதல், பாதுகாப்பு, கிடைக்காத பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்படாததாலும், கிரஹஸ்த பீடாதிபதிகள், லௌதீக முறையில் வாழ்வாதாரம் தேட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டானது. முழுநேர ஆன்மீக சேவை என்றில்லாவிட்டாலும், மடத்தில் நித்ய பூசைகள், விசேஷகால பூசைகள், தொடர்கின்றன. இளம் வயதிலுள்ள தற்போதைய பீடாதிபதி, மடமூரில், மீண்டும் மூலஸ்தானத்தைப் புதுப்பிக்கும் முயற்சியில் இறங்கிவிட்டார்கள் என்பது நம்பிக்கை தருகிறது.

ஸ்ரீமத் சுக்ஞானந்த ஸ்வாமிகள் MA PhD LLB **பற்றிய ஒரு சிறப்புப் பார்வை:**

திருமதி. ஸரஸ்வதம்மா, மச்சேந்திர ஸ்வாமிகளுக்கு ஆண் 6, பெண் 6 என்று குழந்தை செல்வம். குடும்பத்தை போஷித்து பாதுகாக்க வேண்டியிருந்ததால் தம் புதல்வர் ஸ்ரீசுக்ஞானந்தாவுக்கு ஒசூரில் பட்டம் சூட்டி மகிழ்ந்தார்கள். 07–02–1945ல் பிறந்த இந்த ஞானக் குழந்தை பெங்களூரில் பிறந்து வளர்ந்தவர். பள்ளி, கல்லூரியில் சமஸ்கிருதம், ஆங்கிலம், கன்னடம் என்று கற்றுத்தேர்ந்தவர். விளையாட்டுப்போட்டிகளிலும் அதிகம் ஆர்வம் காட்டி வளர்ந்தார். பெங்களூரில் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று தேறினாலும், ஆன்மீகப் பாரம்பரியத்துக்கு வக்கீல் தொழில் ஒத்து வராது என்று எண்ணினார். 03–02–1972ல் திருமணம் நடந்தது. அதன் பிறகு சமஸ்கிருதத்தில் MA பட்டம் வரை கற்றுத் தேர்ந்தவர். ஓசூர் மடாதிபதி பொறுப்பிலிருந்து கொண்டே அருகேயுள்ள பல கிளைகளுக்கும், ஊர்களுக்கும் பிரதேசப்

ஓசூர் மடம் குரு பரம்பரைவம்சாவழி

ஸ்ரீமத் குருசுக்ஞான ஸ்வாமிகள் (பீடாதிபதி) v/s பில்லம்மா

ஸ்ரீபட்டாதா சுக்ஞானமூர்த்திஸ்வாமிகள் v/s திருமதி. புட்டம்மா (வாரிசு இல்லை)

திரு. குமாரஸ்வாமி (மணமாகவில்லை)

திருமதி.கெம்பம்மா v/s ஸ்ரீபசப்பா ஆச்சாரி ஒரே மகன் ஸ்ரீ மச்சேந்திர ஸ்வாமிகள்

இவர்கள் பட்டம் ஏற்கவில்லை. மாறாக மூத்த மகனுக்கு பட்டம் சூட்டினார்கள்

ஸ்ரீமச்சேந்திரஸ்வாமி v/s சரஸ்வதம்மா (இவர்களுக்கு 6 பெண் 6 ஆண் குழந்தைகள்)

குறிப்பு: பீடாதிபதியானவுடன் இயற்பெயர் மறைந்து ஸ்ரீமத்சுக்ஞானமூர்த்திஸ்வாமிகள் என்ற பெயரே நீடிப்பது வழக்கம்

மூத்தவர் ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகள் பீடாதிபதி v/s திருமதி சுனந்தா (ஆண்வாரிசு இல்லை)
MA. PhD. LLB - 15-8-1953முதல் 26–2–2003 வரை

இளையவர் ஸ்ரீகுமாரஸ்வாமிகள் v/s சுசீலாம்மா

இளையவர் ஸ்ரீபிரவின்குமார்

திரு.நவீன்குமார் என்ற ஸ்ரீமத்சுக் ஞான மூர்த்தி மூத்தவர் இன்றைய பீடாதிபதி தம் 5 வயதில் 27–11–1983ல் பட்டம் ஏற்றார். (தத்து)

SHEET 17


ஹாசன் - துறவி மடம்


ஹாசன் - துறவி மடம்
சுவாமிகள் தங்குமிடம்
ப 66


ஹாசன் -
ஸ்ரீ சிவ சுக்ஞானந்த தீர்த்த சுவாமிகள்
ப 64


ஹாசன் - துறவி மடம்
ஜீவ சமாதி
ப 67


ஹாசன் -
உபாசன மூர்த்தி தினசரி பூஜை
ப 65

பயணம் மேற்கொண்டு, மடாதிபதியின் கடமைகளைச் செய்து வந்தார். பெங்களூர் மடத்திலும் நித்தயபூசை, விசேஷகால பூசைகள் தொடர்ந்தன.

விஸ்வகுல மக்களின் வறுமையையும், கர்நாடகாவில் அக்கால விஸ்வகுல மடாதிபதிகளின் வறுமையையும் நேரில் பார்த்து மனம் வருந்தினார். தாமும் அப்படி வறுமையில் வாடாமல் நல்ல பொருளீட்டி, மடத்தையும், குடும்பத்தையும் மேம்படுத்த எண்ணினார். காலசூழலுக்கேற்ப, பெங்களூர் என்ஜினீயரிங் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார் PhD என்ற முனைவர் பட்டம் பெற்றார். பிறகு பெங்களூர் பல்கலைக்கழகத்தில் 1978ம் ஆண்டு முதல் சமஸ்கிருத மொழிப்பாடப்பிரிவின் தலைவர் ஆனார். (HOD) இவர்களின் காலத்தில் யோக வகுப்புப் பிரிவு துவங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஸ்டேட் பேங்க் ஆப் மைசூர் கோர்ட் வளாகம் சாலையில் புதிதாக அமைந்த பல்கலைக்கழக அலுவலக வளாகத்திற்கு “ஞானபீடம்” என்று புதுமையான பெயரைச் சூட்டிப் பெருமை பெற்றார்.

அரசாங்கம், பல்கலைக்கழகம், விஸ்வகுல சமூகம் என்று பல துறையிலும் சேவை செய்து புகழ்வாழ்வு வாழ்ந்த சமயம், கர்நாடக மாநில அனைத்து விஸ்வகுல மடாதிபதிகள் சாதுக்கள் சம்மேளனத்துக்கு (சுமார் 35 குருமார்கள்) மாநிலத் தலைவராகவும் பொறுப்பேற்று பெருமை சேர்த்தார்கள். குடும்பசூழ்நிலை, மடநிர்வாகம், தேக ஆரோக்யம் என்ற காரணத்தால் 2003ம் ஆண்டு ஜனவரியில் பல்கலைக்கழகப் பணியிலிருந்து விருப்பப் பணி ஓய்வு (VRS) பெற்றார். ஆனாலும் 26-02-2003ல் இறைவனது நிழலடி சேர்ந்தார். ஸ்ரீமத் சுக்ஞானந்த ஸ்வாமிகளின் காலம், இந்த மடத்துக்குப் புகழ், பெருமையுடன், பொறாமையையும் சேர்த்தது என்பது குறிப்பிடத்தக்கது. (படம் 126, 127-பக்.175).

5. கச்சிராப்பாளையம் ஸ்ரீமத்அகோர வீரபத்திராச்சார்ய ஸ்வாமிகள் மடம்

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியிலிருந்து வெள்ளிமலை அம்மாபேட்டை செல்லும் சாலையில் 12 கி.மீ. தொலைவிலுள்ளது கக்சிராயபாளையம். இதன் அருகில் கோமுகி வசிஷ்டா நதிக்கரையும், கோமுகி அணையும் உள்ளன. இந்த ஆற்றங்கரையில் தான் கச்சிராயபாளையமடம் ஸ்தாபிக்கப்பட்டது. வழிபடும் தெய்வம் அகோரருத்ரஸ்வாமிகள் என்ற சிவலிங்கம்தான்.

வம்சாவழி

↓

(படம் 69) மஹாதேவய்யா ஆச்சாரி v/s ஆதிலட்சுமி

↓

ஆண்வாரிசு இல்லை

மஹாதேவையா ஆச்சாரியின் உடன் பிறந்த தம்பி

↓ சரவணன் ஆச்சாரி

குப்புஸ்வாமி+4 தம்பிகள் | அக்காள் உண்ணாமலை

(மடாதிபதி) v/s தங்கம்மாள்

ஆண்வாரிசு பிறந்து இறந்தது.

↓

மகள் வயிற்றுபேத்தி லலிதா v/s ராமலிங்கம் தற்போது ஆத்தூரில் வசிக்கிறார்கள்.

ஸ்ரீமஹாதேவையாச்சாரி அவர்கள் சைவநெறியில் ஆழ்ந்த பற்றும், ஈடுபாடும் கொண்டிருந்த தச்சர். சிதம்பரம் மௌன குருஸ்வாமிகள் (கமலமூர்த்தி ஸ்வாமிகள்) பால் அதிகம் பக்தி

கொண்டு வாழ்ந்தார்கள். ஒரு சிவன் கோவிலை ஸ்தாபித்து வழிபட்டார்கள். கிரஹஸ்தர் என்றாலும் சைவ நெறி தழைக்கச் செய்ய, மடம், ஆஸ்ரமம் என்று செயல்பட்டார்கள். இவருக்கு ஆண் வாரிசு இல்லை. எனவே உடன் பிறந்த தம்பி சரவணன் ஆச்சாரியின் மூத்த மகன் குப்புஸ்வாமிக்கு மடத்தின் வாரிசு பட்டம் சூட்டி மகிழ்ந்தார்கள். சிதம்பரம் மடாதிபதியின் சிஷ்யர்கள் ஆனார்கள்.

ஸ்ரீகுப்பு ஸ்வாமி குலத்தொழில் தச்சு வேலையைத் தொடர்ந்தார். கூடவே சமஸ்கிருதம் என்ற மொழியைப் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டார். ஸ்ரீகுப்பு ஸ்வாமியுடன் பிறந்த மேலும் நான்கு சகோதரர்களும் தச்சர் தொழிலைச்சிறப்புடன் செய்து சுமார் 9 ஏக்கர் நிலத்தை **சுயசம்பாத்தியத்தில் வாங்கி வசதியாக வாழ்ந்து வந்தனர்.**

ஸ்ரீகுப்பு ஸ்வாமிகள் (படம் 68–பக்.185) அவ்வப்போது சிதம்பரம் மௌனகுருஸ்வாமிகள் வழியில் வந்த ஆத்தூர் ஸ்ரீமஹாதேவய்யா ஸ்வாமிகளுடன் அதிகம் பற்றும், குருபக்தியும் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். கிரஹஸ்தராயிருந்து பின் சந்நியாசம் என்ற நிலைக்கு வந்தார்கள்.

பிரதேச யாத்திரை:

கச்சிராயபாளையத்திலிருந்து, உளுந்தூர்பேட்டை, மங்கலம்பேட்டை, ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், திண்டிவனம், திருவண்ணாமலை, ஆத்தூர், வடலூர், சிதம்பரம் என்று பகுதிகளுக்குப்பிரதேச யாத்திரை சென்று மக்களுக்கு ஆன்மீகப் போதனைகள் என்று நல்வழிகாட்டி அருள்சேவை செய்து வந்தார்கள்.

பிரதேச யாத்திரையின்போது ஒரு பல்லக்கில் பவனி வந்ததுண்டு. நாலு பக்தர்கள் ஊழியர்கள் உடன் சென்றுள்ளனர். தியானம், தவம், யந்திரம், தந்திரம், சித்து விளையாட்டுக்கள் என்று மக்களைக் கவர்ந்து சேவை செய்து வந்தார்கள்.

தனிமை:

ஸ்ரீகுப்பு ஸ்வாமிகளின் மனைவி தங்கம்மாவும் ஒரே ஆண் மகனும் இளம் வயதிலேயே இறந்துவிட்டனர். தனிமையை உணர்ந்த ஸ்வாமிகள் இதையே நல்ல தருணம் என்று முடிவெடுத்து சந்நியாசத்தில் வாழ நினைத்தார்கள்.

சொத்துத்துறப்பு:

50/60 வீடுகள் அக்ரஹாரத்தில் நந்தவனம், கோவில், மடம், ஐந்து கடைகள், 45 செண்டில் நெல் விளையும் பூமி 9 ஏக்கர் சொத்து என்ற நிலையில் உடன் பிறந்த சகோதரர்கள் தலா 2 ஏக்கரை எடுத்துக்கொண்டார்கள். மீதமிருந்த 1 ஏக்கரில் மடம், கடைகள் வீடு மட்டும் எஞ்சின. குடியிருக்கும் மடம் வீடான 165'x60' ஓட்டு வீடும் காலிமனையும் தவிர தம் பங்கு பிற சொத்துக்கள் அனைத்தையும் கச்சிராபாளையம் விஸ்வகர்ம சமுதாயத்திற்கு என்று எழுதி வைத்தார்கள் ஸ்வாமிகள். (படம் 72–பக்.185)

1972ல் சங்கக்கட்டிடம்: (படம்)

வளர்ந்து வரும் ஆங்கிலேய மோகக் கல்விக்காலத்தில் விஸ்வகுல ஆச்சார அனுஷ்டானங்கள் குறைந்து வருவதைக் கண்டு அதிகம் கவலைப்பட்ட ஸ்வாமிகள் விஸ்வகுல மக்களின் ஒற்றுமையை வேண்டி விஸ்வகுல சமுதாயசங்கக்கட்டிடம் ஒன்றைக்கட்டினார்கள். அதை அன்னாளில் பிரபலமாயிருந்த விஸ்வகுல சமூக ஆர்வலர் திரு.தி.மா.நடராஜன் (சென்னை) (வி.கே.டைரி மோகனின் தந்தை) அவர்களின் தலைமையில் விழா எடுத்துத் திறந்து வைத்தார்கள் (கல்வெட்டு படம்) (படம் 73–பக்.185)

கச்சிராபாளையம், உளுந்தூர்பேட்டை, மங்கலம்பேட்டை, ஆண்டிமடம் என்பது ஒரு குறுகிய வட்டம். விஸ்வகுல மக்கள் ஸ்ரீகுப்பு ஸ்வாமிகளை அதிகம் மதித்துப் போற்றிய இடங்கள். அதிலும் அருகிலுள்ள வடலூர் (இராமலிங்கஸ்வாமிகள் ஸ்தலம்) பகுதியில் ஆன்மீகம் தழைத்த சமயம். ஆண்டிமடத்தில் சுமார் 10, 15 விஸ்வகுலமக்கள் வசிக்கும் தட்டார் குடியில் ஸ்ரீகுப்பு ஸ்வாமிகள் அடிக்கடி முகாமிடுவது வழக்கமாயிருந்தது. திருவாளர்கள் கலியபெருமாள், கிருஷ்ணமூர்த்தி ராஜகோபால் சுந்தரேச பக்தர் ஆகியோர் ஸ்வாமிகளுக்கு தங்கும்வசதியும், அன்னம் பாலிப்பு பிற போக்குவரத்து வசதிகளைச் செய்து மகிழ்ந்தார்கள். இவர்களுள் திரு.ராஜகோபால் பத்தர் வீட்டில் தங்கியிருந்தபோது தான் குப்புஸ்வாமிகளின் ஒரே மகன் நோய் வாய்ப்பட்டு இறந்தார். ஆண்டிமடத்தில் ஸ்ரீபழனி ஆண்டவர்

கோவிலை ஸ்தாபித்து நிர்வகித்து வரும் இத்தட்டார்கள் இன்றும் ஸ்வாமிகளின் பெருமையைப் பேசுகிறார்கள். ஆனால் போட்டோ பத்திரிக்கை, நோட்டீஸ், டைரி குறிப்பு என்று எதையும் பராமரிக்கவில்லை.

அந்திமக்காலம்:

மனைவியும், மகனும் இறந்த பின்னர் சொத்துக்களையும் தானமாக எழுதி வைத்த பின் ஸ்வாமிகளுக்கும் வயதாகிவிட்டது. யாத்திரை குறைந்தது. புரவலர்கள், போஷிப்பவர்கள் குறைந்தார்கள். எனவே தன் உடன் பிறந்த அக்காள் திருமதி. உண்ணாமலையின் வீட்டில் (சேலம் ஆத்தூரில் காமாட்சியம்மன் கோவில் தெருவில் அதே வரிசையிலுள்ள) சில காலம் தங்கியிருந்தார். அவ்வீட்டில் தற்போது உண்ணாமலையின் மகள் திருமதி.லலிதாவும் அவர் கணவர் ஸ்ரீராமலிங்கமும் (ஓய்வு பெற்ற ஓட்டுநர்) வாழ்ந்து வருகிறார்கள்.

இயற்கை மரணம் குப்பு ஸ்வாமிகளைத் தழுவியது. சிதம்பரம் கமலமூர்த்தி ஸ்வாமிகள் வகையறா ஸ்ரீமஹாதேவ ஸ்வாமிகளின் பிரேம சிஷ்யரான ஸ்ரீகுப்பு ஸ்வாமிகளையும் ஆத்தூர் தட்டான் சாவடியிலுள்ள மஹாதேவஸ்வாமிகளின் சமாதிக்கு அருகிலேயே அடக்கம் செய்தார்கள்.

ஸ்வாமிகள் வாழ்ந்த காலம்:

ஸ்வாமிகள் பிறந்தது தமிழ் ஆனந்த வருடம் மறைந்தது தமிழ் பிங்கள வருடம் வாழ்ந்தது மொத்தம் 62/63 ஆண்டுகள் என்று கூறப்படுகிறது. ஸ்வாமிகள் முக்தியடைந்தது ஆவணிமாசம் ஒன்றாம் நாள்.

குருபூஜை:

பின்னாளில் விஸ்வகுல மக்களின் ஞாபக வசதிக்காக பிரதி ஆவணிமாதம் இரண்டாம் நாள் குருபூஜை செய்யப்படுகிறது.

சமுதாய சங்கத்தின் சொத்தைப் பராமரித்தல் (படம் 73, 74, 75, 76-பக்.185)

கச்சராயபாளையத்தில் சுவாமிகள் மனைவி வழி சொந்தக்காரர் உயர்திரு. மஹாதேவையா ஆச்சாரி படம் 78 (வயது 94 ஓய்வு பெற்ற ஆசிரியர்–காந்தீயவாதி)யும் திரு.வையாபுரி ஆச்சாரியும்

மற்றுமொரு ஆச்சாரியும் சேர்ந்த மூன்று பேர் கமிட்டி இந்த சொத்துக்களைக் கவனித்து வருகிறார்கள். கடைகளில் வாடகை, வருமானம் வருகிறது. (படம் 73, 74–பக்.185) சுமார் 3/4 ஏக்கருக்கும் அதிகமான காலிமனை (காம்பவுண்டு சுவருக்குள் இருக்கிறது.) **பதிவு செய்யப்படாத மூவரணி** தொலைநோக்குப்பார்வையுடன் இந்த சொத்தைப் பாதுகாக்குமா? மடத்துக்கு வேறு கிளைகளும் கிடையாது.

நயனதீட்சை:

ஸ்ரீகுப்புஸ்வாமி, ஸ்வாமிகளிடம் நயன தீட்சை பெற்ற பாக்கியவான் திரு.மங்களம்பேட்டை மாணிக்கம், (படம் 76, 77–பக்.185) முருகன், பிரம்மஸ்ரீமுருகன், ஒரு விஸ்வகுல புரோகிதர். மங்களம்பேட்டையில் பிறந்து, வளர்ந்து வருபவர். இவரின் தந்தை தெய்வத்திரு. மாணிக்கம் ஆச்சாரி அவர்களும் புரோகிதம், ஜோஸ்யம், சித்த வைத்தியம் என்ற ஆன்மீக சீலர். திரு.மாணிக்கம் அவர்கள் திருவண்ணாமலை சீனந்தல் மடாதிபதியுடனும், கச்சிராப்பாளைய ஸ்வாமிகளுடனும் வாழ்ந்து பழகியவர். எனவே முருகனின் பள்ளிப் பிராயத்திலேயே வேதம் கற்றுக் கொள்வதற்காக கச்சிராயப்பாளையம் மடம் மற்றும் சீனேந்தல் மடம் இரண்டுக்கும் பள்ளி விடுமுறை நாட்களில் நேரில் சென்று தங்கிப்படித்து வந்தவர், சீர்காழிக்கருகிலுள்ள திருக்கோலக்கா எனும் ஊரிலுள்ள விஸ்வகுல ஆச்சார ஆசான் பிரம்ம ஸ்ரீராமனாத சிவாச்சாரியாரிடமும் வேதமும், சைவ தீட்சையும் பெற்ற பெரும் பாக்கியசாலி, தமது 10ம் வயதில் முருகன் மங்கலம் பேட்டையிலிருக்கும் சமயம், குப்புஸ்வாமிகள் திக் விஜயம் முகாமிட்டிருந்த காலம் (1983). முருகன், ஸ்வாமிகள் அருகில் சென்று நமஸ்கரித்து பாத பூஜைசெய்து சமஸ்கிருத ஸ்லோகங்களைச் சொல்லிக் கொண்டிருந்த வேளையில் சுவாமிகள் மனமுவந்து நயனதீட்சை அளித்து (கண்பார்வையால்) அருளாசி வழங்கினார்கள்.

தீட்சையின் பலன்:

தீட்சை பெற்ற பிறகு எந்த விஷயத்திலும் ஒரு தெளிவான தைர்யமான முடிவு எடுக்கும் சக்தியைப் பெற்றுள்ளதாக திரு.முருகன் புரோகிதர் இன்றும் உணர்கிறார்.

SHEET 20



ப 68

ப 69



ப 75



ப 77



ப 70



ப 72



ப 74



ப 73



ப 78



ப 77

6. புனிதர்களைப் புரிந்துகொள்வோம்

பரந்து விரிந்த தமிழகம், ஆறு, மலை, காடு என்று செல்வவளம். பருவமழை பெய்து கொண்டிருந்ததால், வானம் பார்த்த பூமியும் செழிப்புடன் இருந்தன. மன்னராட்சியில் குறுநில மன்னர்கள் போர். முகாலய ஆட்சியில் கூட்டணிப் போர். ஆங்கிலேயர் ஆட்சியில் காலனி ஆதிக்கம். எது எப்படியிருந்தாலும் ஐந்தொழில் கைவினைஞர்களுக்கு ஏகப்பட்டகிராக்கி, ஆதரவும், செல்வாக்கும் அதிகமே. வறுமையும் இல்லை.

தங்கக்கட்டுப்பாட்டு சட்டத்தின் தாக்கமும் இயந்திரமயமாக்குதல் தாக்கமும் கி.பி.1960க்குப் பிறகுதான். 1960வரையிலும் என்ன நிலைமை? 1960க்குப் பிறகு 1980, 2000க்குப் பிறகு என்ன நிலைமை என்று யோசித்துப் புரிந்துகொள்வதற்கு இந்த வரைபட அட்டவணை உதவுகிறது.

ஆதிமடமான திருநெல்வேலி மடத்தில் இதுவரை அருளாட்சி செய்த மடாதிபதிகள் எண்ணிக்கை **37** பேர் மட்டுமே, சமகாலத்தில் தோன்றிய திருவண்ணாமலை மடத்தில் இதுவரை அருளாட்சி செய்த மடாதிபதிகள் **64** பேர். துறவிகள் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தார்கள். எனவே மொத்த எண்ணிக்கை குறைவு என்று புரிந்து கொள்ளலாமா?

சிதம்பரம் மௌனகுருஸ்வாமிகள் (ஆத்தூர்) மடத்திலும், ஓசூர் சுக்ஞானந்த ஸ்வாமிகள் மடத்திலும் பின்னாளில் அதிக எண்ணிக்கையில் அடிக்கடி மரணம். ஆத்தூர் 5, ஓசூர் 4. இரண்டும் கிரஹஸ்தர் மடம். வாரிசு மடம் முதல்தாரம், இரண்டாம்தாரம், பங்காளிச்சண்டை என்பது ஆத்தூரில். ஆண் வாரிசு இல்லை. மடாதிபதி குறைந்த வயதில் மரணம். எனவே சகோதரர் வழியில் தத்தெடுப்பது என்பது ஓசூரில். ஆத்தூரில் மூப்பும் வறுமையினாலும் இறப்பு. ஓசூரில் பணவசதி பரபரப்பான வாழ்வில் இறப்பு. ஆத்தூர்

மடத்துக்கு அதிக கிளைகள். ஓசூர் மடத்திலும் அதிக கிளைகள். பரந்து விரிந்த பூகோளப் பகுதியில் திக் விஜயம். எனவே நேரடிக் கவனக் குறைவு, அலைச்சல், நிர்வாகக் கோளாறு, வருவாய், மரியாதைக் குறைவு, ஆதலால் அதிக இறப்பு என்று எடுத்துக் கொள்வதா?

வாரிசுமடம் தலைமுறை இடைவெளி எனவே மடாதிபதிகளுக்கு பக்தி ஞானத்தில் தவவலிமையான, சக்திகுறைவு, சிஷ்யர்களுடன் தொடர் உறவில் தடை, எனவே குரு, சிஷ்யர் பாரம்பரியப் பழக்கத்தில் விரிசல்/குறை என்று எடுத்துக் கொள்வதா? சிஷ்யர்களை வளர்க்கும் முனைப்பு இல்லாமல் தானுண்டு காணிக்கை வந்தால் போதும் என்ற இலேசான மனப் போக்கா? சொத்துக்கள் இருந்தும் வருமானம் பெருக்காமல், இனமக்கள் பக்தர்கள் எண்ணிக்கை இருந்தும் குரு காணிக்கை சுருள் என்று முறைப்படுத்தி குரு சிஷ்யர் இருவருக்கும் வளம் என்று செய்யாமல், வருமானம் குறைவா? சொத்தை விற்றால், வில்லங்கம் செய்தால் ஆச்சு என்ற குறுகிய நோக்கமா? எது எப்படி ஆனாலும் சரித்திரம், சமூகவியல், ஆன்மீகம் கலந்த நமது நோக்கத்தில் தொடர்ந்து கிடைத்து எஞ்சி நிற்பது:–

1. குருவை பேணி போற்றி வணங்கும் குணமும், செயலும் குறைந்தே வந்தன/ வருகின்றன.
2. ஆன்மீகம் பக்தி எல்லாம் சோறுபோடாது. அவசரகாலத்தில் இதற்காகக் **காலம்** செலவு செய்வது தேவையற்றது என்ற அறியாமை.
3. சிவன் சொத்து குலநாசம் என்பதை முற்றிலும் மறந்த மயக்கம் (குரு/சிஷ்யர் இருபக்கமும்) மடம் வாரியாக ஆய்வு செய்தாலும் முடிவில் எஞ்சி நிற்பவை இவைதான்.

நிறுவனத்தின் அவசியம்:

சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா நாட்டில் சிகாகோவில் அகில உலக அனைத்துச் சமய மாநாட்டில் எழுச்சியுரையாற்றிவிட்டு பாரதம் திரும்பினார். இராமேஸ்வரத்தில் இறங்கினார்கள். மன்னர் சேதுபதி அவர்களை வரவேற்றார்கள். மதுரை, திருச்சி, சென்னை வரை ரயில் பயணம். வழியெங்கும் மகிழ்ச்சி, ஆரவாரம்,

மனிதத்தலை, வெள்ளம். சுவாமிகள் யோசித்தார்கள். இந்த ஆரவாரத்தையும், மகிழ்ச்சியையும் இளமை கலந்த கூட்டத்தையும் எப்படிப் பயன்படுத்தி பாரதத்தில் இந்து மதத்தை நிலை நிறுத்துவது? தழைக்கச் செய்வது? அமெரிக்கா, ஐரோப்பிய **கண்டத்திலுள்ள நிர்வாக ஆட்சியமைப்பு ஆளுமை முறையை** இங்கே புகுத்துவது நல்லது என்று எண்ணினார்கள். சிந்தனை, செயல்திட்டமாக உருவெடுத்தது. சென்னை மெரினா கடற்கரையில் நடந்த முதல் கூட்டத்தில் **நன்றி, விஸ்வாசம், ஆதங்கம்,** கலந்த எழுச்சியுரையில் **இராமகிருஷ்ணாமடம் என்ற நிர்வாகக் கட்டமைப்புக் கருத்தை வெளியிட்டார்கள்.** இந்தியாவிற்கும் பிறகு உலகு முழுமைக்கும் கிளை பரப்பிய **இராமகிருஷ்ண மடத்தின் முதல் கிளையை / நிறுவனத்தை சென்னையில் துவக்கினார்கள்.** (இன்றும் மயிலாப்பூரிலிருந்து செயல்படுகிறது. கல்கத்தாவில் தலைமையகம் தமிழ்நாட்டில் திருச்சி, கோவை என்று பல இடத்திலும் கிளைகள் பலன் தந்து கொண்டிருக்கின்றன).

அப்படி பரந்து விரிந்த தொலைநோக்குப் பார்வையும், நிர்வாகக் கட்டமைப்பு நீதியும், முறையும் **இக்குல மடாதிபதிகளுக்கில்லாமல் போனதால்** ஆங்காங்கே மடிந்து போக நேரிட்டது. இது சோகம் மட்டுமல்ல. ஆன்மீகம், இனம், இந்து மதக்கலாச்சாரத்திற்குக் கிடைத்த பெரிய “மதிப்பு இழப்பு”. ஐந்தாம் வேதம் என்றும், சூத்திரனா? பிராமணனா? என்றும் வேதத்தையும் வர்ணாஸ்ரம தர்மத்தையும் குழப்பி உயரமுடியாமல் சுருண்டுபோன நிலைமை. இது “**சுய இழப்பு**” என்றாலும் தகும். அதுவும் 1981க்குப் பிறகும் கூட ஏன் 2015லும் கூட தமிழகத்தில் விஸ்வகுல **மடம் என்றால் ஒண்ணே ஒண்ணு அதுவும் திருவண்ணாமலை தான், மடாதிபதி என்றால் ஒருவரே அவரும் ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானா ஆச்சாரியே என்ற அறியாமை, மயக்கம்** பரந்து விரிந்திருந்தது. இன்னும் விரிந்திருக்கிறது என்பது வியக்கத்தக்க உண்மை.

ஏன்? ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முகாச்சாரி ஸ்வாமிகளே அதிகம் நேசித்துப் போற்றிய ஆத்தூர் மடவாசி ஸ்ரீமத் ராஜமாணிக்கம் ஸ்வாமிகளும், கர்நாடகா அனைத்து விஸ்வகுல மடாதிபதிகள் சங்கத்தின் தலைவருமான ஸ்ரீமத் சுக்ஞானந்த ஸ்வாமிகளும்

வாழ்ந்ததும், 1990–2003ல் தான். மறைந்ததும் தெரியாமல் போன / மறைத்துவிட்டது ஏன்? மூவருக்கும் சமஸ்கிருத ஞானமும், தவமும் இருந்தும் ஏன் இப்படி? விஸ்வகுல சமூக அக்கறை இல்லாது, "தான், எனக்கு காணிக்கை" என்ற தற்பெருமை சுயநல மனப்போக்கா?


1970, 1985, 1990, 2000க்குப் பிறகு தமிழகத்தில், இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி நன்றாகவே தான் இருந்ததே. விஸ்வகுல **மக்கள் கையில் காசுபணம் அதிகம் புரண்டதும், ஆங்காங்கே அதிக சங்கங்கள் தோன்றியதும், வளர்ந்ததும் இக்காலத்தில் தானே?** சாமியார்களை, குலகுருவை மடாதிபதியை, மறந்துவிட்டு இனஉணர்வு, லெட்டர்பேட் சங்கத்தலைமை என்று புதுக்கிளர்ச்சி எழுச்சி வளர்ந்தது ஏன்? **விரல்கள் ஐந்தும் தனித்தனியானாலும் கையில் ஒட்டிக் கொண்டிருந்தாலே மரியாதை. ஆன்மீகம் தவிர வேறு எதனால் இயலும்?** நம் முன்னோர்கள் புனிதர்கள் செய்த தியாகம் இத்தலைமுறைக்கும் இவர் தம் சந்ததிக்கும் பயனாகாமல் வீணாவதா? சங்கங்கள் ஆன்மீகத்தையும் கையாள வேண்டும்.

புனிதர்களை புரிந்துகொள்வோம் (முக்திப் பட்டியல்):

வ.எண்.	ஆண்டு	மடம்
1.	கி.பி.1741	முத்துக்குமாரஸ்வாமிகள் சிவகங்கை (31ம் பட்டம் நெல்லைமடம்)
2.	கி.பி. 1841	நெல்லை அனவரதஸ்வாமிகள் கோமாளீஸ்வரன் பேட்டை (33ம் பட்டம் நெல்லை மடம்)
3.	கி.பி. 1850	ஸ்ரீசந்திரசேகர ஸ்வாமிகள் மீனாட்சியம்மன் கோவில் திண்டிவனம்
	கி.பி. 1960	ஸ்ரீசக்கரை ஸ்வாமிகள் மீனாட்சியம்மன் கோவில் திண்டிவனம்.
	கி.பி. 1975	ஸ்ரீராமலிங்காச்சாரிஸ்வாமிகள் மீனாட்சியம்மன் கோவில் திண்டிவனம்.
4.	கி.பி. 1891	ஸ்ரீமத்பூர்ணாந்த ஸ்வாமிகள் சிதம்பரம் கமலமூர்த்தி ஸ்வாமிகள் மடம் ஆத்தூர்.
	கி.பி. 1938	ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகள் ஆத்தூர் மடம்.

வ.எண்.	ஆண்டு	மடம்
	கி.பி. 1958	ஸ்ரீமத் மஹாதேவஸ்வாமிகள் ஆத்தூர்மடம்.
	கி.பி. 1977	ஸ்ரீமத் ராசரத்தினம் ஸ்வாமிகள் ஆத்தூர்மடம்.
	கி.பி. 1988	ஸ்ரீமத் ராஜகுருஸ்வாமிகள் ஆத்தூர்மடம்.
	கி.பி. 1990	ஸ்ரீமத் ராஜமாணிக்கம் ஸ்வாமிகள் ஆத்தூர் மடம்.
5.	கி.பி. 1898	ஸ்ரீமத் மீனாட்சிசுந்தரம் ஸ்வாமிகள் (34ம் பட்டம் நெல்லை மடம்)
	கி.பி. 1979	ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர்ஸ்வாமிகள் (37ம் பட்டம் நெல்லை மடம்)
6.	கி.பி. 1904	ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகள் (35வது பட்டம் நெல்லை மடம்) கல்லிடை
7.	கி.பி. 1930	ஸ்ரீலஸ்ரீ சிவசங்கராச்சாரிஸ்வாமிகள் (63வது பட்டம் சீனந்தல் மடம்)
8.	கி.பி. 1937	ஸ்ரீமத்குரு சுக்ஞானந்தஸ்வாமிகள் (சூளகிரி ஓசூர் மடம்)
	கி.பி. 1953	ஸ்ரீ பட்டத்துசுக்ஞான ஸ்வாமிகள் – ஓசூர் மடம்
	கி.பி. 2003	ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகள் MA. Phd. LL.B (ஓசூர் மடம்)

மடாதிபதிகள் முக்தியான ஸ்தலங்களும் வருடமும்.... தெரிந்ததும் தெரியாததும்



7.குருமார்களும் தமிழ்க்கவிதைகளும் மடாதிபதிகள் இயற்றிய தமிழ்பாடல்கள்

தமிழும் சைவ மதமும் தழைத்தோங்கிய காலம் இருந்தது. ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதே– உரைநடை என்ற வசனத்தில் இல்லாமல், கவிதை என்ற பாட்டாகவே இருந்த காலமும் உண்டு. 1959–1966 வரையிலும்கூட அடியேனும் (பழனிச்சாமி) என் வசன நடைக் கேள்விக்கெல்லாம் பாடலாகவே பதில் சொன்ன பெரியவர்களைப் பல கிராமங்களில் நான் சந்தித்துள்ளேன். அக்காலத்தில் கவிதை புனைவது அவ்வளவு சுலபம். சங்க இலக்கிய பாடல்களை தச்சர், கொல்லர், குயவர், மன்னன், அந்தணன் என்று பல இனத்தவர்கள் பாடியுள்ளனர்.

மனமகிழ்ச்சியை, எழுச்சியை, உணர்வுபூர்வமாக, அழகான நயத்துடன் வெளியிட்டதே கவிதை. அவ்வரிசையில் மடாதிபதிகள் இயற்றிய கவிதைகள் ஏராளம். மடாதிபதிகள், **ஜெகத்குருக்கள் மீது அன்றைய** பக்தர்களும், படித்தவர்களும், மனம் மகிழ்ந்து மிகுந்த மரியாதையுடன் பாடிய பாடல்களும் ஏராளம். **ஆன்மீகத்திற்கு மொழியும், ஜாதியும் தடையாக இருந்ததில்லை; இருக்கவும் கூடாது.** பல வர்ணத்தவரும் நம் மடாதிபதிகள் மீது நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ளனர். எளிய பாடல்களை, ஒரு மாதிரிக்காக இங்கு பகிர்ந்துள்ளோம். ஆர்வமுள்ளவர்கள் மேலும் முயற்சிக்கலாம். பதினொரு பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

1. ஸ்ரீமத் ராஜமாணிக்கம் ஸ்வாமிகள் எழுதியது ஆராதனைத் தீபம்:

மூலம்அதில் நின்றுஏறி முளைத்த தீபம்

முச்சுடரும் ஒன்றாகி நின்ற தீபம்
மால்அயனுக்[கு] எட்டாமல் வளர்ந்த தீபம்
மனோஉள்மணியாய் வீற்றுஇருந்த மகிமை தீபம்
ஞாலம்அறிந்[து] எட்டும் ஒன்றாய் நின்ற தீபம்
நாதாக்கள் ரகசியமாய்க் காணும் தீபம்
காலம்அறிந் தெய்வமெய்ஞ் ஞான தீபம்
காண்க அருமை கற்பூர தீபந்தானே!

பொழிப்புரை:

மூலாதாரமாய்ச் சிரசு ஏறிநின்ற ஒளி, மூன்று சுடரும் ஒன்றாகி நின்ற ஒளி, திருமாலும் பிரம்மனும் அடிமுடிகாணாதவாறு விண்ணளந்த ஒளி, உள்ளத்தின் உள் நின்று ஒளிரும் ஒளி, உலக உயிர்கள் அறிந்து நெருங்கும் ஒளி, ஆன்மாக்கள் தொழும் ஒளி, அத்தகு காலத்தால் அறிந்துகொள்ளும் பரம்பொருளை கற்பூர ஒளியேற்றி வழிபடுவோமாக!

2. அருணகிரிநாதர் கொழுந்து மாமலை சுப்ரமணிய ஸ்வாமி மேல் பாடியது: பக்கம் 76லும் காண்க.

பெரிய மடம் (மே 10)

அலகில்தமி ழால்உயர்ச மர்த்தனே போற்றி
அருணைநகர் கோபுர விருப்பனே போற்றி
அடல்மயில்ந டாவியப்ரி யத்தனே போற்றி-அவதான
அறுமுக சாமியெனும் அத்தனே போற்றி
அகிலதலம் ஓடிவரும் நிர்த்தனே போற்றி
அருணகிரி நாதஎனும் அப்பனே போற்றி-அசுரேசர்
பெலமடிய வேல்விடுக ரத்தனே போற்றி
கரதலக பாலிகுரு வித்தனே போற்றி
பெரியகுற மாதணைபு யத்தனே போற்றி-பெருவாழ்வோம்
பிரமனறி யாவிரத தட்சிண மூர்த்தி.......
பரசமய கோளரித வத்தினால் வாய்த்த
பெரியமட மேவியசு கத்தனே யோக்யர் பெருமாளே:
தலையறிவிலேனைநெறி நிற்கநீ தீக்ஷைதர வேணும்

பொழிப்புரை:

புகழ்மிக்க தமிழ் போற்றும் ஆற்றல் மிக்கோனே! அருணை நகரில் உறைவோனே! மயில்வாகனா! ஆறுமுக சுவாமியெனும் ஐயனே! அருணகிரிநாதா! வேல் ஏந்திய சுவாமிநாதனே! குறமங்கைகைத் தழுவும் புயமுடையோனே! தென்முகநம்பியின் புதல்வனே போற்றி! போற்றி!!

பிள்ளைப் பருவமானது பத்துப்பருவங்களுடையது. பத்துப் பருவங்களிலும் பாடற்தலைவனைப் போற்றிக் குழந்தையாகப் பாவித்துப் பாடுவது பிள்ளைத்தமிழ்.

3. திருநெல்லைப் பரசமயகோளரி நாதர் பிள்ளைத்தமிழ் (ஸ்ரீஅங்கப்ப நாவலர் இயற்றியது):

சப்பாணிப் பருவம் (மே 12)

பகர்வகற் கரிதான வேதவே தாந்தமாய்ப்
பண்புடைய சித்தாந்தமாய்
பஞ்சாட்ச ரங்களாய் எட்டெழுத்[து] ஆகியும்
பரநாத வட்டெழுத்தாய்
நிகரிலாப் பங்[கய] ஓராறும் கடந்த ஒளி
நிற்குணமும் நின்மலமுமாய்
நிலமுமா யப்புமா அங்கியாய் வளியுமாய்
நின்றவெளி யாகி அழியாத்
துகளிலாத் தூலமாய்ச் சூக்குமமமாய் சூக்குமவதி
சூக்குமமாய் மவுனமாகிச்
சொல்அற்று நின்றதாய் ஆனந்த வடிவான
சுகசொரூப வாதியாகிச்
சகளநிட்களமாகி வந்தசிவ சிங்கமே
சப்பாணி கொட்டியருளே
சகலகுரு வானபர சமயகோ ளரியாய
சப்பாணி கொட்டியருளே!

பொழிப்புரை:

சொல்வதற்கு அரிதான வேதத்தின் முடிவாய், பண்புடைய சித்தத்தின் முடிவாய், ஐந்தெழுத்து உடையவனாய், முதல்வனாய்,

பரவொலியாய் அறுகமலத் தோன்றலாய், குணங்குறியற்ற தூயவனாய் நிலம், நீர், காற்று, தீ வெளி என்னும் ஐம்பூதமுமாய், தூலதேகத்தனாய் சூட்சமமோனமாய், ஆனந்தவடிவமாய், உருவம் ஏதுமற்றமாயயோனாய், வந்த சிவசிங்கமே! பிறசமயத்தார்க்கெல்லாம் சிம்ம சொப்பனமாய் விளங்கும் நாதனே சப்பாணி கொட்டி அருள்வாய்!

4. பரசமயகோளரியார் பேரில் திருஊசல்:

இடையொடுபிங் கலையிரண்டுங் கால்களாக
விளங்கினின் றசுழிமுனையைவிட்டம் போட்டங்
கடைவுடனே யோங்காரப் பலகைசேர்த்தே
யணிபெ றவே மனநாலுங் கயிறாய்ப்பூட்டி
சடமுலவு கன்னியர்கள் வடந்தொட்டாட்ட
ஜயஜயனெ விருமருங்குஞ் சீஷர்போற்றப்
படவரவிற் றுயின்மாலே யாடிரூசல்
பரசமய கோளரியா ராடிரூசல்

பொழிப்புரை:

இடைகலை பிங்கலை ஆகிய இரண்டும் கால்களாகவும் வெளிப்பட்டுத் தோன்றி நிற்கும் சுழி முனையை விட்டமாகவும் மகிழ்ச்சி எதுவும் கிட்டவில்லை! எம்மைச் சேர்ந்தோரே இதை ஏற்றுக்கொள்வதில், ஏன் வீணான மாறுபாடு கொள்ள வேண்டும்?

பதவுரை:

தேகம் – உடல், சீக்கிரம் – விரைவில், ஏற்கைக்கு – ஏற்றுக் கொள்வதற்கு, விரோதம் – மாறுபாடு, மரடினோர் – வழிவந்தோர்.

5. ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீன 37வது மடாதிபதி ஸ்ரீசிவாநந்த முனிவர் மும்முறை கைலைகண்டு வந்தபோது பாடிய பஞ்சரத்தினம் (எண். சீராசிரிய விருத்தம்):

உலகமெஞ்குஞ் சுகவாழ்வும் உயர்வும் பொருளிற் சமத்துவமும்
கலகமொழிந்தே ராணுவமிற் கட்டுக்கோப்பிற் தேசமெல்லாத்
திலகமுறவும் விஸ்வகுலஞ் செய்வாய் சுத்த சங்கற்பம்

சலனமறியாச் சிவாநந்தத் தகையே நெல்லை
ஜகத்குருவே

6. பரசமயகோளரியார் பேரில் ஆசிரியப்பாமாலை:

அண்டரண்டம் ஓரடியால் அளந்த நாதன்
அகத்தியனை பொதியமலை அமைத்த நாதன்
தொண்டருக்காய் நஞ்சமுதாக் கொண்ட நாதன்
தூணதிலே வந்துதித்துத் துலங்கு நாதன்
சண்டனைக்கா லால் உதைத்த வேக நாதன்
சற்குருவாம் பரசமய நெல்லை நாதன்
புண்டரிக மலர்ச்சரணம் கண்டோர் வெய்யப்
புன்பிறவிச் சாகரத்தைப் போக்குவாரே!

பொழிப்புரை:

அண்டமெனும் இப்புவியை ஓரடியால் அளந்தவன், அகத்திய முனிவரை பொதிகைக்கு அனுப்பியவன், அடியார்களுக்காக நஞ்சினை அமுதமாக கண்டத்திலேந்தியவன், இரண்யனை வதம் செய்ய தூணிலே அவதரித்தவன், சண்டகாசுரனனை உதைத்தவன், பிறசமயங்கட்கெல்லாம் சற்குருவாய் அமைந்த நாதன், கண்டோர் தொழும் கமலமலர்ச் சரணம் என உருகுவாரது இப்பிறவிக் கடலானது இனிப்பிறவாதிருக்க அருள்கின்ற நாதன் அவனே!

7. ஸ்ரீமத் கமலமூர்த்தி மௌனகுருஸ்வாமிகள் பஞ்சரத்னம்:

சீர்கொண்ட ப்ரமபஞ்சானனோர்ப் பவருபவ
தேஜோ மயத்தி னழகும்
திகழு மபிஷேக முடிமீது ருத்தி ராட்சமும்
செங்கோ சிகத்தி னழகும்
ஏர்கொண்ட ஷட்கவச குண்டலமுமா மதிநுதல்
இலங்கு செந்தூர அழகும்
யக்ஞோப வீத மணிமார்பில் ருத்ராட்சமும்
வெண்ணீறும் ஒளிரேகா யாசவழகும்
தார்கொண்ட தோளும் கபீன மிடைபான்னீர்
தரித்தசெம் பட்டின் அழகும்
தக்க பாதுகை கொலுசுபூண்ட பொற்பாதந்தனை

கண்டுதொழ அருளுவாய்
கார்கொண்ட சோலைச் சிதம்பர நகர்க்கண் உறை
காரணா பரிபூரணா
கமழ்கமல மூர்த்தியே அற்புதக் கோலமெய்ஞ்ஞான
காருண்ய மௌனகுருவே

பொழிப்புரை:

பஞ்சாணன் என்னும் அசுரனை வென்றதால் பெற்ற மேனியழகும், ஆராதனைக்குரிய முடிமீது உருத்திராக்க மணியழகும், மேலாடை தரித்த அழகும், பிறைநிலவு போன்ற நெற்றியிலிட்ட செந்தூரத்தின் அழகும், அணிந்திருக்கும் பூணூல் அழகும், வெண்ணீறு பூசி, மாலையணிந்த மார்பும், இடைதரித்த சிவந்தபட்டாடையழகும், பாதுகையும் கொலுசு பூண்ட பொற்பாதமும் கண்டு தொழுதிட அருள்புரிவாய்! அழகிய சிதம்பரம் என்னும் நகரில் எழுந்தருளிய பரிபூரணனே! தாமரையில் வீற்றுள்ள மெய்ஞ்ஞான வடிவமே! கருணையே உருவான மௌன குருவே!

8.கி.பி. 1880 கரூர் நிகழ்ச்சிப்பாடல் சிதம்பரம் ஸ்வாமிகள்:

தாயே மனோன்மணியே தற்பரயே நின்றவருள்
ஆயே மனோஹரியே வம்பரத்தி - தாயே நீ
மங்கலமாய் நேர்மை மகிமை உளதாயும்
துங்கநிலை தெய்வம் துணை

பொழிப்புரை:

தாயே! அழகுமிக்க ஒளிபொருந்திய இரத்தினம் போன்றவளே! மேலான பரம்பொருளே மிக்க அருள்தன்மை உடையவளே! நிறைவான மகிழ்வினைத் தருபவளே! ஆகாயவெளியில் நிறைந்து விளங்குபவளே! எனக்குத் தாயாய்த் திகழ்பவளே! மங்கலம், நேர்மை, பெருமை ஆகியன நிரம்பிய மிகவும் உயர்வுடைய தெய்வமாகிய நீயே எமக்குத் துணையாவாய்!

பதவுரை:

மனோன்மணி – ஒளிபொருந்திய இரத்தினக்கல், மனோஹரி – மகிழ்வினைத்தருபவள், அம்பரம் – ஆகாயம், துங்கம் – உயர்வு.

(பரசமயகோளரிநாதன் - புறச்சமயங்கட்கெல்லாம் சிங்கமென விளங்கும் தலைவன்):

9. தீர்க்க தரிசனம் -1

ஸ்ரீமத் ராஜமாணிக்கம் ஸ்வாமிகள் தீர்க்க தரிசனம்:

**தந்தைதாய் இறந்தாராகில் எதிர்பார்க்காதீர் வந்தவர்
இருந்தோர் சேர்ந்து வருவோரை எதிர்பார்க்காமல்
முந்தை முறைபோல் பிரேத முள்ளதை அடக்கம் செய்வீர்
மைந்தனை மேவ வேண்டாம் மற்றதைக் கவனிப்போம்பின்**

பொழிப்புரை:

பெற்றோர் இறந்துபோனால் பிள்ளையை எதிர்பார்த்துக் காத்திருப்பதில் பயனில்லை. உற்றார் உறவினரையும் எதிர்பார்க்காமல் முன்னோர் செய்து வந்த சடங்கு முறையினைச் செய்து அடக்கம் செய்வீராக!

10.தீர்க்க தரிசனம்-2:

**காக்கவும் வைத்து தேகம் இருப்பதால் என்ன லாபம்
சேர்ப்பதைச் சேர்த்து விட்டால் சீக்கிரம் துக்கம் நீங்கும்
பார்ப்பதால் லாபமில்லை பலகற்றும் இன்பமில்லை
ஏற்கைக்கு விரோதம் ஏனோ எம்முடை மரபி னோரே.**

பொழிப்புரை:

எதையும் காக்க வைப்பதால் யாதொரு பயனுமில்லை. உரிய இடத்தில் உரிய நேரத்தில் சேர்க்க வேண்டியதைச் சேர்த்துவிட்டால் எவ்விதத்துயரமும் வராது. எதையும் வேடிக்கை பார்ப்பதால் பயனுமில்லை. பலவற்றைக் கற்றிருப்பதனாலும் இன்பம் வரப் போவதில்லை! ஏற்றுக்கொள்வதில் கூட எதிர்வினை ஏன்? எம்முடைய இனத்தைச் சார்ந்தோரே.

11.மாம்பழக்கவிச் சிங்கம் - 'மங்களம்' :

**மலர் மகுட கேயூர - மகர குண்டலாகார
திலக முக புயபார - திடமு நேர
நல சமூக அலங்கார - நாகரிக ஜனர் சேர
கொலுவில்லரு பரசமய - குருபரற்கு சதா**

ஜயமங்களம்:

கனமுரச தவில் பேரி - கலசதுந் துபி பேரி
அனக ஜனர் துதி முழங்க - அருள் வழங்க
வனசமலர் அனைய முக - மண்டல கெம்பீரம் மிக
தினமு மகிழ் பரசமய - தேசிகற்கு சதா
ஜயமங்களம்.

பொழிப்புரை:

மலர்மகுடம் சூடியவனே! இசையைப் போன்ற இனிமையானவனே! மகரக்குழைகளை அணிந்தவனே! திலகமணிந்த முகத்தோனே! உறுதியான புயங்களை உடையவனே! வலிமை பொருந்திய நலம் நிறைந்த சமூகத்தின் அணிகலனாகத் திகழ்பவனே! நாகரீகம் நிறைந்த மக்கள் பெரிய அளவில் ஒன்றுகூட, கொலுவீற்றிருக்கும் அருமையான பரசமயக் கோளரிநாதனே! மேலான ஒப்பற்ற குருவே! உனக்கு எப்போதும் வெற்றி பொருந்திய மங்களம் உண்டாவதாக!

பதவுரை:

கேயூரன் – இசைபோன்றவன். கரகுண்டலம் – மீன் வடிவமான குழைகள். குண்டலாகாரன் – குண்டலங்களை அணிந்தவன், புயபாத – உறுதியான புயங்களை உடையவன். திடம் – வலிமை. நேர – பொருந்திய அலங்காரம் – அணிகலன், அழகு, ஜனா–மக்கள். அரு – அருமையான. குரபரன் – ஒப்பற்ற குரு. சதா – எப்போதும்.


Guru Pooja On : 24.12.2016
At : Thirunelveli Mutt
Yaga Sala Theertham Being taken to
Srimath Shivanandha Muneeshwara Shivaling
for Abishekam

இரண்டாம் பாகம்

8. குருபூஜை

ஆன்மீக மத குருமார்களை மதித்து நினைவில் நிறுத்திப் பணிந்து, வணங்கி, ஆசீர்வாதம், கேட்டுப் பெறுவதே குருபூஜை. அவரவர் வாழ்நாளில், தம் சீடர்கள் என்ற சிஷ்யர்களுக்கும், பக்தர்களுக்கும், தம்மைக் கொண்டாடி வணங்கும் பாமரர்களுக்கும், ஆன்மீக போதனை, மத நல்லிணக்கம், சமுதாய தர்ம நெறி ஒழுக்கம், குல ஆச்சாரம் என்று நல்வழி காட்டி வாழ்வதற்காகத் தம்மை வருத்திக் கொண்டும், தியாகங்கள் பல செய்தும் வாழ்ந்தவர்கள் குருமார்கள். அறியாமையை அகற்றி, ஞான ஒளியைத் தந்தவர்கள் குருமார்கள். உண்மை என்ற சத்தியமே பிரதானம். அருளே சொத்து, பொருள் அல்ல என்று வாழ்ந்து காட்டியவர்கள் குருமார்கள்.

பிறவி எப்படி இருந்தாலும், இறப்பினால், முக்தியால் புகழும், பெருமையும் சேர்த்துக்கொண்ட இவர்கள், சுயஒழுக்கம், தவவலிமை, இறைவன் துதி என்பதின் மூலம் தம்மைத் தாமே உயர்த்திக் கொண்டவர்கள்.

இப்பிறவியிலேயே தர்ம நெறியுடன் வாழ்ந்து முக்தியடைய முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர்கள். இப்படிப்பட்ட குருமார்களை வணங்கி, நன்றி கூறி, ஆசீர்வாதத்தைக் கேட்டுப் பெறும் நிகழ்ச்சியை/குருபூஜையைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறோம்.

ஸ்ரீமத் பரசமய கோளரி நாதர் ஆதீனம் - ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பீடம் - திருநெல்வேலி

சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியா இமயமலைப் பகுதியில் மாந்தை நகரில் உருவான ஆதீனம். அந்நியர் படையெடுப்பு, உள்நாட்டு மன்னர்கள் போர் என்று அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டதால், ஆதீனத்தின் பாதுகாப்புக் கருதி தென்னாடு வந்த ஸ்ரீசுவாமி ஓம்கார நாத ஸ்வாமிகள். (மகாத்மா காந்தி, தமக்கு ஒரு குரு வேண்டும் என்ற தேடலில் அடையாளம்

கண்ட மகான், (மே9) குரு – இவர் ஒருவரே) காவிரி நீராடி, பொதிகைமலை வந்து தாமிரபரணி ஆற்றங்கரையில் ஸ்ரீஅனவரத சுந்தரராசப்பெருமாள் ஆச்சாரியரைத் தரிசித்தார்கள். இருவரும் விசனப்பட்டு தேடி அலைந்து, ஸ்ரீமத் நீலகண்டாச்சாரியார் என்ற துறவியின் குடிலை அடைந்து அமைதி கண்டனர்.

தாமிரபரணி ஆற்றில் சாலிவாடிபுரத்தில் அக்கசாலைப் பிள்ளையார் கோவில் தெருவில் தாமிரபரணி ஆற்றுக்கால்வாய்ப் பகுதியில் இந்த ஆதீனத்தை சுமார் கி.பி.637ல் ஸ்தாபித்தார்கள், இம்மூவரும் சாதிக்கத்தக்க இளம் வயதென்பதால் ஸ்ரீநீலகண்டாச்சாரியாரை முதல் மடாதிபதியாக்கினார்கள். வழிபடும் தெய்வம், உபாசன மூர்த்தியாக அம்பாள் ஸ்ரீராஜ ராஜேஸ்வரியை ஸ்தாபித்தார்கள்.

பின்னாளில் பல துறவிகள் மடாதிபதியாக அருளாட்சி செய்தார்கள். பின்னாளில் துறவியாய் நுழைந்து பின் கிரஹஸ்தராய் மாறியவர்களும் மடாதிபதியாய் அருளாட்சி செய்த புகழ்மிக்கது இம்மடம்.

இதில் 30வது பட்டம் ஸ்ரீமத் அனவரத நாத அன்னாபிஷேக ஞானச்சாரியார் சுவாமிகள் (1641–1681), பிறகு 31வது பட்டம் ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகள், 32வது பட்டம் ஸ்ரீமத் மீனாட்சிசுந்தரம் ஸ்வாமிகள் 35வது பட்டம் ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகள் 36வது பட்டம் ஸ்ரீமத் குடந்தைராசரத்தினம் ஸ்வாமிகள் 37வது பட்டம் ஸ்ரீமத் சிவானந்தமுனீசுவரர் ஸ்வாமிகள் ஆகியோரது வாழ்க்கைக் குறிப்புகள் அருளாட்சிகள் பற்றிய சிற்சில குறிப்புகளே ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சீனந்தல் மடத்துக்கு 64வது பட்டம் வசிக்கும் சாமிகளே கூடுதல் பொறுப்பாக 38வது பட்டம் பெற்று ஸ்ரீமத்சிவஷண்முக ஞானாச்சாரியார் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். செயல்கள், சாதனைகள் என்று குறிப்புகள் கிடைக்கின்றன. மடாதிபதி என்று முறையாக ஆவணங்கள் எழுதி வைக்கப்படவில்லை.

இந்நிலையில் நெல்லை மடத்தில்:

1. ஸ்ரீமத் ஆதிகுருமூர்த்தி என்ற மூலவருக்கு/கற்பனை சக்திக்கு/ குருபூஜை நடத்தப்படுகிறது.

2. ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகளுக்கு குருபூஜை **முறைப்படி செய்யப்படவில்லை.**
3. சிவகங்கையில் முக்தியடைந்த ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகளுக்கு முறையாக குருபூஜை தொடர்கிறது.
4. சேலம் ஆத்தூரில் ஸ்ரீமத் கமலமூர்த்தி ஸ்வாமிகளுக்கும் குருபூஜை முறையாக நடக்கிறது.
5. குடந்தை ஸ்ரீமத் ராசரத்தினம் ஸ்வாமிகளுக்குக் கும்பகோணத்தில் குருபூஜை தொடங்கப்பட்டுள்ளது.
6. கல்லிடைக் குறிச்சியில் முக்தியடைந்த ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகளுக்கு குருபூஜை தொடங்கப்பட்டுள்ளது.
7. திருவண்ணாமலை சீனந்தல் மடத்தில் ஸ்ரீஆதிலிங்க மூர்த்திக்கும், ஸ்ரீவீரவைராக்கிய மூர்த்திக்கும் குருபூஜை நடக்கிறது.
8. ஓசூரில் ஸ்ரீமத்சுக்ஞானந்த ஸ்வாமிகளுக்கு குருபூஜை செய்யப்படுவதில்லை.
9. ஹாசன், அரே மாதன ஹள்ளியில், மாசியில் குருபூஜை நடக்கிறது.
10. கச்சிராப்பாளையத்திலும் குருபூஜை நடக்கிறது.

எந்த நாளில் குருபூஜை?

முக்தியடைந்த பெருமானாரின் பிறந்தநாள், நட்சத்திரம், பட்சம், தமிழ் மாதம் மற்றும் இயற்கை எய்திய நாள், திதி, பட்சம் தமிழ் மாதம் என்ற தெளிவான விபரங்களின் அடிப்படையில் குருபூஜை நடத்தப்படுகிறது. ஊர்வாரியாகக் குருபூஜை நடத்தப்படும் நாட்கள், விபரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

குருபூஜை - ஊரும் நாளும்

ஊர்	நாள்
ஸ்ரீமத் பரசமய கோளரிநாதர் ஆதீனம் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடம் திருநெல்வேலி – ஆதி குருமூர்த்தி	பிரதி மார்கழி மாதம் மகம் நட்சத்திரம்

ஊர்	நாள்
ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர்ஸ்வாமிகள் **திருநெல்வேலி**	பிரதி ஐப்பசி விசாகம், கார்த்திகை தேய்பிறை சஷ்டி
சீனந்தல் ஸ்ரீஆதி சிவலிங்காச்சாரி ஸ்வாமிகள் மடம் காந்தப்பாளையம் **திருவண்ணாமலை** ஜெகத்குருஆதீ சிவலிங்கச்சார்யமூர்த்தி ஸ்ரீவீரவைராக்கியமூர்த்தி ஸ்வாமிகள்	பிரதி கார்த்திகை மாதம் கடைசி சோமவாரம் வைகாசி முதல் ஞாயிற்றுக்கிழமை
ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகள் காளிகாம்பாள் கோவில் வளாகம் **சிவகங்கை**	பிரதிதைமாதம் ரோகிணி நட்சத்திரம்
ஸ்ரீமத்கமலமூர்த்தி ஸ்வாமிகள் **ஆத்தூர்** சேலம்	பிரதி புரட்டாசி 27ம் தேதி
குடந்தை ஸ்ரீமத்ராசரத்தினம் ஸ்வாமிகள் ஆற்றங்கரைத்தெரு–விநாயகர் கோயில் **கும்பகோணம்**	ஆனி மாதம் வளர்பிறை பஞ்சமி
கச்சிராபாளையம் – ஸ்ரீகுப்புஸ்வாமிகள்	பிரதி ஆவணி 2ம் நாள்
ஸ்ரீலஸ்ரீ அறிவானந்த ஸ்வாமிகள் என்ற ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகள் தாமிரபரணி ஆற்றுத் தென்கரை ஸ்ரீபழனிஆண்டவர் கோவில் **–கல்லிடைக்குறிச்சி**	கார்த்திகை மாதம்தேய்பிறை தசமி

குருபூஜை வளர்ந்த வரலாறு - கதை

சீனந்தல் மடம்: (படம் 6,7,8-பக்.227)

சுமார் 1400 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து ஒரே இடத்தில், குறுகிய சொத்துடன் காந்தப்பாளையம் குக்கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீஆதிசிவ லிங்காச்சார்ய ஸ்வாமிகள் மடமானது கிரஹஸ்தர் மடமாகவும் தகப்பன் பிள்ளை என்று வாரிசு மடமாகவும் விளங்கி வருதலால் தொன்று தொட்டே குருபூஜை தொடர்ந்து நடைபெறுகிறது. 63வது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கராச்சார்ய ஸ்வாமிகள் பொது மக்களால் தத்தெடுக்கப்பட்டு மடாதிபதியாகப் பட்டம் சூட்டப்பட்டார்.

குறுகிய வட்டத்துக்குள், சிறிய அளவில் நடந்து வந்த குருபூஜை 2003க்கு பிறகு பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டு அதிகசெலவு, அதிகமான அன்பர்கள், பக்தர்கள் கூட்டம் என்று விரிவடைந்தது. 2015 குருபூஜை கண் திருஷ்டியானது. 2017ஆம் ஆண்டு குருபூஜையில் மடாதிபதியின் அதிகார மையம் மாற்றமானது. (படம் 5,6,7,8,9,10,73,79–பக்.227)

64வது மடாதிபதியாக ஆட்சி செய்த ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானாச்சார்ய ஸ்வாமிகள் இக்குருபூஜை **காலத்தில் 5ம் கால மாலை வேளை பூஜையில் நிகழ்த்திக்காட்டும் அமானுஷ்ய சக்தி வியக்கத்தக்கது.** ஸ்ரீமத் வீரவைக்ராயஸ்வாமிகள் குருபூஜைக்கு, அழைப்பு, விளம்பர விழா இல்லை. குருபூஜை காலங்களில் ஆதி சிவலிங்க மூர்த்தியையும், ஸ்ரீவீரவைராக்ய ஸ்வாமிகளையும் தவிர்த்து ஸ்ரீசிவசண்முகஞானச்சார்ய ஸ்வாமிகள் திரு.சிவராஜ் ஆகியோர் காலில் விழுந்து பக்தர்கள் வணங்கும் பழக்கம் இங்கு உருவானது, ஊக்குவிக்கப்படுகிறது. கோவிலில் தெய்வத்தைத்தவிர வேறு யார் காலிலும் விழக்கூடாது என்பதே ஆன்மீக நெறி.

ஸ்ரீ மத் பரசமய கோளரி நாத ஆதீனம் ஸ்ரீராஜ ராஜேஸ்வரி பீடம் திருநெல்வேலி:

சுமார் 1400 ஆண்டுகளுக்கும் மேல் பழமையான இம்மடம் துறவி சந்நியாசி மடம்.

ஒரு சிலர் சந்நியாசி துறவியாக நுழைந்து பின்னாளில் மணம் செய்து கொண்டு கிரஹஸ்தராகவே மடாதிபதியாக வாழ்ந்தும் வந்தார்கள். இரத்த சம்பந்தம், வாரிசு என்ற அடிப்படை இம்மடத்தில் இல்லை. வழிபடும் உபாசன மூர்த்தியும் ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் தான்.

ஒவ்வொரு துறவியும் பிரதேச யாத்திரை செய்த காலத்தில் அவரவர் தவ வலிமையை வியந்து போற்றி வணங்கும்விதமாக ஜமீன்தார்கள், மன்னர்கள், மக்கள் மனமுவந்து 16, 17, 18ம் நூற்றாண்டுகளில் இந்த ஆதீனத்திற்கு மானியமாக வந்து சேர்ந்த சொத்துக்கள் ஏராளம்.

எனவே இந்த மடத்துக்குக் கிளைகள் அதிகம். சொத்துக்கள் அதிகம். வேறு வேறு துறவிமடாதிபதிகள் என்பதால் அவரவரது ஜன்ம நட்சத்திரம் மற்றும் முக்தி திதியில் குருபூஜை செய்ய வேண்டியுள்ளது. இருந்தாலும் ஸ்ரீமத்சிவானந்தமுனீஸ்வரர் ஸ்வாமிகள் முக்திக்குப்பிறகு அன்னார்க்கு இம்மடத்தில் குருபூஜை முறையாக / சிறப்பாக நடக்கவில்லை. மடத்திற்குள் வாசம் செய்யும் மடாதிபதியும் இல்லை. நிர்வாகக் கோளாறினால் தத்தளிக்கும் மடத்தில் குருபூஜையை முறையாகத் தொட வேண்டும் என்ற கருத்தை முதன்முதலில் நெல்லையில் விதைத்தது. ஸ்ரீநெய்வேலிக்குமார் என்று கூறுகிறார்கள்.

குருபூஜை தத்துவம், நடைமுறை, பூஜா விபரங்களை, இவர் கும்பகோணத்தில் வசிக்கும் மூன்றாம் தலைமுறை வைதீகக் குடும்ப நிபுணர்களான பிரம்ம ஸ்ரீவீழிநாத ஸ்தபதி, மற்றும் பிரம்ம ஸ்ரீஉமாபதி ஸ்தபதி (படம் 80–பக்.224) ஆகியோரிடமிருந்து தெரிந்துகொண்டார் என்று கேள்வி. அதாவது குருபூஜை விழாவிற்கென அழைப்பிதழ் அச்சடித்தல். ஹோமம் வளர்த்து கலச பூஜை செய்து குருவுக்கு அபிஷேகம், அலங்காரம் அன்னதானப்பிரசாதம் வழங்குதல் என்று முறையான குருபூஜைக்கு அடி வகுத்தார். ஆனால் இம்முயற்சி தொடரவில்லை.

இதற்கு முன்பாக ஆதீன நலக்கமிட்டியைச் சேர்ந்த சிலர் மட்டும் வந்து தேங்காய் உடைத்து கற்பூரம் காட்டிச் செல்லும் வழக்கமே இருந்துள்ளது. திருநெல்வேலியில் நெய்வேலிக் குமாரின் வரவு அழுத்தத்திற்குப் பிறகு படிப்படியாக குருபூஜை விழா பெரிதாக

மலர்ந்தது, 24–12–2016ல் நடந்த குருபூஜை விழா. (உயர்மட்ட குழுவும் புனரமைப்பு சங்கமும் முயற்சித்து) (பக்.157–200)

மஹா ஜனசங்கம்

தனித்துச் செயல்பட்டு வந்த ஆதின நலக்கமிட்டி திருநெல்வேலி டவுண் மாவட்ட மகாஜன சங்கம், மகாஜன மத்திய சங்கம் என்ற நிர்வாகத்துடன் கைகோர்த்து ஊர்மக்களிடம் நன்கொடை வசூலித்து சற்று விரிவாக குருபூஜை செய்ய ஆரம்பித்தார்கள்.

வயதானவர்கள் எடுத்துச் செய்வதில் சிரமம் உள்ளது என்று கூறி விஸ்வகர்ம இளைஞர் அணி முன்னின்று எடுத்துச் செய்தார்கள். சில குருபூஜையில் திருவண்ணாமலையிலிருந்து மடாதிபதி நேரில் வந்து கலந்துகொண்டார். பிறகு அவரது ஸ்ரீகார்யம் என்ற ஸ்ரீசிவராஜை இளையமடாதிபதி என்று குருபூஜையில் கலந்துகொள்ளச்செய்தார்கள்.

குருபூஜை வேளையில் தந்தை, மகன் இருவருக்கும் இடையில் மடாதிபதி பதவி ஆசை எண்ணங்கள் வெளிப்பட்டன. நெல்லை வாழ் மக்கள் கசந்தார்கள். விழா அழைப்பிதழ் சுருக்கமாக அச்சிடப்பட்டு பெயருக்கு ரிக்கார்டு என்றாகியது. வெளியூர் மக்களுக்கு அழைப்பு/ தகவல் என்பதே கிடையாது.

இளைஞர் அணியினர் குருபூஜை நடத்தத் தடைவந்தது. இத்தடையைப் பயன்படுத்தி அதே குருபூஜை தினத்தில் 2013–2014ம் ஆண்டு முதல் ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் சமாதிக்கு விளக்கு பூஜை. அபிஷேகம், அலங்காரம் என்று மதுரையைச் சேர்ந்த இளைஞர் சபையினர் இணையாக ஒரே நாளில் பூஜை செய்து வருகிறார்கள்.

புதிதாகத் தோன்றிய புனரமைப்பு சங்கமும் முனைப்புக் காட்டினர். தமிழ்நாடு நெல்லை மடத்தைக் காப்பாற்றும் விழிப்புணர்வு இயக்கம் நடத்தும் உயர்மட்ட குழுவினர் தான் முதல் முதலில் 2015–2016ல் தமிழ்நாடு முழுவதும் மாவட்டந்தோறும் குருபூஜைக்கு முன்னறிவிப்பு, முறையான அழைப்பிதழ் மடாதிபதிகளின் வாரிசுகள் / உறவைத் தேடி கௌரவித்தல் என்று பரப்புரை, விளம்பரம் செய்து முறையான குருபூஜைக்கு 24–12–2016ல் வித்திட்டனர்.

சிறப்பு:

ஸ்ரீமத்சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகளின் வாரிசுகளை ஊர் வாரியாகத் தேடிக்கண்டு நேரில் அழைத்து வந்து குருபூஜையில் கலந்துக்கொள்ள செய்தது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீரங்கம் விஸ்வப்பிரம்ம வேதபாடசாலை மாணவர்கள் நேரில் கலந்து கொண்டு வேதப்பாராயணம் செய்ததும் ஆஸ்தான புரோகிதர் திரு.பிச்சை வாத்தியாரின் கூடவே வெளியூரிலிருந்து மேலும் 2 விஸ்வபிராமண புரோகிதர்கள் ஹோமத்தில் கலந்து கொண்டதும் சிறப்பு. 2018ம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்ட ஆதீன நல அபிவிருத்திக் கமிட்டி முன்னின்று குருபூஜை செய்தார்கள். ஆனால் விழா அழைப்பிதழ் வெளியூருக்கில்லை.

குருபூஜையைப் பரவலாக்கும் முயற்சி:

நிர்வாகக் கோளாறினால் முடங்கிக்கிடக்கும் நெல்லை மடத்தை புதுப்பிக்கவும் பிரதேச யாத்திரையின் போது அங்கங்கே முக்தியடைந்த நெல்லை மடத்து மடாதிபதி ஜெகத்குருக்களை நினைவுகூர்ந்து குருபக்தியை வளர்த்திடவும் என்ற இருநோக்கத்துடன் தமிழகம் முழுவதும் நெல்லையைத் தவிர பிற புண்ணிய ஸ்தலங்களிலும் குருபூஜை நடத்தும் முயற்சியை மேற்கொண்டது ஒசூரைச் சேர்ந்த வ.மாடசாமி ஆச்சாரி நினைவு கல்வி, கலை, பண்பாடு மேம்பாட்டு அறக்கட்டளை. இதன் பயனாக சிவகங்கை, கும்பகோணம் மற்றும் கல்லிடைக்குறிச்சி (நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகில்) ஆகிய ஊர்களில் குருபூஜை விழா செய்து காட்டப்பட்ட விபரங்கள் இங்கே விவரிக்கப்படுகின்றன.

குருபூஜைத் தகவலின் மூலவித்து:

நெல்லை வாழ் மக்கள் பல ஆண்டுகளாக தொடர்ந்து மடாதிபதிகளின் மீது அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதில் ஆர்வம் காட்டி வந்திருக்கிறார்கள். மடத்துச் சொத்து உரிமை, வாரிசு உரிமை, சொத்தைப் பிரித்து பங்கு போடுவது, வாரிசுக்காக தத்து என்று பலவகையிலும் வழக்காடு மன்றங்களுக்குச் சென்றார்கள். அவ்வாறே சென்னை கோமளீஸ்வரன்பேட்டை வாழ் விஸ்வகுல மக்களும் அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் சொத்துக்காக நெல்லை ஆதீனத்தை எதிர்த்து சென்னை

உயர்நீதிமன்றத்திலும், டெல்லி உச்சநீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள். வழக்குகளும் தீர்ப்புகளும் **பட்டியலிடப் பட்டுள்ளன.** இந்தத் தீர்ப்பில் நெல்லை ஆதீனத்தின் எந்த மடாதிபதி எங்கு மறைந்தார் என்ற விபரம் உள்ளது.

ஆதீனத்தின் பழைய படிவங்களிலும் பல தகவல் உள்ளன. நெல்லை சுரண்டை சிவகங்கை, கும்பகோணம் கோமளீஸ்வரன் பேட்டையில் 70–80 வயதோர் மூலம் செவி வழியாகவும் பல உண்மைத்தகவல் கிடைத்தன. இதனடிப்படையில் மேன்மேலும் உள்ளூரிலும் நுண்ணிய தேடல் மூலமாக ஐக்கியமான புண்ணிய ஸ்தலங்கள் கண்டறியப்பட்டு முடிவு செய்யப்பட்டன.

திருநெல்வேலி மடத்தில் ஸ்ரீமத்சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகள் (படம் 105–பக்.211) தமது இறுதிகாலத்தில், உள்ளூர் மக்களின் போராட்ட குணத்தையும், ஒத்துழையாமை, ஆன்மீக அனுஷ்டானக் குறைவை மனதில் நிறுத்திக் கொண்டு தாம் இறந்த பின் தமது தவச்சாலையிலேயே சமாதிக்கு இடம் தேர்ந்தெடுத்து அளவு குறித்து அடக்கம் செய்ய உயில் சாசனம் எழுதி கலெக்டர் கிராம அதிகாரிகளிடம் ஒப்புதல் வாங்கி மறைந்தார். சமாதியில் சிவலிங்க பிரதீஷ்டை (பக்.19) செய்யவும் ஏற்பாடு செய்திருந்தார். இந்த முன்னேற்பாடு இந்த அனுஷ்டானத்தை அடையாளம் காட்டுகிறது. ஸ்வாமிகளின் **ஜன்ம நட்சத்திரமான ஐப்பசி விசாகத்திலும், முக்தியானகார்த்திகைமாதம் தேய்பிறை சஷ்டி திதியிலும் ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகளுக்கு குருபூஜை நடத்தப்படவேண்டும். இதுவரை அப்படி செய்யப்படவில்லை.** புரட்சிகரமாக ஆதீனத்தை முன்னெடுத்துச் சென்ற துறவிக்கு பிரத்யேகமாக குருபூஜை செய்யப்படுவது அவசியம்.


சிவகங்கையில் 31வது மடாதிபதி ஜெகத்குரு, முத்துக்குமார ஸ்வாமிகள் தமது பிரதேச யாத்திரையின்போது சிவகங்கை மதுரை முக்கு அருள்மிகு காளிகாம்பாள் கோவில் வளாகத்தில் முகாமிட்டிருந்தபோது முக்தியடைந்தார்கள். சிவகங்கை மருது பாண்டியர் வரலாறுடன் இந்த ஸ்வாமிகளின் தவ ஆற்றலும் பின்னிப்பிணைந்துள்ளது. இங்கு **பிரதி தை** மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் குருபூஜை நடைபெறுகிறது. ஒவ்வொரு தமிழ்மாதம்

ரோகிணி நட்சத்திரத்தில் சிறப்பு அபிஷேகம் அர்ச்சனை நடைபெற்று வருகிறது. ஆயினும் குருபூஜை என்பது கோவில் நிர்வாகஸ்தர்கள் முயன்று உள்ளூர் மக்களுக்கு மட்டும் அன்னதானம் செய்வது என்ற குறுகிய நிலையே தொடர்கிறது. இது தொடர்வதே பெரிய விஷயம். பாராட்டத்தக்கது.

ஹோமம் வளர்த்துச் செய்யவேண்டும். முறையான விழா அழைப்பிதழ் அச்சிட்டு வெளியூர் விஸ்வகுல மக்களுக்கும் அழைப்பு கொடுக்க வேண்டும் என்ற பரந்த மனப்பான்மை விழிப்புணர்வு ஏற்பட்டால் நல்லது. 2017ம் ஆண்டு தை ரோகிணியில் 05–02–2017ல் நடந்த குருபூஜையில் உயர்மட்டக்குழுவும் மாடசாமி ஆச்சாரி அறக்கட்டளையும் இணைந்து செலவு செய்து விழா அழைப்பிதழ் வெளியூர் பக்தர்கள் வரவு, ஹோமம் வளர்த்து கலச ஆவாஹனம் செய்தல், புஷ்பாஞ்சலி என்று செய்து காட்டப்பட்டது. 2018ம் ஆண்டு தை ரோகிணியில் (27–01–2018) இந்த விரிவு தொடரவில்லை. மீண்டும் பழைய முறையே தொடர்கிறது. உள்ளூர் மக்களின் ஆன்மீக ஆர்வம் பக்தி இயக்கம் தொடர்ந்து தூண்டப்பட வேண்டியுள்ளது. சிவகங்கை கோவில் வளாகத்திலுள்ள கல்பதிப்பு நல்ல வரலாற்று சான்றாக அமைந்துள்ளது. (படம் 85–பக்.97)

கும்பகோணத்தில் குருபூஜை முதன்முதலில் 2017 ஜூன் 27ல் ஆனி (27–6–2017) வளர்பிறை (படம் 103–பக்.217) பஞ்சமியில் துவங்கப்பட்டது. குடந்தை ஸ்ரீமத் இராச ரத்தினம் ஸ்வாமிகள் 36வது மடாதிபதி 04–07–1954ல் இங்கு ஐக்கியமானார்கள். தாம் பிறந்து வளர்ந்த வீட்டிலேயே தமது அந்திம காலத்தைக் கழித்தார்கள். அன்னார் மிகவும் நேசித்து அன்புடன் வணங்கிய பேட்டை ஆற்றங்கரைத் தெருவினாயகர் கோவிலிலேயே சமாதியும் அமைந்தது. (படம் 86–பக்.103) இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள சிரமம், அலைச்சல், அதிகமானது. நீதிமன்றத் தீர்ப்பு, நெல்லையில் அக்கசாலை பிள்ளையார் கோவிலைச்சுற்றி வாழும் வயோதிகர்கள், கும்பகோணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் வயோதிகர்கள் என்று நேரில் விசாரித்து உறுதி செய்ய வேண்டியதாயிற்று.

SHEET 23


Sri Periya Muthuchami Achari Being Blessed as Principal
Sishya by Srimath Shiva Ananda Munishwarar Swamigal
ப 105


Guru Pooja On : 24.12.2016
At : Thirunelveli Mutt
Gajendra Guruji & Pandit Umapathisthapathi
Greeting & Blessing Devottees who Performed
Pushpanjali
ப 103
ப 122எ


ப 106
Mis. Mr. Suriyanarayanan - S/o. Sri Periya Muthuchami Achari - Principal
Sishiya of Srimath Shiva Ananda Munishwarar Swamigal


ப 126


ப 126எ

தெய்வத்திரு சாவடி சாமினாதப்பக்தர் என்ற 92 வயதான முதியவர் (படம் 87–பக்.217) ஒருவருடன் குடந்தை ராசரத்தினம் ஸ்வாமிகளைப் பற்றிய சில நேரடி அனுபவங்களை நேரில் பகிர்ந்து கொள்ளமுடிந்தது. நாளும் பிறந்து வாழ்ந்த (படம் 88–பக்.217) வீட்டிலிருந்து அனுஷ்டானங்களை முடித்துவிட்டு மொட்டைக் கோபுரவாசல் கும்பேஸ்வரரைத் தரிசனம் செய்த பிறகு பேட்டை ஆற்றங்கரைத் தெரு பிள்ளையார் கோவிலருகிலிருந்த மரத்தடியில் தென்னை ஓலைக் கீற்று நிழலில் அமர்ந்து ஓய்வெடுப்பது பழக்கம். வருவோருக்கு விபூதி மந்திரித்து கொடுப்பது வழக்கம். மாலையில் நடைப்பயணமாக வீடு திரும்பிச் சென்று தியானம், பூசை, தூக்கம் என்று தமது இறுதி நாளை கழித்தார். இராசரத்தினம் ஸ்வாமிகள் – நெல்லை ஆதீனத்தின் மடாதிபதி. அந்திம காலத்தில் தம் சந்ததியினரை ஆசீர்வதிக்க இங்கு வந்து முக்தியடைய விரும்பினார்.

இயற்கையான தருணத்தில் பிரேதத்துக்கு அலங்காரம் செய்து சப்பரத்தில் வைத்து பட்டினப்பிரவேசம் செய்து நல்லடக்கம் செய்தது வரை உடனிருந்தேன் என்று இரண்டு, மூன்று முறை நேரில் உரையாடியபோது கூறி மகிழ்ந்தார். திரு. சாவடி சாமினாதப் பக்தர். தானே நேரில் வந்திருந்து ஊர் பெரியவர்களை வரவழைத்து சிறப்பாக குருபூஜையைச் செய்து தருவதாகக் கூறினார். 92 வயதிலும் கண்ணாடி போடாமலேயே வாழ்க்கைச் சரிதம் குருபூஜை பற்றிய முன்னறிவிப்பு நோட்டீஸ் அனைத்தையும் வாசித்து மகிழ்ந்தார். குருபூஜை நிகழ்ச்சிக்கு நேரில் வர அவரது ஆரோக்கியம் ஒத்துழைக்கவில்லை. மறுநாள் சென்னையைச் சேர்ந்த பிரம்ம ஸ்ரீசேது அவர்களும் திருநாகேஸ்வரத்தைச் சேர்ந்த பிரம்ம ஸ்ரீராஜராஜனும் (படம் 89–பக்.217) அடியோனுடன் நேரில் வந்து சாவடி சாமினாதப் பத்தரை நேரில் பார்த்து உரையாடி பொன்னாடை வஸ்திரம் சாத்தி பழங்கள்; கொடுத்து கௌரவித்தது. போட்டோக்கள் சரியான சரித்திரச்சான்று திரு.சாவடி சாமினாதப் பத்தர். 27–07–2017ம் நாள் இறைவனடி சேர்ந்தார். உயிருடன் இருக்கும்போது அவர் நேரில் வழங்கிய தகவல் பாராட்டுக்குரிய சரித்திரச்சான்று: திருமதி. விஜயா (படம் 90–பக்.217) என்பவர் (வயது 80 சாவடி) சாமினாத பத்தரின் மருமகள் இந்த அம்மையார் கொடுத்த வாய்மொழித் தகவல்கள்: இராசரத்தினம்

ஸ்வாமிகள் திருமணமாகும் முன்னரே நெல்லை மடத்துக்கு மடாதிபதியாகப் பட்டம் சூட்டப்பட்டார். நெல்லை மடத்திலிருந்து பல்லக்கும், பரிவாரமும் வந்து சகல மரியாதையுடன் கும்பகோணத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார். மடாதிபதியாகிய பிறகு மடத்தில் விவாகம் செய்து கொண்டார். மீண்டும் முக்தியாவதற்கு ஓரிரு வாரத்திற்கு முன்புதான் தனிமையில் வந்தார், துணைவியுடன் வரவில்லை.

வண்டிக்கானா புதுப்பாளையம் வீட்டில் (படம் 88) நண்பகல் சமயத்தில் முக்தியடைந்தார். ஊர் மக்கள் சகல மரியாதையுடன் இறுதி ஊர்வலம் பட்டினப்பிரவேசத்தில் கலந்துகொண்டார்கள். 108 தேங்காய் உடைத்து கபாலம் திறந்து சமாதியில் உட்கார வைக்கப்பட்டார். சமாதிக் குழி தோண்டும் சமயம் நல்ல சுகந்தம் வீசிய நீண்ட சடை முடி கூடிய வேறு ஒரு சந்நியாசியின் உடலும் கிடைத்தது. அதை எடுத்து அரசலாற்றங்கரையில் (கோவிலருகில் ஓடிக் கொண்டிருந்த காவிரியின் துணையாறு) வீசிவிட்டு பின் ராசரத்தினம் ஸ்வாமிகள் உடலை அடக்கம் செய்தார்கள். விநாயகர் கோவில் வளாகம் பின் ஸ்வாமிகளின் அனுஷ்டானம் என்றாகியது. (படம் 86, 19–பக்.103).

மணியக்காரத் தெருவில் வசிக்கும் திரு. லட்சுமணப்பத்தரோ (படம் 91–பக்.217) "நான் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் இந்த வீட்டின் முன் கூட்டம் இருந்தது. உள்ளே நுழைந்து பார்த்தேன். ஒரு நாற்காலியில் நன்கு அலங்காரம் செய்யப்பட்டு சாய்த்து உட்கார வைத்திருந்தார்கள். ஆச்சர்யமாகப் பார்த்து வந்தேன். விபரம் தெரியாத பள்ளி மாணவன் வயது" என்று நினைவு கூர்ந்தார்கள்.

பேட்டை ஆற்றங்கரைத் தெருவில் வசிக்கும் திரு.கும்பலிங்கப் பத்தரும் (படம் 92எ– பக்.217) அவர் எதிர் வீட்டில் வசிக்கும் ஸ்ரீசாமிநாதப் பத்தரும் ஸ்வாமிகளின் (படம் 92) சமாதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டதைத் தவிர வேறு அனுபவம் இல்லை என்று கூறினார்கள்.

ஆனால் இவர்கள் இருவரும் கூறிய வேறு ஒரு தகவல் முக்கியமானது. பல காலமாக **சில துறவிகள்/ சந்நியாசிகள்**

இந்தத் தெருவுக்கும், வினாயகர் கோவிலுக்கும் வந்து செல்லும் பழக்கம் இருந்ததாக ஒப்புக்கொண்டு நினைவு கூர்ந்தார்கள். வந்த சந்நியாசிகள் தெருவில் வீட்டுத்திண்ணையில் அதிக நேரம் அமர்ந்து சென்றதாக நினைவு கூர்ந்தார்கள்.

ஆம். தவசீலர்கள் யோகிகள் முக்தியடைந்த ஜீவசமாதி அல்லது அனுஷ்டானத்திற்குத் தவ வலிமையால் ஈர்க்கப்பட்டு சந்நியாசிகள் வந்து செல்வதுண்டு. எனவே இந்த பேட்டை ஆற்றங்கரை வினாயகர் கோவில் அனுஷ்டானம் உண்மை என்று உறுதியானது.

மேலும் கும்பகோணம் மேட்டுத் தெருவில் வசிக்கும் ஸ்தபதிகளும் வேத விற்பன்னர்களுமான திரு.வீழிநாத ஆச்சாரி மற்றும் திரு.உமாபதி ஆச்சாரியர் (படம் 80–பக்.217) குடும்பம் மூன்று தலைமுறையாக வைதீகமாக வாழ்ந்துவரும் குடும்பம். இவர்களது தந்தையார் தெய்வத்திரு. N.பஞ்சாப கேசன் ஆச்சாரியாரும் குடந்தை இராசரத்தினம் ஸ்வாமிகளுக்கு இறுதி பட்டினப்பிரவேசம் பற்றி தம் குமாரர்களான வீழினாதன் மற்றும் உமாபதியிடம் சுருக்கமாகக் கூறிச் சென்றதையும் பேட்டை ஆற்றங்கரைத் தெருவில் தான் சமாதி என்றும் நினைவுகூர்ந்தார்கள்.

புதுப்பாளையம் வீட்டில் குடியிருக்கும் திரு. மதிவாணன் தம்பதியர் (படம் 93–பக்.217) (ஸ்வாமிகளின் பூர்வீக வீடு; அதில் வாழும் தம்பி வழி பேரன்) ஸ்வாமிகள் கடைசி காலத்தில் தங்கியிருந்த அறை, பூஜை செய்த இடம், பக்தி மணக்க மக்கள் வந்து ஸ்வாமிகளை வணங்கி விபூதி பிரசாதம் வாங்கிச் சென்ற விபரம், அனைத்தும் அவர்களது முன்னோர்கள் சொல்லிக் கொடுத்ததை நினைவு கூர்ந்தார்கள்.

குருபூஜை இயக்கம்:

ஸ்ரீமத் ராசரத்தினம் ஸ்வாமிகள் ஐக்கியமான இடத்தை உறுதி செய்தபின் அவர் ஆதீன கர்த்தர், மடாதிபதி தவயோகி, விஸ்வகுல இனத்தவர் என்று அவரது அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லி, குருவாக எண்ணி, வணங்குவது இத்தலைமுறையின் கடமை என்பதைப்புரிய வைப்பதற்குப் பெரிதும் பாடுபடவேண்டியதாயிற்று.

தெருக்கூட்டம்:

கும்பகோணத்தில் ஏழு தெருக்களில் விஸ்வகர்மாக்கள் வசிக்கிறார்கள். அருகில் சுவாமிமலை, திருநாகேஸ்வரம், தாராசுரம், நாச்சியார்கோவில் என்றும் விஸ்வகுல மக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்பட்டது. 3000 நோட்டீஸ்கள் விநியோகிக்கப்பட்டன.

விழா:

குருபூஜை விழாவிற்கு அழைப்பிதழ் அச்சடிப்பது விநியோகம் செய்வது விழாக்கமிட்டி அமைப்பது செலவினங்கள் என வ.மாடசாமி ஆச்சாரி கல்வி, பண்பாடு, அறக்கட்டளை முழுப் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. ஸ்ரீஇராசரத்தினம் சாமிகள் வம்சாவழியில் சென்னையில் வாழும் திருமதி. ராணி ரங்கனாதன் தம்பதியினர், (படம் 94–பக்.217) அன்னதானப் பொறுப்பேற்றும் நேரில் வந்து கலந்துகொண்டும் சிறப்பு செய்தார்கள். ஐந்து விஸ்வகுல புரோகிதர்கள் ஸ்ரீரங்கம் வேதப்பாடசாலையைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் **ஹோமம், குருவணக்கப்பாடல் பாராயணம், புஷ்பாஞ்சலி, என்றும், தஞ்சை மாவட்ட சமூகப்பெரியவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.** (படம் 103A–பக்.217)

தொடரும் மாதாந்திர குருபூஜை:

முதன்முதலில் 27–06–2017 நாள் துவக்கி வைக்கப்பட்ட குருபூஜை குருவணக்கம் தொடர வேண்டும் என்ற எண்ணத்தில் மாதாமாதம் வளர்பிறை பஞ்சமியில் ஒவ்வொரு பக்தராக முறைபோட்டு குருபூஜை செய்து வருகிறார்கள். இது தொடர்கிறது.

சரித்திரக்கல்: (படம் 19)

ஆதிவினாயகர் கோவில் நெல்லை ஸ்ரீமத் பரசமய கோளரி நாத மடாதிபதி குடந்தை ஸ்ரீமத்ராசரத்தினம் ஸ்வாமிகள் ஐக்கியமான அனுஷ்டானம் என்று கல் பதிக்கப்பட்டுவிட்டது.

குடந்தை ஸ்ரீமத் ராசரத்தினம் ஸ்வாமிகளின் மகிமை:

ஸ்ரீமத்பரசமயகோளரிநாத ஆதீனத்தில் இதுவரை மடாதிபதி என்று 38 ஸ்வாமிகள் ஆட்சி செய்துள்ளார்கள். இவர்களுள் ஆவணங்கள் அடிப்படையில் குறிப்பிட்டுப் புகழ்பாடுவதென்றால்

ஸ்ரீமத் முத்துகுமாரஸ்வாமிகள் (31வது பட்டம் சிவகங்கையில் ஐக்கியம்) ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள் (37வது பட்டம் நான்கு திசையிலும் ராஜ சூயயாகம் செய்தவர். யாழ்பாணத்திலும் விஸ்வகுல ஆச்சாரத்தை வளர்த்தவர். நெல்லை மடத்தில் ஆவணங்களை பாதுகாத்தவர்) மற்றும் குடந்தை ஸ்ரீமத்ராசரத்தினம் ஸ்வாமிகள் 36வது பட்டம் மூவரே.

நெல்லை வாழ் உள்ளூர் மக்கள் வழக்காடு மன்றத்தில் வாதிட்டு மடத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தியவர்களின் தொல்லையைப் பொறுத்துக்கொண்டு பிற அரசியல் சமூக சீற்றங்களையும் தொடர்ந்து எதிர்கொண்டு, எதிர் வழக்காடி "மடம் தான் முக்கியம்", "தனிமனிதர் விருப்பு, வெறுப்பு, பெருமை முக்கியமல்ல" என்று சாதித்து நெல்லை ஸ்ரீபரசமயகோளரிநாதர் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடத்திற்கு "மடாதிபதி நியமனம் செய்யும் வழிமுறையை சட்டப்பூர்வமாக நீதிமன்ற தீர்ப்பாக வாங்கிச் சாதித்த" பெருமை இந்திய ஆதீனங்களின் வரலாற்றில் முத்திரை பதித்தது. மடம் காப்பாற்றப்பட்டது. இதுவே குடந்தை ஸ்ரீமத் இராசரத்தினம் ஸ்வாமிகளின் தனிப் பெரும் சாதனை.

கல்லிடைக்குறிச்சி குருபூஜை:

ஸ்ரீமத்பரசமய கோளரி நாத ஆதீனத்தில் 35ம் பட்டம் மடாதிபதியாக அருளாட்சி செய்த ஸ்ரீமத்முத்து குமாரஸ்வாமிகள் தமது பிரதேச யாத்திரையின் போது 1904ம் ஆண்டு கார்த்திகை மாதம் தேய்பிறை தசமியில் (02–12–1904) முக்தியடைந்ததாக டெல்லி உச்சநீதிமன்றம் (சுப்ரீம் கோர்ட்) (மே.6) தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தான் தேடல் தொடங்கியது.

வரலாறு:

தற்போதுள்ள புதிய மேம்பாலம், பழைய மேம்பாலம் தாமிரபரணி ஆற்றின் வடகரையிலுள்ள அம்பாசமுத்திரம் ஊரையும் தென்கரையிலுள்ள கல்லிடைக்குறிச்சி ஊரையும் இணைக்கின்றன. இந்த நெடுஞ்சாலை பாலம் வருவதற்கு முன்பு இந்த இடத்தில் தோணிப்பாலம் இருந்துள்ளது. தாமிரபரணியின் தென்கரையாற்று பகுதி "கீழம்பை ரெவின்யூ கிராமம்" என்று தான் இன்றும் அரசு

SHEET 18


ப 103


ப 87


ப 92


ப 103எ


ப 93
ப 91


சென்னை திருமதி ராணி - திரு. ரங்கநாதன்
குடந்தை ராசரத்தினம் சுவாமிகள் சந்ததிகள்
ப 94


திருமதி. விஜயா கும்பகோணம்
ப 90


திரு சாவடி சாமிநாதர் பத்தர்
குருவை அடையாளம் காட்டியவர்
ராஜராஜன்
ப 89
சேது


ப 88


ப 92எ



ப 80

ரெக்கார்டுகளிலும் உள்ளது. நெல்லை நீதிமன்ற தீர்ப்பு சென்னை, டெல்லி நீதிமன்றத்திதில் கண்டுள்ள வாசகம் அம்பாசமுத்திரத்தில் 1904ல் இறந்தார் என்று மேலும் தென்னாற்றுக்கரையில் தான் சுடுகாடும், இடுகாடும் அன்று இருந்துள்ளது.

இவர் தவயோகி சித்தர் இவ்விடத்தில் வாசி ஓடுகிறது. தம்மை நாடி வந்து தியானித்து வேண்டுபவருக்கு அருள் புரிகிறார் என்று பல பக்தர்களும், ஆன்மீகவாதிகளும் நம்பிக்கையுடன் பேசியும், வணங்கியும் வருகிறார்கள்.

சாஸ்திரம், மந்திரம் ஆகம விதிகள் என்று எந்த முறையுமே அனுசரிக்கத் தெரியாத முருகேசன் பூசாரிக்கு இக்கட்டு ஏற்படுத்தும் விதமாகக் கும்பாபிஷேகம் என்ற பெயரில் சில பிராமண புரோகிதர்களைக் கொண்டு வந்து ஹோமம் வளர்த்தார்கள்.

அறிவானந்த சித்தர் பெயர்:

சித்தர் ஸ்வாமிகளின் பெயரை உச்சரிக்க வேண்டிய நிர்பந்தம் எழுந்தது. யாருக்கும் பெயர் தெரியாததால் அறிவானந்த சித்தர் என்று சமயோசிதமாக சொல்லி சமாளித்தார் முருகேசன் பூசாரி (படம் 21–பக்.114). அன்று முதல் அறிவானந்தர் சித்தர் என்ற கற்பனைப் புனைப்பெயர் நிலைத்துவிட்டது. ஆகஸ்டு 2017ல் குருபூஜை இயக்கத்தைத் துவக்கிய எமது பக்தர்குழு அம்பை கல்லிடைக்குறிச்சி பிரமுகர்களுடன் கலந்து பேசி வரலாற்று உண்மையை எடுத்துக்கூறி ஜகத்குரு ஸ்ரீலஸ்ரீமுத்து குமாரஸ்வாமிகள் அனுஷ்டானம் என்பதை உறுதி செய்தோம். பரப்புரை நோட்டீஸ்களிலும், அழைப்பிதழ்களிலும் இப்பகுதி மக்களின் பக்தி நம்பிக்கை தொட வேண்டும் என்ற காரணத்தால் **அறிவானந்த சித்தர் என்ற முத்துகுமாரஸ்வாமிகள்** என்று அச்சிட்டோம். பின்னாளில் உரிய நினைவு சரித்திரகல்லும் பதியப்பட வேண்டியுள்ளது.

சித்தர்கள், சாதுக்கள், சந்நியாசிகள் வருகை:

ஒரு சித்தர் தவயோகி ஐக்கியமான இடத்திற்கு அவர்களின் தவவலிமை மேன்மையைப் புரிந்து வணங்கிப் புகழ்பாடி ஆசீர்வாதம் வேண்டுவதற்காக அவ்வப்போது சில சந்நியாசிகள் வந்து போவது உண்மை நிகழ்வு என்றும் (குடந்தை ராசரத்தினம்

அனுஷ்டானத்தில் எழுதியுள்ளோம் பக்கம் 214) அறிந்தபடி கல்லிடைக் குறிச்சிக்கும், தாமிரபரணி ஆற்றங்கரை பழனி ஆண்டவர் கோவிலுக்கும் பல துறவிகள் சந்நியாசிகள் அவ்வப்போது வந்து போய் இருந்ததை ஊரில் பலரும் நினைவு கூர்ந்தார்கள்.

பெருமைகளை வெளிகொணரக் குருபூஜை:

ஒரு கூட்டம் வரவழைக்கவும் குருபூஜை, இவ்வூர்மக்களில் சிலருக்கு மட்டுமே தெரிந்த அருள்கொடையை பலருக்கும் விரைவில் புரிய வைக்கவும், குருபூஜைதான் சரியானவழி என்றும் இதன் மூலம் நெல்லை மடத்தையும் இம்மக்களுக்கு அறிமுகம் செய்யும்விதமாக கல்லிடைக்குருபூஜை நடத்தப்பட்டது.

பூர்வாங்க வேலைகளும், களப்பணிகளும்:

2017, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் என்று தொடர்ந்து ஏழு ஊர்களில் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன. மக்கள் பிரதிநிதிகள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டன. சென்னை ஸ்ரீநரசிம்ஹசில்பாச்சார் அவர்கள் நாளது 12-10-2017ம் நாள் அறிவானந்த சித்தர் ஏகலிங்கத்திற்கு பால் அபிஷேகம் செய்வித்தார். திடீர் இடி, மின்னல், மழை வந்தது. லிங்கமும் நிறம் மாறியது. இந்த தெய்வீக அற்புத நிகழ்வு மேலும் பரபரப்பையும், ஆர்வத்தையும் தூண்டியது. (படம் 101-பக்.224).

குருபூஜை விழா 12-12-2017 :

ஏழு விஸ்வகுலப் புரோகிதர்கள் ஹோமம், கலசாபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை என்று சேவை செய்தார்கள். கும்பகோணம், சேரன்மாதேவி நெல்லையிலிருந்து வந்திருந்த குழுவினர் தேவாரம், திருவாசகம் ஓதினார்கள். ஸ்ரீரங்கம் விஸ்வ பிரம்ம வேதப்பாடசாலை மாணவர்கள் வேதமந்திரம் இசைத்தார்கள். உள்ளூர், வெளியூர் மக்கள் என்று சுமார் 470 பேர் கலந்துகொண்டு குருவணக்கப்பாடல், தியானம் வரிசையில் தரிசனம், அன்னதானம் என்று பங்கு கொண்டு மகிழ்ந்தார்கள். (படம் 97A, 99-பக்.114)

திரு.நரசிம்ஹசில்பாச்சார் அவர்கள் கற்பனையில் உதித்த ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகளின் திரு உருவப்பட ஓவியம் திறந்து வைக்கப்பட்டது. **சித்தரின் கருணை:** ஐப்பசி, கார்த்திகையில் இவ்வருடம் அம்பை, கல்லிடையில் அளவிற்கு அதிகமான

அடைமழை, தாமிரபரணியில் வெள்ளம் 12–12–2017ல் குருபூஜை என்ற வைராக்கியத்துடன் எல்லா முன்னேற்பாடுகளும் தொடர்ந்தன. 08–12–2017 இரவு வரை கனமழை தொடர்ந்தது. கவலையும் கவ்வியது. சித்தரின் அருளை பிரார்த்தித்தோம்.

9,10,11,12 நான்கு நாட்களும் தொடர்ந்து **நல்ல வெயில், மழை இல்லை.** எல்லா ஏற்பாடுகளும் சிறப்பாக நடந்தன. குருபூஜை குருவின் அருளால் சிறப்பாக நடந்தது. 13–12–2017 முதல் **மீண்டும் பலத்த மழை** தொடர்ந்தது. சித்தரின் கருணையை, சக்தியை இப்பகுதி மக்கள் புரிந்து கொண்டாட **இந்த 4 நாள் மழைக்கு விடுமுறை என்ற கொடை பெரிதும்** உதவியது.

11 மாதமும் தொடரும் குருபூஜை:

குருபூஜை விழாவின்போது குருவின் மகிமை, குருபூஜையின் நன்மையை விளக்கிச் சொல்லி பிரதிமாதம் தேய்பிறை தசமியில் குருபூஜை செய்யபோட்டிப் போட்டு முன் வரச் செய்தோம். சீட்டுக்குலுக்கி எடுத்துக் கொண்டவர்களது பெயர், ஊர்பதிவு செய்யப்பட்டு மாதாமாதம் குருபூஜை சிறிய அளவில் கும்பம் ஹோமம் வைத்துச் சிறப்பாக தொடர்கிறது. பக்தர்கள் பயனாளிகளாக மாறி வருகிறார்கள். இத்துடன் அவரவர் ஜன்ம நட்சத்திரத்திலும் சித்தரை தியானித்து வணங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. குருபூஜை தொடர்கிறது.

குருபூஜை தத்துவமும் செயல்விளக்கமும்:

உண்மையான, சரியான குரு யார் என்பதை புரிந்து அடையாளம் காண்பது, ஜீவசமாதி, அனுஷ்டானம் இரண்டையும் வேறுபடுத்தி விளக்குவது, மானசீகமாகத் தியானித்து குருவை வணங்குவது, சாஷ்டாங்கமாக தண்டனிட்டு வணங்குவது, நாமாவளி, பஜனை என்று குரு வணக்கப்பாடலைப்பாடிப் பரவசமடைவது. அற்புதங்களை நடத்திக் காட்டும் அருளாளர்கள், **தவயோகிகள் இருப்பிடத்தில் இந்தக்குருவை மட்டும் வணங்குவதும், வேஷம் தரித்த மனிதர் காலில் விழாமல் இருப்பது போன்ற எளிய உண்மைகளை** எடுத்துக்கூறி மக்களிடம் உண்மையான குருபக்தி உணர்வை தூண்டிவிடும் முயற்சியில் ஒரு இயக்கமாக நடைபெறுவது இந்த குருபூஜை முறை.

இதில் ஆடம்பரம், விளம்பரம், படோடாபம் ஆரவாரம் தவிர்க்கப்படுகிறது. சித்தரிடம் குருவிடம் மனதை அடகு வையுங்கள். முழுமையான பக்திஉணர்வு மேன்மை தருகிறது என்பதை புரிய வைக்கும் செயல்முறைகள் விளக்கமாக செய்து காட்டப்படுகின்றன. குருவடி சரணம், குருவே சரணம் என்ற குருவணக்கப்பாடலை கூடியிருப்போர் ஒரு சேர உரத்த குரலில் பாடி பஜனை செய்து மகிழ்கிறார்கள். மணமுள்ள உதிரிபூக்களால் போற்றி போற்றி சொல்லி அர்ச்சனை செய்து பரவசம் அடைகிறார்கள். தேவாரம் திருவாசகம் இசைக்கும் ஓதுவார்களுடன் அந்த பக்தி இசையில் ஒன்றிப்போகிறார்கள். ஆம் செல்போன், வெட்டிப்பேச்சு என்பதற்கு இடமே இல்லை. மாறி, மாறி மனதை குருவிடம் அடகு வைத்து சரணம் செய்து பழகுகிறார்கள். மனது இலேசாகிறது. யார் காலிலும் விழாத மகிழ்ச்சியும் சேர்கிறது. இந்த புது முயற்சிக்கு ஆரம்பத்தில் அதிகம் முனைப்புக் காட்ட வேண்டியுள்ளது. ஒரே ஒரு குருபூஜை சரியாக நடந்து முடிந்தப்பிறகு யாவருக்கும் வெற்றி, அடுத்த குருபூஜை எப்போது? என்று ஆவலாய் காத்திருக்க வைக்கிறது.

இது ஒரு சமூக ஆன்மீக **மனமாற்றச்செயல்.** தமிழகத்தில் 30, 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து **தவறான பாடம் / பழக்கம்** போதிக்கப்பட்டு வந்தது. “நான்தான் குரு, காலில் விழு, காணிக்கை போடு” என்று ஒரு குடும்பத்தினர் தம் சுயலாபத்திற்காக வியாபார விளம்பரமாக மாற்றிவிட்டார்கள். இந்த தவறான வழிபாடே குருபூஜை என்று நினைத்து ஏமாந்து போகும் மக்களை, மனம் மாறுங்கள்; மனதை அடகு வைத்து மானசீகமாகக் குருவை வணங்கி மேன்மையுறுங்கள் என்று உழைத்து போதித்து செய்து காட்டி சாதிக்க வேண்டியதாயிற்று. அறியாமையால் வந்த எதிர்ப்புகளையும் சந்தித்து, முறியடித்து, புரியவைத்து, இந்த வெற்றிப்பாதையை அமைத்து அருளியது குருவின் மகிமையே என உணரும் போது மெய் சிலிர்க்கிறது.

குருபூஜை இயக்கக்குழு:

இந்தப்புனிதமான ஆன்மீகப் பணியில் தங்களை முழுமையாக ஈடுப்படுத்திக் கொண்டவர்கள் ஏராளம், எனினும்

குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இயக்குநர்கள் பெயரை அச்சிட்டு நினைவுக்கூறுவது நமது நன்றிச் செயல்.

பிரம்ம ஸ்ரீ:

1.சேது – சென்னை, (படம் 102) 2. நடேசன் – வந்தவாசி. (படம் 103) 3.சுபசரவணன் குழுவினர் அறந்தாங்கி (படம் 103 எ) (குமார், ராதாகிருஷ்ணன், தியாகராஜன்), 4. ராஜகோபால் குழுவினர் (படம் 104) திண்டுக்கல் (ஆனந்தன், காளிதாஸ்), 5. ராஜராஜன் (படம் 89) கும்பகோணம். இவர்கள் ஊர்ஊராகப் பிரச்சாரம் செய்வதிலும், குருபூஜையிலும் நேரில் கலந்து முறைப்படுத்துவதிலும் வல்லவர்கள். அவ்வாறே புஷ்பாஞ்சலிக்குத் தன்னை பக்குவப்படுத்திக் கொண்டது திருமதி.ராஜேஸ்வரி திருநெல்வேலி டவுண். குருவின் கருணை மழையில் நனைந்து சந்தோஷிக்கும் இவர்களை நல்ல ஆரோக்கியத்துடன் குருவே வழி நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதும் சரியே.

12-12-2016ல் திருவண்ணாமலை - திருமூலாரண்யத்தில் குருபூஜை:

காந்தப்பாளையம் – திருமூலாரண்யம் – சீனந்தல் ஸ்ரீஆதிசிவலிங்கமூர்த்தி குருமடத்தில் குருபூஜை விழா சிறப்பாக நடந்தது. ஐந்து கால பூஜை என்று சிறப்பாக நடைபெறும் குருபூஜை விழா, இவ்வாண்டில் கார்த்திகைமாதம் கடை சோமவாரம் (கடைசி திங்கள்கிழமை) கிருத்திகை நட்சத்திரம், பௌர்ணமி திதியில் நடந்தேறியது.

திருவண்ணாமலை ஸ்ரீஅண்ணாமலையார் கோவிலில், திருக்கார்த்திகை தீபம், பௌர்ணமி கிரிவலம் என்று விழாக்கள் சேர்ந்து வந்ததாலும், அடைமழையாலும், திருவண்ணாமலையிலும் கூட்டம் குறைவு. அதைத்தாண்டிய காந்தப்பாளையத்திலும் பக்தர்கள் வரவு குறைவாகவே இருந்தது.

இவ்வாண்டு (2017) குருபூஜை விழாவின் சிறப்புகள்:

தொடர்ந்து சீனந்தல் மடத்திற்குப் பல்லாண்டு காலமாக, விஸ்வாசமாக உள்ள பக்தர்கள் பலருக்கும் பாராட்டு விருதுகள் வழங்கப்பட்டன. சில பக்தர்கள் மடத்திற்குப்பல பொருட்களைப் பரிசாகக் கொடுத்து மகிழ்ந்தார்கள். மடாதிபதி பெரியஸ்வாமிகள்

ஸ்ரீலஸ்ரீசிவஷண்முக ஞானாச்சாரியாரும், மூத்தமகன் ஸ்ரீசிவராஜுும் இணக்கமாக இருந்து குருபூஜை விழாவை நடத்திக்காட்டினார்கள். 2015ல் (முந்தைய வருடம்) இந்த மடத்துக்குள் போலீஸ் படையுடன் நுழைந்த பெரியவர். மடாதிபதி, இவ்வாண்டு தனியாகவே வந்து சென்றார். அப்பாவும், மூத்தபிள்ளையும் சுமூகமாக, இணக்கமாக இருப்பது போன்ற ஒரு சுமூக ஏற்பாட்டுடன் குருபூஜை நடந்தேறியது.

மடாதிபதியின் சொற்பொழிவு:

ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முகஞானச்சார்ய ஸ்வாமிகள் வழக்கம் போல் பாடினார்கள், பேசினார்கள். அவர்கள் பேசியதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது. "ஆதிசிவலிங்கமூர்த்தி மட்டும் தான் கடவுள். அவரை மட்டுமே வணங்க வேண்டும். வேறு யாரையும் / தெய்வத்தையும் அல்ல"

விளம்பரம்:

12-12-2016ம் நாள் திருவண்ணாமலையில் நடைபெற்ற குருபூஜை விழாவிற்கு டிசம்பர் 2016 இதழில் ஸ்ரீவிஸ்வமலர் இதழ் - முழுப்பக்க விளம்பரம் - "ஆசிரியர் மடல்" என்று அச்சிட்டு இம்மாத இதழின் கௌரவ ஆசிரியருக்குத் தம் விஸ்வாசத்தைக் காட்டிக்கொண்டது. இந்த இதழில் திருநெல்வேலி மடம் 24-12-2016 குருபூஜை பற்றிய செய்தியோ, விளம்பரமோ இடம் பெறவில்லை.

குருபக்தி:

ஆழ்ந்த நம்பிக்கை தான் இறைவனின் அன்புக்கு அடிப்படை என்கிறது இந்துமதம். தொடர்ந்த நம்பிக்கையே, கருணை மழையில் நனைந்து நன்மையும் இன்பமும் பெற்று மகிழ்கிறது. இறைவனே குரு. தவசிகளும், முனிவர்களும், நம்மை இறைவனுக்கு அருகில் அழைத்துச் செல்லும் வழிகாட்டிகள். எண்ணம், சொல் செயலில் சுத்தமான, தவசிகளை, முனிவர்களை, துறவிகளைச்சிலர் குருமார்கள் என்று ஏற்றுக்கொண்டு வாழ்ந்து காட்டினார்கள். அப்படி வாழ்ந்தவர்களின் எளிமையும், அடக்கமும், பிறருக்கு உதவியாக வாழ்ந்த திறமும் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. ஸ்ரீமத் பரசமய கோளரிநாதர் ஆதீனம்-ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பீடம் திருநெல்வேலியில்


SHEET 19


ப 101
திள் மழையை வரவழைத்த
பால் அபிசேகம்


கல்லிடைகுறிச்சி - பூசாரி
முருகேசன் ஆச்சாரி
ப 21


அகில பாரதீய விஸ்வகர்ம ஜெகத்குரு பீடாதிபதி
H.சிவானந்த முனீஸ்வர சுவாமிகள் தபோவனம்
ஸ்ரீமத் பரசமய கோளரிநாத ஆதீனம்
84. அக்கசாலை விநாயகர் கோவில் தெரு, திருநெல்வேலி டவுன் - 627006.
Guru Pooja On : 24.12.2016
At : Thirunelveli Mutt
ப 106
Sree Math Shivananda Muneeshwara Swamigal Thapovanam


Road Path to Kerala Vishwa Karma to Approach their Kuladeivam Temple at TN. Veli Mutt
Sudalai Maadan & Pechiamman Temple - Kuladeivam
of Vishwakarma of Kerala
Behind Kamakshi amman temple - TN. Veli Mutt
ப 136


ப 103A


ப 104


ப 103


ப 102


ப 80

அருளாட்சி செய்த 37வது மடாதிபதி ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகளின் தவவலிமை, சிஷ்யர்களை, தொண்டர்களை பண்படுத்தும் முயற்சி பற்றிய செய்திகள் பலவுண்டு. திருவாளர் பெரியமுத்து ஆச்சாரி (படம் 105–பக்.211), சின்ன முத்து ஆச்சாரி என்ற சகோதரர்கள் காமாட்சியம்மன் கோவில் தெருவில் வாழ்ந்து வந்தார்கள். பாத்திரம் கடைசல், வெள்ளி பட்டறை என்று வாழ்ந்த கைவினைஞர்கள் திறமும் குறிப்பிடத்தக்கன. அதில் **பெரியமுத்து ஆச்சாரி** என்பவர் சுவாமி சிவானந்த முனீஸ்வரரின் **பிரதான சிஷ்யராக** தன்னை ஆளாக்கிக் கொண்டார். இவரின் பக்தி உணர்வும் தவவாழ்வுக்கு துடிக்கும் பக்திமனப்பான்மையும் பக்குவமும் சுவாமிகளைப் பெரிதும் கவர்ந்தன. ஸ்வாமிகளும் பெரியமுத்து ஆச்சாரியைத் தொடர்ந்து பக்குவப்படுத்தி மேன்மைப்படுத்தி தீட்சையும் கொடுத்தருளினார்கள். (புகைப்படத்தில் ஸ்ரீமத்சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகள், ஸ்ரீபெரியமுத்து ஆச்சாரிக்கு துரியாதீத – சிவகளப் – பயிற்சியில் ஞான தீட்சை கொடுப்பதைக் காணலாம்.) (படம் 105)

பின்னர் ஸ்ரீபெரியமுத்து ஆச்சாரி அவர்களின் வாக்குப் பலிக்க ஆரம்பித்தது, மந்திரித்து விபூதி கொடுத்தால், நிவாரணம் கிடைத்தது... என்றெல்லாம் பல பயனாளிகள் சொல்ல ஆரம்பித்தார்கள். இவ்வழியில் ஸ்ரீபெரியமுத்து ஆச்சாரியின் புதல்வர் ஸ்ரீமு.சூரியநாராயணன் ஆச்சாரி (வயது 81)யும், அவரது மனைவி திருமதி. **வாசமுத்துமாரியம்மன்** (படம் 106–பக்.211) (வயது 71)யும் தற்சமயம், 21/35 காமாட்சியம்மன் கோவில் தெரு, திருநெல்வேலி டவுணில், சொந்த வீட்டில் வசித்து வருகிறார்கள். இவர்களின் குருபக்தி மெய்சிலிர்க்க வைக்கிறது.

திரு.பெரியமுத்து ஆச்சாரி தாம் வாழும் காலத்திலேயே மகன் சூரியநாராயணனுக்குத் தியானம் செய்யப் பழகிவிட்டார். ஸ்ரீமத் முனீஸ்வரனின் மீது பக்தியை வளர்த்துவிட்டார். **ஐந்தொழில் செய்வது வயிற்றுக்குணவு. பக்தியும், தியானமும் உன் ஆன்மாவுக்குணவு** என்று பழக்கிவிட்டார். மருமகளையும், (வாசமுத்துமாரியம்மாளையும்), பக்திநெறியில் **தியானம், குரு வழிபாடு என்று தயார்படுத்தினார். குடும்பம், குழந்தை வளர்ப்பு, கணவனுக்கு பணிவிடை என்பதெல்லாம் – கடவுள் வழிபாடு,**

குருபக்தி, சுயஒழுக்கம் என்ற உணர்வுகளுடன் ஒன்றாகக் கலந்து திகழ வேண்டும் என்று தொடர்ந்து போதித்து வெற்றி கண்டார். மாமனார் மெச்சிய மருமகளாக இன்றும் வாழ்ந்து வரும் வாசமுத்து மாரியம்மாள், ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகளைத் தினமும் தியானிக்கிறார். ஸ்வாமிகள் பெயரில் மந்திரித்து, மக்களின் துயர்நீக்கி நிவாரணம் தருகிறார்.

இவர்களின் குருவருள், குருபக்திக்கு சில உதாரணங்கள்:

பிரசாதம் கசக்குமா? இனிக்குமா?

ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகளுக்குத் தினமும் காலை உணவு – (தோசை) பிரசாதமாக, நைவேத்யம் செய்யப்படுவதற்காக திருமதி. வாசமுத்துமாரி சமைத்து வீட்டில் விளக்கேற்றி கற்பூரம் காட்டிய பிறகு நேரே எடுத்துச்சென்று ஸ்வாமிகளுக்குச் சமர்ப்பிப்பார். ஸ்வாமிகளும் நைவேத்யம் செய்து பிரசாதமாகப்பாவித்து உண்டு மகிழ்வது வழக்கம்.

ஸ்வாமிகள் சாப்பிட்ட பின்னர் வீடு திரும்பி கணவனும், மனைவியுமாக (சூரிய நாராயணனும், வாசு முத்துமாரியும்) காலை உணவை உண்பது வழக்கம்.


பொறாமை:

சூரி வீட்டிலிருந்து வரும் உணவைத்தான் ஸ்வாமி சாப்பிட வேண்டுமா? நாங்கள் கொடுத்தால் சாப்பிடக் கூடாதா? என்று அத்தெருவில் வாழ்ந்த வேறு சில ஆச்சாரி குடும்பத்தினர் தமது போட்டி, பொறாமையை வெளிக்காட்டினார்கள். அவர்களுக்குப் பாடம் புகட்டுவதற்காக ஸ்வாமிகளும் "சரி, நாளைக் காலை உன் வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டுவா" என்று சம்மதம் கொடுத்தார்கள்.

பிரசாதம் இனித்தது - பிரசாதம் கசந்தது:

மறுநாள் காலை அந்தபோட்டி, பொறாமைக்காரர் வீட்டிலிருந்து தோசை வந்தது. ஸ்வாமிகள் கொண்டு வந்தவரை முதலில் சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டவர் ஆச்சரியப்பட்டார், தோசை கசந்தது கதறினார். "வீட்டில் சாப்பிட்டுப் பார்த்துத்தானே கொண்டு வந்தேன். நன்றாக இருந்ததே" என்றார். கலங்கினார். சற்று நேரத்தில் வாசு மாரிமுத்தம்மாள் தோசையும் வந்தது, ஸ்வாமிகள் அதில் கொஞ்சம்

SHEET 2



ப 6


ப 78


ப 10



ப 79


ப 5


ப 8


ப 7

ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள் உறவினர்கள்



எடுத்து அந்த ஆச்சாரியைச் சாப்பிடச் சொன்னார். "தோசை இனிக்கிறது" என்றார். ஸ்வாமிகள் சுவைத்துப்பார்த்து "ஆம், இனிக்கிறது" என்றார். பணிவோடு வந்திருந்த திருமதி. வாசு சொன்னாள் "நாங்கள் இங்கே கொண்டுவந்து ஸ்வாமிகளுக்கு நைவேத்யமாகப் படைத்து வணங்கி ஸ்வாமிகள் சாப்பிட்ட பிறகு தான் எங்கள் வீட்டுக்குப் போய் சாப்பிடுவோம்." பொறாமை பக்தியை வளர்க்காது. சுத்தமே பக்தியை வளர்க்கும் என்றார். திருமதி வாசமுத்து மாரியம்மாளுக்குத் தொடர்ந்து தலைவலியும், ஜுரமும் தொல்லை கொடுத்தன. ஸ்வாமிகள் தம் அருள் சக்தியினால், ஒரு பொடியை மந்திரித்துக் கொடுத்து, உண்ணச் செய்து, "உனக்கு இனிமேல் உன் ஆயுளில் தலைவலி காய்ச்சல் வராது" என்று கூறி ஆசீர்வதித்தார். ஆசீர்வாதம் பலித்தது. நிவாரணம் தொடர்கிறது.

9. ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரஸ்வாமிகள் (37ம் பட்டம்)

(21-10-1917 - 09-12-1979)

இராமனாதபுரம் மாவட்டம் கமுதி, கோவிலாங்குளத்தில் பிறந்த கதிரேசன் ஒரு கொல்லாசாரியின் மகன். வானம் பார்த்த வறண்ட பூமி. கமுதி, காரைக்குடி, புதுக்கோட்டை, இராமனாதபுரம் என்ற செட்டிநாட்டுப் பழக்கங்கள் ஆச்சாரத்தில் லயித்தவர், ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டு துறவு பூண்டார். சென்னை – காஞ்சி பகுதியில் திருக்கழுகுன்றத்தில் குகையில் வாசம் செய்தார். இவருக்கு குரு யார்? யார் தீட்சை தந்தது என்ற விவரம் இல்லை. தமது தவம் யோகம் திறமையை வளர்த்துக்கொண்டு ஒரு துறவியாக ஏகாந்தமாக மொழி, மாகாண, தேச எல்லையைக் கடந்து, பரந்த பூமியில் யாத்திரை செய்து "சிவனே எல்லாம்" என்று வாழ்ந்து காட்டினார். இமயமலை, நேபாளம், வங்காளம், இலங்கை, தமிழ்நாடு, கேரளம் என்று பயணித்து அருள் சேவை செய்தது ஸ்வாமிகளின் தனிப்பெரும் பெருமை. இவர் ஒருவர் தான். பாரததேசத்தில் நாலு திசையிலும் ராஜ சூய யாகத்தை நடத்தியது என்பது வரலாறு.

37வது பட்டத்து ஜெகத்குரு, **ஸ்ரீகைலாய நிவாஸி பரமஹம்ச பிரிவி ராஜக பாரதீஸ்வரர் ஸ்ரீமத்சிவானந்த முனிசிரேஷ்ட ஞானாச்சார்ய** ஸ்வாமிகள் இந்த நெல்லை ஆதீனத்தை சீரமைத்து புகழின் உச்சிக்கு எடுத்துச் சென்ற மடாதிபதி என்பதில் ஐயமில்லை.

பட்டம் ஏற்றுக்கொண்ட முறை:

நெல்லையில் குடந்தை ஸ்ரீமத்ராசரத்தினம் ஸ்வாமிகள் (36வது பட்டம்) தமது அந்திம காலத்தைத் தீர்க்க தரிசனமாக

உணர்ந்தார். தாம் பிறந்து வாழ்ந்த கும்பகோணம் வாழ் விஸ்வகுல மக்களை ஆசீர்வதிக்க எண்ணம் கொண்டு தமது இறுதி சமாதி கும்பகோணம் தான் என்று தீர்மானித்தார். வேறு ஒரு மடாதிபதியை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று ஆணையிட்டு கும்பகோணம் புறப்பட்டார். வேறு ஒருவர் பொறுப்புக்கு வரும் வரை மடத்திலேயே வாசம் செய்து நித்ய பூஜை முறைகளை செய்து வருமாறு தமது துணைவியாருக்கு ஆணையிட்டார். மடாதிபதியில்லாத மடம் அவரது துணைவியார் சேவையில் சில குறுகிய காலம் பாதுகாக்கப்பட்டது. விசனப்பட்ட விஸ்வகர்மாக்களுள் தற்போதைய புரோகிதர் திரு.பிச்சைவாத்தியாரின் சித்தப்பா தெய்வத்திரு. ராமையா ஆச்சாரியும் கமுதியில் பிறந்து நெல்லையில் தொழில் செய்து கொண்டிருந்த ஆச்சாரி இருவரும் அதிவேகமாக கல்கத்தாவில் தொழில் செய்து வந்த இவரது சொந்தத்துக்குத் தகவல் தந்து திரு.கதிரேசன் ஸ்வாமிகளை எப்படியும் கண்டுபிடித்து சம்மதிக்க வைத்து நெல்லைக்கு அழைத்து வரச் செய்தனர்.

ஸ்வாமிகள் நெல்லை தாமிரபரணி ஆற்று குறுக்குத் துறை மடத்தில் முகாமிட்டு ஸ்நானம் செய்த வேளையில் விஸ்வகுலமக்கள் அடையாளம் கண்டு நமஸ்கரித்து பரசமய கோளரிநாத ஆதீனத்தின் மடாதிபதி பொறுப்பேற்க வைத்த தினம் 11–7–1955. வழக்கம் போல் **மானூர்** ஈசன் (படம் 109–பக்.126) கோவிலில் அபிஷேகம் செய்வித்து நெல்லை மடத்திற்கு பட்டினபிரவேசமாய் அழைத்து வந்து பட்டம் சூட்டி மகிழ்ந்தனர். (படம் 110–பக்.126)

சேவையில் மாற்றம்:

மூன்று முறை பாத யாத்திரையாக கைலாசகிரி சென்று வந்து சர்வ சுதந்திரத்தை அனுபவித்த துறவி, ஜுலை 1955 முதல் பரசமய கோளரி நாதர் ஆதீனம் என்ற ஒரு ஜாதீய மடத்துக்கு தலைமை ஏற்று தன்னை குறுக்கிக் கொண்டார். துறவியாய் வாழ்ந்த சுதந்திரம் மறைந்து ஓர் இனம், இனம் சார்ந்த கலாச்சாரம், அதனுள் ஆன்மீகச் சேவை என்ற கூண்டுக்குள் மாட்டிக்கொண்டு சேவை செய்ய வேண்டியதாயிற்று.

கொள்கை, கோட்பாடு, செயல்திட்டம்:

பரந்த மனப்பான்மை, தேசம் தழுவிய பார்வை என்ற காரணத்தால் ஆதீனத்தை அதிகப்பாங்குடன் முன்னெடுத்து செல்ல

எண்ணினார். நைந்து போன மடத்தைக்கண்டு மனம் நொந்து போனார். எப்படியும் உலகம் புகழும் நிலைக்கு உயர்த்துவது என்று உறுதி பூண்டார்.

1. ஈசனை நிலை நிறுத்தி இந்து மத தர்மத்தை இவ்வுலகில் நீடிக்க செய்வது.
2. கிமு 5000 ஆண்டிலிருந்தே தழைத்தெழும் இந்தத் தலைமை பீடத்தை மிக உன்னத ஸ்திதியில் கொண்டு வருவது.
3. விஸ்வகுல மகாஜனங்களை நல்வழியில் செலுத்திப் பிற மதத்தினரால் நசுக்கப்படாமல், நாத்திகவாதத்தை எதிர்த்து ஆஸ்திகக் கொள்கைகளை பரப்புவது, என்பதே முக்கிய கொள்கைகள் என்று முன் வைத்து செயலாற்றினார்.

மடத்தின் அன்றைய நிலை:

“அகில இந்திய விஸ்வகுல மக்களுக்கு உரிமையான குலகுருபீடத்தை தங்களுடையது,” எனக் கருதிய தவறான கொள்கை கடந்த 60 ஆண்டுகளாக ஆர்வமுடன் நிலைத்தது. இந்த அறியாமையால் ஆதீனத்தின் சொத்துக்கள் பல அழிந்தன. ஆதீனத்திற்கு அட்டூழியம் புரிந்தவர் பலர் இன்றும் ஆதீன கர்த்தாவுக்கு இடையூறு விளைவித்து கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த நிலைக்கு, ஆதீனம் இருக்குமிடமும் அதை சுற்றி வாழும் மக்களுமே காரணம். விஸ்வகுலமக்களுக்கும், ஜகத்குரு பீடத்திற்கும் நெருங்கிய தொடர்பு இல்லாமல் போனது. இந்நிலையில் இவ்வாதீன உன்னத பீடத்தில் எழுந்தருளிருக்கும் ஸ்ரீபரதேவதா ராஜ ராஜேஸ்வரியின் திருவருளால் உளம் திருந்தி மாதா–பிதா–குரு– தெய்வம் என்ற நால்வருக்கும் தங்களால் **இயன்ற சேவையை செய்தும் இல்லாதபோது எட்டி நின்று வணங்குவதற்குக் கடமைப் பட்டவர்களாவார்கள்.** இந்த குறை தீர தக்க தலைமை அவசியம். விழிப்படையுங்கள் என்று ஸ்வாமிகள் தம்மை தாமே தயார் படுத்தி கொள்ளும் நிலை ஏற்பட்டது.

செயல் திட்ட அறிக்கை, வரவு செலவுக் கணக்கு ஆண்டறிக்கை என்று எழுச்சியோடு செயல்பட ஆரம்பித்தார்கள். முதலாமாண்டு

முழுவதும் மடத்தின் நிதி ஆதாரம், ஆரோக்கியம் பற்றிய ஆய்வு செய்து நாடி பிடித்து பார்த்த பின் மடத்தின் சொத்துக்கள் இருக்கும் பிற ஊர்களுக்கும், சிஷ்யர்களை அரவணைத்து மேலெடுத்துச் செல்லும் எண்ணத்தில், திக்விஜயம் திட்டம் தீட்டினார்கள். ஆதீன ஆலோசனை சபையோடும், ஆதீன தர்ம கர்த்தாக்களும் ஒன்றிணைந்து ஜகத்குரு ஸ்வாமிகளின் கட்டளைகளை பலருக்கும் முறையாகத் தகவல் பரப்பினார்கள். திக் விஜயம் ஏன் எப்படி? ஊர் மக்கள் செய்ய வேண்டிய கடமை என்ன? பக்தர்களின் பங்களிப்பும் நிதி ஆதாரமும் எப்படி இணைவது என்று தெளிவாகத் திட்டம் தீட்டி செயல்பட்டார்கள். இந்த வெளிப்படையான அணுகுமுறை மடத்தின்மீது மக்களுக்கு நம்பிக்கையூட்டியது. (அறிவிப்பும் செலவினப்பட்டியலும்) (படம் 111)

விஸ்வகுல சாஸ்திர சம்பிரதாயங்களை விட்டுக் கொடுக்காமல் அனுஷ்டிக்கவும், அதன் அவசியம் நன்மை பற்றிய விழிப்புணர்வும் சேர்ந்ததால், குருமஹா சன்னிதானம், பீட சிம்மாசனாதிபதி என்ற உயர்வும், கண்ணியமும், புனிதமும் மக்களுக்கு வெளிச்சமாகியது.

உபநயனப் பெருவிழா:

வரும் சந்ததியினரின் நலன் கருதி முதன்முதலாக 20–11–1956ல் 13 வடுக்களுக்கு (சிறுவர்களுக்கு) உபநயனம் என்ற பூணூல் காயத்ரி சடங்குகளை மடத்தின் செலவில் செய்வித்துக் குழந்தைகளை ஆசீர்வதித்து அருளினார்கள்.

19–09–1957ல் திருநெல்வேலி மடத்தில் நவராத்திரி விழாவெடுத்து பெண்கள், குழந்தைகளின் ஈடுபாட்டுடன் கலை பண்பாட்டை புகுத்தினார்கள். 05–03–1958ல் முதன் முறையாக **உடுமலைப்பேட்டையில்** பட்டின பிரவேசம் ஏற்பாடாகியது. பக்த கோடிகள் பரவசமானார்கள். (படம் 123–பக்.239)

அக்டோபர் 1958ல் பம்பாயில் விஜயதசமி விழாவும் - ஸ்வாமிகளின் ஜெயந்தி மகோத்ஸவ விழாவும்: (படம் 124-பக்.239)

இருபது நாட்கள் சுவாமிகள் பம்பாயில் முகாமிட்டு பக்தர்களுக்கு ஆன்மீக அருள்சேவை செய்தார்கள். விஜயதசமியன்று ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் பூஜையை வெகு சிறப்பாகச்

செய்தார்கள். பிறகு 16–11–1958 விசாக நட்சத்திரத்தன்று சுவாமிகளின் 42வது ஜெயந்தி மஹோத்ஸவத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். விழாக்குழுவினர் அச்சடித்து விநியோகித்த அழைப்பிதழில் ஸ்வாமிகளை பக்தர்களுக்கு அறிமுகம் செய்த வாசகங்கள் நம்மை பக்தியிலும், வியப்பிலும் ஆழ்த்துகின்றன. அகில "பாரத சைவ பௌருஷேய பிராமண ஜகத்குரு ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடாதிபதி மகாகுரு, கைலாச நிவாசி, பரமஹம்ச, பௌராச்சாரிய ஸ்ரீமத்சிவானந்தமுனீஸ்வரர்... அகண்ட புருஷோத்தம யக்ஞத்தை, கன்னியாகுமரியிலிருந்து பாத யாத்திரையாகவே கிளம்பி, அனேக மகாபண்டிதர்களை கொண்டு, லட்சக்கணக்கான மக்களின் ஒத்துழைப்பால் கைலாயகிரியில் 1008 தினங்கள் நடத்திய பெருமைமிக்க மகாயக்ஞ சாம்ராட் ஸ்ரீமுனீஸ்வர ஸ்வாமிகள். (படம் 127–பக்.296)

1960ல் சென்னை கோமாளீஸ்வரன் பேட்டை விஜயம்:

சென்னை அருள்மிகு மீனாட்சியம்மன் ஆலயத்துக்கு (படம் 115) விஜயம் செய்து, முகாமிட்ட காலங்களில், தினசரி, கால பூசைகள் சிறப்பாக நடந்ததுண்டு. பிரபல நகைச்சுவை நடிகர் தெய்வத்திரு. தங்கவேல், தி.ம.ந.மோகன் ஆகியோர் பெரும் வரவேற்பும்... பட்டினப்பிரவேசமும் ஏற்பாடு செய்தார்கள். அச்சமயத்தில் விஸ்வகுலச் செம்மல் திரு.சேது அவர்கள் (படம் 102) ஸ்ரீலஸ்ரீ சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகளுடன் நேரில் பழகிய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் சிறு கட்டுரையைப் பக்கம் 242ல் பார்க்கலாம். உள்ளூர் மக்கள் இக்கோவில் விஸ்வகுல மக்களின் ஊர் பொது சொத்து என்று வாதிட்டபோது, இக்கோவிலின் சொத்துரிமை, பரசமய கோளரிநாத ஆதீனத்திற்கே, அன்றாட நிர்வாகம், பூஜை வழிபாட்டுரிமை. கடமை மட்டும்தான் உள்ளூர் விஸ்வகர்மாவுக்கு என்று எடுத்துக்கூறி வழக்குத் தொடர்ந்து, உதவினார்.

பாரதபிரதமர் பண்டிட் ஜவஹர்லால்நேருவும், ஜகத்குரு ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகளும்: (படம் 121)

கன்னியாகுமரியிலிருந்து பாதயாத்திரையாக கயிலாயகிரி வரை இரண்டு, மூன்று முறை யாத்திரை செய்துள்ள இத்தவயோகிக்கு,

SHEET 21



பௌர்வேய பிராமண (விஸ்வகுல) ஜகத்குருபீடம்

[illegible] ஸ்ரீ [illegible] ஸ்ரீமத்பரசமய கோளரிநாத

ஆதீனக் குறிப்பு

உபநயன [illegible] அழைப்புப் பத்திரிகை

[illegible]

இப்படிக்கு,

ஸ்ரீமத் பரசமய கோளரிநாதர்,

விஸ்வகுல 37-வது ஜகத்குரு ஞானாசாரிய சுவாமிகள்

ஸ்ரீஜகத்குரு சுவாமிகள் விஜயஞ்செய்யும் சம்பந்தமாய் கவனித்து ஆவன செய்வதற்குரிய முக்கிய விஷயங்களாவன

1. ஸ்ரீ சுவாமிகள் உங்களூர் எல்லைக்கு விஜயஞ் செய்தவுடன் உங்களூர் பஞ்சபிரம சந்ததிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பூர்ண கும்பத்துடன் வரவேற்பளித்தல்.
2. சுவாமிகள் தங்குவதற்குரிய இட வசதிகள் பூஜைக்குரிய இடங்கள் ஸ்நான முதலானவற்றிற்குரிய சௌரியங்கள், வாகனாதிகள் சிப்பந்திகளுக்குரிய வசதிகள் முதலானதைக் கவனித்தல்.
3. உங்களூரில் ஸ்ரீ ஜகத்குரு விஜயமாகி அடுத்த முகாம் போகும்வரை குலமக்கள் ஒற்றுமையுடன் கூடவேயிருந்து எவ்வித அசௌகரியமும் நேரிடாவண்ணம் கண்காணித்து அனுப்பி வைத்தல்.
4. உங்களூருக்கு ஸ்ரீ ஜகத்குரு விஜயமாகியிருக்கும்போது உங்களூர் பொது விவகாரங்கள் விரோதங்களையும் மனுக்கள் மூலம் மகாசன்னிதானத்திடம் தெரிவித்துக் கொள்ளுதல்.
5. உங்களூர் நாட்டாண்மை காரியஸ்தர் பெரியதனம் முதலிய அதிகாரங்களை புதுப்பித்து சுவாமிகள் முன்னிலையில் ஊர்ஜிதம் செய்யப்பெறும். அத்துடன் உங்களூர் ஐந்து வகுப்பு ஜன சங்கை ஜாபிதா ஒன்று தயார் செய்து சமர்ப்பித்தல் (முக்கியம்)

ஓம்

ஜகத்

விஸ்வகுல பௌர்வேய பிராமண ஜகத் குருபீடம், ஸ்ரீ [illegible] ஸ்ரீராஜ ராஜேஸ்வரி பீடாதிபதி, [illegible] ஸ்ரீமத் பரசமய கோளரி நாத ஆதீன கர்த்தர், 37வது ஜகத்குரு ஸ்ரீகைலாச நிவாசி பரமஹம்ஸ பரிவ்ராஜக,

ஸ்ரீமத் சிவானந்த முனி சிரேஷ்ட ஞானாசாரிய சுவாமிகளின்

உத்திரவுப்படி மேற்படி ஆதீன ஆலோசனை சபையினரும், ஆதீன தர்மகர்த்தாக்களும் தெரிவித்துக் கொண்ட

அறிக்கை

பெயர் : பிரம் ஸ்ரீ

அன்புடையீர்,

தங்களுக்கும், தங்களூர் விஸ்வகர்ம ஐந்து வகுப்பு நாட்டாண்மை, பெரியதனம், காரியஸ்தர் முதலான சகலருக்கும், நமது குலதேவதை ஸ்ரீ காமாக்ஷி பரமேஸ்வரி [illegible], நமது குலகுருவும், ஜகத்குருவுமான [illegible] பரசமய கோளரிநாத ஆதீன கர்த்தரும், 37வது ஜகத்குரு ஸ்ரீ கைலாச நிவாசி, பரமஹம்ஸ பரிவ்ராஜக, ஸ்ரீமத் சிவானந்த முனி சிரேஷ்ட ஞானாசாரிய சுவாமிகளின், ஆசீர்வாதமும், [illegible] பிரார்த்தித்து கீழ்கண்ட செய்தியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாக சபை

அருள்பெரு ரா. பத்மாவதியம்மையார்,
முந்திய பட்டத்து ஆச்சாரியார்

மனு பிரம்மஸ்ரீ ச.பட்டனாச்சாரியார்

முய.பிரம்மஸ்ரீ.T.S.நெல்லையாச்சாரியார்.

துங்ஸ்ட்.பிரம்மஸ்ரீ.செ.ச.சுப்பையாச்சாரியார்.

சிற்பி.பிரம்மஸ்ரீரா.ம.காத்தபெருமாள் ஸ்பதிகள்

விஸ்வக்கு பிரம்மஸ்ரீ ப.பிச்சக்கண்ணு ஆச்சாரியார்.

ஆதீன தர்மகர்த்தாக்கள்.

செலவினங்கள்

1.	முகாம் செய்திருக்குமிடத்திலிருந்து அடுத்த 10 மைலுக்கு மேல் 15மைலுக்குள்ளாக வண்டி வாகனாதிகள் எடுபிடி சிப்பந்திகள் போஜனாதி போலீஸ் பேட்டாக்கள் முதலியன.	ரூ.	75-0-0
2.	ஒரு ஊருக்கு விஜயஞ் செய்த பிறகு அவ்வூரில் தங்கும் நாள் ஒன்று பூஜை, படிச்செலவு முதலியனவற்றிற்கு	ரூ.	100-0-0
3.	பட்டணப்பிரவேசச் செலவு பல்லக்கு மேனு முதலியவைகளிருப்பதால் மேனு பல்லக்கு பட்டணப்பிரவேசத்துக்கு (நாதஸ்வரம், லைட் பிரத்தியேகம்)	ரூ.	50-0-0
4.	தங்க பல்லக்கு பட்டணப்பிரவேசத்திற்கு (மேளம் லைட் சகல செலவுகள் உட்பட	ரூ.	275-0-0
குறிப்பு	டை பட்டணப்பிரவேசம் தனிப்பட்டவர் செய்தால் (மேளம் ஸ்ரீ பாதம், லைட் முதலியன பிரத்தியேகம்)		
5.	ஆதீனத்தின் உபாசனாமூர்த்தி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பூஜை 1க்கு	ரூ.	50-0-0
6.	ஸ்ரீ ஜகத்குருசுவாமிகளின் பாத பூஜை 1க்கு	ரூ.	108-0-0
	டை பாத பூஜை தனிப்பட்டவர்க்கு பூஜை 1க்கு	ரூ.	27-0-0
7.	ஸ்ரீகுரு மகா சன்னிதானத்திற்கு ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து செய்யும் பிட்சை (விருந்து)கட்டளை 1க்கு	ரூ.	275-0-0
	இவையில் 500 குல மக்களுடன் சுவாமிகள் உணவு அருந்துவார்கள்.		
8.	தனிப்பட்டவர்கள் சுவாமிகளுக்கு விருந்து (பிட்சை) செய்ய கட்டளை	ரூ.	100-0-0
	இந்தனிப்பட்டவரின் குடும்பத்தினரும் அவர்களுடைய நெருங்கிய உறவினருடனும் சுமார் 25 பேர்களுடன் குருமூர்த்தி அமர்ந்து உணவு அருந்துவார்கள்.	ரூ.	100-0-0
9.	9 வயதுக்கு மேற்பட்டு 15 வயதுக்குட்பட்ட குலச்சிறுவர்கள் 100பேர்களுக்கு ஏக காலத்தில் உபநயனம் செய்து வைப்பதற்கு	ரூ.	108-0-0
10.	குழந்தைகளுக்கு நாம கரணம் அக்ஷரா அப்பியாசம் முதலியன குருமூர்த்தி முன்பு செய்து வைக்க ஒவ்வொன்றிற்கும் தனித்தனி	ரூ.	5-0-0
11.	ஆதீன நாதஸ்வர வித்துவான் உங்களூர் பட்டணப்பிரவேசத்திற்கு வந்து வாசித்து விட்டு ஆதீனத்திற்கு திரும்புவதற்கு போக்குவரத்து செலவு உட்பட	ரூ.	200-0-0
12.	ஆதீன பிரசாரக் குழு உங்களூரில் வந்து சமயப்பிரசாரம் செய்து ஊர் திரும்புவதற்கு செலவு உட்பட	ரூ.	100-0-0
13.	சமூக பொதுநலன்நாடகம் ஒன்றை அமைக்க செலவு	ரூ.	10-0-0
14.	தலைக்கட்டு 1க்கு வருட வரி	ரூ.	1-0-0
	20 வயதுக்குக் குறைந்த இளைஞர்களுக்கு	ரூ.	0-8-0
N.B. குறிப்பு	மேற்கண்ட தலைக்கட்டு குரு காணிக்கை வசூலாகுந் தொகையில் மூன்றில் ஒரு பங்கை அவ்வூர் நம் குலமக்கள் முன்னேற்றத்திற்காக (கல்வி நிதிக்காக) கொடுக்கப்பெறும்.		

வேண்டுவது

ஸ்ரீஜகத் குருவானவர் இந்தத் திக் விஜயத்தில் பூர்ண விருது, கொடி, எடுபிடி, வாகனாதிகள், வண்டிகள் முதலியவற்றுடன் சில வகையில் பிரயாணப்படுகிறபடியால் சேவகர், சிப்பந்திகள் முதலிய அநேகர் உடன் வரக்கூடும். மேலும் நமது பூர்வ பட்டய சாஸனங்களும், [illegible], சுவாமிகளுடனே வருகிறபடியால் கவர்ன்மெண்டார் உதவிய ஆயுதம் தாங்கிய போலீசார் இவர் சதா காலமும் சுவாமிகளுடனிருப்பார்கள். ஆகவே அவர்கள் அனைவருக்கும் படி முதலியவற்றை விசாரிக்க வேண்டிய பொறுப்பு தங்களூர் பொது மகாஜனங்களுடையதான தொகையால் உங்களூரில் சுவாமிகளை

கொல்கத்தா, நேபாளம், டெல்லி, ஆஜ்மீர், ஜெய்ப்பூர் என்ற ராஜஸ்தான் மாநிலம் உட்பட பல இடங்களிலும் பாரத தேசம் முழுவதும் சிஷ்யகோடிகள், பக்தர்கள் பலர் இருந்துள்ளனர். ஸ்வாமிகளின் தவயாத்திரை முடிந்து, நெல்லை மடம் வந்தப்பின், கல்கத்தா, பம்பாயிலிருந்து பணம், காசோலை பரிசுப் பொருட்கள் வந்த வண்ணம் இருந்தன. பூகோள எல்லையைக் கடந்து ஜகத்குருவாக உலகுக்கு வழிகாட்டும் ஆன்மீகக்குருவாக யாத்திரை செய்த போது, வங்காளம், நேபாளம் எல்லைத்தாண்டி, தெரியாமல் சைனா நாட்டு எல்லைக்குள் பயணம் செய்த ஸ்வாமிகளை, சீன ராணுவத்தினர், மிகுந்த மரியாதையுடன் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பி வைத்தனர். அச்சமயம் பாரதப்பிரதமர் பண்டிட் ஜவஹர்லால்நேரு அவர்கள் தனி விமானம் அனுப்பி, ஸ்வாமிகளை பத்திரமாக அழைத்து வந்து டில்லியில் ஸ்வாமிகளைத் தரிசனம் செய்து கௌரவித்த விபரம் ஒரு சரித்திர நிகழ்வு. (படம் எண்.121–பக்.239) 03–11–1959ல் நடந்த இந்த சந்திப்பு பின் நாளில் இருவருக்கும் பழக்கத்தை கூட்டியது.

ஜவஹர்லால்நேரு, “பிறப்பால் நான் இந்தியன், ஆனால் பண்பாடு, ஆச்சாரம், பழக்கவழக்கத்தால் மனதளவில் நான் ஐரோப்பியன்” என்று சொல்லிக் கொண்டதுண்டு – ஆனாலும் அன்றைய மத்தியபிரதேச முதன்மந்திரியின் விருப்பத்திற்கிணங்க, பண்டித நேரு அவர்கள் மீண்டும் ஒரு முறை டெல்லியிலிருந்து போபால் வந்து ஜகத்குரு ஸ்வாமிகளை தரிசித்து கௌரவித்ததும் சரித்திர உண்மை. (இளமையில் இவர் அருமை தெரியாமல் பழைய காகிதம் என்று எறிந்துவிட்டு, இப்போது நொந்து கொண்டிருக்கும் பலரில் அதிகம் படித்தோரும் அடக்கம்).

1978 நவராத்திரியில் சுரண்டை: (படம் 119, 120-பக்.239)

நெல்லை மாவட்டம் சுரண்டை ஒரு குக்கிராமம். திருகுற்றாலம் நதி பாயும் பகுதி. விவசாயம், பீடித்தொழில், பிற வியாபாரம் என்று வளர்ந்து வந்த ஊரில், கொல்லர்கள் அதிகம் வாழ்ந்த காலம். பரசமய கோளரிநாதர் ஆதீனத்திற்கு, மடத்தின் கிளைகளும், கோவில்களும் அதைச் சார்ந்த சொத்துக்களும் அதிகம். அருகில் உள்ள சிங்கப்பட்டி ஜமீன்தார் இந்த ஆதீனத்திற்கு எழுதி வைத்த சொத்துக்கள். இவ்வூரில் கைலாசநிவாசி சிவானந்த முனீஸ்வரர்

ஸ்வாமிகள், தசரா–நவராத்திரி விழா சமயம் முகாமிட்டார்கள். பெரிய விழா மேடை, பந்தல், யாகசாலை, அன்னதானக்கூடம், பட்டினபிரவேசம், கலைநிகழ்ச்சி, உபநயனம் என்று ஊரே விழாக்கோலம் கொண்டது. கோவை சுப்பராயன், தென்காசி சுடலைமுத்து ஆச்சாரி, சென்னை சேது என்று பல பிரமுகர்கள் விழாவில் கலந்துகொண்டார்கள். வாழ்த்து மடல் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. யாகசாலை, மந்திரஉச்சாடனம் எல்லாம் விஸ்வகுல புரோகிதர்கள், பண்டிதர்களே முன்னின்று சிறப்புச் செய்து ஸ்வாமிகளின் நன்மதிப்பையும், ஆசீர்வாதத்தையும் பெற்று மகிழ்ந்தார்கள். (படம் வரவேற்பு) (படம் 119, 120)

சூரண்டையில் ஸ்வாமிகளின் சித்து விளையாட்டு:

ஸ்வாமிகளுக்கு பூரண கும்ப மரியாதை, கொடுத்து ஊர் வாயிலில் வரவேற்ற பெரியவர்கள், ஸ்வாமிகள் தங்கும் வசதி செய்யப்பட்ட இடம் பற்றி விவாதித்தார்கள். தீர்க்க தரிசனத்தினால் சற்று முன்பு தான் அவ்விடத்தில் ஏற்பட்ட கேதம்...... மரணம், பற்றி ஸ்வாமிகள் அறிவித்து விட்டு, வேறு பாதை, வேறு மாற்று ஏற்பாடு செய்யும்படி ஆணையிட்டார்கள். இன்று நகை வியாபாரம் செய்து வரும் திரு.காந்தி என்ற சொரிமுத்துவின் தந்தை வீட்டில் தான் ஸ்வாமிகள் தங்குவதற்குத் திடீர் மாற்று வசதிகள் செய்யப்பட்டன.

மூக்குப் பொடியும், சிவலிங்கமூர்த்தங்களும்:

தமது அன்றாட பூஜை முறைக்கு அருள்மிகு ராஜராஜேஸ்வரி, சிவலிங்கம் என்று கையளவு ஐம்பொன் மூர்த்தங்களைப் பெட்டியில் எடுத்துச் செல்லும் வழக்கமுள்ள ஸ்வாமிகள், ஒரு நாள் ஓய்வு வேளையில் அங்கு கூடியிருந்த பிரமுகர் சிஷ்யர்களுக்கு ஒரு அற்புத சித்து செய்து காண்பித்து மகிழ்வித்தார்கள். வரிசையாகச் சில சிறிய அளவு ஐம்பொன் சிவலிங்கங்களை ஒரு பட்டுத் துணியில் அடுக்கி வைத்த ஸ்வாமிகள், அங்கிருந்த ஒரு பெரிய உருவ கனமான விஸ்வகர்மாவைக் கூப்பிட்டு, இந்த சிவலிங்கத்தை சற்றே தூக்கி, இடம் மாற்றிவை என்று கூறினார்.

கையளவு சிலை தானே என்று அலட்சியமாகத் தூக்க முயன்ற ஆச்சாரிக்கு வியப்பு. எவ்வளவு முயன்றும், நகர்த்த முடியவில்லை. ஸ்வாமிகளைப் பார்த்து முழித்தார். முகம் வியர்த்தது.


சுற்றி இருந்தவர்களுக்கு பயமும் ஆச்சரியமும் கவ்வியது. உனக்கு மூக்குப் பொடி போடும் பழக்கம் உண்டா? அப்படியானால் ஒரு சிட்டிகை உறிஞ்சிவிட்டு மீண்டும் முயற்சி செய்து பார் என்று நகைத்தார். மூக்குப் பொடியை உறிஞ்சிய பிறகு சிவலிங்கத்தை எடுத்து நகர்த்தினார். எளிதில் நகர்ந்தது. விஷயம் பொடியில் இல்லை. இது நான் வைத்த பொடி என்று வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்தார்கள் ஸ்வாமிகள்.

27–01–1962ல் **கோவையில்** கோலாகல மகாநாடு. சுமுகத் தலைவர் சுப்பராயன் தலைமையில் சிறப்பாக நடந்தது. இந்தியா–சைனா யுத்தம், வறட்சி என்ற நிலையில் விஸ்வகர்மாக்களின், பொருளாதாரம், கல்வி, ஆன்மீகம் மேம்பாடு பற்றிய அரசியல், விழிப்புணர்வுக்கு அச்சாரமான மாநாடு. சாதாரண மக்களின் நிலைமை மேம்பட வேண்டும் என்றுணர்ந்த ஸ்வாமிகள் பல எழுச்சிமிகு தீர்மானங்களை முன்மொழிந்தது, அன்னாரின் சமூகப் பற்றுக்கு எடுத்துக்காட்டு. அம்மாநாட்டில் நேரில் கலந்துகொள்ள இயலாத நிலையில், ஸ்வாமிகளின் நன்மதிப்பைப் பெற்றிருந்த படித்த பண்பாளர், கூட்டுறவுத் துறையில் பதிவாளராக உயர்பதவியிலிருந்த திரு.ஏ.பி.பாலசுப்ரமணியனை ஆசீர்வதித்து ஸ்வாமிகளின் ஆசீர்வாதம் கலந்த உரையைப் படிக்கச் செய்து, மக்களை ஊக்கப்படுத்தினார்கள். இம்மாநாட்டில் சினிமா, வரைகலையில் (ஆர்ட் டைரக்டர்) புகழின் உச்சாணியிலிருந்த திரு.அங்கமுத்து அவர்களுக்கும் பாராட்டு விருது வழங்கப்பட்டது.

04–06–1972–திருக்குற்றாலம் (படம் 125–பக்.239) – சதுர்மாஸ்வ விரதம் – குருபூர்ணிமா – வியஸ பௌர்ணமி–பூஜா. மோட்சம் என்னும் புருஷார்த்தத்தை அடைய விரும்பி, சந்நியாசி ஆஸ்ரம வாழ்க்கை நடத்தும் ஞானிகள், நான்குபட்சம் அல்லது இரண்டு மாதங்கள், தொடர்ந்து ஒரே இடத்தில் தங்கி, தியானம், பூஜை என்று விரதமிருந்து, தமது தவவலிமையை மேற்படுத்துவது அவசியமான வழக்கம். அவ்வகையில் நமது ஸ்ரீமத் சிவாஸ்ரம ஸ்வாமிகள் என்ற ஜகத்குரு சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகள், திருக்குற்றால புண்ணிய ஸ்தலத்தில் முகாமிட்டு சங்கல்ப்பம் செய்தார்கள். பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கியதோடு 26–07–1972 புதன்கிழமை பௌர்ணமியன்று

SHEET 22





ஸ்ரீ குருப்யோ நம:
ஸ்ரீலஸ்ரீ சிவானந்த முனி சிரேஷ்டரின்
ஜெயந்தி மகோத்ஸவ அழைப்பு

ஆஸ்திக மகாஜனங்களுக்கு,

இவ்வருடம் கடந்த இருபது தினங்களாக இப்பம்பாய் மாநகரத்திற்கு அகில பாரத சைவ பௌருஷேய பிராமண ஜகத்குருவும், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பீடாதிபதியுமான, சாலிவாடிபுரம் (நெல்லை) 37வது பட்டத்து மகா குரு கைலாச சிவாஸி பரமஹம்ச பௌராசாரிய ஸ்ரீமத் ஸ்ரீ சிவானந்த முனீஸ்வரர் விஜயம் செய்து, சென்ற விஜயதசமி தினத்தன்று ... ஜெயந்தி விழாவில் கலந்து கொண்டும், மேற்படி மாபெரும் யக்ஞ கர்மாக்களுக்குத் தங்களால் இயன்ற பொருளுதவியும், பதார்த்த உதவியும் அளித்து, ஜெயந்தி விழாவைச் சிறப்புறச் செய்து அம்பாள் ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் அருளுக்குப் பாத்திரர்களாகும்படி வேண்டுகிறோம்.

பம்பாய், 31—10—'58. | இப்படிக்கு, விழாக் குழுவினர்.

ப 122





His Holyness Sivanandha Muneeshwarar With Pandit Jawaharlal Nehruji Newdelhi


ஸ்ரீ ஓம் விராட் விஸ்வ ப்ரம்மணே நம:
ஸ்ரீமத் சிவானந்த ஸ்வாமிகள்
40-வது
சாதுர் மாஸ்யசங்கல்ப குரு பூர்ணிமா
(வியாஸ பௌர்ணமி) பூஜா
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி பீடம் ஸ்ரீ ப. சை. கோ. ஆதீனம்
திருநெல்வேலி-6.

ப 125

ப. கோ. ஆதீனம் திருநெல்வேலி 1—6—72 | ஸ்ரீ சிவானந்த முனீஸ்வரரின் பக்தகோடிகள் திருநெல்வேலி





மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு சிறப்பு பூஜை, அபிஷேகம், ஆராதனையும் செய்வித்து அருளினார்கள்.

மார்ச் 1972ல் ஸ்வாமிகள் **யாழ்பாணத்தில்** முகாமிட்டிருந்தார்கள். சிலோன், யாழ்ப்பாணம், கல்கத்தா, தமிழ்நாடு எல்லாம் ஒன்றாய் பரந்து விரிந்த நிலப்பரப்பு போன்று இருந்த காலத்து நாகரீகம், **பிற்காலத்தில் சுருங்கிவிட்டது.** ஆயினும் இன்னும் இலங்கை வாழ் விஸ்வகுலமணிகள் பலர் தமிழ்நாட்டு விஸ்வகுல தர்மபுத்திரர்களை நினைவில் வைத்தும் தொடர்பு கொண்டும் மகிழ்கிறார்கள். கமுதி, தொண்டி, கொற்கையுடன் யாழ்ப்பாணம் கடல்வழி வியாபாரத் தொடர்பும் அன்று இருந்து வந்தது. ஸ்ரீமத்சிவானந்த முனீஸ்வரஸ்வாமிகள் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு, சிவ மஹாயக்ஞும் ஒன்றை பெருமளவில், விமரிசையாக நடத்தி பக்தர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள். புத்தமதமும், கிறிஸ்துவ மதமும் போட்டியிட்டு தலைதூக்கும் காலத்தில் இந்த சைவ சமய வேள்வியை நடத்திக்காட்டினார்கள். யக்ஞரகஷகர் ஸ்வாமிகள் உடும்பராய் தங்கநகை மாளிகையின் உந்துதலில் நடைப்பெற்றது. இந்த யக்ஞத்தின் சில போட்டோக்கள் உள்ளன.

1973-74ல் 2 லாரி சன்மானங்கள்:

பாதயாத்திரையைச் சிறப்பாக நடத்தித் திரும்பிய ஸ்வாமிகளுக்கு பல ஊரிலும் கிடைத்த அன்பளிப்புகள், காணிக்கை பரிசுப்பொருட்கள், தானியங்கள் என்று மாட்டு வண்டியிலும், லாரியிலும் வந்து மடத்து வாசலில் இறக்கப்படுவதை கண்டு வியந்து நின்ற அக்கச்சாலை பிள்ளையார் கோவில் விஸ்வகர்மாக்கள் வாயடைத்து நின்றார்கள். தொந்தரவு எவ்வளவு கொடுத்தாலும் ஸ்வாமிகளின் புகழ்கூடிக்கொண்டு போகிறதே என்று பேசியவர்களும் அங்கே அப்போது வாழ்ந்து வந்தார்கள்.

நெல்லையப்பர் கோவில் கும்பாபிஷேகமும், ஸ்வாமிகளின் கருத்தும்:

திருநெல்வேலியிலுள்ள அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் 1975ல் நடந்தது. அப்போது கும்பாபிஷேக கமிட்டிக்குப் பொறுப்பேற்று நடத்திக்

கொடுத்தவர் திரு.லட்சுமணன் என்ற நகர்மன்ற செயலாளர் (திராவிட முன்னேற்றக் கழகம்). ஸ்ரீமத்சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள் மீது கொண்டிருந்த மிகுந்த பக்தி, மரியாதை காரணமாக, நேரில் வந்து ஸ்வாமிகளைச் சந்தித்து தாங்களே நேரில் நெல்லையப்பர் கோவிலுக்கு வந்திருந்து, கொடியேற்றி கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்திக் கொடுக்க வேண்டும் என்று வேண்டினார். இது ஒரு நல்ல தருணம்தான். ஆனாலும் பாரதப் புகழ் வாய்ந்த பரசமயக்கோளரி நாதர் ஆதீனத்தின் மடாதிபதியாகவும், யக்ஞசாம்ராட்டாகவும் உள்ள இந்த துறவிக்கு முறையான அழைப்பும், ஊர்வல மரியாதைகளுமான, தனிச்சப்பரம், ஒட்டகம், யானை, பசு, ஊர்வலம், மேளதாளம், ஊர்வலம் பக்தர்களின் பஜனை கோஷ்டி சூழ அழைத்துச் செல்ல இயலுமா? என்று வினவ, அவ்வளவு விரிவாகச் சிறப்புச் செய்ய இயலாது என்று திரு.லட்சுமணன் தம் இயலாமையைச் சுட்டிக்காட்டிச் சென்று விட்டதாகத் தகவல் – அதாவது ஆத்ம பலமிக்க மடாதிபதி, துறவி, என்ன பரிவாரங்களுடன் பயணிக்க வேண்டும் என்ற மரபைச் சுட்டிக்காட்டியதை நாம் கவனிக்க வேண்டும்.

இவ்வாறே பிற ஊர்களுக்கு ஸ்வாமிகள் திக் விஜயம் பட்டினப்பிரவேசம் செய்வதற்குரிய பரிவாரங்கள், மரியாதை, பாதுகாப்பு, படிச்செலவு பற்றிய தெளிவான சுற்றறிக்கை படம் 111ல் கண்டுப்புரிந்துக் கொள்ளலாம்.

154வது மஹாயக்ஞம் ராஜசூய யாகம் எங்கே? எப்போது? ஏன்? வேதம் விதித்துள்ள பல தர்மகாரியங்களில் அக்னி வளர்த்து யக்ஞம் செய்வது. சிறந்த கர்மாவாகக் குறிப்பிடப்படுகிறது. பஞ்ச பூதங்களையும், தேவர்களையும் அணுகி ஆகூதி கொடுக்க வேண்டுமானால் அக்னியின் மூலமாகவே கொடுக்கப்பட வேண்டியுள்ளது. ஆரோக்யமான வாழ்வுக்கு சுத்தமான காற்றுத்தேவை. வாயு சுத்தத்திற்காக அந்த காலத்தில் யாக யக்ஞங்கள் நடத்தப்பட்டன. பல மூலிகை வஸ்துக்கள் அக்னியில் இடப்படுவதால் வெளிவரும் யாகசாலைப் புகையினால் அப்பகுதியிலுள்ள நச்சுக்கள் அப்புறப்படுத்தப்பட்டு, காற்று ஆரோக்யமாகிறது. அதைச் சுவாசிக்கும் மனிதர்கள் ஆரோக்யத்துடன் வாழ ஏதுவாகிறது. அக்காலத்து **மாமன்னர்கள் அரசாங்க செலவில்**

பல யக்ஞங்களைச் செய்து குடிமக்களுக்கு அறிவையும், ஆரோக்கியத்தையும் வழங்கினார்கள். சுதந்திர இந்தியாவில் நாட்டை ஆளும் அரசு இக்காரியத்தை செய்யாமல் போனது.

பெரும் பொருள் செலவிலும், வேதவிற்பன்னர்கள் உழைப்பிலும் யாகங்கள், யக்ஞங்கள் நடைபெறவேண்டியுள்ளது. மேலும் தலைமை ஏற்று நடத்தும் பொறுப்புள்ளவர் தவசீலராக, ஒழுக்கசீலராக, வேதமந்திரங்களைச் சரியாக உச்சரிக்கும் வல்லுனராகவும் இருக்க வேண்டியுள்ளது. புத்திரகாமேஷ்டி, அஸ்வமேதம், ராஜசூயம் ஆகிய மூன்று வகையான யாகங்கள் பாண்டிய மன்னர்களால் நடத்தப்பட்டன. இந்த அரிய கலையை கற்றுத்தேர்ந்த யோகி, ஸ்ரீலஸ்ரீ சிவானந்த முனீஸ்வரஸ்வாமிகள், பாரத நாட்டு மூன்று திசையிலும் ராஜசூய யாகத்தை நடத்திய ஞானி 150க்கும் மேலான யாகங்களை செய்து முடித்தவர். புண்ணியதுறவி காசி மும்முஷி பவனத்தில் தண்டி சந்நியாசிகளின் தலைவராக இருந்த ஸ்ரீலஸ்ரீ பூஜ்ய கன்ஷ்யாம் மஹாராஜா அவர்களால் **யக்ஞசாம்ராட் (யாக சக்ரவர்த்தி)** என்ற உயர்வானபட்டத்தை பெற்ற மகான். சிறப்பு மிக்க தமது ஆத்ம பலத்தால், தாமிரபரணி ஆற்றங்கரையில் சாலிவாடியில் மஹாராஜசூய யாகத்தை நடத்திட திட்டமிட்டார்கள். இது 154வது யக்ஞம்.

01–02–1979 முதல் 11–02–1979 வரையிலும் நடைபெற்ற இந்த ராஜசூய யாகத்தில் பலசிறப்புகள் நடந்தேறின.

நெல்லையப்பர் கோவில் பிராமண சிவாச்சார்யபட்டர்கள் கலந்துகொண்டு வேதபாராயணம், அக்னி வளர்த்தல் என்று திட்டம் தீட்டப்பட்டது. தேவையற்ற குழப்பத்தால், வர்ணாஸ்ரம வக்ரபுத்தியால் கடைசி நேரத்தில் இவர்கள் கை விரித்தார்கள்.

புளியங்குடி சங்கரன்கோவில் பகுதியில் அச்சமயம் வாழ்ந்த விஸ்வகுல கல்தச்சர்கள், ஸ்தபதிகள், வேதசாஸ்திரத்திலும், சிற்ப சாஸ்திரத்திலும் வல்லவராய் இருந்தனர். சுமார் 40க்கும் மேற்பட்ட விஸ்வகுல கல்தச்சர்கள், யாகசாலைப் பூஜைக்கு வேத விற்பன்னர்களாகப் பணியாற்றினார்கள் என்பது சரித்திர உண்மை. (இவர்களில் பல குடும்பங்கள் கேரளா, புனலூர், செங்கானூர்

பகுதிக்குப் புலம் பெயர்ந்தவர்களாவர். அவர்களும் யாகசாலைப் பூஜையில் மந்திரம் ஓதினார்கள். புலம்பெயர்ந்த இக்குடியின் தனி வரலாறைப்......... பக்கத்தில் படிக்கலாம்.)

மாவட்ட கலெக்டரும், பிற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் யக்ஞத்தில் கலந்துகொண்டார்கள். இந்திய நாட்டின் பல பகுதியிலிருந்தும் யாகசாலைக்கு வேண்டிய வஸ்துக்கள், திரவியங்கள் வந்து குவிந்தன. திருநெல்வேலி மாவட்டம், திருக்குறங்குடியில் தோன்றிய டி.வி.எஸ். நிறுவனத்தவர் நேரில் வந்து ஸ்வாமிகளை நமஸ்கரித்து மஹாயக்ஞத்துக்குத் தேவையான பொருளுதவியைச் செய்து தருவதற்காக நெல்லையிலுள்ள கம்பெனி மேனேஜருக்கு உத்தரவுப் போட்டுச்சென்றார்கள்.

இந்தியா முழுமைக்கும் நோட்டீஸ்கள் வழங்கப்பட்டன. யாக சாமக்கிரியைகளாக கருப்பு எள், பச்சரிசி, பார்லி, வெல்லம், பசுநெய், மாமரக்கட்டைகள் என்று குறிப்பிட்டு எந்த ஒரு இந்தியனும் யாகத்திற்காக சிறு பொருளை அனுப்பினாலும் பெருமனதோடு ஏற்றுக்கொள்கிறோம் என்று பிரகடனம் செய்தார்கள்.

1979, தைமாதம் – பிப்ரவரியில் ராஜசூய யாகம் சிறப்பாக நடந்தேறியது. அந்தக் களைப்பிலிருந்து ஸ்வாமிகள் மீண்டு வர இயலவில்லை. உள்ளூர் மக்களின் தொந்தரவும் அதிகரித்தது. கார்த்திகை மாதம் – 09–12–1979ல் ஸ்வாமிகள் முக்தியடைந்தார்கள்.

40 நாள் மண்டல பூஜையை 20–01–1980 வரையிலும் ஸ்வாமிகளின் முன் யோசனைத் திட்டப்படி முன்னின்று நடத்தியது ஸ்வாமிகளின் பிரதான சிஷ்யர் பெரியமுத்துச்சாமி ஆச்சாரி ஆவர்.

மடத்தைப் பற்றியக் கவலை:

நெல்லை மடத்தை மேலும் தொடர்ந்து காப்பாற்றுவதற்காக தக்க தலைமை வேண்டும். நிர்வாக சீரமைப்பு வேண்டும். ஆதீனத்திற்கும் விஸ்வகுல பாமர மக்களுக்கும் தொடர்ந்த கருத்துப் பரிமாற்றம், செயல்பாடுகள் என்ற ஈடுபாடு வேண்டும் என்று தீர்க்க தரிசனமாக எழுதிச் சென்றார்கள்.

ஸ்வாமிகளின் இலக்கிய படைப்புகள் பல. அவற்றுள் “சிவஞானப் பெருவெளி” என்ற தத்துவ கட்டுரை மிகவும் அற்புதம்.

இதை உருக்குலையாமல் பத்திரம் செய்த பெருமை திரு.P.V. இராஜேந்திரனை (படம் 134–பக்.296) சேரும். இவர் நெல்லை டவுணை சேர்ந்த தட்டாச்சாரி. "சிவஞானப் பெருவெளி" ஆன்மீகம் பக்தியில் பழுத்து வருபவர்கள் மட்டும் விரும்பி வாங்கி பயன்பெறலாம். **தியானம் பழக்கம் உள்ளவர்கள் மட்டுமே இதை பயன்படுத்த இயலும்.** அடுத்து பிள்ளைத்தமிழ், (மே12) "ஊசல்" என்ற கவிகளும் கிடைத்திருக்கின்றன. நூல் விபரம் இல்லை வேறு பலவும் கிடைக்கவில்லை.

சென்னை திரு.சேதுவும் (படம் 102) – ஸ்ரீலஸ்ரீ சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகளும்:

ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீனத்தின் 37வது மடாதிபதியாகத் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீசிவானந்த முனீஸ்வரஸ்வாமிகளை நேரில் தரிசிக்கும் அருள் பாக்கியம் எனக்குக் கிடைத்தது பற்றி என்றென்றும் மனமகிழ்ச்சியடைகிறேன். நினைத்தாலே இனிக்கும் அனுபவம். இது என் வாழ்நாள் பொக்கிஷம்.

ஸ்வாமிகள் சென்னைக்கு வந்து கோமளீஸ்வரன்பேட்டை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலில் முகாமிட்ட காலங்களில், சிறப்பு அலங்காரம், பூஜைகள் என்று மக்கள் திரள்வார்கள். தவசீலரைத் தரிசிக்க ஜாதி, இனம், வித்யாசமில்லை பக்தர்களாய் வந்துபோவார்கள்.

1960ம் வருடம், நான் சென்னை மாநிலக்கல்லூரியில் கணிதத்துறையில் பணியாற்றிய சமயம், ஸ்வாமிகள் வருகை அறிந்து சேவிப்பதற்காகக் கோவிலுக்குச் சென்றேன். நெல்லை அக்கசாலைப் பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து, பின்னர் பத்தமடை உயர்நிலைப் பள்ளியை உருவாக்குவதற்காகப், பத்தமடைக்குக் குடிபெயர்ந்து வாழ்ந்ததையும், உயர்கல்வி, அரசுவேலை என்று சென்னை வாசம் என்று அறிமுகம் செய்து முடிக்கும் முன் மகிழ்ச்சியால் ஸ்வாமிகள் என்னை அரவணைத்து, ஆசீர்வதித்து, தினமும் தவறாமல் கோவிலுக்கு வா என்று அன்பு கட்டளையிட்டார்கள்.

கட்டளையால் கட்டுண்டேன். கல்லூரி முடிந்ததும், தினமும் மாலையில் கோவில் தரிசனம், மடாதிபதிகள் தரிசனம் என்றாயிற்று.

அவ்வப்போது ஸ்வாமிகள் என்னை அருகில் உட்கார வைத்து மாண்புமிகு கியானி ஜெயில் சிங், ஜவஹர்லால்நேரு ஆகியோருக்குக் கடிதம் எழுதச் செய்தார்கள். ஸ்வாமிகள் தமிழில் கூறியதை, நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதி முடிக்கவும், ஸ்வாமிகள் கையொப்பமிட்டு ஆசீர்வதிக்க உடனே தபாலில் சேர்க்கும்படி ஆணையிடுவார். ஆன்மீகம், அரசியல் என்ற இரு துருவங்களுக்கிடையில் பாலமாகப் (சேது என்றால் பாலம் – இணைப்பு) பணிபுரிந்த பாக்யம் சிலிர்க்க வைத்தது.

சங்கீதம்:

ஸ்ரீமுனீஸ்வர ஸ்வாமிகள் பல்கலைவித்தகர். ஓவியர், கர்நாடக சங்கீதத்தில் அலாதிப் பிரியம் உண்டு. ஒரு நாள் மயிலாப்பூர் சமஸ்கிருத கல்லூரிக்கு எதிர்வீட்டில் வசித்து வந்த ஒரு வீணை வித்தகி வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அன்றைய பள்ளி நிர்வாகி, தெய்வத்திரு. ஸ்ரீனிவாசன் அவரது பியட்காரில் எங்களை அழைத்துச் சென்றார்.

அம்மையார் வீணையில் வாசிக்கும் ராகங்களை ரசித்துக் கேட்டு, “சேது! இது என்ன ராகம் சொல் பார்க்கலாம்” என்பார். சரியாகச் சொன்னால் சபாஷ், தவறாகச் சொன்னால், சரியான ராகத்தைச் சொல்லித் திருத்தம் சொல்லி தட்டிக்கொடுப்பார்.

நான் இன்றளவும் தினமும் காலை வயலின் வாசிக்கிறேன். அவ்வப்போது ஸ்வாமிகளின் சங்கீத ஞானமும் என்னை ஆசீர்வதித்த பாங்கும் மனக்கண்ணில் வந்துபோகும் பாக்யம் உணரத்தக்கதே– சொல்லிமாளாது. பதவி மாறி புதுக்கோட்டை சென்றேன். ஸ்வாமிகளைத் தரிசிக்க இயலவில்லை. எமர்ஜென்சிக்குப் பிறகு நெல்லை மடத்தில் ஸ்வாமிகள் ஒரு மகாயாகம் நடத்தினார்கள். பெரும் கூட்டம், பக்தர்கள் பரவசம், நானும் சென்னையிலிருந்து தெய்வத்திரு. ஆறுமுகம், ஏகாம்பரமும் நேரில் யாகபூஜையில் கலந்துகொண்டு ஸ்வாமிகளைத் தரிசித்தோம்.

காலத்தின் கோலம். பின்னாளில் ஸ்ரீமத்சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகளின் அனுஷ்டானத்தை, நெல்லை மடத்துக் குருபூஜையில் கலந்துகொண்டு தான் தரிசிக்க முடிந்தது. நெல்லையிலும், கோமாளீஸ்வரன் பேட்டை குருபூஜையிலும் தவறாமல் கலந்து

கொள்வதே., அந்த புருஷோத்தம, தவசீலரின் ஆசீர்வாதத்தைப் பெறும் நல்வழி என்று வாழ்ந்து வருகிறேன். (படம் 102)

சேது, அண்ணாநகர், சென்னை – 600 040. 07–02–2018

சிஷ்யர்களை உருவாக்குதல்:

ஸ்ரீமத்சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள் நெல்லையில் அருளாட்சி செய்த காலத்தில், தெரு, ஊர், பகுதிவாழ் விஸ்வகுல மக்களிடையே விஸ்வகுல ஆச்சார அனுஷ்டானங்கள் குறைந்து காணப்பட்டது. பூணூல், தர்ப்பணம், பிராணாயமம் என்ற மூச்சுப்பயிற்சி, எல்லாம் அருகி வந்தன. ஸ்வாமிகளின் யோக, ஞான, தவவலிமை நிலைமைக்கும், சுற்றி வாழும் பாமரமக்களுக்கும் மலைக்கும், மடுவுக்கும் என்ற நிலை தொடர்ந்தது. அத்திபூத்ததுபோல் ஆங்காங்கே கண்ணில் பட்ட ஒரு சில ஒழுக்க சீலர்களை அடையாளம்கண்டு அரவணைத்து மேன்மைபடுத்த முயற்சித்த ஸ்வாமிகளின் கண்ணில் பட்டவர்கள்:

1. தெய்வத்திரு.குருசாமி ஆச்சாரி – தமிழக அரசு கூட்டுறவுத்துறை பதிவாளர் துறையில் உயர்பதவி வகித்து பின் ஓய்வு பெற்ற பிறகும், நெல்லை மடத்துக்கும், ஸ்வாமிகளுக்கும் ஆன்மீகத் தொண்டு செய்தவர். அவரது குமாரர் இன்றைய திரு.குருசண்முக நாதன். குருசண்முகநாதனை சிறுவயதிலேயே மடத்துக்கு வந்து விடு ஆளாக்குகிறேன் என்று ஸ்வாமிகள் கூறியதை சரியாகப் பொருள் புரிந்து, அருமை புரிந்து செயல்படாமல் ஒதுங்கி நின்றவர்.
2. திண்டிவனம், வந்தவாசி, தெய்வத்திரு. சதாசிவ ஆச்சாரி அவர்கள் தொடர்ந்து பலகாலம் ஸ்வாமிகளுக்கும் கல்லிடைக்குறிச்சி கற்பக விநாயகர் கோவிலுக்கும் மணி அடித்தல், பூஜை செய்து தொண்டு செய்தவர். அவரது பேரன் இன்றைய திரு.நடேசன் (படம் 103–பக்.224). நடேசனையும் சிறுவயதிலேயே மடத்திற்கு வந்துவிடு என்று ஸ்வாமிகள் கூறியதும், அதை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இல்லாமல் கோட்டைவிட்டதையும் வந்தவாசி நடேசன் இன்றும் நினைவு கூறுகிறார்.

3. அக்கசாலைப் பிள்ளையார் கோவில் தெருவில் வாழ்ந்த பெரியமுத்து ஆச்சாரி, வெள்ளி கொலுசு, தண்டை என்று பட்டறையில் வேலை செய்து வந்த விஸ்வகர்மா **உண்மையான இறை வழிபாடு மூலம் சாமானியரும் இறை சக்தி பெற முடியும் என்ற நம்பிக்கைக்கு இவர் ஒரு எடுத்துக்காட்டு.** காலை, மாலையில், தியானம், தவப்பயிற்சி, பகலில் பட்டரையில் வேலை என்று வாழ்ந்தவர். ஸ்வாமிகளை குருவாக ஏற்றுக்கொண்டார். ஸ்வாமிகளும், பெரியமுத்து ஆச்சாரியை சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு, தியானப் பயிற்சி, மூச்சுப்பயிற்சி என்று கற்பித்து ஆளாக்கினார். தமது தவச்சாலையில் பெரியமுத்து ஆச்சாரிக்கு தீட்சை கொடுத்து உருவாக்கினார்கள் ஸ்வாமிகள் (படம்–105–பக்.211) அவரது புதல்வர் தான் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் ஸ்ரீசூரியநாராயணன். இன்றும் தியானம், ஜபம், மூச்சுப்பயிற்சி என்று தினமும் ஸ்வாமிகளின் அருளாசியில் நனைந்து கொண்டிருக்கிறார்.

4. இவ்வரிசையில் இடம்பெறும் மற்றொருவர் பிரம்மஸ்ரீ கே.பி.உமாபதி ஸ்தபதி– கும்பகோணம். ஸ்வாமிகள் சரியாக அடையாளம் கண்டு ஆசீர்வதித்து அழைத்தார்கள் திரு.உமாபதிக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஒதுங்கி நின்றார், வேறு எவரும் சிஷ்யர்களாக மாறவில்லை.

மாமனார் கால் செருப்பை தினமும் பூசிக்கும் மருமகள்:

திரு.சூரியநாராயணன் மனைவி திருமதி. வாசமுத்து மாரியம்மாள் (படம் 106–பக்.211) தமது மாமனார் பெரியமுத்து ஆச்சாரியின் தியான, தவப்பலத்தில் வியப்படைந்த, இந்த அம்மையார் மாமனார் இறந்த பின்பும், அவர் அணிந்திருந்த காலணிகளைப் பத்திரமாகத் தினசரி துடைத்து, சுத்தம் செய்து, பூப்போட்டு, தரையில் விழுந்து நமஸ்கரித்து வருவது ஆச்சிரியமான உண்மை. ஸ்ரீசிவானந்த முனீஸ்வரசாமிகளும் மாமனார் பெரியமுத்து ஆச்சாரியும் சொல்லிக் கொடுத்த சில எளிய மந்திரங்களைப் பிரயோகித்து, தம்மை நாடி வரும் மெய்யன்பர்களுக்கு விபூதி, சர்க்கரை மந்திரித்துக் கொடுத்து

நிவாரணம் செய்கிறார் இப்பெண்மணி. ஸ்ரீமத்சிவானந்த ஸ்வாமிகள் இதற்காக இப்பெண்மணியை ஆசீர்வதித்து, அருள் சக்தி வழங்கிய மந்திரக் கோல் இன்னும் இப்பெண்மணிக்கு உதவியாகவும், பாதுகாப்பாகவும் உள்ளது.

தோசை கசக்குமா? இனிக்குமா?

குடந்தை ஸ்ரீமத்ராசரத்தினம் ஸ்வாமிகள் முக்தியடைந்த பிறகு அவரது மனைவி (ஆவுடையாச்சி அல்லது சுந்தரம் அம்மாள்) விதவையாக நெல்லை மடத்தில் தங்கியிருந்து, மடத்துக்கு வேண்டிய சிறுசிறு சேவைகளைச் செய்து வந்தார். மேலே குறிப்பிட்ட திரு.சூரியநாராயணன் மனைவி திருமதி.வாசமுத்து மாரியம்மாள் தினமும் காலை இரண்டு தோசை வார்த்து மடத்துக்குள் வாழ்ந்த விதவை அம்மணிக்குப் பிரியமுடன் கொடுத்து வந்ததை இன்னும் நினைவு கூறுகிறார். வயது முதிர்ந்து அம்மணியும் மறைந்த பின், ஸ்வாமி சிவானந்தமுனீஸ்வரருக்கு தினமும் காலை இரண்டு தோசைகளைப் பிரசாதமாகப் படைக்கும் பழக்கம் தொடர்ந்தது. ஸ்வாமிகளும் இந்த அம்மா கொண்டுவரும் தோசைகளை மட்டுமே நிவேத்யம் செய்து உட்கொள்வது வழக்கமாக இருந்தது. இதிலும் பொறாமை கொண்ட வேறு ஒரு விஸ்வகுலக் குடும்பம் ஸ்வாமிகளிடம் சண்டை, சச்சரவு செய்து அவர்கள் கொண்டு வரும் தோசையை மட்டும்தான் ஸ்வாமிகள் சாப்பிட வேண்டும் என்று தொந்தரவு செய்தனர். மனதிற்குள் சிரித்துக்கொண்டே ஸ்வாமிகள் சரி நாளை காலை நீ தோசை கொண்டு வா சாப்பிடுகிறேன் என்று கூறினார். மறுநாள் காலை போட்டியும், பொறாமையும் சேர்ந்த தோசையும் புதிதாக வந்தது. வழக்கமாக வரும் தோசையும் வந்தது.

புதிதாக வந்த தோசையில் சிறிது பிய்த்து எடுத்து, கொண்டு வந்த தம்பதியிடம் கொடுத்து "முதலில் நீவிர் சாப்பிடுங்கள். அடுத்த வாய் நான் சாப்பிடுகிறேன்" என்று கொடுத்தார். சாப்பிட்டார்கள் அவர்கள் கொண்டு வந்த தோசை அவர்களுக்கு கசந்தது, **துப்பினார்கள், முழித்தார்கள்.** இது எப்படி? அதே மாவுதானே. **வீட்டில் ருசிபார்த்து, நாங்கள் சாப்பிட்ட பிறகுதானே** உங்களுக்குக் கொண்டு வந்தோம் என்று கூறி ஆச்சர்யப்பட்டார்கள். ஸ்வாமிகள் சிரித்தார்கள். சூரியன் மனைவி வழக்கமாகக் கொண்டு

வந்த தோசையில் சிறிது பிய்த்து அத்தம்பதிக்குக் கொடுத்து "இதைச் சாப்பிடுங்கள்" என்றார். சாப்பிட்டார்கள் தோசை கசக்கவில்லை. இனித்தது. "இது எப்படி சாமி?" என்று கேட்டனர். "**நீங்கள் சாப்பிட்டுப் பார்த்த எச்சிலை இந்த ஸ்வாமிகளுக்குக் கொடுத்தீர்கள். எச்சில் கசந்தது. சுட்ட தோசையை பக்தியோடு கொண்டு வந்து பிரசாதமாகப் படைத்த அந்த தோசை கசக்கவில்லை. "பக்தியும், இறைவனின் அருள்பிரசாத சக்தியும் இதுவே**" என்று கூறினார் ஸ்வாமிகள். எல்லோரும் கீழே விழுந்து நமஸ்கரித்தார்கள். பொறாமை வேண்டாம். பக்தியே அருகில் சேர்த்து அரவணைக்கும் என்று புரிந்துகொண்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ சிவானந்தமுனீஸ்வர ஸ்வாமிகள் தமது சொந்த கையிருப்புடன் (சுமார் ரூ.12000) மடத்துக்குள் வந்தவர். தாம் பிறந்து வளர்ந்த கோவிலாங்குளம் கமுதியில் தம் குடும்ப சொத்தை ஊர், பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி என்று பொது நிறுவனம் உருவாக்கத் தானமாகத் தந்துவிட்டுவந்தவர். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று நிகழ்த்தி வாழ்ந்து காட்டியவர். துறவியாய் ஆனந்தமாய் வாழ்ந்தவர் ஒரு இன மக்களின் மடம் என்று சிறு வட்டத்துக்குள் மாட்டியது மட்டுமல்லாமல் தம் இன மக்களாலேயே சிறுமைப்பட்டதை எண்ணி மிகவும் மனம் நொந்து போனார்கள். இந்த மடம் அமைந்துள்ள இடம் சரியில்லை என்று ஸ்வாமிகள் குறிப்பு எழுதினார்கள். **இதை படிக்காத பலரும் எம்மிடம் நேரில் மனம் நொந்து கூறியது** "இந்த ஸ்ரீமத் பரசமயகோளரிநாத மடம் மட்டும் அந்தத் தெருவில் இல்லாமல் வேறு எங்காவது அமைந்திருந்தாலும் மடம் தொடர்ந்து மேன்மேலும் புகழ்பரப்பிக் கொண்டிருக்கும்". ஆமாம் தட்டார்கள், கன்னார்கள் என்று அணிபிரித்துக் கொண்டு மடம் கோவில் சொத்துக்கு, நிர்வாக உரிமை கேட்டு, மடாதிபதியை மதிக்காமல் போரிட்டு..... போதும்..... போதும் இனி இம்மடத்தை நிர்வகிக்க உள்ளூரில் ஆள் இல்லை. வெளியிலிருந்து தான் வரவேண்டும்." விஸ்வகுலஜகத்குரு, ஸ்ரீமத் பரசமய கோளரிநாதர் ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரஸ்வாமிகள் (37வது பட்டம்) பட்டாபிஷேகம் **வருஷ பூர்த்தி தின மகோற்சவத்தில் பிரபலபடுத்திய** பிரகடனம்; அதில் சில வாசகங்கள்.......


Guru Pooja On : 24.12.2016
At : Thirunelveli Mutt
Srimath Shivanandha
Muneeshwara Swamigal
Preseved at the mutt

பிரிய சிஷ்யர்களே!

.... நினைத்த நேரமெல்லாம் நினைக்கும் தேசங்களுக்கு சென்று செயலாற்றி வந்த என்னை மதத்தலைவனாகவும், சமூகத்தலைவனாகவும் ஒரு இனப்பாட்டிற்குள் ஆழ்த்தியது. திருவுளத்தின் சம்மதம் போலும்! ஒரு ஆண்டுக்குள் தக்க செயலாற்றி உலக வியாபகமாகும்படி செய்ய வேண்டுமென உறுதி பூண்டுவிட்டேன்....... சிஷ்யர்களோ..... ஒரே ஜாதி இனம், பண்பாடு, **சமூகநாகரீகம், ஜாதி ஆச்சாரம், சாஸ்திரதர்மங்கள் முதலியவைகளைக் கை நழுவவிட்டனர்.** ஆதீன வருவாய்களை ஆதீன சிஷ்யர்களுக்கு ஆத்மிகப்பணியில் செலவழிக்காது தன்னலம் கொண்டு நாசம் செய்தனர். இவை அனைத்துக்கும் காரணம் ஆதீனமிருக்கும் இடமும் அதைச் சூழ்ந்துள்ள மக்களுமே..... இவ்வாதீனத்தில் எமக்கு இடையூறுவிளைவிக்கும் கோழைகள் எத்தனை! எத்தனை..... **இவர்கள் உளம் திருந்தி மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நால்வருக்கும் தங்களால் இயன்ற சேவையைச் செய்து, இயலாதபோது எட்டிநின்று வருவதற்கு கடமைப்பட்டவர்கள் ஆவார்களாக.**

.... அவர்களுக்கு வேண்டிய உதவி அனைத்தையும் ஆதீனத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளும்படி இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. **இக்குறைதீர தக்க தலைமை அவசியம். விழிப்படையுங்கள்............** (படம் 96–பக்.250–296).

❀

10. 39வது மடாதிபதி ஜகத்குரு ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக ஞானச்சார்ய ஸ்வாமிகள்

(படம் 9-பக்.296)

09-12-1979ல் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள் ஐக்கியமான பிறகு புதிய மடாதிபதியைத் தேடும் படலம் துவங்கியது. ஆதீன பரிபாலன சங்கம் என்ற ஒரு அமைப்பு துவக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு மடத்தின் நிர்வாகத்தை பொறுப்பில் எடுத்துக் கொண்டது. புதிய மடாதிபதியைத் தேடும் குழு/ கமிட்டி நியமிக்கப்பட்டு திருவண்ணாமலை ஸ்ரீமத் ஆதிசிவலிங்கமூர்த்தி ஸ்தலமான திருமூலாரண்யம் காந்தப்பாளையத்தில் 64வது மடாதிபதியாக ஆட்சி செய்து கொண்டிருந்த ஸ்ரீலஸ்ரீசிவஷண்முக ஞானாச்சார்ய ஸ்வாமிகளேயே, திருநெல்வேலி ஸ்ரீமத்பரசமய கோளரிநாதர் ஆதீனத்திற்கு **கூடுதல் பொறுப்பாக்கி ஒரு தற்காலிக ஏற்பாடாக முடிவு செய்து பட்டாபிஷேகம் செய்வித்தார்கள்.** பட்டாபிஷேக ஏற்பாட்டுக்கும் தனிக்குழு அமைத்தார்கள்.

தவறு நடந்த கதை:

பரிபாலன சங்கத்தைச் சேர்ந்தவர்களால் மடத்தை நிர்வகிக்க இயலவில்லை. வேறு ஒரு சாமியாரைத் தேடுவதற்காக உள்ளூர் பிரபலங்கள் அன்றைய மாநில மஹாஜன மத்ய சங்கத் தலைவர் திருவாளர் P.L.S.செந்தில்ஆறுமுகம் B.A. அவர்களை அணுகினார்கள். அவர்கள் சென்னை செக்ரடேரியட்டில் பணிபுரிநத் திரு. T.ஏகாம்பரம் B.A. (மாநில வி.கே.நண்பர்கள் கழக செயலாளர்) அவர்களை அணுகினார்கள். இவரும் கடலூர் சௌந்தரராஜா ஆச்சாரியும் (சமூகப்பற்றுமிக்க சேவகர்-அச்சாபீஸ் நடத்திக் கொண்டிருந்த பெரியவர்) தேடுதல் விரிந்து கோவை தலைவர் திரு.சுப்பராயன் ஆச்சார்ய தலைமையிலும், மதுரை வக்கீல் திரு.பரமசிவம் சென்னை, திரு.சேது கோவை, K.P.சுப்பையன் ஆகிய 35 பேர்

குழுப் பெரியவர்களாலும் திரு.சிவாஷண்முக ஞானாச்சாரிக்கு பட்டம் சூட்டினார்கள். (**இவர்களில் ஒருவரேனும் நெல்லை நீதிமன்றத் தீர்ப்பில் மடாதிபதி நியமன ஸ்கீம் திட்டத்தை (1925/27ல் வெளியான** O.S.**58/1922 கவனத்தில் கொள்ளாமல் நடந்து கொண்டதுதான் பெரும் தவறு நடந்ததற்குக் காரணமாயிற்று.**) ஸ்வாமிகளும் விருப்பம் இல்லாமலே இப்பதவியை ஏற்றுக்கொண்டதாகப் பல பெரியவர்கள் கூறுவது ஏற்புடையதல்ல. **எப்படியோ ஸ்வாமிகள் நெல்லை மடத்துக்குள் வாசம் செய்யவில்லை.** ஒப்புக்கு ஒரு ஆதீன நல அபிவிருத்திக் கமிட்டி என்று அமைத்துவிட்டு ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு சேவை செய்து வந்த பரிபாலன சங்கத்தையும் புறக்கணித்தார். நிர்வாக குளறுபடி தொடர்ந்ததால் நெல்லை மடம் 1981 ஏப்ரல் மாதம் முதல் இன்று வரை முடங்கிவிட்டது.

அந்த 35 பேர் கமிட்டியில் இன்றும் ஐந்து நபர்கள், "சாமியார் இப்படி நடந்து கொள்கிறாரே" என்று மனம் நொந்து – வாழ்கிறார்கள். மடம் செயலற்று சொத்துக்கள் இருந்தும் வருமானம் இல்லை என்ற நிர்வாகக் கோளாறு, சரியான தலைமை இல்லை. வழிகாட்டுதலில்லை. மடம் வேறு, குடும்பம் வேறு என்று பிரித்து நிர்வாகம் செய்யாத காரணத்தாலும், குடும்ப அங்கத்தினர்களின் குறுக்கீடாலும், மடம் சரியாக நிர்வகிக்கப்படாமல் மங்கிவிட்டது. நிர்வாகச் சீர்திருத்தத்திற்காக உயர்மட்டக்குழுவும், மாவட்ட அமைப்புகளும், முயன்றாலும் மடாதிபதிகளும், உள்ளூர் ஆதீன நலக்கமிட்டியும் நிர்வாகச் சீர்திருத்தம் பற்றிப் பேசக்கூடாது என்று சாதிக்கிறார்கள். மடாதிபதியும் மனம் மாறுவதாக இல்லை. விஸ்வகுல பக்தர்களும் மடாதிபதியை கோர்ட்டுக்கு இழுக்கத் தயங்குகிறார்கள். இடையில் மடம் தவிக்கிறது. மடத்துக்குப் புத்துணர்ச்சியூட்டி புது மடாதிபதியை சட்டபூர்வமாக நியமிக்க விஸ்வகுல பக்தர்கள் விரும்புகிறார்கள். **1981ல் நடந்த தவறு மீண்டும் நடந்துவிடக்கூடாது என்று விபரம் தெரிந்தவர்கள் கவலைப்படுகிறார்கள்.** நிர்வாகச் செயலிழந்த/ செயலற்ற இந்த 39வது மடாதிபதி மீண்டும் விஸ்வகுல மக்களை கோர்ட்டுக்குப் போகச் சொல்கிறார். ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முகஞானாச்சாரியார் கி.பி.1927ல் பிறந்தவரென்பதால் இன்று வயது 92. இளமையில் வறுமை, வயோதிகத்தில் நிர்வாகத்தில் குழறுபடி. காலம் கழிகிறது.

11. உந்து சக்தி

விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை (மே1) என்பது விஸ்வகுல மக்களுக்குப் பைபிள் போன்றது. 1950ம் ஆண்டு முதன்முதலாக குலநலத்தொண்டர் தி.மு.தெய்வசிகாமணி ஆச்சாரியும் வித்வான் K.சுப்ரமண்யஆச்சாரி அவர்களும் பெரும் முயற்சி எடுத்து எழுதிய இந்நூல் (படம் 123) இன்றும் என்றும் இளமையும், வளமும் குன்றாத ஒரு சஞ்சீவி என்றால் மிகையாகாது. 1950ல் எழுதப்பட்ட மூலப்பிரதியை 1987ல் முதல் வெளியீடாக அச்சிட்டு வெளியிட்ட பெருமையும் பிரம்ம ஸ்ரீதி.ம.ந.மோகனன் அவர்களைச் சேரும். 1950ம் ஆண்டு நூலாசிரியரே அச்சிட்டு வெளியிட்ட முதல் பதிப்பும் பெங்களூரு திரு. V.சுப்ரமணியன் ஆச்சாரியாரிடம் இப்போதும் கிடைக்கிறது. அக்காலத்தில் விஸ்வ பிராமணர்களுக்கும், பிராமணர்களுக்குமிடையே வேதம் தழுவிய ஆன்மீகக்கிரியைகளை (பூணூல் அணிவது, ஆவணி அவிட்டம், திருமணம் கோவிலில் அர்ச்சனை கும்பாபிஷேகம்) செய்வதில் யாருக்கு உரிமை என்று அடிக்கடி ஆங்காங்கே தாவா வந்ததுண்டு. உரிமையை நிலைநாட்டி வாதாடும் சமயத்தில் பல்வேறுபட்ட ஏடுகள் ஓலைச் சுவடிகளைத் தாக்கல் செய்து மேற்கோள் காண்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அந்தச் சிரமத்தைக் குறைப்பதற்காக அன்றைய பிரதம நீதிபதியாக இருந்த வெள்ளையர் கூட்ஸ்டிராட்டர் கிறிஸ்துவ ஆகம உலகம் கொண்டாடும் **பைபிள் எனும் ஒரே ஆதாரப்பூர்வமான நூலைப்**போல விஸ்வகர்மருக்கு ஒரு நூல் இல்லையா? என்று கேட்டார். அக்கேள்விக்கு விடையே இந்த **விஸ்வகர்மப் பிராம்மணவம்சப் பிரகாசை** எனும் கையடக்க நூல்.

இப்புத்தகத்தில் விஸ்வகர்மப் பிராம்மண ஆச்சார்ய பீடங்கள் (பக்கம் 166) எனும் தலைப்பில் தென்னாட்டில் ஐந்து மடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அவை திருநெல்வேலி, சிதம்பரம், ஓசூர்,

திருமூலாரண்யம் மற்றும் கச்சிராப்பாளையம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓசூரில் தமிழ்பேசும் விஸ்வகுலமணிகளில் சிலர் டி.வி.எஸ். லேலாண்டு, டைடான் போன்ற நிறுவனங்களில் சம்பளத்திலுள்ளோர் ஒன்று சேர்ந்து அகில பாரத விஸ்வகர்மசங்கம் துவக்கி நடத்தி வருகிறார்கள். அச்சங்கக் கூட்டத்தில் அடியேன் (மா.பழனிச்சாமி) உரையாற்றியபோது **விஸ்வகுல ஆச்சாரம் அனுஷ்டானம் பற்றி விளக்கிய பிறகு ஆச்சார அனுஷ்டானங்களுக்குப் போதனை தருவதற்கும் குலப் பிணக்குகளைப் போக்குவதற்கும் விஸ்வகுல குருமார்கள் இருந்தார்கள். இருக்கிறார்கள்.** ஐந்து மடங்களில் ஓசூரில் ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதைத் தேடிக்கண்டுபிடித்து ஆதரவு கொடுத்தும், அண்டி ஆதரவு பெற்றும், நம் குல ஆச்சாரத்தை வளர்த்திட நல்ல சந்தர்ப்பம் என்று கூறினோம். மடம் எங்கேயுள்ளது? யார்? எப்படித் தேடுவது? தொழிற்சாலைகளுக்கு ஷிப்டு முறையில் மாறி மாறிச் சென்று திரும்புவதே பெரியவேலை என்று ஒதுங்கிக் கொண்டார்கள். ஆக பிள்ளையார் சுழிபோட்டவனே தேடுதலைத் துவங்கும் நிலை ஏற்பட்டது.

குடும்பத்தின் தனிச்சொத்து:

ஆன்மீகம் கலந்த சமூகப்பணி என்பது எங்கள் குடும்பத்தில் கை வந்த கலை. சமூகத்தில் காணும் குறைகளைத் தட்டிக் கேட்டுத் திருத்துவது சமூகப் பெரியோரின் கடமை என்றிருந்த அக்காலத்தில் (1950–75 வரை) தவறைச் சுட்டிக்காட்டித் திருத்துவதில் அக்கறை காட்டுவது, இராஜபாளையம் தெய்வத்திரு. வ.மாடசாமி ஆச்சாரியின் குடும்பச் சொத்து என்று இன்றும் தொடர்கிறது என்று பணிவோடு சமர்ப்பிக்கிறோம். மாடசாமி ஆச்சாரி என்றால் தச்சாச்சாரி பெரியாசாரி, புளியங்குடியாச்சாரி என்று பெயர். கொடிய வறுமையிலும் எளிமை, கண்ணியம், தூய்மை, பொய்சொல்லாமை, கடுமையான உழைப்பு, காலம் தவறாமை தொடர்ந்த கடவுள் சிந்தனை என்று வாழ்ந்து காட்டிய பெருந்தகை. தினக்கூலி 12 அணா (எழுபத்தைந்து பைசா) என்று 1954–55ல் ஆரம்பித்து 1962–1963ல் தினக்கூலியை இரண்டு ரூபாய் ஐம்பது பைசா என்றும் 1965–1966ல் அதை மூன்று ரூபாய் என்றும்

உயர்த்திக்காட்டி ஊரில் தச்சாசாரிகுடும்பம் கௌரவமாக ஒன்று சேர்ந்து, ஒரே ஊர், ஒரே தொழில், ஒரே கூலி என்ற கட்டுக் கோப்பைக் கொண்டு, வந்து வேலை தரும் முதலாளிகளுக்கும், வேலை செய்யும் தொழிலாளிகளுக்கும் **இடையே இணக்கமான நல்லுறவை** வளர்த்த பெருமை தெய்வத்திரு. வ.மாடசாமி ஆச்சாரியையே சேரும் (படம் 129–பக்.296). சமூக சங்கம் தேவை, சமூகசங்கக்கட்டடம் சொந்தமாகத் தேவை என்ற கண்ணோட்டத்தில் **மாதம் ஒரு ரூபாய் சந்தா, மாதம் ஒரு நாள் கட்டாயக்கூட்டம்,** கூட்டத்துக்குத் **தாமதமாக வந்தால் ஓரணா (ஆறு பைசா) அபராதம்.** கூட்டத்தில் எல்லோருக்கும் காபி, வெற்றிலை, பாக்கு. கூட்டத்தில் **கணக்கு எழுதி** பேரேடு பதிவு செய்பவருக்கு **கூட்டத்திற்கு நாலணா** சம்பளம் என்று கறாராகக் கட்டுக்கோப்பாகச் சங்கக்கூட்டம் தொடர்ந்து நடத்தி, நிதி ஆதாரத்தைப் பெருக்கி, அங்கத்தினர்கள் அனைவரது பங்குத் தொகையுடன் **காலிமனைவாங்கி** தென்னை ஓலைக்கூரை வேய்ந்து சங்கக்கட்டடம் அமைத்தார்கள். 1975–76க்குள் நிர்வாகத்தை இளைஞர் வசம் ஒப்படைத்துவிட்டு 1976–77ல் சென்னைக்குக் குடிவந்துவிட்டார்கள். உள்ளூர் இளைஞர்கள் ராஜீவ்காந்தி விஸ்வகர்மா நகரம் என்று உருவாக்கி சங்கக் கட்டிடத்தில் இன்றும் கூடி மகிழ்கிறார்கள்.

இச்சமயத்தில் தான் மூத்தவர் என் அண்ணா தெய்வத்திரு. மா.பொன்னுச்சாமி (படம் 130–பக்.296) கால்நடை உதவியாளர் வி.கே.நண்பர்கள் டைரிக்கு ஆள் சேர்த்தல், ஐந்தொழிலாளர்களுக்கு அரசு, பேங்குகளில் மானியம், கடன் உதவி, கல்வித்தொகை என்று தொடர்ந்து உழைத்து வந்தார்கள். முன்னாள் எம்.எல்.ஸி. தெய்வத்திரு. கே.ராமகிருஷ்ணாச்சாரி. முன்னாள் எம்.எல்.ஏ. தெய்வத்திரு. கணபதி, சிற்பக்கலைஞர் கணபதி ஸ்தபதி என்று பலரையும் இப்பகுதிக்கு அழைத்து வந்து கிராமம் கிராமமாகக் கூட்டம் நடத்தி விஸ்வகுல மக்களிடையே **சமூக ஆன்மீக** விழிப்புணர்வுக்குப் பாடுபட்டவர்களின்சேவையையும் கிடைத்த பாராட்டுதல்களையும் சுருக்கி வெளியான கட்டுரை **"சாதனைச் செம்மல் பொன்னான பொன்னுச்சாமி ஆச்சாரி ஸ்ரீவில்லிப்புத்தூர்" என்று பக்கம் 151 முதல் 154 வரையிலும்**

அச்சிட்டு தமிழ்நாடு விஸ்வகர்ம தகவல் நிலையம் 33வது ஆண்டு வீ.கே. டைரி சாதனையாளர் சிறப்புமலர் என்ற வெளியீட்டில் காணலாம். அண்ணா திரு.பொன்னுச்சாமி ஆச்சாரி தென் தமிழ்நாட்டிலும் தம்பி (அடியேன்) சென்னை, திருச்சி, கோவை என்று 1969–1970முதல் 1976 வரையிலும் வி.கே.நண்பர்கள் சங்கம் துவக்கத்திலிருந்து பங்களூரு, சென்னை முதல் மாநாடு வரையிலும் சமூகத்திற்கு உழைத்த சமயம். டாக்டர் எஸ்.எம்.கௌரிசங்கர் ஸ்தபதி அவர்களின் ஆசியுடன் மாதாந்திர பௌர்ணமி பூசை முறையில் ஈடுபாடு என்று ஆன்மீகசேவையும் வளர்ந்தது. 1965ல் மஹரிஷி மகேஷ்யோகி அவர்களின் ஆழ்நிலைத் தியான அறிமுகமும் சேர்ந்து கொண்டது.

1981ல் நெல்லை ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீனத்திற்கு திருவண்ணாமலை மடாதிபதியை தற்காலிக கூடுதல் பொறுப்பேற்று மகுடாபிஷேகம் செய்து முடித்தகையுடன் எமது சென்னை வீட்டிற்கு நேரில் **வந்து தகவல் கூறியது தெய்வத்திரு. சோமசுந்தரம் ஆச்சாரி.** (தெய்வத்திரு. ஆறுமுகம், ஏகாம்பரம் முன்னிலையில், தலைமையில் 1970ல் வி.கே.நண்பர்கள் **சங்கத்தின் முதல் கிளையை** யாம் துவக்குவதற்கும் **இரண்டாவது கிளையை** பிரம்ம ஸ்ரீபழமலை அவர்கள் திருச்சி பாய்லர் தொழில் நகரில் துவக்குவதற்கும் விஸ்வாசமாக உழைத்த உள்ளூர் தட்டார்) 1971ல் பங்களூர் அகில இந்திய விஸ்வகர்ம மாநாட்டில் பொறுப்பு ஏற்று செயலாற்றினேன். 1972ல் கோவை வி.கே.நண்பர்கள் பண்பாட்டுக் கழகம் மாநிலத்து **3வது கிளை துவக்கம்** என்று சேவை. 1981ல் அடியேன் வடநாடு சென்று நீண்டகாலத்திற்குப் பிறகு தென்னகம் திரும்பினேன். அருள்மிகு வேதாத்திரி மகரிஷியிடம் நேரடியாக குண்டலினி யோகம், ஆசிரியர் பயிற்சி பெறும் பாக்கியம் கிடைத்தது. 16–12–2001ல் விஸ்வகர்ம தகவல் நிலையம் அடியேனுக்குச் சாதனையாளர் விருது வழங்கியது. 1982 முதல் 2013 வரை சமூகசேவைக்கு இடைவேளை. மீண்டும் 2013க்குப் பிறகு முழுநேரச் சமூகசேவை என்று ஆரம்பம். அப்பா பெயரில் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டு ஆன்மீகம், ஆச்சாரம், கல்வி, பண்பாடு என்று தெளிவான குறிக்கோளுடன் எனது **ஓய்வூதியத்தை மட்டுமே முதலீடாகக்** கொண்டு சேவை

செய்கிறேன். **அப்பா உள்ளூரில் சமூகசேவை,** அண்ணா மாவட்ட அளவில் சமூகம், பொருளாதார சேவை, **அடியேன் மாநில அளவில்** ஆன்மீகம் ஆச்சார சேவை. குலம், கோத்திரம், ஜன்ம நட்சத்திர வழிபாடு, குல தெய்வவழிபாடு என்று 7000 குடும்பத்துக்கும் அதிகமாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் எழுச்சி மிகுந்த பயணம், அதன் பயனாக **பூணூல் தர்ப்பணம் பயிற்சிமுகாம்** என்ற சிறப்புப் பயிற்சி முகாம்கள் என்று சேவைசெய்த போதுதான் பொறி தட்டியது. மாதா, பிதா, குரு, தெய்வம் (குலதெய்வம்) இதில் குருவணக்கம், குருபக்தி என்ற பகுதி நிறைவு பெறவில்லை. விஸ்வகுலமடம், மதபோதனைகுருமார்கள், ஆதீனம், மடம் ஆராய்ச்சி – முக்தியடைந்த குருமார்களுக்கு குருபூசை என்ற ஆன்மீகத் தொடர் சேவையின் விளைவே, வித்தே, வினையே இந்த ஐந்து மடங்களின் ஆய்வுத் தொகுப்புச் சேவைப் பயணம். குருவின் அருளால் இந்த ஆய்வுத் தொகுப்புப் புத்தகமும் கரு, உருப்பெற்று, பிறவியும் எடுத்துள்ளது. (படம் 131–பக்.296).

❀

மூன்றாம் பாகம்

12. உரத்த சிந்தனை

நெல்லை ஸ்ரீமத் பரசமயகோளரி நாத ஆதீனம் மடம் மேலும் புத்துணர்ச்சி பெற்று வளர—**மடம் பக்தர்களுக்கு என்ன செய்ய வேண்டும்? பக்தர்கள் மடத்துக்கு என்ன செய்ய வேண்டும்?**

ஒரு உரத்த சிந்தனை

தமிழகத்திலுள்ள ஐந்து மடங்களில் நெல்லை மடம் முற்றிலும் வித்தியாசமானது. பிற நான்கு மடங்களும் கிரஹஸ்தார் மடம். தகப்பன், பிள்ளை, தகப்பன், ஆண் வாரிசு இல்லாவிட்டால் உறவுக்குள் ஒருவரைத் தத்தெடுத்து மட நிர்வாகம் தொடர்வது வழக்கம்.

நெல்லை பரசமயகோளரி நாதர் ஆதீனம், துறவிமடம் ஒவ்வொரு துறவியும் அவரவர் எண்ணம், செயல்திறமைக்கேற்ப நிர்வாகத்தைத் தொடர்வது சாத்தியம். கிரஹஸ்தர் மடத்தில், அப்பா, பிள்ளை என்று பக்தர்களும், பொதுமக்களும் ஒருவகையான அறிமுகத்தால் பழக்கம் கொள்வர். துறவி என்றால் ஒவ்வொருவரும், புதியவர். அன்னியம் என்பதால் பழக்கம் தொடராமல், அறுபட்டு மீண்டும் தொடரவேண்டும். அந்நியர் என்பதால் பழக்கத்தில் தயக்கம், எதிர்த்தால் என்ன? என்ற போர்க்குணம், ஒத்துழையாமை என்ற மனோபாவம் தொற்றிக் கொள்ளும். இரண்டிலும், மடாதிபதி என்ற தனிமனிதர் வழிபாடு, தனிமனிதர் விளம்பரம் விருப்பு, வெறுப்பு என்றில்லாமல், மடத்தின், ஆதீனத்தின் ஸ்தாபகர், பின்னால் வந்த புகழ்மிக்க புண்ணியர் என்று குருவை அடையாளப்படுத்தி, நினைவில் நிறுத்திக்கொண்டு வழிபட்டால், வழிபட்டால் மட்டுமே ஆதீனம், மடம் வளரும். குரு சிஷ்யர் உறவும், தொடர்ந்து வளர்ந்து சமூகம் நன்மை

பெறும். இக்கருத்தின் அடிப்படையில் பரசமயகோளரிநாத ஆதீனம் – நெல்லையைப் பற்றி மட்டும் கீழே தொடர்ந்து சிந்தித்துப் பார்ப்பது நல்லதொரு உதாரணமாகும்.

மடத்தை ஸ்தாபித்தவர்களும், வணங்கி நிர்மாணித்த ஆதிகுருமூர்த்தி – அடுத்து நான்கு திசையிலும் நாடு முழுவதும் புகழுடன் எடுத்துச் செயல் புரிந்த ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள். நெல்லையில் இந்த இரண்டு குருமார்களையும் தொடர்ந்து வணங்க வேண்டும். கல்லிடைக் குறிச்சியில் ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகள் (35ம் பட்டம்) சிவகங்கையில் ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகள் (31ம் பட்டம்) கும்பகோணத்தில் ஸ்ரீமத் குடந்தை ராசரத்தினம்ஸ்வாமிகள் (36ம் பட்டம்), சுரண்டையில் ஸ்ரீமத் முத்துக்குமாரஸ்வாமிகள் (35ம் பட்டம்) சிவகங்கை சமாதி மற்றும் ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள் (37ம் பட்டம்) என்று இருவருக்கும் அல்லது ஒருவருக்காவது குருபூசை தொடர்வது அவசியம். **கொழுந்து மலையிலும், கோமாளீஸ்வரன் பேட்டையிலும், நெல்லை மடத்து குருபூசை தினத்தன்று அதே நாளில் குருபூசை தொடர்வது நன்மை பயக்கும்.**

திண்டிவனத்தில் மூன்று ஸ்வாமிகள் சமாதிகள் உள்ளன. (அனுஷ்டானமே) திதி, மாதம், தெரியாது. எனவே மகாளய அமாவாசையன்று குருபூசை செய்துநன்றி கூறுவது நன்மை பயக்கும். இவ்வாறு ஆங்காங்கே குருபூசைகள் தொடர்வதால், பக்தர்களும், அதிகம் பிரயாணம், காலம், பணம், உழைப்பு, என்றில்லாமல் குருபக்தியைத் தமிழகம் முழுவதும் வளர்ப்பது எளிதாகும். (வரைபடம் பார்க்கலாம்).

செயலாக்கம்:

ஸ்ரீமத் பரசமயகோளரிசாத ஆதீனம் குருபூசைச் செயல்குழு என்ற ஒரு மத்தியஅமைப்பும், அதன் கிளைகளை மேலே குறிப்பிட்ட ஊர்களிலும் நிறுவி பதிவு பெற்ற ஆன்மீகப் பக்தர்கள் சங்கமாக உருவாக்கிச் செயல்படுத்திடலாம். இது எளிதில் கூடும் காரியம். **மடாதிபதியை இந்த பக்தர்கள் சங்கத்தில் எந்த வடிவிலும் சேர்க்கக்கூடாது. அரசியல், கட்சி, சங்கம் சாயல் கூடாது.**

குருசிஷ்யர் உறவும் குருபக்தியை வளர்க்கும் முறையும் பக்தர்களின் கடமை:

எல்லா கிராமம், ஊர், நகரங்களிலும் வாழ்பவரும், வெளிநாட்டில் வாழ்பவரும், அவரவர் குடும்பம் குலதெய்வம் குருவை வணங்கும் கோவில் என்று அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உதாரணம்:

தெய்வத்திரு. வ.மாடசாமி ஆச்சாரியின் புதல்வன் மா.பழனிச்சாமி (அடியேன்)

குலதெய்வம்:

நீர்காத்தஐயனார்கோவில் இராசபாளையம்.

குருவை வணங்குவது:

ஸ்ரீமத் பரசமயகோளரிநாத ஆதீனம் ஆதிகுருமூர்த்தி மற்றும் ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள்.

பிறகு:

இக்குடும்பத்தின் ஆண்வாரிசு சந்ததியர் அனைவரும் இதே நிலைப்பாட்டை எடுத்துக்கொள்ள வேண்டும். பெண்வாரிசுகள் அவரவர் புகுந்த வீட்டு சம்பிரதாயம் மேலே சொன்னது போல் எடுத்துக் கொள்ள வேண்டும். குடும்பத்தில் **திருமணம், காதுகுத்து போன்ற சுபநிகழ்வுகளின் போது முதல் பத்திரிக்கை குலதெய்வம், இரண்டாவது பத்திரிக்கை குலகுரு** என்று முறைப்படுத்தி பக்தியோடு நேரில் சென்று சமர்ப்பிக்க வேண்டும். பிறந்தநாள், மணநாள், கிரஹபிரவேசம், உத்யோகம், சுயதொழிலில் முதல் வருமானத்தில் ஒரு பகுதி (ரூபாய்க்கு ஐந்து முதல் 10 பைசா என்றளவில்) எடுத்து, மஞ்சள் நனைத்த வெள்ளைத் துணியில் முடிந்து, **குருகாணிக்கை, குலதெய்வ காணிக்கை என்று பெட்டியில் வைத்துவிட வேண்டும்.**

மாதந்தோறும் குருகாணிக்கை ரூபாய்:

மாதந்தோறும் குடும்பத்துக்கு ரூபாய் பத்தாவது குருகாணிக்கை சுருள் என்று மஞ்சள் துணியில் முடிந்துவிட வேண்டும். (கிறிஸ்துவர்கள் வருமானத்தில் 10 சதவீதமும், முஸ்லீம்கள்

2 முதல் 5 சதவீதமும், அவரவர் வணங்கும் சர்ச், மசூதிக்குக் கட்டாயமாக ஒழுங்காகக் கொடுத்து வருகிறார்கள். சர்ச்சும், மசூதியும் தொடர்ந்து வளர்கின்றன.)

இந்த சுருள் என்ற குருகாணிக்கை அதிகம் சக்தி வாய்ந்தது. உதாரணம்: சுரண்டையில் 400 விஸ்வகுல குடும்பங்கள் உள்ளன. மாதம் பத்துரூபாய் வீதம் 10X400 ரூ.4000 வருடத்துக்கு, 12X400 ரூ.48000 இந்தத் தொகை ஒரு பூசாரிக்கு மாதச்சம்பளம், தினமும் கோவில் விளக்குக்கு எண்ணெய் அல்லது வருடம் ஒரு முறை குருபூசைச் செலவு என்பதை இயல்பாக ஒரு சிரமம் இல்லாமல் நடத்திட இயலும். அதாவது சக்கரம், கீல், பூட்டுசாவிக்கு அவ்வப்போது சில சொட்டு எண்ணெய் ஊற்றிக் கொண்டால் சிக்கலே வராமல் ஓடும் என்பது போல **மன உறுதியும், சுயஒழுக்கமும் தான் இந்தப் புதுப்பழக்கம் துவங்க, வளர உதவும். தூண்டுகோலுக்கு, பிறர் கட்டாயம் இல்லை. சுயமுயற்சி, வென்றால் வெளிஆள் தூண்டுகோல் தேவைப்படாது** அல்லவா?

யோசியுங்கள்:

தமிழகம் முழுவதும் 45 லட்சம் விஸ்வகர்மாக்கள் மாதம் ரூ.10 என்றால் மாதந்தோறும் சேரும் தொகை கோடியை தாண்டும் ஒரு மாதத்துக்கு. (நாடார் இனத்தவர்கள் மகமை பண்டு என்று எப்படிச் சேர்த்து உயர்கிறார்கள். சமூக மகமை பண்டு என்ற வரவில் தான் கோவில், லாட்ஜ், பள்ளிக்கூடம் என்று சமூக அக்கறை உயர்கிறது.)

குருவின் (திக் விஜயம்) (ஊர்வலம் பட்டினப் பிரவேசம் அல்ல):

பரசமயகோளரிநாத மடாதிபதி ஒரு மதபோதகர், ஆன்மீகக் குரு, சமூகமக்களிடையே ஏற்படும் பிணக்குகளை போலீஸ் ஸ்டேஷன், நீதிமன்றம் வரை எடுத்துச் செல்லாமல், குருவே குறைகேட்டு, சமாதானம், முறையே தீர்ப்பு வழங்கும் நீதிபதி, நற்போதகர் என்ற முறையில் மடாதிபதியை அவரவர் ஊருக்கு **இரண்டாண்டுக்கு ஒரு முறையாவது** நேரில் அழைத்து வந்து, இரண்டு, மூன்று நாட்கள் முகாமில் தங்கவைத்து கோவில் பூசை, பூணூல் அணிவிப்பு ஆன்மீகச் சொற்பொழிவு பெண்கள், குழந்தைகள் கலைநிகழ்ச்சி, கல்விக்கு ஊக்கப்பரிசு, ஊக்கத்தொகை,

கோவில் கும்பாபிஷகம், பஜனை, பக்திப்பாடல்கள் என்று நம் **மடாதிபதியை (மடத்துக்குள் வாசம் செய்யும்) மையப்படுத்தி விழா நடத்திக்** கொண்டாடி மகிழ வேண்டும். சந்ததிகள் இளம் வயதிலேயே குருபக்தி, குருவின் மகிமை புரிதல் என்று வளர ஏதுவாகும்.

இப்போது ஆங்காங்கே ஊர்க்கோவில் கொடைவிழா கொண்டாடும் பழக்கத்துடன் மடாதிபதியும், ஊர்மக்களும் நேருக்கு நேர் சந்தித்து உறவாடுதல் என்றும் பக்தியை வளர்க்கலாம். பெரிய தேரில் அலங்காரம், டியூப் லைட் வெளிச்சம், ஆட்டம், பாட்டம், ஊர்வலம் என்பதைத் தவிர்த்து, கோவில் அல்லது சமூக மண்டபத்தில் முகாம். அங்கே விழா, தெரு, ஊர் மக்கள் அங்கு வந்து விழா (திண்டீக்கல்லில் நடப்பது போல) வசூலை யாரிடம் கொடுப்பது? கட்டாயமாக உள்ளூர் பேங்க்கில் சேமிப்புக் கணக்குத் தொடங்கி, பொறுப்புள்ள இரண்டு பேர் சேர்ந்து வரவு, செலவு செய்வதும், இதை மாதாந்திரக் கூட்டத்தில் வெளிப்படையாக அறிவிப்பதும் நல்லது. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இது எளிய காரியமே. மாதம் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது அமாவாசையில் இரண்டு, மூன்று மணி நேரத்துக்குள் நடத்திக்காட்ட இயலும். திட்டமிடாத வெட்டிப்பேச்சும் 'நான்தான்' என்ற அகங்காரமும் நேரத்தை வீணாக்க அனுமதிக்கக்கூடாது.

அழைப்பிதழ்:

குலதெய்வம் கும்பிட கோவிலுக்குச் செல்வதற்கு அழைப்பிதழ் அச்சிடப்படுவதில்லை. விநியோகமும் இல்லை. அவ்வாறே குருபூசைக்கும் அழைப்பு இல்லாமல், சுயமுனைப்புடன், குருவின் இருப்பிடம் வந்து குருகாணிக்கையைச் செலுத்தி தண்டனிட்டு குருவை மட்டும் வணங்கிச் (மனித உருவிலுள்ள யார் காலிலும் விழாமல்) செல்வது நன்மை பயக்கும் (தற்சமயம், திருச்சூர், கோட்டயம், சோட்டாணிக்கரை அம்மன் கோவிலைச் சுற்றி வாழும் 300 தமிழ் விஸ்வகர்ம பரம்பரையினர் ஒவ்வொரு ஆண்டும் பரசமயகோளரிநாதர் ஆலயத்தருகில் உள்ள பேச்சியம்மன் என்ற அவர்களது குலதெய்வத்தை வணங்க நேரில் வந்து காணிக்கை செலுத்திச் செல்வது போல) (பக்.226 பார்க்கவும்)

குலதெய்வ வழிபாடும், மராட்டிய மன்னர் வீர சிவாஜியும்:

வீர சிவாஜி அக்காலத்தில் சென்னை தம்புச் செட்டித் தெருவிலிருக்கும், நம் விஸ்வகுலத்துக்குப் பாத்தியப்பட்ட ஸ்ரீகாளிகாம்பாள் கோவிலுக்கு நேரில் வந்து தரிசித்துச் சென்ற சரித்திரக்குறிப்பு, இக்கோவிலில் இன்றும் காணக்கிடைக்கிறது.

அடிக்கடி குலதெய்வ வழிபாட்டில் இறங்கும் வீரசிவாஜி:

சிவாஜி, ஔரங்கசிப்பை, டெல்லி தர்பாரில் சந்திக்கும் முன்பாக, மதுராவிலுள்ள ஸ்ரீகிருஷ்ணர் கோவிலுக்கு குதிரைகளைக் காணிக்கையாக்கினான். (1665)

ராய்காட்டில் தம் முடிசூட்டு விழா சமயத்தில், தம் குலதெய்வத்திற்கு 42 ராத்தல் எடையுள்ள தங்கக் குடையைக் காணிக்கையாக்கினான். (1674)

சிவாஜி அப்சல்கானைச் சந்திக்கும் **முன் இரவு முழுவதும் (மே 13) தன் குலதெய்வ கோவிலில் விழுந்து** கிடந்து வழிபட்டான். **தோன்றாத்துணையாயிருந்து** காத்தருளும்படி தியானித்தான். ஆம் குல தெய்வவழிபாடும், குருபூசையில் குருவணக்கமும், சக்தி வாய்ந்த உதவியாளர்கள்.

நெல்லை மடமும், மடாதிபதியும் நமக்கு என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்யலாம்? மடாதிபதிகள் மடத்தில் தங்கி இருக்கும் காலங்களில்:

1. பிரம்ம முகூர்த்தத்தில் காலை 3.30 முதல் 5.30 வரை விஸ்வரூப தரிசனம் தந்து பக்தர்களை ஆசீர்வதிப்பது.
2. காலை 7 முதல் 9 வரை ராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு ஸ்வாமிகளே நேரடியாக அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, தீபாராதனை செய்து கூடி இருக்கும் பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்குதல் (விபூதி, குங்குமம், சந்தனம், அபிஷேகத்தீர்த்தம்) (சாப்பாடு அல்ல)
3. காலை 10.30 முதல் 11.30 மணிவரை வரும் பக்தர்களுக்கு சர்வஜன தரிசனம் தருவது.
4. மாலை 6 முதல் 7 வரை அருளுரை, நற்போதனை வழங்குதல்.

5. இரவு 8 மணிக்கு இராக்காலப் பூசை, மஹாதீபாராதனை – அருள்மிகு காமாட்சியம்மன் கோவிலில் – ஸ்வாமிகள் கலந்து கொள்ளல்.
6. பிறநேரங்களில், மடத்துக்கு வரும் தபால்கள், தகவல்களைக் கவனித்து, ஸ்ரீகார்யம் மற்றும் நிர்வாகிகளுக்கு ஆலோசனை, வழிகாட்டுதல் என்று நிர்வாகத்தைக் கவனித்தல்.
7. மடத்தில் தினமும் காலை 6 முதல் 6.30 வரையிலும் மாலை 6.30 முதல் 7.00 வரையிலும் பக்திப்பாடல் இசைக்கப்பட வேண்டும்.

மடாதிபதிகள் மடத்துக்குள் வாசம் செய்யாமல், பிரதேசப் பிரயாணம் செல்லும் காலங்களில், ஸ்வாமிகள் இடும் கட்டளைப்படி நிர்வாகஸ்தர்கள் கலந்து முன்நின்று செயல்பட வேண்டும்.

மடாதிபதிகளின் பிரதேச யாத்திரை: ஊர்விஜயம்

ஓர் ஆண்டு முழுவதுக்குமான பிரயாணப் பட்டியலைத் திட்டமிட்டு, முன் கூட்டியே அறிவிப்பது நன்மை பயக்கும். அறிவிப்பு ஆனதும் முதல் மூன்று மாதப்பயணத்திட்டம் பற்றிய முழுமையான செயல்திட்டம் தீட்டப்படவேண்டும். இந்த செயல்திட்டக் கூட்டத்திற்கு அந்த ஊர் பிரமுகர்களையும், நிர்வாகஸ்தர்களையும் மடத்துக்கு நேரில் வரவழைத்து மடத்து ஸ்ரீகார்யமும் தலைமையாக நிர்வாகிகளும் கூடி அமர்ந்து விவாதித்து செயல்திட்டத்தை முழுமையாக்க வேண்டும். **உதாரணம்: ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2020** வரை ஜனவரி, பிப்ரவரி, மார்ச். இதில் சிவகங்கை குருபூஜை தை மாதம் ரோகிணியில் வருகிறது.

தை அமாவாசை, மாசி மகாசிவராத்திரி, மாசி பௌர்ணமி, பங்குனி உத்திரம் ஆகிய பண்டிகைகள் இடம் பெறும் காலம். சிவகங்கை குருபூஜையில் நேரில் கலந்து கொள்வது அவசியம். மகாசிவராத்திரியை மடாதிபதி மடத்தில் தான் பெரிய அளவு பஜனை, தியானம் நாலு ஜாம பூசை என்று கொண்டாட வேண்டும். வெளியூர் பயணத்தில் எந்த ஊரிலும் மடாதிபதிகள் இரண்டு பகல், இரண்டு இரவுக்கு மேல் தங்காமல் மடத்துக்குத் திரும்பிவிடுவது நல்லது. 40 ஆண்டுகளாக நிர்வாகச் சீர்கேட்டினால் அவதியுறும்

இம்மடத்தின் நிர்வாகச் சீரமைப்புக்காக ஸ்வாமிகள் அதிககாலம் மடத்துக்குள் தலைமையகத்தில் தங்கி நிர்வகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அதுபோலவே பிற ஊர் மக்களையும் நேரில் அவரவர் ஊரில் சந்திக்கும் பணியும் (பல காலம் செய்யப்படாமல் விட்டுவிட்டதால்) ஸ்வாமிகளின் கவனத்தையும், நேரத்தையும், உழைப்பையும் முதல் இரண்டாண்டுக்காவது கூடுதல் சுமையோ என்று கருதும், கேட்கும் அளவுக்கு அதிகமாகவே இருக்கும். முதல் முகாம் சிவகங்கை குருபூசை–2 நாள் முகாம்.

இரண்டாம் முகாம் – 2 நாள் – கொழுந்து மாமலை சேரன்மகாதேவி.

3வது நாள் கல்லிடைக்குறிச்சி மாலையில் நெல்லை திரும்புதல்.

மூன்றாம் முகாம்: தொடர்ந்து இரண்டு நாளும் சுரண்டையில் முகாம்.

2019 ஏப்ரல், மே, ஜுன்:

வைகாசி விசாகம்:

அருள்மிகு பழனி ஆண்டவர் கோவிலில் மாம்பழக் கவிராயர் மற்றும் விஸ்வகுலத்திருவிழா. நாள் முழுவதும் தனி மண்டபத்தில் விஸ்வகுலத்தினருக்கு ஊஞ்சல் சேவை. இதையொட்டி **முதல் முகாம் 2 நாள் பழனி, திண்டுக்கல்.**

இரண்டாம் முகாம்:

கமுதி மற்றும் அறந்தாங்கியிலும் சேர்த்து மூன்று நாள் முகாம்.

மூன்றாம் முகாம்:

ஆனி மாதம் கும்பகோணம் குருபூசை. இதையொட்டி, தஞ்சைப் பெரியகோவில் சிவகங்கை பூங்கா, பொன்மணித் தட்டார் பூசையும், கும்பகோணம் இராசரத்தினம் ஸ்வாமிகள் குருபூசையும் என்று மூன்று நாள்.

2019 ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர்:

இதில் ஆடி அமாவாசை, ஆவணிஅவிட்டம், கணேச சதுர்த்தி விழாக்களுண்டு. விஸ்வகர்ம ஜயந்தி, நவராத்திரி கொலு ஆரம்பம்

நான்கையும் மடத்தில் தான் இருந்து கொண்டாட வேண்டும். விஸ்வகர்மஜயந்தியை முறைபோட்டு வெளியூரில் செய்யலாம். எனவே ஆடிப்பூரம் வளையல் திருவிழாவையொட்டி கோமளீஸ்வரன் பேட்டையில் இரண்டு நாள் முகாம். 3வது நாள் திண்டிவனத்தில் ஒரு நாள் முகாம் முடித்து இரவில் நெல்லை திரும்பலாம். ஆவணியில் மானூர் களூராருக்குக் காட்சி கொடுத்த ஆச்சாரி திருவிழா.

முதலாமாண்டு விஸ்வகர்ம ஜயந்தி விழாவில் தென்காசி, செங்கோட்டையில் ஸ்வாமிகள் கலந்துகொள்ளலாம். வரும் ஆண்டுகளில் தென்காசி, கடயநல்லூர், வாசுதேவநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், சேத்தூர், இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர், வத்திறாயிருப்பு (சதுரகிரி) சிவகாசி, விருதுநகர் என்று மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் கலந்துகொள்வது நன்மை பயக்கும். **(நெல்லை மடத்துக்கும் இம்மக்களுக்கும் உறவே இல்லை. புதுப்பிக்கப்பட வேண்டும்)**

அக்டோபர், நவம்பர், டிசம்பர்: தசரா, கொலு, தீபாவளி, ஐப்பசி, கார்த்திகை மார்கழி குருபூசை நாட்களும் சிறப்பு. ஐப்பசி விசாகம் ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகள் குருபூசை மடத்திலும், கமுதியிலும் நடைபெற வேண்டும்.

கார்த்திகையில் மடத்தில் ஆதிகுருமூர்த்தி சிவானந்த முனீஸ்வரர் குருபூசையும், கல்லிடையில் ஸ்ரீமத்முத்துக்குமார ஸ்வாமிகள் குருபூசையும் நடைபெற வேண்டும். மார்கழி 30ம் திருப்பாவை, திருவெம்பாவை பஜனை, போட்டி, உஞ்சவிருத்தி என்று மடத்தைச் சுற்றிய ஏழு தெருக்களிலும் நடத்த வேண்டும். மடத்தின் சார்பாக, **மடத்துச் சொத்துப் பாதுகாப்பு கமிட்டியானது,** நெல்லை மடத்திலிருந்து தொடர்ந்து செயல்படவேண்டும். மடாதிபதியிடம் மூன்று மாதத்திற்கொரு முறை இக்கமிட்டி செயல்திட்டம் தீட்டி மடாதிபதியிடம் தகவல் கூறி, இக்கமிட்டி தன்னிச்சையாகச் செயல்படவேண்டும். மடாதிபதி அவர்கள், ஆன்மீகப்பணிகளுக்கு அதிகம் உழைக்கும் வகையில் ஸ்வாமிகளுக்கு அதிகம் தொந்தரவு கொடுக்காமல் சொத்துப் பாதுகாப்பு கமிட்டி தன்னார்வத்துடனும், தன்னிச்சையாகவும்

செயல்படுவதை வரவேற்க வேண்டும் ஊக்குவிக்க வேண்டும். இப்படியானால் மடாதிபதி தன்னிச்சையாக மடத்துச் சொத்தை வில்லங்கம் செய்ய முடியாது.

சொத்திலிருந்து வருமானம் பெருக்கும் கமிட்டி:

மடத்தின் சொத்தும் அதனிலிருந்து பெருகும் தொடர்ந்த வருமானமும் தான் மடம் சுயமாக சுவாசித்து நிலைத்துநிற்க உதவும். எனவே மடத்துக்குச் சேர வேண்டிய வாடகை, வரி, மகசூல், காணிக்கை, சுருள் என்பதைத் தவறாமல் முறையாக வசூலிப்பது அவசியம். முரடர்கள் சிலர் இதில் வாதம் செய்து தடை ஏற்படுத்தினால், சமூக ஒற்றுமை, ஊர்க்கூட்டம், மடாதிபதிகள் தீர்ப்பு என்றும் வசூலைச் சீர் செய்ய வேண்டும். இவ்வழிமுறை சொத்துக்கள் இருக்கும் எல்லா ஊருக்கும் பொருந்தும்.

வங்கிக் கணக்கு:

“ஆதீன சொத்து ஆவணப்பதிவேடு” என்பது போன்று சொத்து வாரியாக வரவு செலவு பேரேடும் எழுதிப் பேணப்பட வேண்டும். தலைமையகத்தில் மொத்தப் பேரேடும், கிளைகள், ஊர்களில் தனித்தனிப் பேரேடும், சொத்தின் இனவாரியாக வயல், நன்செய், புஞ்செய், மரம், கடை, காலிமனை என்று இனம் பிரித்து எழுதி, வரவும், செலவும் தினமும் மாதந்தோறும் என்றெழுதி, ஆண்டுக்கொரு முறை தணிக்கை செய்து வைத்தல் அவசியம். வரவும், செலவும் பேங்க் கணக்கில் பிரதிபலிப்பது நன்மையே. அவசியமும் ஆகும்.

வரி:

ஆதீன சொத்துக்கு, வரி இல்லை. ஆதீனம் உருவாக்கும், கடை, பள்ளிக்கூடம் போன்ற வியாபார ஸ்தாபனத்திற்கு வருமானவரி உண்டு. இக்காலத்தில் வருமானத்தைப் பெருக்குவதற்கு அதிகமான வாய்ப்பு, வசதிகள் உள்ளன. தொழில்நுட்ப அறிவும் இணைந்தால் வருமானம் விரைவில் பெருகும்.

நிர்வாகஸ்தர்கள்:

பழமைவாதிகளும், குறைந்த படிப்புள்ளவர்களும் நிர்வாகத்தில் முக்கிய பொறுப்புகளை இனிமேல் ஏற்று நடத்திட இயலாது. கூடாது. எதிர்வரும் புதிய சவால்களையும் கணித்து, சமாளிக்கும் திறமை அவசியம். பழைய காலத்து, சங்கம், கமிட்டி,

ஆயுள்வரை நாற்காலி ஸ்தானம் என்ற ஆசையெல்லாம் மடத்தை முன்னெடுத்துச் செல்ல உதவாது.

தொழில் நுணுக்கம் கலந்த உயர்கல்வி, ஓய்வு பெற்றவர்கள் என்று நிர்வாகம் அணிசேர்க்க வேண்டும்.

கோவில் விழா கமிட்டி:

சதுர்த்தி, அஷ்டமி, பௌர்ணமி, வாரவெள்ளி என்றும், ஆடிப்பூரம், தசரா கொலு என்றும் குருபூசை, கும்பாபிஷேகம் என்றும், தொடர்ந்து விழாக்கள், பூசைகள் வருவதுண்டு. இந்தப் பூசைகளை மடத்தின் சார்பில் கோவில்களில் ஆன்மீக ஆச்சாரத்துடன் முறையாகச் செய்திட விழாக்குழு என்று அமைவது அவசியம். தலைமையகத்திலும், கிளை ஊர்களிலும் இப்படி விழாக்குழு அமைவது அவசியம். கிளைக்குழு சுதந்திரமாக செயல்பட்டாலும் தலைமைக் குழுவின் பார்வையில், மடத்தின் ஆன்மீக ஆச்சாரத்தை, மடாதிபதியின் நற்போதனையைப் பிரதிபலிக்குமாறு இருவரும் இணைந்து செயல்பட வேண்டும். செலவினம் எல்லாம் முன்கூட்டியே திட்டமிட்டு, ஒப்புதல் பெற்ற வாறே அமைதல் வேண்டும்.

குல ஆச்சாரப் பிரச்சாரக்குழு:

பூணூல் அணிவது, சந்தியா வந்தனம், காயத்ரிஜபம், சூரிய நமஸ்காரம் என்ற ஐந்தொழிலாளருக்கு இன்றியமையாத வாழ்வியல் ஆச்சாரத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு வசதியாகத் தலைமையகத்திலும், கிளை நிலையங்களிலும் இந்தக்குழு செயல்படவேண்டும். ஓரளவிற்காவது முறையாகப் படித்த புரோகிதர் அர்ச்சகருடன், யோகா, தியானப்பயிற்சி பெற்ற அனுபவஸ்தர் ஒருவரும் (வாழும் கலை, மனவளக்கலை, ஈஷா) இணைந்து செயல்படுவது நன்மை பயக்கும்.

நிதி ஆதாரக்குழு:

மடம் தொடர்ந்து சுவாசிப்பதற்கும் வலுவாக ஆரோக்யமாக உயர்வதற்கும், தொடர்ந்த நிதி ஆதாரம் தான் **"ஆக்ஸிஜன் பாட்டில்"**. சொத்துக்களிலிருந்து வருமானத்தைப் பெருக்குவது. சொத்துக்களிலிருந்து வருமானப் பாக்கியை வசூலிப்பது. குருகாணிக்கை, சுருளை வீடுதோறும், மாதந்தோறும் வசூலிப்பது. கடைவாடகை, தரைவாடகையை ஆதாரப் பூர்வமாக அவ்வப்போது

உயர்த்துவது, புதுப்பிப்பது, வசூலிப்பது என்று இக்குழு செயல்படும்.

வருமானத்தைப் பெருக்கும் புதிய யுத்தியைக் கையாள்வது:

உபயதாரர்கள், நன்கொடையாளர்களின் பட்டியலை பதிவு செய்வது, விரிவுப்படுத்துவது என்று நிதி ஆதாரக் குழு தனிச்சையாகச் செயல்பட்டாலும், தலைமை நிலைய நிர்வாகத்திடம் மாதமொரு முறையும், கலந்துகொள்வது அவசியம்.

குருபூசைக்குழு:

ஆதீனத்தின் சொத்து அருள். ஆன்மீகம். குருவை நினைத்து வணங்கி, குருபூசை செய்வது, தினமும் உயிர்வாழ மூச்சு விடுவது போன்றது. பரசமயகோளரிநாத ஆதீனவர்க்கத்தில் வாழ்ந்து, முக்தியடைந்த தவசீலர்கள், தியாகிகள் தான் குரு. தற்சமயம் மடாதிபதி என்று பணத்துக்காக வேஷம் போடும் மனிதர்கள் குருவல்ல. எனவே, தலைமையகத்திலும், கமுதி, சிவகங்கை, கும்பகோணம், திண்டிவனம், கோமளீஸ்வரன்பேட்டை, கல்லிடைக்குறிச்சியிலும் தவறாமல், முறையாக குருபூசை ஆண்டுதோறும். மாதந்தோறும் நடத்தியே ஆக வேண்டும்.

குருவணக்கப்பாடல், திருவாசகம் ஓதுதல், என்று வாய்திறந்து மனமுருகி மக்கள் பஜனையாகப் பாடி மனம் இலேசாகி, குருவை மகிழ்வித்து, குருவருளைப் பெற வேண்டும். இதற்கு ஆன்மீக ஆச்சாரத்தில் ஈடுபாடு, நம்பிக்கையுள்ளவர்கள் கமிட்டியில் கலந்து செயல்படவேண்டும். (படம் 98,99,116,122எ)

13. ஆதீனங்கள்

ஆதீனம் என்றால் சைவமடம். மடம் என்றால் துறவிகள் வாழும் இடம். துறவிகள் அன்றாட வழிபாட்டுக்கு சிறு விக்ரஹங்கள், மூர்த்தங்கள் என்று விரிவாகும் போது மடாலயம் என்று அழைக்கப்படும் இது பொதுமக்கள் வணங்கும் கோவில் இல்லை என்பதைப் பலமுறை எழுதியும் பேசியும் வந்துள்ளோம். இந்த ஆதீனங்கள் ஏன் பிறந்தன? எப்போது தோன்றின? ஆதீனங்கள் எத்தனை. அவற்றின் அவசியம் என்ன? என்று விளக்குவதே இப்பகுதி.

உலகிலேயே இந்தியாவில் தான் கோவில்கள் அதிகம். தமிழகத்திலும் தஞ்சை, கும்பகோணத்தில் தான் கோவில்கள் அதிகம். ஆனால் கோவில்கள் மடமாகாது. தஞ்சை, கும்பகோணத்தில் தான் கோவில்கள் அதிகம், என்றாலும் தர்மபுரம், திருப்பனந்தாள், திருவாவடுதுறை என்று அதிகமான ஆதீனங்களும் கும்பகோணம் பகுதியில்தான்., இருந்தும் விஸ்வகுல ஆதீனம், சிதம்பரம், திருநெல்வேலி, திருவண்ணாமலை என்று தோன்றியது ஏன்?

சைவ ஆதீனங்கள் 18 என்பது (மே 14) தான் தொன்றுதொட்டு எழுதப்பட்ட வரலாறு. விஸ்வகுல ஆதீனம், ஒன்று கூட இந்த 18ல் இடம் பெறவில்லை ஏன்? அண்மையில் 01–02–2018 மதுரை உச்சநீதிமன்றம். ஆதீன சொத்துக்கள் பாதுகாப்பு பற்றிய தீர்ப்பில், 22 மடம்/ஆதீனத்தை பெயரிட்டு அடையாளப்படுத்தியதில், விஸ்வகுல ஆதீனம் ஒன்றுகூட இடம் பெறவில்லையே? ஏன்? முகவரி இல்லாமலே 1400 ஆண்டுகளுக்கும் மேல் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் நிலைமை ஏன்? ஒளிந்து கெள்வதா? பாதுகாப்பாக பதுங்குவதா? விஸ்வகுல ஆச்சார மதபோதகர் என்றால் யாருக்கும் தெரியக்கூடாதா? பிரபஞ்சத்தைப் படைத்தவர் விஸ்வகர்மா. ஐந்தொழில் கைவினைஞர்கள் தான் படைப்புத் தொழிலுக்குரியவர்கள்

என்று பெருமை பேசிவிட்டு, அவர்தம் குலகுரு, ஜெகத்குரு என்று அடைமொழியைப் போட்டுக் கொண்டு, வேறு இனத்தவர் யாருக்கும் தெரியாமல் வாழ வேண்டிய அவசியம் என்ன?

கோவில்கள் வரலாற்றை யார் வேண்டுமானாலும் எழுதலாம், வெளியிடலாம். கடைகளிலும் கிடைக்கும். ஆதீன வரலாறுகளை அந்தந்த ஆதீனம் தான் எழுதி வெளியிட வேண்டும் என்ற பழக்கம் இருந்தது, இருக்கிறது. ஆதீன பதிப்புகள் கடைகளில் விலைக்கு கிடைப்பதும் அரிது. சந்தான பரம்பரை (அப்பா, மகன் என்ற வாரிசு ஆளுமை) சிஷ்ய பரம்பரை (ரத்த, விந்து சம்பந்தமில்லாத துறவி பரம்பரை) என்ற தொடர்புகளை முறைப்படுத்தி ஆதீனத்தின் மையமான ஆன்மீகப் பொருளை நிலைநிறுத்தி, பரப்புரை செய்து, பக்தர்களைப் பெருக்கியும், ஆதீனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்து பேணி வந்த வரலாற்றையும், மரபு சார்ந்து வெளியீடு செய்வது ஆதீனத்தின் கடமை. ஆயினும் சைவமதம் தழைக்கவும், சந்ததிகள் முறையாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டும், சைவ ஆதீனங்கள் 18யையும், ஒருசேர ஆய்வு செய்து, வகைப்படுத்தி ஒரே நூலாக முதன்முதலாக எழுதி, அச்சிட்டு வெளியிட்டவர் பெருமகனூர் ஊரன் அடிகள் தான் (மே14) (2002ல் தான் நடந்துள்ளது).

சைவ மடங்கள் 18 என்று காளமேகப்புலவர் பாடியுள்ளார். (திருவானைக்காவுலா–15ம் நூற்றாண்டு) 1910ல் வெளிவந்த அபிதான சிந்தாமணியில் சுத்த சைவ 18 ஆதீனங்கள் என்று குறிப்புள்ளது. (வீர சைவம் வேறு, சுத்த சைவம் வேறு என்று விளக்கப்பட்டுள்ளது). திருவாவடுதுறை, தர்மபுரம், திருப்பனந்தாள் ஆதீனங்கள் 6ம் நூற்றாண்டில் தான் தோன்றின. அவை ஆல்போல் தழைத்து வளர்ந்து தமிழ் பல்கலைக் கழகங்களாகவும் விளங்குகின்றன. **“சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக”** என்பதே சைவ சமய உலகியல் வழக்கு மொழி. தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட விஸ்வ பிரம்ம புராணமும் நெல்லை ஆதீனத்தில் தானே அரங்கேற்றப்பட்டது.

அதாவது முடியுடை மன்னர்கள் தமிழையும், கலையையும், பண்பாட்டையும், சமய உணர்வுகளையும் வளர்த்தார்கள்.

பின்னாளில் குறுநில மன்னர்களும், சமஸ்தானம், ஜமீன்களும் சமயம், அறம் வளர்த்தார்கள். திருநெல்வேலியில் அக்காலத்தில் செப்பறை மடம் என்று பழமையான மடம் 16ம் நூற்றாண்டில் இருந்துள்ளது. இது விஸ்வகர்மா மடமல்ல. ஆனால் இம்மடமும் அபிதான சிந்தாமணிபட்டியலில் சுட்டிக்காட்டப்படவில்லை. கல்லிடைக்குறிச்சி ஆன்மீகம் தழைக்கச் செய்த புண்ணியஸ்தலம். வேளாளர் அதிகம் வசித்த பகுதி வேளாளக்குறிச்சி. வணிகர்கள் அதிகம் வசித்த பகுதி சிகாமணிபுரம். அந்தணர் அதிகம் வசித்த பகுதி பார்ப்பாகுறிச்சி இவ்வாறே வேளாளக்குறிச்சியென்ற "திருப்புகலூர்" மடம் (மே14) என்றது திருவாவடுதுறை ஆதீனத்தால் புகழ் பெற்றது (அம்பாசமுத்திரம் பஸ்நிலையம் அருகிலுள்ள பெரிய ஆர்ச் கட்டிடத்தில் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தைப் புகழ்ந்து நினைவூட்டும் வாசகம் இன்றும் உள்ளது) 1935–36ல் சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ்வகுப்பில் முதல் மாணவராகத் தேர்வு பெற்றவருக்கு ரூ.1000 ரொக்கப் பரிசு என்றும், அது பிரிட்டிஷ் ஐந்தாம் ஜார்ஜ் மன்னன் நினைவாக வழங்கப்பட்டது என்றும் வரலாற்றுக் குறிப்புள்ளது).

ஆதீனம் என்ற சொல் பெரிய மடங்களுக்குப் பொருந்துமே அல்லாது, கிளைகளில்லாத சிறிய மடத்துக்குப் பொருந்தாது. கிளைமடங்கள் பல, பெரிய கோவில்கள், நிர்வாகங்கள் ஏராளமான சொத்துக்கள் என்ற பெரிய மடங்களையே ஆதீனம் என்று சொல்வர் (இவ்வகையில், ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனம், சிதம்பரம் மௌனகுரு ஸ்வாமிகள் ஆத்தூர் ஆதீனம், ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகள் ஆதீனம் (சூளகிரி–ஓசூர்) இவை மூன்றுமே ஆதீனம் எனத் தகும். கச்சிராயபாளையமும், சீனந்தலும் ஆதீனங்கள் என்றாகாது. சொற்ப சொத்துக்கள், கிளைகள் இல்லை. விஸ்வகுல குருமார்களுக்கு ஜெகத்குரு என்ற அடைமொழிப்பட்டம் வழக்கில் இருந்தது. அகோர சிவாச்சார்ய மடங்கள் இந்தியாவில் 15 இருந்தன. தமிழ்நாட்டில் இரண்டு இருந்தன. மயூரமடம், சோழகமடம். (எனவே அகோர சிவனை வழிபட்ட கச்சிராயபாளையமும் மடமும் இல்லை. ஆதீனமும் இல்லை. ஆன்மீகக் குரு வாழ்ந்த ஓர் ஆஸ்ரம் என்று கொள்வதே சரி.)

ஆதீனங்கள் கோவில்களைப் பராமரித்து, பூசை முறைகள் செய்து, திருவிழா எடுத்தும், மடங்களை நிறுவி, சமயாச்சாரியார்களை ஆதரித்து, சமயம் வளர்ந்து, தர்மம் வளர்த்தன. சொற்பொழிவு, நற்போதனை, வெளியீடுகள், சமயக்கல்வி என்று சைவ மதத்தை வளர்த்து வந்தன. கல்விக்கூடம். மருத்துவச்சாலை, அன்னதானச் சத்திரம் என்று சேவை செய்தன. மன்னர்களும், ஜமீன்தாரரும் கொடுத்த நிலபுலன்களிலிருந்து வருமானத்தைப் பெருக்கி செலவை ஈடு செய்தன.

இந்து சமயஅறநிலையத்துறை:

சுதந்திர இந்தியாவில், அதுவும் எமர்ஜன்சி, இந்திரா அம்மையார் காலத்துக்குப் பிறகு (Secular) மதம் சாரா என்ற வாசகம், அரசியல் சட்டமைப்புக்குள் வந்த பிறகும், மன்னர் மானியம் (Privy Purse) முறை ஒழிக்கப்பட்ட பிறகும், சமயம் சார்ந்த அறம் வளர்க்கச் சிக்கலும், சிரமமும் ஏற்பட்டன. (புரவலர்கள் இல்லாமையால்) பல கோவில்கள், ஆதீனங்கள், மடங்கள் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுக்குள் வந்தன. தன்னார்வமாக, ஆளுமைத்திறமிக்க ஆதீனங்கள், மடங்கள் தனித்து நின்று செயல்படுகின்றன.

மாறுபாடு:

இப்படி மாறுபட்ட சூழ்நிலையில், விஸ்வகுல ஆதீனம், மடங்களின் நிலைப்பாடு, தனித்தன்மை, தொடர்ந்து **தம்மை பாதுகாத்துக் கொள்ளுதல் எப்படி?** என்று சிந்திப்பது அவசியம்! காலத்தின் கட்டாயமும் ஆகும். சிதம்பரம் கோவில் தீட்சிதர்கள் ஆட்சியில்தான் உள்ளது. சாய்பாபா, இராமகிருஷ்ணமடமும் தன்னாட்சிதான். பிற சிவாச்சார்யா ஆதீனம் / மடங்கள் இந்து சமய அறநிலையத் துறையின் **கட்டுப்பாட்டில் சிலவும், கட்டுப்பாட்டுக்கு வெளியில் சிலவும்** என்றும் இயங்கி வருகின்றன.

ஜெகத்குரு என்ற பெருமை மிகு அடைமொழிப் பட்டத்துக்குரிய விஸ்வகுல மடாதிபதியின் மடம்/ ஆதீனம் தனித்தன்மையுடையவை.

1. ஆதீனத்தின் தலைவர் என்ற மடாதிபதி ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டால், ஆயுளுக்கும் அவரே மடாதிபதி.
2. மரணம், புத்திபேதலிப்பு, கை, கால் அவயவங்கள் விழுந்து செயலிழந்தால் விஸ்வகுல மக்கள் ஒன்றுகூடி, அறுதிப் பெரும்பான்மையில் ஒருமித்து, வேறு ஒரு தகுந்த நபரை தேர்ந்தெடுத்து மடாதிபதியாக நியமிக்கலாம்.
3. அல்லது / அதாவது மடாதிபதியின் ஆயுளுக்குப் பிறகே புதிய மடாதிபதியைப் பெரும்பான்மை பலத்துடன் விஸ்வகுல மக்களே கூடித் தேர்ந்தெடுக்க வேண்டும்.
4. மடாதிபதி **தம் ஆயுள்காலத்தில் அவராகவே வேறு யாரையும் மடாதிபதியாக நியமிக்க அதிகாரம் இல்லை.** முன் நிகழ்வும் இருந்தாகத் தெரியவில்லை.
5. மடாதிபதி தம் ஆயுள்காலத்தில் மடத்தின் ஆன்மீகக் காரியத்திற்கு உதவியாக இருக்கும் பொருட்டு ஸ்ரீகார்யம் என்ற உதவியாளரை மட்டுமே நியமித்துக் கொள்ளலாம்.
6. இளைய மடாதிபதி நிலை/வழக்கு விஸ்வகுல மடத்துக்குக் கிடையாது இருந்ததுமில்லை. மடாதிபதி, ஸ்ரீகார்யம் அடுத்து மீண்டும் மடாதிபதி, ஸ்ரீகார்யம் என்று மட்டுமே நிர்வாகம்.
7. சொத்துக்களைப் பாதுகாத்து வருமானம் பெருக்குவதில் ஆதீன சொத்துப் பதிவேடு தான் அடிப்படை ஆதாரம்.
8. ஆதீனகர்த்தா ஆன்மீகக்குரு. சொத்து பாதுகாப்பு, நிதி ஆதாரம், ஆதீன வெளியீடு. திக்விஜயம், கல்வி மேம்பாடு என்ற வகைக்கு தனித்தனியே நிர்வாக அமைப்புகள் தேவை.
9. ஆதீனத்திற்கு கணக்குப்பிள்ளையும் மடாதிபதியின் பிரதேசயாத்திரைக்கு உதவி ஆள் படையும் உண்டு.
10. ஆதீனத்தின் நிர்வாகக் கோளாறு அதிகமானால் இந்து சமய அறநிலையத்தலைமை அதிகாரியான கமிஷனரே நேரடியாக ஆதீனத்தைக் கைப்பற்றி தன் அதிகார ஆளுகைக்குள் கொண்டு வரலாம்.

11. விஸ்வகுல புதிய மடாதிபதி நியமனம் பற்றிய சட்ட வரைவு ஸ்கீம் O.S.No.58/1922, 1925/1927க்குப் பிறகு நெல்லை நீதி மன்றத் தீர்ப்புபடி அமலுக்கு வந்துவிட்டது. இதை இந்திய உச்சநீதிமன்ற ஆணையும் உறுதி செய்துள்ளது.
12. தானமாகவோ, விலைக்கி வாங்கியோ, ஆதீனத் தலைவர் (மடாதிபதி) பெயரில் சொத்து வந்தாலும், சொத்து ஆதீனத்திற்கே சொந்தம். தனிநபர் சொத்தல்ல. சொத்துக்களுக்கு வில்லங்கம் ஏற்படுத்தாமல் பின்வரும் அடுத்த மடாதிபதி கையில் சொத்தை ஒப்படைப்பது/ மடாதிபதியின் கடமை. ஆதீனகர்த்தர், ஆதீனத்தின் நலனுக்காகவே ஆதீனச் சொத்துக்களைப் பராமரிக்கும் பொறுப்புள்ளவர் என்பதால், ஆதீனத்தின் சொத்துக்களை தனிநபர் பெயரில் மாற்றம், வில்லங்கம் செய்யும் உரிமை இல்லாதவர்.

மேலே சொன்ன கருத்துப்படி இப்புத்தகம் ஆய்வு செய்யும் ஐந்து மடங்களைக் கண்ணோட்டம்விட்டால்:

சொத்து மிகவும் குறைந்தது சீனந்தல் மடம் (2 ஏக்கர்) கிளை ஏதும் இல்லாதது சீனந்தல் மடம். கிளை ஏதும் இல்லை, சொத்து கொஞ்சம் அதிகம் என்றால் கச்சிராயபாளையம் மடம் (9 ஏக்கர்). ஆனால் கச்சிராயபாளையம் என்பது மடம் அல்லது தனிநபர் ஆஸ்ரமமே. விஸ்வகர்மப் பிராம்மண வம்சப்பிரகாசிகை நூலை எழுதிய ஆசிரியருள் திரு.K. சுப்ரமணிய ஆச்சாரியார் மண்மங்கலம் (படம் 123), உளுந்தூர்பேட்டையில் வாழ்ந்த காலம். கச்சிராயபாளையம் ஸ்வாமிகள் அதிகம் அங்கு வந்து போன காலம். ஆண்டிமடம் செல்லும் பாதை. பழக்கம் காரணமாக கச்சிராயபாளையத்தையும் பட்டியலில் சேர்த்துள்ளார்கள் என்று எடுத்துக் கொள்ள வாய்ப்புள்ளது. மாம்பழக்கவிராயர் பாடிய ஐந்து மடத்திலும், (மே 10) பட்டியலிலும் இப்பெயர் இல்லை. கிளைகளும், மடமும், கோவிலும், சொத்துக்களும் அதிகம் இருந்தவை ஆதீனங்கள் என்ற வரிசையில் முதலில் வருவது பரசமயகோளரிநாத ஆதீனம் நெல்லை, அடுத்து வருவது ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி பிரபு

மடம் (சூளகிரி–ஓசூர்) மூன்றாவதாக சிதம்பரம் மௌனஸ்வாமிகள் ஆதீனம் – ஆத்தூர்.

தர்மபுர ஆதீனமும் ஆறாம் நூற்றாண்டில் தான் தோன்றியது. கிட்டத்தட்ட அந்தக் காலத்தில் தான் திருநெல்வேலி மடமும், திருவண்ணாமலை சீனந்தல் மடமும் தோன்றின. மடம் / ஆதீனம் நிர்வாகம் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளாமல், தகப்பன், பிள்ளை என்று குடும்ப வாரிசு என்று குறுகி வாழ்ந்த திருவண்ணாமலை மடம், கி.பி.2000க்குப் பிறகு அதிக வியாபாரம், விளம்பர யுக்தி என்று குரல் கொடுத்து புகழையும், பொருளையும் சேர்த்தது. **குடும்ப அக்கறையே மேல் என்று பொருள் சேர்த்ததால் மடத்தின் பெயரில் சொத்து பெருகவில்லை.** தனி மரமாக உயர்ந்து நிற்கிறது இம்மடம். ஆனால் நெல்லை மடம்/ ஆதீனம், கிளைகள், கோவில்கள், நிர்வாகம் என்று ஓரளவு தெரிந்திருந்தாலும் துறவி மடம் என்பதால் ஆதீனத்துக்கு சொத்து சேர்ந்தது. ஆன்மீகம் தவிர்த்து பிற லௌகீக விவகாரங்களில் நிர்வாகத்திறமை இல்லாததால் சொத்துக்களைப் பராமரிப்பதில் சுணக்கம் ஏற்பட்டது. 1981க்குப் பிறகு நிர்வாகக் குளறுபடி கலந்த சுயநலவாதிகளால் நெல்லை மடம் முடங்கிக் கிடக்கிறது.

ஆன்மீகம் வேரூன்றவில்லை, கிளைகளைப்பரப்பவும் இல்லை:

ஐந்தொழில் செய்து பிழைக்கும் விஸ்வகுலத்தில் அரிதாக மிகச் சிலரே வேதம் பயின்று ஆன்மீக ஒளிவீசி வாழ்ந்தார்கள். அவர்களது எண்ணிக்கை மிகமிகக் குறைவு. அவர்களது குடும்பப் பின்புலமும் ஓகோ என்று சொல்லும் வேத பரம்பரை இல்லை. அப்படியிருக்க தன் முனைப்பு, தன் முயற்சி என்று தாமே தவவலிமையை வளர்த்துக்கொண்டு, கூறிக்கொண்டே, வாழ்ந்து விட்டார்களோ பல ஜகத்குருமார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழும், சைவமும் என்பது தமிழ் மக்கள். இந்த ஜகத்குருக்களில் பலரும் சமஸ்கிருதம் தான் முக்கியம் என்று பெருமை பேசி, தம்மைத்தாமே தனிமைப்படுத்திக் கொண்டார்களோ?

ஞானசம்பந்தர் 7ம் நூற்றாண்டு தானே. இராமலிங்க அடிகள் 1853முதல் 1880 வரை தானே. திருமூலரும், ஔவையாரும்

தமிழில் தானே ஆன்மீகம் வளர்த்தார்கள். சமஸ்கிருத மந்திரத்தை மனப்பாடமாக ஒப்பித்துவிட்டால் ஆன்மீகமாகுமா? சொத்தில் தான் நீடித்த வருமானம் கூடுமா? பக்தர்கள் எண்ணிக்கை வளருமா? **தியானமனப்பழக்கத்துக்கும், பிராணாயாமம் என்ற மூச்சுப் பயிற்சிக்கும், மொழி அவசியமில்லையே.** மூச்சுவிடுவதைக் கூட சரியாகச் சொல்லித்தரவில்லையே இந்த ஜகத்குருக்கள். துறவிகள் தம் தவவலிமையை உயர்த்திக் கொண்டு முக்திக்கு முயன்றனர். குடும்பஸ்தர்கள் காணிக்கை வசூல் என்று குடும்பத்தை வளர்த்தார்கள். மடத்தைச் சார்ந்த **சிஷ்யர்களை வளர்க்கத் தவறிவிட்டார்களோ?** சிஷ்யர்கள் இல்லாவிட்டால் மடம் எப்படித் தொடரும்? மடமே இல்லையென்றால் மடாதிபதி எப்படி? கிறிஸ்துவ மதம் இந்தியாவில் எப்படி வேரூன்றி தொடர்ந்து பரவுகிறது? தன்னை மட்டும் உயர்த்தி தனித்து நின்றவர்களால் அவர்களும், அவர்கள் சார்ந்த மடமும், பட்டியலில் இடம்பெறவில்லை. சொத்து, மடம், அனைத்தும் மறைந்தன. நிர்வாகமே தெரியாத, ஆன்மீக சுயஒழுக்கம், தனிமனித உயர்வு ஆகியவை ஆதீனத்தை / மடத்தை உயர்த்தவில்லை. நிர்வாகமும் தேவை. நிர்வாகமே மடம் / ஆதீனத்தின் உயிர்மூச்சு. நிர்வாகத்திறமை இல்லாத எந்த நிறுவனமும் வளர்ந்து நிலைக்காது.

❀

14. கல்லிடைக்குறிச்சியும், சென்னை பழைய வண்ணாரப்பேட்டையும் (படம் 123)

திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் அருகில் உள்ளது கல்லிடைக்குறிச்சியும், அம்பாசமுத்திரமும். கல்லிடைக்குறிச்சி குருபூஜை பற்றி பக்கம் 216 எழுதப்பட்டுள்ளது. கல்லிடைக்குறிச்சியின் ஆன்மீகத்தலப் பெருமை பற்றி ஆதீனங்கள் என்ற தலைப்பில் 271 பக்கம் எழுதப்பட்டுள்ளது. இந்த இரண்டையும் இணைத்துப் பார்த்தால் ஆச்சர்யமான ஒரு புதிய தகவல் பிறக்கிறது. சென்னை, வண்ணாரப்பேட்டை, சஞ்சீவிராயன்பேட்டை, விஸ்வபிராம்மண கிராமாதிகார கமிட்டி என்று ஒரு அமைப்பு கி.பி.1916ம் ஆண்டில் துவங்கி பதிவு செய்யப்பட்டு இன்று முதல் தொடர்ந்து ஆரோக்கியமாகச் செயல்பட்டு வருகிறது. நூற்றாண்டு விழாவும் 2016ம் ஆண்டு நடந்து முடிந்துள்ளது. சிறிய ஓட்டுவீடு என்று ஆரம்பித்து இன்று நான்கு மாடிக்கட்டிடமாக உயர்ந்து, வளர்ந்து உன்னதமாக செயல்படுகிறது. (படம் 123–பக்.296) மராட்டிய மன்னர் வீரசிவாஜி, சென்னை வந்து தம்புசெட்டித் தெருவில் கொலு வீற்றிருக்கும் ஸ்ரீகாளிகாம்பாள் அன்னையை வழிபட்டுச் சென்ற சரித்திரம் தெரிந்ததே.

ஸ்ரீகாளிகாம்பாள் கோவில் நிர்வாகத்திற்குச் சுதந்திரம்:

அருளும், புகழுமிக்க அன்னை ஸ்ரீகாளிகாம்பாள் கோவிலை அக்காலத்தில் சென்னைக் கடற்கரை மீன்பிடி செட்டியினத்தவர் தம் கோவில் என்று சொந்தம் கொண்டாடினர். விஸ்வகுலத்தவர் விட்டுத்தரவில்லை. வழக்காடு மன்றம் இக்கோவில் நிர்வாகத்தை முறைப்படுத்தி 1926ல் ஒரு ஸ்கீம் வெளியிட்டது. இதுவும் முழுமையான தீர்ப்பல்ல என்று மேலும் வழக்காடி 1935ல் முறையான ஸ்கீம் (Scheme) என்று ஒரு தீர்ப்பைப் பெற்றார்கள் விஸ்வகர்மாக்கள். "1926ல் வெளியான ஸ்கீம் ரத்தாகிறது. 1935ல்

வெளிவரும் இந்த ஸ்கீம் தான் இனி நடைமுறையில் இருக்கும்" என்று விஸ்வகர்மா இனத்தவருக்கு இந்த காளிகாம்பாள் கோவிலின் முழு ஆளுமை நிர்வாக உரிமையை உறுதி செய்தது சென்னை உயர்நீதிமன்றம்.

மாநாடு:

1935ம் வருடம் செப்டம்பர் மாதம் **25ம்** தேதி இந்த சரித்திரப் புகழ் தீர்ப்புக் கிடைத்தது. அதைக் கொண்டாடும் விதமாக **29**–09–1935ல் சென்னை விஸ்வகர்ம மஹறாஜன வாலிபர் பண்டிதர் மஹறாநாடு என்று வெற்றி விழாக் கொண்டாட்டம் ஏற்பாடாகியது.

கல்லிடைக்குறிச்சி ஸ்வாமிகள்:

இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஸ்ரீஜெய அறிவானந்தாதி ஆச்சார்ய குருஸ்வாமிகள் கல்லிடைக் குறிச்சியிலிருந்து வந்து கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இந்த சிறப்பு மாநாட்டுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து, முன்னின்று நடத்தியது. விஸ்வகுலத்தாரக பெருமைக்குரிய பிரம்மஸ்ரீ T.M.தெய்வசிகாமணி ஆச்சார்யார் அவர்கள் (விஸ்வகர்மப் பிராம்மன வம்சப் பிரகாசிகை ஆசிரியர்)

குழப்பம் தீர்க்கும் விளக்கம்:

கல்லிடைக்குறிச்சியில் விஸ்வகுலமடம் அன்று இருந்ததில்லை. ஸ்ரீஜெய அறிவானந்தாதி ஆச்சார்ய குருஸ்வாமிகள், ஸ்ரீமத் விஸ்வகர்ம ஜெகத்குரு ஸ்ரீமத் செங்கமலேந்திர பீடாத்யஷக என்று பல அடைமொழிகளை எழுதி நோட்டீஸில் அச்சிட்டுப் பெருமை சேர்த்தது, விஸ்வகுலச் செம்மல் திருவாளர். T.M. தெய்வசிகாமணி ஆச்சாரி அவர்களின் பெருந்தன்மை. அகன்ற உயர்ந்த உலகளாவிய பார்வை விஸ்வகுல ஆன்மீக ஆச்சாரியாரின், அளப்பெரிய நம்பிக்கை பக்தி, பெருமிதம் என்று எடுத்துக்கொள்ளலாம். 1935ம் ஆண்டிலேயே, பிரிட்டிஷார் ஆட்சி நடத்திய கெடுபிடி காலத்திலேயே சுமார் 18க்கும் மேற்பட்ட அலங்கார வண்டிகளில் ஊர்வலம், முக்கியஸ்தர்களுக்கு உரிய மரியாதை என்று திட்டமிட்டு செயலாற்றிய பண்பும், மாண்பும் உயர்வாளர் T.M.தெய்வசிகாமணி ஆச்சார்யாருக்கே உரிய தனித்தகுணம் ஆளுமைத்திறமை.

வேண்டுகோள்:

நெல்லை வாழ் விஸ்வகுல மக்களின் தற்காலத் தலைமுறையினருக்குச் சமர்ப்பிப்பது:

1. கல்லிடைக்குறிச்சி குருபூசையில் ஸ்ரீஅறிவானந்தர் என்ற ஸ்ரீமத் முத்துக்குமார ஸ்வாமிகள் என்று ஏன் பெயரிடப்பட்டது என்பது முறையாக விளக்கப்பட்டுவிட்டது. (குருபூசை நோட்டீஸ்கள் பரப்புரைகளை மீண்டும் படித்துப் பார்ப்பது நல்லது.)
2. ஒரே பெயரில் பலர் வாழ்வது உலகறிந்த நடைமுறை. பாட்டன் பெயரை பேரனுக்கு வைப்பதும் வழக்கமே.
3. இப்போது செய்யவேண்டியது என்னவென்றால், சந்தேகிப்பவர்கள் முன் வந்து கி.பி.1930, 1935, 1936 ஆண்டுகளுக்கான கல்வெட்டு, ஓலைச்சுவடி, காகிதநோட்டீஸ் குறிப்புகளை கல்லிடைக்குறிச்சியிலும், வண்ணாரப்பேட்டை சங்கத்திலும், சென்னை தம்புசெட்டித் தெரு அருள்மிகு காளிகாம்பாள் கோவில் வளாகத்திலும் தேடி எடுத்து, அலசி, ஆராய்ந்து, எது உண்மை என்பதைக் கண்டுபிடிப்பதே.

1935க்கு வண்ணாரப்பேட்டைக்கு சென்ற ஸ்ரீஅறிவானந்தர் எங்கு பிறந்தார்; எங்கு வாழ்ந்தார்? எங்கு இயற்கையானார் என்ற தகவல் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் ஸ்ரீமத்முத்துக்குமார ஸ்வாமிகள் 1904ல் கல்லிடையில் ஐக்கியம் என்பதற்கு ஆதாரம் உள்ளது.

விலாசம்:

வண்ணாரப்பேட்டை, சஞ்சீவிராயன்பேட்டை, விஸ்வ பிராம்மன கிராமதிகார கமிட்டி பதிவு 93/1986. 72/29 மிண்ட் சுப்புராயலு நாயுடு தெரு, பழைய வண்ணாரப்பேட்டை சென்னை–600 021.

ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமிகள் 35ம்பட்டம் கல்லிடைக்குறிச்சியில் ஐக்கியமானது கி.பி.1904. தாமிரபரணியில் வெள்ளம் வந்தது. 1981–82, 1992.

பழனி ஆண்டவர் பாதாளலிங்க சித்தருக்கு குருபூசை டிசம்பர் 2017. அறிவானந்தர் என்ற கற்பனைப் பெயரை முதன்முதலில் இங்கு பூசாரி உச்சரித்தது கும்பாபிஷேகத் தினம் 11–06–2014.

ஸ்ரீஅறிவானந்தர் என்ற விஸ்வகுலகுரு வண்ணாரப் பேட்டைக்கு செப்டம்பர் 1935ல் சென்றார் என்ற தகவல் வெளிவந்தது டிசம்பர் 2017. இத்தகவலை வண்ணாரப்பேட்டை சங்கத்தில் நேரில் சரிபார்த்தது 17–4–2018ல். கல்லிடைக்குறிச்சி பூசாரி திரு.முருகேசன் ஆச்சாரி ஸ்ரீமத் அறிவானந்த ஸ்வாமியை நேரில் பார்க்கவும் இல்லை. கேள்விப்பட்டதும் இல்லை. அங்கு ஒரு விஸ்வகுலசாமியார் சமாதி என்பது மட்டுமே அவருக்குத் தெரியும்.

இந்தப் புத்தகம் ஓர் ஆய்வுத் தொகுப்பு. இது ஒரு தோண்ட வேண்டிய புதையலின் முதல்படி மட்டுமே என்று சமர்ப்பிக்கிறோம். ஆர்வமுள்ளவர்கள் முயல வேண்டுகிறோம்.

15. முடிவுரை

தமிழகத்தில் ஐந்து விஸ்வகுல மடங்களின், முதல் ஆய்வுத் தொகுப்பும் வெளியீடும் என்ற முயற்சிக்குத் தான் இது முடிவுரை. இதில் தொடர வேண்டிய பிற ஆய்வுகளுக்கு இதுவே முன்னுரை. இயன்றதை ஐந்தரை ஆண்டுகள் உழைத்து இந்த 72 வயதிலும் செய்து முடித்திருக்கிறோம். ஆர்வமுள்ளவர்கள் இனி மேலும் தொடர வேண்டும் என்று வேண்டுகிறோம்.

உலகச் சிற்பியான இறைவனே "விஸ்வப்பிரம்மா" (மே15) என்று வேதம் அழைக்கிறது. "விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை" என்னும் நம் குல மூலநூல் (நடராசனார் பப்ளிகேஷன்ஸ் 1987) நம் குலோத்தாரக T.M.தெய்வசிகாமணி ஆச்சாரி மற்றும் வித்வான் பிரம்மஸ்ரீ K.K.சுப்ரமண்ய ஆச்சாரியார் (படம் 123) இருவரின் முயற்சியால் எழுதி வெளியிடப்பட்டது. (தாது அச்சுக்கூடத்தில் அச்சாகி நூல் ஆசிரியரே வெளியிட்ட 1950 முதல் பிரதியும் பெங்களூரு வை.சுப்ரமணிய ஆச்சாரியார் அவர்களிடம் உள்ளது.) மதிப்பிற்குரிய T.M.தெய்வசிகாமணி ஆச்சாரியார் அக்காலத்து FRSA (லண்டன்) Fellow of Royal Society of Architecture கற்றறிந்த கட்டிடக் கலைத்துறை சமூகத்தினரில் ஒரு அங்கத்தினர் என்று அக்காலத்து பிரிட்டிஷ் சர்க்கார் அளித்து கௌரவித்த உயரியபட்டம்.

இவ்வழியில் சிறப்பும் கௌரவப்பட்டமும் பெற்ற மற்றுமொருவர் பிரம்மஸ்ரீ டாக்டர் செஞ்சி பழனியாண்டியவர்கள் (மே 3). லண்டனில் மருத்துவப்பட்டம் பயின்று, கௌரவப்பட்டம் பெற்றவர். குலோத்தாரக T.M.தெய்வசிகாமணி ஆச்சார்யார் தான். சென்னை, வண்ணாரப்பேட்டை, சஞ்சீவிராயன் பேட்டையில் கி.பி. 1916ல் (படம் 123–பக்.296) விஸ்வ பிராம்மண கிராமாதிகாரி கமிட்டி என்ற சமூக சங்கத்தை நிறுவிப் பதிவும் செய்தவர்.

நூறாண்டுகளைக் கடந்து இன்றும் சிறப்பாக சேவை செய்கிறது (போட்டோ 123–பக்.296). இவரே விஸ்வகர்ம மஹாஜனசங்கமாக, மத்யசங்கமாக சென்னையில் நிறுவி, விரிவுபடுத்தி தமிழகம் முழுவதிலும் கிளைகளை உருவாக்கியவர். பின்னாளில் விருதுநகர் வண்டிப்பேட்டை ஸ்ரீமுத்துச்சாமி ஆச்சாரி (கர்மவீரர் திரு.காமராசரின் வழிகாட்டி). சினிமாவில் குணசித்திர நடிகர் தெய்வத்திரு. S.V. சுப்பையா..... மற்றும் பலர்..., இவர்கள் யாவரும், தொழில், பொது வாழ்வு என்றிருந்த காலத்திலும் விஸ்வகுல ஆச்சாரம், அனுஷ்டானமான, பூணூல் சந்தியாவந்தனம், அமாவாசை தர்ப்பணம் என்ற அடிப்படை ஆச்சார விதிகளைத் தினமும்/அவ்வப்போது அனுசரித்தே வந்தனர். அதாவது மனிதனுக்கு மூச்சு விடுவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம், ஒரு ஆச்சாரி குலஆச்சாரப் பழக்கத்தை அனுசரிப்பது என்று வாழ்ந்து காட்டினார்கள்.

குல ஆச்சாரத்தைக் கடைப்பிடித்ததனால், அவர்களுக்கு கடவுள் அனுக்ரஹம், கூடியது. சமூக அந்தஸ்தும் கூடியது. செல்வமும் கூடியது என்பதே உண்மை. மாறாக ஆச்சாரத்தைக் கடைப்பிடித்ததனால் வருமானம் குறைந்து வறுமை வந்தது, சமூக அந்தஸ்து குறைந்தது என்று சொன்னவர் யாரும் இல்லை. அக்காலத்தில் இந்த இருவரும் தான் தமிழக இந்திய விஸ்வகர்மாக்களின் வேத அங்கீகாரம், சமூக அங்கீகாரம் தொழில் நுணுக்கத்திறமை பற்றிய அருமைகளை, ஆதாரப்பூர்வமாக மேலை நாட்டவருக்குப் புரியும் படியான ஆங்கிலத்தில் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். இலங்கையைச் சார்ந்த அறிஞர் டாக்டர் ஆனந்த் K.குமாரஸ்வாமி D.sc. London அவர்களும் இப்பட்டியலில் இடம்பெறும் பெரியவர். சமய ஆச்சாரம், அனுஷ்டானம், நல்போதனைகளுக்குத் தலைமை ஏற்று வழிகாட்டுவதற்கு மதகுரு என்ற ஆதீனகர்த்தாக்கள் மடாதிபதிகள் தோன்றினார்கள்.

ஆதிசங்கரர் காஷ்மீரத்தில் சங்கர மடத்தை நிறுவினார் (மே.4). 5–7ம் நூற்றாண்டில் சைவம் காஷ்மீர் முதல் குமரிக் கண்டம் வரை பரவிற்று. ஸ்ரீமத் சுக்ஞானமூர்த்தி ஸ்வாமிகள் காஷ்மீர் வரை நந்தீஸ்வரர் புகழ் பரப்பும் மடங்களை நிறுவினார். இக்காலத்தில் தான் நெல்லையில் ஸ்ரீமத்பரசமயகோளரி நாத ஆதீனம் ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடமும், திருமூலாரண்யத்தில்

(சீனந்தல்) ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய பீடமும் ஸ்தாபிக்கப்பட்டன. 14ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் சைவ மதத்தைப் பாதுகாக்கப் பலமடங்கள் தோன்ற ஆரம்பித்தன. 16ம் நூற்றாண்டில் தான் திருவாவடுதுறை, தருமபுர ஆதீனங்கள் தோன்றின. சமயக்குரவர்கள் நால்வர் சைவம் வளர்த்தார்கள். பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், குமரகுருஸ்வாமிகள் என்று 17ம் நூற்றாண்டு வரை சமய உணர்வு மேலிட்டது. கி.பி.1701ல் இராணி மங்கம்மாள் அன்னதானச் சத்திரங்களையும், தண்ணீர் பந்தலையும், மடங்களையும் நிறுவுவதில் அதிக கவனம் செலுத்தினார். **இந்த காலத்திற்குள் சுமார் 800–1000 ஆண்டுகளில் ஐந்து விஸ்வகுல மடங்களும் தோன்றி வளர்ந்தன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.**

கி.பி. 1620 முதல் 1680 வரை மராட்டிய மன்னர் வீரசிவாஜி, துகாராம், ராமதாஸர் ஸ்வாமிகளுடன் ஆன்மீகம் வளர்த்தார். வேதநாயகம் பிள்ளை, உ.வே.சா. ஐயர் அவர்களும் தமிழுடன் சமயத்தையும் வளர்த்தார்கள். **விஸ்வகுல மடாதிபதிகளும் இருந்தார்கள்.** கி.பி. 1823 முதல் 1874 வரை இராமலிங்க வள்ளலார் ஸ்வாமிகள் சமயம் வளர்த்தார்கள். மகாகவி பாரதியார் கூறுகிறார் “இந்தியாவில் சமய உணர்வில் தமிழகம் முதலில் விழித்துக் கொண்டது. அதுவும் வள்ளலார் வகுத்துச் சென்ற வழிமுறைகள் எளிமையும் புரட்சிகரமானதுமாகும்.” அதாவது வேஷம் வேண்டாம், நாமம், குடுமி, மொட்டை, ருத்ராட்சம் பல தெய்வ உருவங்களை வழிபடுவது என்று மன அலைச்சல் வேண்டாம். வெள்ளைத்துணி, வெண்ணீறு (விபூதி) ஜோதி என்ற விளக்கு மட்டுமே போதும். ஆனால் **முழு மன ஈடுபாடு அவசியம்** என்று சமயவழிபாடு, ஆன்மீக நெறியை எளிமைப்படுத்தினார். அதாவது கி.பி.1600 முதல் 1850 வரை தமிழகம் நிறைந்த எண்ணிக்கையில் அருளாளர்களைக் கண்டது. (காரைக்கால் அம்மையார், சமயக்குரவர், பட்டினத்தார் அருணகிரிநாதர்.... பலர்) இதே காலகட்டத்தில் தான் வீரமாமுனிவர், கால்டுவெல் ஐயர், ஜி.யூ.போப் என்று ஐரோப்பிய கிறித்துவ மத குருமார்களும் தமிழகத்தில் மத சேவை செய்தார்கள் என்று நினைவில் நிறுத்த வேண்டும்.

ஸ்ரீஇராமகிருஷ்ணபரமஹம்சரும், சுவாமி விவேகானந்தரும் 1898–1937ல் இங்கு சமயப் பணி செய்தார்கள். 1904 முதல் 1930ல் ஸ்வாமி அரவிந்தரும் பாண்டிச்சேரியிலிருந்து, சமயம் வளர்த்தார்கள் (பாண்டிச்சேரியும், சிதம்பரமும் அருகேவுள்ளன. சிதம்பரம் ஸ்ரீமத்கமலமூர்த்தி மௌனகுரு ஸ்வாமிகள் சிதம்பரம் – சேலம் – ஆத்தூர் என்று சேவை செய்தார்கள்) பகவான் ரமணமகரிஷி, காஞ்சி மஹாப் பெரியவர், அருள்தந்தை வேதாந்திரி மகரிஷி... என்ற அருளாளர்கள் மிகச் சமீபத்தில் இதன் தொடர்ச்சியானவர்கள்... என்று புரிந்து கொள்வது நலம். இந்த அருளாளர்கள் அனைவரும் **"இறைவனைக் காண்பதற்கு மனதைப் பக்குவப்படுத்துவதே சிறந்த வழி"** என்று வாழ்ந்து காட்டினார்கள். மனதைச் சுத்தம் செய்து, விரியவைத்தால், விண், மின், ஜீவகாந்த சக்தி அலைகளின் வீச்சினால் அதாவது **தவவலிமையினால்** தனிமனிதர் ஒவ்வொருவரும் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்று நம்பி, எளிய வழிமுறைகளைச் செய்து காட்டிச் சென்றுள்ளார்கள். இந்தத் தனிமனித சுத்தம், ஒழுக்கமே, மனிதன் உணர்வுபூர்வமாக இறைவனை அடையும் சிறந்த எளிய வழி என்று வாழ்ந்து காட்டினார்கள்.

ஆதீனங்கள், மடங்கள், மதகுருமார்கள், வர்ணாஸ்ரம்:

வேதகாலத்தில் வர்ணாஸ்ரம் என்ற சாதிப் பிரிவுகள் இல்லை. இயற்கையின் வெவ்வேறான குணங்களை ஒட்டிய சமுதாய, ஆன்மீகப் பிரிவுகளே வர்ணாஸ்ரம் என்று கூறினார்கள். பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு வர்ணாஸ்ரம். தெய்வீகமான வர்ணாஸ்ரமத்தை பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் பரிந்துரைத்தார். இன்றைய சாதீய வர்ணாஸ்ரமம் பின்னாளில் பிறந்த கட்டுமானம். உணர்வால், சுயஒழுக்கத்தால் முனைந்தால், மனவளக்கலைப் பயிற்சி மூலம் ஒவ்வொருவரும் பிராமணத்துவத்தை அடையமுடியும். பிறப்பால் அல்ல.

நல்லதைச் செய்து மறுபிறவியை வடிவெடுக்கும் முயற்சிக்கு இந்த ஒரு மானிடப்பிறவியே போதுமான நல்ல வாய்ப்பு என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். **இவ்வகையான வழிகாட்டுதலுக்குத் தான் குருவின் துணை அவசியமாகிறது. அதாவது**

அறியாமையைக் களைந்து சீடனை உருவாக்குவது குருவின் முதல்வேலை. ஆன்மீக வாழ்க்கையைப் புரிந்து செயல்பட உண்மையான அக்கறை வேண்டுவோருக்கு குருதேவை. **கடவுளைச் சென்றடைய வழிகாட்டும் திறனை ஒரு குரு பெற்றிருக்க வேண்டும்.** இதில் அவசரமான தற்காலத்தில் நேர்ந்துள்ள பல சிக்கல்களில் குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் இங்கே உடனே சிந்திப்பது அவசியம். 1. குரு யார்? 2. கடவுளுக்குப் பாஷை (மொழி உண்டா?) 3. அர்ச்சகர், புரோகிதர் குருவாகிட முடியுமா? 4. பாமரனும் பத்தியாளனாக என்ன வழி? 5. குழப்பமில்லாத, எளிய சிந்தனை செய்லமுறை என்ன?

குரு யார்? எண்ணம், சொல், செயலால் உண்மையாக இருப்பவரே குரு. (திருமூலர்) (மே 18). "குருவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் குரு எப்போதும் **மனிதவடிவில் தான்** இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை" – பகவான் ரமண மகரிஷி.

ஒரு மனிதனின் எண்ணம், உணர்வு, அனுபவத்திலிருந்து மற்றொரு புதிய வேறு அனுபவ நிலைக்கு **எடுத்துச் செல்லும் சக்தியே** குரு, (சத்குரு ஜக்கிவாசுதேவ்). அதாவது மனத்தூய்மை, மனத்திட்பம், எளிய உண்மையான வழிகாட்டுதல், குருவுக்கு அவசியம். **வேஷமும், மந்திரச் சொற்களும், நீதிக்குப் புறம்பான செயல்களும் குருவாக முடியாது.**

கடவுளுக்கு மொழி உண்டா? சமஸ்கிருதம் என்ற வடமொழியை தேவபாஷை என்று பலர் சொல்லி வருகிறார்கள். **இது தவறு.** கடவுளுக்கு மொழி பாஷை கிடையாது. இந்தியாவிலுள்ள அத்தனை மொழிகளிலும் கடவுளை நேசிக்கிறார்கள். வணங்குகிறார்கள். "**மௌனமே தொடர்ந்து பேசும் மொழி**" என்று பகவான் ரமணமகரிஷியும் கூறியுள்ளார். வேதபாட சாலையில் சமஸ்கிருதத்தில் வேத மந்திரங்களை மனப்பாடம் செய்து, வெளியில் வந்து புரோகிதம், அர்ச்சனை செய்யும்போது ஒப்பிப்பதால் மட்டும் வடமொழி வேத பாஷையாகிவிடாது. மராட்டிய அபாங்கம், தெலுங்கில் கீர்த்தனைகள், தமிழில் தேவாரம், திரவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை, நாலாயிரத்திவ்யப்பிரபந்தம், அருட்பாக்களும், கடவுளுக்குப் புரியும் பாஷைகளே.

மனம் உருகிப் பக்திப் பரவசமாய், பஜனை செய்து, பாடுவதற்கு அவரவர் தாய்மொழியே சிறந்தது. இறைவனும் ஏற்றுக்கொள்கிறார். எனவே, ஆன்மீகம், பக்தி, மடாதிபதி, புரோகிதம், அர்ச்சனை என்றால் **"சமஸ்கிருதம் தான் உசத்தி–ஐயோ, அது தெரியவில்லையே"** என்று **பயந்து ஒதுங்குவது தேவையற்றது.** அவரவர் மொழியில் இறையுணர்வை வெளிப்படுத்தும் முயற்சிக்கு ஊக்கமும், வழிகாட்டுதலும் வேண்டும். தடை கூடாது. வடமொழி சிறந்த மொழி, ஆனால் அது தான் தேவபாஷை என்றாகிவிடாது.

அர்ச்சகர், புரோகிதர் குருவாகிட முடியுமா?

பொதுவாக இல்லை. அரிதாக ஆகலாம். சம்பாவணை காணிக்கை என்று **கூலி வாங்கிக் கொண்டு,** அர்ச்சகர், புரோகிதர் தொழில் செய்பவர்கள் **குருமார்கள் அல்ல.** எவ்வளவு வேஷம் போட்டாலும், அடைமொழிப்பட்டங்களைப் பெயருடன் சேர்த்துக் கொண்டாலும் குருவாகிவிட முடியாது. "உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி, ஊர்க்குருவியே" தான் "அக்னி வளர்க்கிறேன். வேதம் ஓதுகிறேன், ஆசீர்வாதம் செய்கிறேன் காலில் விழு, காணிக்கைபோடு" என்பவர் குருவல்ல. விளம்பரம், வியாபாரம், இல்லாமல் தனிமனித ஒழுக்கம், மனோவலிமையால் தவத்தின் பல படிகளைக் கற்றுணர்ந்து, தவபலத்தினால் உயர்ந்தாலே குருவாக முடியும். உண்மையான குருவின்துணையால் தான் இதுவும் சாத்தியம். இதுதான் "அவன் அருளாலே அவன் தாள் பணிந்து"– "கடவுளே குரு என்பது". "குருவாய் வருவாய் அருள்வாய்குகனே" என்பதும். குகை என்ற ஆழமான உள்மனத்தில் இறைவன் குடியிருக்கும் இதயகமலத்தில், (இருதயம் என்ற தசை, நார், இரத்தம் என்ற உறுப்பல்ல) மனப்பழக்கத்தால் உயர்ந்தால்தான் குருவாக முடியும். **மற்றதெல்லாம் வாழ்வாதாரப் பொருளாதரக்கலை.** இந்த வேஷதாரிகளைக் கண்டு அஞ்சிப் பயப்படுவது தேவையற்ற நடைமுறை.

பாமரனும், பக்தியாளனாக என்ன வழி?

ஆரம்ப நிலையில், உருவ வழிபாடு, கோவில் குளம் சாமிகும்பிடுவது. அடுத்த நிலையில், அகண்ட நாமாவளி. இறைவனின் பெயரையே மீண்டும், மீண்டும் உச்சரிப்பது பஜனை செய்வது.

ஹரே, ராமா, ஹரே கிருஷ்ணா, ஓம் நமோ நாராயணா, ஓம் சக்தி, ஓம் நமச்சிவாய, அரோஹரா, கோவிந்தா, ஐயப்பனுக்குச் சரணம் பாடுவது, காயத்ரி மந்திரம் சொல்வது. மேல்மருவத்தூர் "ஓம்சக்தி" பக்தி இயக்கம். வார வழிபாட்டுமன்றம் என்ற இயக்கம், சமஸ்கிருதம் என்ற **வடமொழி புரோகிதர், அர்ச்சகர்** என்ற கருவி இல்லாமல் எவ்வளவு வேகமாகப் பரவுகிறது. பக்தர்களின் நேரடி மனப்பங்களிப்பு! வைத்ததொரு கல்வி மனப்பழக்கம். மனம்மாறுங்கள். மாற்றம் கிடைக்கும். உண்மையான குருவை நினைத்துத் தினமும் தியானித்தால்., கூடாததைக் கூட்டி வைக்கிறார், காணாததைக் காட்டுவிக்கிறார், அந்த சக்தி மிகுந்த குரு. ஆம் அவர் தான் கடவுளிடம் நமக்காக சிபாரிசு செய்யும் தூதுவர். வழிகாட்டி, உண்மையான குரு.

குழப்பமில்லாத எளிய சிந்தனை செயல்முறை என்ன?

ஏசு கிறிஸ்து 12 சீடர்களை வளர்த்து உருவாக்கினார். கிறித்துவ மதம் பெருகி வளர்கிறது. இராசேந்திர சோழன் ஒவ்வொரு சிப்பாயியையும் செதுக்கிச் செதுக்கி திறமைசாலியாக மாற்றினான். வீரசிவாஜியும், ஒவ்வொரு மலைக்காட்டு வாசிகளையும் வீரமுள்ள திறமைசாலியான போர் வீரனாக மாற்றுவதில் அதிகக் கவனம் காலம் அக்கறை எடுத்துக்கொண்டான். இங்கே இப்புத்தகத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஆதீனங்கள், மடங்கள், ஆதீனக்கர்தாக்கள், மடாதிபதிகளில் எத்தனைபேர், எத்தனை சிஷ்யர்களை, சீடர்களை உருவாக்கினார்கள் என்பது ஆய்வு செய்யத்தக்க செயல்.

கூலிக்குப் புரோகிதம் செய்பவர்களை உருவாக்குவது மடத்துக்கு சிஷ்யர்களை உருவாக்கியது என்றாகாது. கிராமம் தோறும் வாழும் விஸ்வகுல மக்களை கோத்திரவாரியாக பட்டியலிட்டு பேரேடு தயாரித்து, சமூக சிஷ்யர்களை வளர்க்கும் சிந்தனை–ஸ்ரீமத் கமலமூர்த்தி, ஸ்ரீமத் ராஜமாணிக்கம் ஸ்வாமிகளுக்கு மட்டுமே (சிதம்பரம் – ஆத்தூர் ஆதீனம்) இருந்தது. பிரதேசயாத்திரை – விழிப்புணர்வு – குரு சிஷ்யர் உறவுமுறை என்று போதித்தது இந்த ஸ்ரீராஜமாணிக்கம் ஸ்வாமிகளும் நெல்லை ஆதீனகர்த்தர் ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வர ஸ்வாமிகளும் மட்டுமே. பட்டம், பதவிக்கு சண்டை போட்டவர்கள் இந்த சமூக

அக்கறைச் செயலைச் செய்யவில்லை. **புரோகிதர், மடாதிபதி, ஜெகத்குரு எல்லாம் பிறப்புரிமையில் கிடைப்பதல்ல. ஒரு பிறவியில் கிடைத்தற்கரிய அவ்வுயர்வை, தம் தவ வலிமையை உயர்த்திக் கொண்டு தான் சம்பாதிக்க முடியும்.** அடிப்படியென்றால் இந்த மடங்கள் என்னாவது? மடத்தின் சொத்துக்கள் என்னாவது? படைப்புத் தொழிலாளி என்று கூறிக்கொள்ளும் சாதாரண... பாமரன் என்னாவது? இதோ சிந்திக்கலாம்.

1. மனிதனின் மனம் அதிக சக்தி வாய்ந்தது. ஒவ்வொரு மனிதனும் அதன் மதிப்பை உணர வேண்டும். மனவளக்கலைப் பயிற்சி ஒன்றே இதற்குத்தீர்வு. தியானம் பழகுவது, நீச்சல், சைக்கிள் பழகுவது போன்றது. ஆரம்பத்தில் சற்று சிரமம், பிறகு மிகவும் எளிது. முயன்றால் வெற்றி நிச்சய்ம. தோல்வியே கிடையாது.
2. தன்னை அறிதல் தான் தன் வாழ்க்கையின் முதற்கடமையும் முக்கிய கடமையுமாம். இதற்கு சமஸ்கிருதமும், வேஷதாரியும் துணைக்கு வரமாட்டார்கள். பணமும் வேண்டாம். சுயமுயற்சிதான் மூலதனம். உங்களால் முடியும்.
3. புனித பீட்டர் என்ற பாதிரியாரின் கல்லறையில் துவங்கி, சிறிது, சிறிதாக தொடர்ந்து திட்டமிட்டு, உயர்ந்த நிர்வாகத்திறமையால் வளர்ந்து நிற்பது தான் “வாடிகன்” என்ற நகரம். கத்தோலிக்கர்களின் உலகத்தலைமை நகரம். தனி உலகம். **நம்பிக்கையும், நிர்வாக செயல்திறமையும்** இணைந்ததுவே இவ்வுயர்வுக்கு வழி.
4. ஐந்து விஸ்வகுல மடங்களிலும் **குருமார்கள், ஆன்மீகபோதனை,** தவலிமையால் வடமொழியை ஓதினால் மட்டுமே போதுமா? தானமாக வந்த மடத்தின் சொத்தில் வருமானத்தைப் பெருக்கி, சீடர்களைப் பெருக்கி, வளர்த்து, குல நலம், காப்பதற்கு என்ன நிர்வாகக் கட்டமைப்பை வளர்த்தார்கள் என்று ஒரு

குறிப்பும் கிடைக்கவில்லை. **இராசேந்திர சோழரின் அசாத்தியமான அகில உலக வெற்றிக்கு உதவியது. ஐவர்குழுவும் (மே16), திறமையான நிர்வாகத்திறனும்** என்று சரித்திரம் கூறுகிறது.

5. எனவே இருக்கும் மடத்தையும், மடத்து சொத்தையும் பாதுகாக்கவும் வருமானத்தைப் பெருக்கவும் **நிர்வாக மாற்றம் தேவை.** ஒவ்வொரு ஊரிலும் ஆச்சாரத் திறன் வளர்ப்புப் பயிற்சி மையம் இயங்க வேண்டும். எல்லாசங்கமும், அமைப்பும் ஆன்மீகத்திலும் நாட்டம் கொள்ள வேண்டும். “குரு அடையாளம் இல்லாத, பரம்பிரம்ம வஸ்து. சந்தடியே இல்லாமல் தன் கிருபையை அனுப்பி, எல்லாவற்றையும் செய்து முடிக்கிறது.” காஞ்சி மஹா பெரியவர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மூலிகைத்தாவரங்களின் வைத்திய குணங்களை அகஸ்தியர், தி ரு மூ ல ர் போன்றவர்கள் தம் தவவலிமையால் எக்ஸ்ரே, ஸ்கேன் செய்வது போன்று கண் திருஷ்டியால்/ தவ வலிமையால் கண்டறிந்த மருத்துவ குணங்கள் இன்றும்/என்றும் உண்மைதானே! பாண்டிச்சேரியில் அருளாளர் அரவிந்தரைத் தேடி குருவாக மதித்து வணங்கி தமது தவவலிமையை உயர்த்திக் கொண்ட **அன்னை** அவர்கள் “**ஜீவனுள்ள மலர்கள்**” (மே17) என்று ஒவ்வொரு பூவுக்கும் உள்ள மருத்துவம், மனநோய் தீர்ப்பு, சக்தி, மனிதநேய நலம் வளர்ப்பு குடும்பத்தில் ஒற்றுமை? பாதுகாப்பு என்ற அரிய குணங்களைக் குறித்துச் சென்றுள்ளார்கள். அன்னையைக் குருவாக ஏற்று நம்பிக்கையுடன் மலர் வழிபாடு செய்துபலன் பெறுபவர்கள் எண்ணிக்கை பெருகி வருகிறது. இது மனோவஸ்யம் என்ற மந்திரம், தந்திரம் அல்ல. **மனதைப் பண்படுத்தி உயர்த்தி நின்று இறைவனுடன் பேசும், இறைவனைக் காணும் வல்லமையைப் பெருக்கும் தன் முயற்சி.** ஆகவே “சத்தியத்தை உணர்ந்தவர். தன்னை அண்டிய சீடரின்

நலனுக்காக இடைவிடாது பாடுபடுபவர்" என்று ஆதிசங்கரர் கூறியபடி ஒரு குருவைத் தேடுங்கள் அக்குருவை நம்புங்கள். மனதைப் பண்படுத்துங்கள்.

6. குருபூஜையில் தவறாமல் கலந்து கொள்ளுங்கள். குருவணக்கம் குரு சரணம் பாடல்களை **மனதார வாய்விட்டுப் பாடி மகிழுங்கள்.** குருபூசையில் உண்மையான குருவிடம் உங்கள் மனதை அடகு வைத்துப் பழகுங்கள்.

7. குல தெய்வ வழிபாடும் குருபூசை வழிபாடும் இரண்டு கண்கள் அல்லது இரண்டு நாசித்துவாரங்கள் என்று எண்ணுங்கள். இரண்டில் எது வேண்டும்? எது வேண்டாம்! இரண்டும் அவசியம். விஸ்வகர்மா மூச்சுவிட, குலதெய்வ வழிபாடு, குருபூசை வழிபாடு, தினசரி, மூச்சுப்பயிற்சி, சூர்யநமஸ்காரம், காயத்ரி ஜபம், அமாவாசை தர்ப்பணம் என்ற ஐந்தும் அவசியம். முயன்றால் உயர்வு நிச்சயம். இம்முயற்சி என்ற **ஆச்சார ஒழுக்கம் இல்லையேல்....... விஸ்வகர்மா எங்கே? என்று விரைவில் தேடும் நிலை ஏற்படலாம்.** சில வரிகளில் சொன்னால் ஆத்தூர், கச்சிராயபாளையம் இரண்டும் முடிந்து போன கதை. ஓசூர் மீண்டும் முளைக்கத் துவங்கியுள்ளது பொறுத்திருந்து பார்க்கலாம். சீனந்தல் – **நெல்லில் பிரிந்த உமி சேராது. நன்மையும், தீமையும் பிறர் தர வராது. இது சமூகத்தின் இழப்பு.** நெல்லைக்கு இறக்கை முளைத்துவிட்டது. கூட்டை விட்டுப் பறக்கத் துடிக்கிறது. அவசரமான அறுவைசிகிச்சைத் தேவைப்படுகிறது.

தனிமனித உணர்வு, உயர்வு தன்னை மட்டுமே உயர்த்தும். இது துறவிக்குச் சரி. துறவியோ, கிரஹஸ்தரோ, மடாதிபதி, ஆதீனகர்த்தர் என்ற பதவியை வகிக்க நேர்ந்தால் **தனிமனிதன், நிறுவனம், நிர்வாகக் கட்டமைப்பு, நிர்வாகத் திறமை, நிர்வாகம்** என்று விரிவாகும். துவஷ்டா ஆதிசங்கரர் 30

வயதுக்குள் இந்தியாவை மூன்றுமுறை சுற்றி வந்தார். நான்கு சங்கரமடங்களை நிறுவினார். அவர் இப்போது இல்லை. அவர் துவக்கிய மடங்கள் இன்றும் மதம், ஆன்மீகம், சமூகம் என்று சேவை செய்கின்றன. காஞ்சியில் ஒரே ஒரு மடம் இன்றும் சேவை தொடர்கிறது. கர்நாடகா சிருங்கேரியில் ஸ்ரீசாரதா பீடம் இன்றும் வலிமையுடன் சேவை செய்கிறது. ஆந்திரா போத்தலூரில் வீரப் பிரம்மங்கார்மடம் ஒன்றே ஒன்றுதான் பொலிவுடன் சேவை தொடர்கிறது. தமிழகத்தில் மட்டும் **மாறாக ஐந்து விஸ்வகுல மடங்கள்,** ஆதீனங்கள் தோன்றின. தனிமனித உயர்வு என்று மட்டுமே குறிப்புகள் கிடைக்கின்றன. நிறுவனம், நிர்வாகக் கட்டமைப்பு, நிர்வாகம், நிர்வாகதிறமை, இயக்கம் என்று குறிப்புகள் இல்லை. நிர்வாகமில்லை. இயக்கமில்லை. எனவே நிறுவனமும் இல்லை என்றாகிறது/என்றாகிவிட்டது.

காஞ்சி ஒரே ஒரு மடம் ஏற்படுத்திய தாக்கத்தை (சமயம் – ஆன்மீகம் – சமூகம் என்ற ரீதியில்) ஐந்து மடங்களும், ஐந்து மடங்கள் இருந்தும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இந்நிலையில் ஐந்தாவது வேதம் ஓம் என்ற பிரணவ வேதம் என்றும், பிராம்மணர், சத்திரியர், வைஸ்யர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்களிலும் சேராமல் தனிமையில் நிற்பவர் விஸ்வகர்மாக்கள் என்றும் சிந்தனை வேறு? விஸ்வகர்மா – ஜாதி இல்லை. ஒரு இனம் என்று கூறிக்கொண்டால், இந்தியாவில் ஜாதிய அடிப்படைப் பிரிவினையை, பிறப்பு, படிப்பு, வேலை வாய்ப்பு, திருமணம், இறப்பு, என்று எல்லா எந்த நிலையிலும் ஒதுக்க முடியாத நிலைமையில் வாழ்வதெப்படி?

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மண்டல்கமிஷன் என்று கோரிக்கை. ஆனால் ஆச்சாரி என்ற ஜாதிய அடிப்படையிலான மடாதிபதி – மடங்கள்? காலி மனை, வீடு, விவசாய நிலத்தின் விலை கிடுகிடு என்று ஏறும் இக்காலத்தில் மடத்தின் சொத்து பொது சொத்துத்தானே என்ற ஏளனமான/ சாதுரியமான போக்கு.... இக்குழம்பிய குட்டையில் மீன் பிடிக்காமல் மனவளக்கலையை வளர்த்துக் கொண்டால் தான் அடையாளம் நிற்கும் – தொடரும் – குலம் உயரும் – சந்ததியும் உயரும்.

தண்டவாளம் ஆன்மீகம் - பொருளாதாரம்:

பாமர மக்களும் முயன்று முன்னேறும் வகையில், வரும் நாட்களில் இந்த இணைகோடுகளில் (முன்னுரை... வாசகம்) ஒன்று ஆன்மீகம், மற்றொன்று பொருளாதாரம் என்று எடுத்துக்கொள்வோம். ஆன்மீகம், பொருளாதாரம் என்ற தண்டவாளத்தின் மீது ஓடும் ரயில்வண்டியில், (வாழ்க்கைப் பயணம்), தன்முனைப்பு என்ற தன்னை அறியும் திறனும் தியானமும் தான் – முன்னே இழுத்துச் செல்லும் உந்துசக்தி. சரியான குருவை ஒருவர் தேடிக் கிடைக்கும் வரையில் காத்திராமல், தன் மனதை வளப்படுத்தி இறைவனை உணர்ந்து வாழும் பக்தி மார்க்கத்துக்கு வழிகாட்டி, பொருளாதாரம் தான் இந்த ரயில் தடம் புரளாமல் ஓடுவதற்கு உதவும் சக்தி.

ஆன்மீகம் – மனவளக்கலைக்கு, தியானம், மூச்சுப்பயிற்சி, காயத்ரி ஜபம் என்றும் – பொருளாதாரத்தில் – சிக்கனம் – சேமிப்பு – மது, வட்டிக்கடைப் பழக்கத்தில் கவனம் என்றும் சிறிய மாற்றம் – சிறிய முன்னேற்றம் என்று தொடர்ந்தாலே, இமாலய வெற்றி பெற முடியும்.

வட மாவட்டங்களிலுள்ளவர்கள் **திருவண்ணாமலை** ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய பீடத்தையும், தென் மாவட்டத்தி லுள்ளவர்கள் **நெல்லை** ஸ்ரீமத்பரசமயகோளரிநாதர், ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடத்தையும் அடிக்கடி நினைத்து நேரில் பயணம் செய்து தரிசித்து தம் குருபக்தியை வெளிக்காட்டுவது நன்மை பயக்கும். குடும்பத்தில் ஒவ்வொரு திருமணத்திலும் முதலில் **குலதெய்வம்** அடுத்து **குருதெய்வம்** என்று நன்றி மறக்காமல் நேரில் சென்று பத்திரிக்கை வைத்து வணங்கி, குருபக்தியை வெளிப்படுத்தும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பதும் – செலவும், சிரமமும் இல்லாத சரியான வழிமுறை. இந்த வழிமுறை சமூக, சந்ததியினரின் கட்டுக்கோப்பான உயர்வுக்கு உறுதுணையாக அமையும் என்று உறுதியாக நம்பலாம்.

16. நன்றியுரை

ஒரு புத்தகத்தில் நன்றியுரையைப் பதிவு செய்வது பழகிப் போன வழக்கம். மையில் ஊறிய எழுத்துக்கள் அச்சில் ஏறு முன்பே, என் ஈரமான நெஞ்சில் ஊறிப் பெருகிய நன்றிச் சுனைநீர் பற்றி எழுதி விவரிப்பது சிரமம். யாருக்கு நன்றி சொல்வது? யாருக்குச் சொல்லாமல் விடுவது? பதில் தெரியாத இக்கேள்விக்கு சம்பிரதாயப் படி சில வரிகள் எழுதுகிறேன்.

தமிழ்நாட்டில் வாழும் 46 லட்சம் விஸ்வகுல மக்களில் “பழனிச்சாமி, இந்த வேலையை நீயே செய்து முடிப்பாயாக” என்று கருணைக் கணையை ஆணையாக வீசி அருளிய இறைவனுக்கு என் இறுதி மூச்சு வரை நன்றி. **இதுவே என் வாழ்நாள் பரிசு.** இறைவனிடம் சிபாரிசு செய்து, என் மீது கடைக்கண் பார்வை விழச் செய்த குலகுரு ஸ்ரீமத்சிவானந்த முனீஸ்வரர் ஸ்வாமிகளுக்கு என்னையே சமர்ப்பிக்கிறேன். தினமும் வழி நடத்தும் எங்கள் குல தெய்வம் இராஜபாளையம் நீர்காத்தலிங்கஜயானரின், கருணைக்குக் கரம் குவிக்கிறேன்.

ஆழ்நிலைத் தியானத்தைக் கற்றுக்கொடுத்த உலக மகா முதல் குரு மகரிஷி மஹேஸ்வரயோகிகு முதல் நன்றி. 1965ல் நேரடி தீட்சை. 1986–87–88ல் வேதாத்திரி மகரிஷியுடன் ஏற்பட்ட நேரடிப் பயிற்சியின் பலனாகக் கற்றுக்கொண்ட குண்டலினி யோகப் பயிற்சிக்கும், மனவளக்கலையும், என்னை ஆன்மீகப் பாதையில் புதிய சிந்தனை – செயல் முறையில் பயணிக்க வைத்தன. பின்னாளில் என் ஆன்மீகப் பயணத்துக்கு மூலவித்து இதுவே. இல்லறத்தில் துறவறம், காவி உடை அணியாத சந்நியாசி, பக்தி இயக்கம், சரணாகதி என்று முனைந்தபோது, உண்மையைப் புரிந்து கொண்டு, என்னைச் சகித்துக் கொண்டு இந்த இயக்கம், பணிக்கு முழு ஆதரவு கொடுத்த, கொடுத்துக் கொண்டிருக்கும் என் மனைவி. திருமதி. சரஸ்வதிக்கு (படம் 116) எப்படி நன்றி கூறுவது என்றே தெரியவில்லை. இந்த

SHEET 24



ஸ்ரீல ஸ்ரீ சிவ சண்முகஞானாச்சாரியர் சுவாமிகள்



ஸ்ரீ சிவானந்த முனீஸ்வர ஞானாச்சார்ய ஸ்வாமிகள்



வண்ணாரப்பேட்டை



T.M.தெய்வசிகாமணி ஆச்சாரி K.K.சுப்பிரமணிய ஆச்சாரி





வ.மாடசாமி ஆச்சாரி



மா.பொன்னுச்சாமி ஆச்சாரி



மா.பழனிச்சாமி ஆச்சாரி



வி.என். கஜேந்திரன் ஆச்சாரி



மு.அக்னி



பி.வி.ராஜேந்திரன்

இயக்கத்திற்கு பிள்ளையார் சுழிப் போட்டு ஆசீர்வதித்த தவத்திரு. சிவஆத்மானந்த ஸ்வாமிஜி நந்திஹில்ஸ் ஆஸ்ரமம். பெங்களூருக்கு உளம் கனிந்த நன்றிகள்.

வேதம் படிக்காத ஞானி என் அப்பா தெய்வத்திரு. வா.மாடசாமி ஆச்சாரி எங்களுக்குச் சொல்லாமல் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறிமுறைகளான: "சுத்தம், பொய் பேசாமை, எளிமை, கடுமையான உழைப்பு, காலம் தவறாமை, தொடர்ந்த கடவுள் சிந்தனை" ஆகியவைகளை மூலதனமாக வைத்து துவங்கப்பட்ட அறக்கட்டளை கல்வி, பண்பாடு, ஆச்சாரம் என்று திட்டமிட்டு செயல்புரியும் வேளையில் ஆன்மீகப் பக்தி இயக்கம், பூணூல் தர்ப்பணம் பயிற்சி, நெல்லை மடம் விடுதலை இயக்கம், குருபூஜை இயக்கம் என்ற அனைத்திலும் தங்களை முழு அளவு ஈடுபடுத்திக்கொண்டு களப்பணி செய்த மெய்யன்பர்களான அறந்தாங்கி சுப.திரு.சரவணன் குழுவினர் (படம் 103 எ, 122 ஏ–பக்.217) வந்தவாசி திரு.நடேசன் (படம் 103–பக்.224) குழுவினர் திண்டுக்கல் திரு.இராசகோபால் குழுவினர், திருநாகேஸ்வரம் (படம் 89) திரு.ராஜராஜன் குழுவினர், சென்னை திரு. C.சேது குழுவினர் அனைவரும், இயக்கத்தின் ஒரு பகுதியாக இந்தப் புத்தகத் தகவலுக்கும் உதவியது குறிப்பிடத்தக்கது. சந்தையில் ஒரு சாக்குப் பை நிறைய அள்ளி வந்தச் சரக்குகளைத் தரம், வகை பிரித்து சமையலறையில் பயன்படுத்தும் பக்குவமான சேவை போன்று சேகரித்த தகவல்களை அணிசேர்க்கும்/மணிகோர்க்கும் சேவை செய்து உதவிய விஸ்வகுலச் செம்மல் பெங்களூர் வை.சுப்ரமணியன் ஆச்சாரியார் (பக்.31) என்றும் என் நினைவில் நிற்கிறார். ஐந்து ஆதீனங்கள், மடங்கள், அவர் தம் உறவுமுறை, சந்ததியார், நண்பர்கள், சிஷ்யர்கள் என்று பலரையும் ஓடி, தேடி கண்ணோடு கண் பார்த்து உரையாடி சேகரித்த தகவல்கள் தான். உங்கள் கையில் தவழும் இந்தப் புத்தகம். என்னை நம்பி, அவர்கள் மனம் திறந்து, கொட்டித்தீர்த்து சுமை இறக்கிய பாங்கு என்னையே மயக்குகிறது. அவர்கள் என் மீது வைத்திருந்த, வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நான் எப்படி கைமாறு செய்வேன்? இவர்களை காணாதவர்களைக் காட்டி அருளிய, கூட்டி அருளிய குருவின் கருணை வியக்கத்தக்க உண்மை.

நெல்லை டவுண் திரு. P.V. இராஜேந்திரன் (படம் 134–பக்.296) நெல்லை மடத்துக்கு அதிகம் உழைத்த அபிமானி. தனிமையில் தவிக்கும் இந்த ஊக்கமானவர், இப்புத்தகம் உருவெடுக்க உதவிய பாங்கு சிறப்பானது. பிரம்மஸ்ரீ மாம்பழம் M.P. பாலசுப்ரமணியன் நற்றமிழ் கவிஞர் திரு.நாமக்கல்நாதன், டாக்டர் குருஷண்முகநாதன் இவர்களின் பணி, இரசத்துக்குப் பெருங்காயம் போன்றது.

எல்லாப் புகைப்படங்களையும், அட்டைப்படக் கலவையும் சிறப்புடனும், மகிழ்வுடனும் செய்து முடித்த ஓசூர் திரு.லோகேஷ் பாராட்டுக்குரியவர். வக்கீல் தொழிலில் ஆன்மீகத்தைப் புகுத்தி சுவாமி சின்மயானந்த ஸ்வாமிகளின் உண்மையான சீடரான பிரம்மஸ்ரீ மு.அக்னி (படம் 133–பக்.296) (சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்) எமக்கு அவ்வப்போது வழங்கிய நற்போதனை, ஊக்கமான வழிகாட்டுதலுக்கு நான் அதிகம் கடமைப்பட்டுள்ளேன்.

அருள்கவி ஐயா விஸ்வபாரதி அவர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைத்து, பட்டும் படாமலும் பக்குவப்படுத்தி, எமது பணி சிறக்க உதவியதை மறக்க இயலாது. துடிப்பான விஸ்வகுல அபிமானி தெய்வத்திரு. V.N. கஜேந்திரன் (படம் 132–பக்.296) அவர்கள், தொடர்ந்து எம்மை ஊக்கப்படுத்தினார்கள். சில சமயங்களில் உடன் உழைத்தார்கள். என் நன்றி உணர்வுகள் அவர்கள் எங்கிருந்தாலும் தழுவும்.

சீனந்தல் மடத்துக்கு ஒரு விலாசம் கொடுத்த தபால்காரர், (குறிப்பாக தென்மாவட்டங்களுக்கு) முழு விஸ்வாசி, விஸ்வகுலச்செம்மல், கறிவேப்பிலைக் கதாநாயகன்– உண்மை விஸ்வகர்மா டாக்டர் க.கனகராஜ் (பக்.34) (பென்னகரம்) சுடர் ஒளிவீசும் சூரியனாக இந்த இயக்கத்திற்கு எட்டா உயரத்தில் இருந்து கொண்டே, கரணங்களால் உதவிய பாங்கு சொல்லி மாளாது. பெயரைப் பட்டியலிட பக்கங்கள் காணாது. நெல்லை வாழ் எதிர்மறைச் சக்திகள் என்னை அதிகம் உழைக்கச் செய்த உண்மைக்கும் நன்றி. அனைவருக்கும் நன்றி.

அச்சேற்றி வடிவமைத்துப் புத்தகமாகக் கொடுத்துள்ள அச்சகத்தார் சிறப்பான நன்றியை நளினமாகத் தட்டிச் செல்வதை நீங்களும் ஆமோதிக்கிறீர்களல்லவா?

வாழ்க வளமுடன். வாழ்க வையகம்

28, ஜுன் 2018. ஓசூர் மா.பழனிச்சாமி, அருள்நிதி.

17. மேற்கோளுக்குத் துணை நின்ற நூல்களும், குறிப்புகளும்

வ. எண்.	மே.எண்.	பக்கம்	விபரம்
1.	1	13	விஸ்வகர்ம பிராம்மண வம்சப் பிரகாசிகை.
2.	2	16	டாக்டர் A.சௌந்தரபாண்டியன் மதுரை. தன்முன்னேற்றப்போர் – 2010
3.	3	20	விஸ்வபிரம்ம புராணம் – இரண்டாம் பதிப்பு 2012
4.	4	21, 286	இராஜதரங்கிணி ஆசிரியர் – கல்ஹணர் – காஷ்மீரம்
5.	5	20	கடலூர் G.சௌந்தரராஜ ஆச்சாரி அச்சுக் குறிப்பு விஸ்வபிரம்மம்.
6.	6	22, 58,216	உச்சநீதிமன்றத் தீர்ப்பு OS 58/1922 – 22–9–2011
7.	7	40	குருபாதசேவகன் S.கோவிந்தராஜன் ஞானதீபம் அழைப்பு.
8.	8	50	திருவண்ணாமலை தல வரலாற்றில் ஸ்ரீஆதிசிவலிங்காச்சார்ய குரு பீடத்தின் வரலாற்று சான்று – விக்னேஷ் N.சாமிநாதன்.
9.	9	54	குருவைத் தேடிய காந்திமகான் – குருபக்தி – ஆர்.பி.வி.எஸ். மணியன்.
10.	10	69	தெய்வத்திருபாக்கள் ஸ்ரீபாலாஜி ஸ்கேன்ஸ் சிவகாசி.
11.	11	81	தாமிரபரணிப்போர் Dr.S.பால சுப்ரமணி, சென்னை–16.
12.	12	194	பிள்ளைத்தமிழ் – சரஸ்வதி மகால் நூல் நிலையம் – தஞ்சை.

வ. எண்.	மே.எண்.	பக்கம்	விபரம்
13.	13	264	வீரசிவாஜியின் வரலாறு – டெனிஸ்கின் கெய்டு.
14.	14	271, 272, 273	ஆதீனங்கள் – ஊரன் அடிகள் – ஜோதி ஆப்செட் பிரிண்டர்ஸ். திருச்சி–2.
15.	15	283	வேதத்தில் சிற்பம்: எழில் சில்ப கலாமணி அழ.இராமசந்திரஸ்தபதி. ஆதி சிவலிங்காச்சார்ய வேத பாடசாலை டிரஸ்ட்.
16.	16	291	இராசேந்திர சோழன் – அரிய தகவல்கள் 1001. அறம் கிருஷ்ணன் – அறம்பதிப்பகம். ஓசூர்.
17.	17	291	ஜீவனுள்ள மலர்கள் – கர்மயோகி. வி.வி. கிராபிக்ஸ், சென்னை–83.
18.	18	287	திருமூலர் – திருமந்திரங்கள் – திருவாவடுதுறை ஆதீனம்.
19.			Mythology To History Through Astronomy seminar papers. N/A press, Pollachi.
20.			அஞ்சல் வழிக்கல்வி ஹிந்து தர்ம ஞானம் – பல ஆன்மீக கட்டுரைகள் by SADHGURU - ISHA FOUNDATION -YOGI ASHWINI - SHRI SHRI NIMISHANANDA, GYALWANG DRUPKA, BRAMA CHARINI SHARANYA CHAITANYA...
21.	21	170	HISTORY OF THE WODEYARS OF MYSORE (1610-1748) - DIRECTORATE OF ARCHAEOLOGY AND MUSEUMS. MYSORE.

18.தகவல் தொடர்புக்கு...

1. **சீனந்தல் மடம். மடாதிபதி அவர்கள், ஸ்ரீ** ஆதிசிவலிங்காச்சார்ய பீடம், சீனந்தல், காந்தப்பாளையம் அஞ்சல்–606901 போளூர் வழி. கலசப்பாக்கம் தாலுகா, திருவண்ணாமலை – மாவட்டம்.

2. **மடாதிபதி அவர்கள் (அ) ஆதீன உள்ளூர் நிர்வாகம்:** ஸ்ரீமத் பரசமயகோளரிநாதர் ஆதீனம், ஸ்ரீராஜராஜேஸ்வரி பீடம். 84, அக்கசாலை விநாயகர் கோவில் தெரு, திருநெல்வேலி டவுண் – 627006.

3. **கொழுந்து மாமலை,** திரு.சோமசேகரன், கோவில் பூசாரி (அ) திரு.வி. ராஜேந்திரன் ராசி ஸ்டுடியோ, சேரன் மாதேவி அஞ்சல் – 627414. திருநெல்வேலி மாவட்டம்.

4. **கோமளீஸ்வரன்பேட்டை,** கோவில் பூசாரி, அ/மிகு மீனாட்சியம்மன் கோவில் 20/16 சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை–600002.

5. **சிவகங்கை,** தலைவர் விஸ்வகர்மா சமூக சங்கம், காளியம்மன் கோவில். மதுரைமுக்கு. சிவகங்கை – 630560.

6. **கும்பகோணம்,** திரு. R. கும்பலிங்கப்பத்தர், 15. பேட்டை ஆற்றங்கரைத் தெரு, தாலுகா போலீஸ்டேஷன் அருகில் கும்பகோணம் – 612001.

7. **கல்லிடைக்குறிச்சி,** திரு. K. சேகர் ஆச்சாரி ஊர்த்தலைவர், கன்னி விநாயகர்கோவில் அருகில், காமாட்சியம்மன் கோவில் எதிரில். கல்லிடைக்குறிச்சி

627416. திரு.சண்முகம் ஆச்சாரி, 905, வியாசர் தெரு, அகஸ்தியர் பட்டி வி.கே.புரம் 627428.

8. **திண்டிவனம்,** திரு. N. பெருமாள் ஆச்சாரி, 8. குமரன் தெரு, சஞ்சீவிராயன்கோட்டை, முதல் குறுக்குத் தெரு, திண்டிவனம் – 604001. திரு. S. நடேசன் 378 A/ 328A/பட்டம்மாள் தெரு. விஜயலட்சுமி நகர், சென்னாவரம். வந்தவாசி – 604408.

9. **சிதம்பரமடம்,** ஶ்ரீமத் கமலமூர்த்திஸ்வாமிகள் ஆதீனம், 18–39, ஶ்ரீகாமாட்சியம்மன் கோவில் தெரு, புதுப்பேட்டை, ஆத்தூர் –636141. சேலம் மாவட்டம்.

10. **ஓசூர் மடம்,** பீடாதிபதி, சுக்ஞானமூர்த்திஸ்வாமிகள் மடம் தெரு, சந்திரா லாட்ஜ் பின்புறம், தாலுகா ஆபீஸ் ரோடு, ஓசூர் – 635109.

❁ ❁ ❁

குறிப்புகளுக்காக...